வரு.74 இல. 32 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරී

24 பக்கங்கள் 80/-

2022 ஓகஸ்ட் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

August 07 Sunday, 2022






03 பாராளுமன்றை பலப்படுத்த சர்வகட்சி அரசு

11 சீறிப்பாய்ந்த வெள்ளம்

12 அவசர முன்னுரிமை உணவுப் பாதுகாப்பே

24 100 மீற்றரில் யுபுன் வெண்கலம்; பாலித்தவுக்கு வெள்ளிப்பதக்கம்










## பாராளுமன்றத்தை அரசாங்கமாக மாற்றி நாட்டை கட்டியெழுப்புவோம்

### சர்வகட்சி அரசாங்கத்தின் நோக்கம் அதுவே -ஜனாதிபதி



பாராளுமன்றத்தை அரசாங்கமாக மாற்றி, நாட்டை கட்டியெழுப்பும் தீர்மானங்களை எடுப்பதே சர்வகட்சி அரசாங்கத்தின் நோக்கமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டலஸ் அழகப்பெரும ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

05

## அடுத்த வாரமும் மூன்று தினங்களே பாடசாலை

### திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் மட்டுமே

**லோரன்ஸ் செல்வநாயகம்**




பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை அடுத்த வாரம் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் அடுத்த வாரம் வியாழக்கிழமை 11ஆம் திகதி அரசாங்க விடுமுறை

05

## சமையல் GAS தட்டுப்பாடு முழுமையாக குறைவடையும்

### ஜனாதிபதி அலுவலக பிரதம பிரதானி சாகல



உலக வங்கியுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் மற்றும் லிற்றோ நிறுவனத்தின் முயற்சியினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய வெகுவிரைவில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு முழுமையாகக் குறைவடையும் என்று ஜனாதிபதி அலுவலகப் பிரதானி

05

### பகிரங்கப்படுத்தப்படாத US டொலர்கள் UK பவுண்ட்ஸ்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நாணயங்களை

# சட்டச்சிக்கல் இன்றி வங்கிகளில் வைப்பிலிட ஒரு மாத அவகாசம்

### நாட்டு மக்களுக்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாக நிதியமைச்சு தகவல்

**நிவாரண காலம் முடிவடைந்ததும் ஒருவர் பத்தாயிரம் டொலர்களை மட்டுமே கையிருப்பில் வைத்திருக்கும் வகையில் சட்டங்கள் மீளவும் பிறப்பிக்கப்படலாம்**



**தமது தேவைக்கேற்ப RFC அல்லது ரூபாவாக மாற்றி வைப்பிலிடவும் வாய்ப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்வேறு வழிகளிலும் மக்கள் சம்பாதித்துள்ள, இதுவரை தகவல் வெளியிடப்படாத டொலர்கள், ஸ்டேர்லின் பவுண்ட்ஸ் மற்றும் வெளிநாட்டுப் நாணயங்கள் அவை எந்தளவு தொகையாக இருந்தாலும் அவற்றை எந்தவித சட்ட ரீதியான தடைகளுமின்றி வங்கிகளில் வைப்பிலிடுவதற்காக ஒரு மாத கால அவகாசத்தை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக அதற்கான ஆவணங்கள் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன்படி வெளிநாட்டுத்

05



தமிழக அரசுடனான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் மாலை தூத்துக்குடி தொகுதி மக்களவை எம்.பி கனிமொழி கருணாநிதியை இலங்கைக்கான இந்திய தூதுவர் Milinda Moragoda புதுடில்லியில் சந்தித்த போது...

## நகர பொருளாதார ஆணைக்குழுவின் புதிய தலைவர் தினேஷ்



கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் புதிய தலைவராக தினேஷ் வீரக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார்.

கொமர்ஷல் வங்கி மற்றும் ஹற்றன் நெஷனல் வங்கியின் முன்னாள் தலைவரும், பல முன்னணி

05

### சிறுபான்மையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தும் வரை

## நிறைவேற்றதிகாரமுறை ஒழிக்கப்படக்கூடாது

### ஜனாதிபதியுடனான சந்திப்பில் அதாவுல்லா MP



**ஏ.ஜீ.எம்.தௌபீக்**

சகல சமூகங்களதும் பாதுகாப்பு, இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அரசியலமைப்பூடாக உறுதிப்படுத்தப்படும் வரை, நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாதென தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போதே,

05

## சுற்றுலாத்துறை தூதுவராக சனத்



இலங்கையின் சுற்றுலாத் துறை தூதுவராக கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜெயசூரிய (Sanath Jayasuriya) நியமிக்கப்பட்டுள்ளார்.

சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ (Harin Fernando) இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

புதிய சுற்றுலா ஆலோசனைக் குழுவுடன் இணைந்து நியமனத்தை அறிவிக்கும் சிறப்பு நிகழ்வு வியாழக்கிழமை (04) இரவு இடம்பெற்றது.

05

### லேக் ஹவுஸ் நிறுவனத்தின்

## 'தினகரன்' News Alert சேவை ஆரம்பித்து வைப்பு




**'தினமின', 'டெய்லி நியூஸ்' சேவைகளும் ஆரம்பம்**

வாசகர்களுக்கு உடனடி செய்திகளை வழங்கும் நோக்கத்துடன், லேக்ஹவுஸ் மூன்று மொழிகளிலும் SMS

05

## எங்கள் கருத்து...

## மக்கள் மத்தியில் எழுந்துள்ள தவிர்க்க முடியாத சந்தேகம்!

இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் உருவெடுத்து ஆறு மாத காலத்துக்கு மேலாகி விட்டது. நாட்டில் கொவிட் தொற்று தணிவுநிலைமைக்கு வந்ததன் பின்னர், பொருளாதார நெருக்கடி உருவெடுத்ததையடுத்து ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின.

பொருட்களின் விலையுயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. அதன் பின்னர் இரசாயன உரப்பசளை வழங்குமாறு கோரி விவசாயிகள் போராட்டம் நடத்தினர். இவ்வாறு நாடெங்கும் வியாபித்த போராட்டங்கள், காலப்போக்கில் உச்சநிலையை அடைந்தன.

அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி போராட்டத்தை ஆரம்பித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அத்தனை பேருமே வீட்டுக்குச் செல்ல வேண்டுமெனக் கோஷமெழுப்பினார்கள். அவ்வாறான போராட்டம் தீவிர நிலையை அடைந்ததையடுத்து, ஜனாதிபதியை வீடு செல்லுமாறு வலியுறுத்தி அவர்கள் போராடினர்.

நாட்டின் பல்வேறு பாகங்களிலுமிருந்து கொழும்பு காலிமுகத்திடலுக்கு வந்து சேர்ந்த போராட்டக்காரர்கள் அங்கேயே முகாமிட்டுக் கொண்டனர். காலிமுகத்திடல் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக பெருந்தொகையானோர் அங்கு ஊர்வலமாக வந்து சேர்ந்த பின்னர் இடம்பெற்ற சம்பவமானது எமது நாட்டின் வரலாற்றில் முன்னர் ஒருபோதுமே நிகழாததாகும். நாட்டின் ஆட்சித் தலைவரே தனது பதவியைத் துறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

05

## நாளை நள்ளிரவு முதல் Gas விலைகள் குறைப்பு

### லிற்றோ நிறுவன தலைவர் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் சமையல் எரிவாயுவின் விலைகள் குறைவடையும் என லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் லிற்றோ கேஸ் நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவிக்கையில்:

பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள

05

## இலங்கைக்கு இந்தியா எப்போதும் உதவும்

### ஜெய்சங்கர் அலி சப்ரியிடம் உறுதி

இலங்கைக்கு உதவுவதற்காக இந்தியா எப்போதும் தயார் நிலையில் இருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலத்தை

## போராட்டங்கள் நடத்துவதன் மூலமாக தீர்மானிக்க முடியாது

### நாமல் ராஜபக்ஷ எம்.பி அதிரடி பதில்



போராட்டத்தால் ராஜபக்ஷக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாதெனவும், அவ்வாறான திட்டத்துக்கு தான் இடமளிக்கப் போவதில்லையெனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள் ராஜபக்ஷக்களின் அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்ததா? இல்லையெனில் அவர்களின் அரசியல் எதிர்காலம் என்னவாகும்? என்று நாமல் ராஜபக்ஷவிடம்

05

### தடுப்பு முகாமில் அவஸ்தைக்குள்ளாக்கப்பட்ட

## இலங்கை தமிழ் குடும்பத்திற்கு நிரந்தர வதிவிட விசா

### அவுஸ்திரேலியா அரசாங்கம் வழங்கியது



அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்தில் வசிக்கும் இலங்கை தமிழ் குடும்பத்தினருக்கு நிரந்தர விசா வழங்கப்பட்டுள்ளது.

நேற்று நடேசலிங்கம் வீட்டிற்கு சென்ற உள்துறை திணைக்களத்தின் அதிகாரிகள் இலங்கை தமிழ் குடும்பத்திற்கு நிரந்தர விசா வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை

05

## பிறந்தநாள் பரிசாக வழங்கப்பட்ட பெற்றோல்

### GS ஒருவருக்கு ஊர் மக்களின் அன்பளிப்பு

நாட்டில் கடந்த சில மாதங்களாக எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கியூஆர் நடைமுறைகளாலும் எரிபொருள் வரிசைகள் இன்று வரை ஓரளவு குறைந்து வருகிறது.

யாழில். கிராம உத்தியோகத்தரின் பிறந்த நாளுக்கு ஊர்ப் பொதுமக்கள் இணைந்து பெற்றோலைப் பரிசாக வழங்கிய சம்பவமொன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது.

ஜே / 363 கிராம உத்தியோகத்தரின் பிறந்தநாள் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போதே இவ்வாறு பிறந்தநாள் பரிசாக பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது.

05

## மட்டக்களப்பு பொலிஸ் அதிகாரியின் நேர்மை

### சமூக வலைதளங்களிலும் நேரிலும் பாராட்டு




**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மேல்நீதிமன்ற அரச சட்டத்தரணி அலுவலகத்தில் கடமையாற்றும் மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலைய


05

# ஜனாதிபதி ரணில் தலைமையிலான ஒன்பதாவது பாராளுமன்றின் மூன்றாவது கூட்டத்தொடரில்.....
















வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

Automatic block machine

Little used but brand new condition, full set available, pan mixture machine, conveyor belt machine, Block Machine, tracker machine, 1950000
077 37 80 470

WANTED
නිවසටම පැමිණ මිලට ගනු ලැබේ
Reg. No WLL 5244
Rolex, Omega, Swiss, Branded Watches, Diamond Jewellery, 21K, 18K, 14K, 12K Jewellery Items & Silvers, Old Notes, Antique Furniture
රිදී, ඉතාලි වලින් ගෙන්වන ලද හැඩි ගෑරුප්පු (Arjanthu) උපරිම මිලට
We buy Pawned Gold Jewellery Items
0776 562 382, 0777 077 333

ALTAIR APARTMENT
FOR SALE
* 3 BR+ 2 WR
* 1820 Sq.ft.
* above 35 floor
* Sloping tower with port city view
Selling Price
Rs.275 Million

0777 258 280

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com




**சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதற்கான வழியை ஏற்படுத்தும். இதன் மூலம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல முடியும் என சபை முதல்வரும், கல்வி அமைச்சருமான கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த எம்முடன் பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய இடைக்கால அரசாங்கத்தினால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க முடியும் என நீங்கள் நம்புகின்றீர்களா?**

பதில்: இது குறித்து தற்பொழுது பேசப்பட்டு வருகிறது. உதாரணமாக, சில வாரங்களுக்கு முன்பு எரிவாயு விநியோகம் கேள்விக்குறியாக இருந்தது. இந்த நிலைமை தற்பொழுது மாறியுள்ளது. லிற்றோ நிறுவனத்தின் தகவல்களின்படி அடுத்த இரண்டு வாரங்களுக்குள் எரிவாயு வரிசைகள் எதுவும் இருக்காது. எனவே, தொடர்ச்சியான எரிவாயு விநியோகத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. முன்னர் உரம் தொடர்பாகப் பாரிய பிரச்சினையிருந்தது.

அரசாங்கத்தினால் 44,000 மெற்றிக்தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய முடிந்ததுடன், இது தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகிறது. பெரும்போகம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நெல்லுக்கு மட்டுமன்றி தேயிலை, மரக்கறிகள் மற்றும் சோளம் போன்ற பயிர்களுக்கும் உரம் வழங்க அரசாங்கம் கேள்விப்பத்திரங்களைக் கோரியுள்ளது.

பெரும்போகத்துக்குப் பின்னர் அடுத்த சில மாதங்களுக்குள், உணவு விநியோகம் உண்மையான இளைஞர்களின் குரலுக்கு செவிசாய்க்க ஜனாதிபதி ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். அதைச் செய்ய அரசு தயாராக உள்ளது. ஆட்சியில் அவர்களின் கருத்துகளையும் யோசனைகளையும் பெற விரும்புகிறோம்.

**கே: நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கான ஒரே வழி அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதுதான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

போராட்டக்காரர்களை அந்த இடத்தைக் காலி செய்யும்படி பொலிஸார் இரண்டு தடவை கோரிக்கை விடுத்தபோதும், அதற்கு அவர்கள் செவிசாய்க்கவில்லை. ஜனாதிபதி செயலகம் இல்லாமல் ஜனாதிபதிக்கு தனது கடமைகளை நிறைவேற்ற இடமில்லை. எனவே, பாதுகாப்புப் படையினர் குறைந்தபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி போராட்டக்காரர்களை வளாகத்திலிருந்து வெளியேற்றினர். அதுதான் உண்மையில் அங்கு நடந்தது. அவர்கள் போராட்ட இடத்திற்குச் செல்லவில்லை. ஜனாதிபதி செயலகத்தின் நுழைவுத் தடை மற்றும் இடையூறு ஏற்படும் பாலம்



# சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதனால் பாராளுமன்றத்தை பலப்படுத்த வழிபிறக்கும்

## சபை முதல்வரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவுடன் சந்திப்பு

இப்போது இருப்பதை விட நல்ல நிலைமைக்கு வரும் என்று நான் நினைக்கிறேன். அந்நிய செலாவணி பற்றாக்குறையால் எரிபொருள் இறக்குமதி செய்வது தற்போது ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. இந்தச் சவால்களுக்கு மத்தியிலும் (ஒகஸ்ட் 1 முதல்) வழங்கப்படும் எரிபொருளின் அளவைக் கட்டுப்படுத்தி, QR குறியீட்டைப் பயன்படுத்தி வாகனங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு செய்துள்ளது. அந்தச் செயல்முறையினால் நாம் எப்படி இலக்குகளை அடையப் போகிறோம் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இருந்து அதிக எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் பெறுவதற்கான சாத்தியங்களை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். அதற்கு சில வாரங்கள் ஆகும். செப்டம்பரில் இந்த இலக்கை அடைய முடியும் என்று நினைக்கிறேன்.

**கே: தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து விடுபட சர்வகட்சி ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள சில ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினரக்ளும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இந்த விடயங்கள் ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அண்மையில் நடைபெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தில் பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் குறித்து அவர் விளக்கமளித்தார். அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் பேசுவதற்கும், பாராளுமன்றக் குழு அமைப்பைப் பலப்படுத்த எதிர்பார்த்துள்ள விடயங்கள் குறித்தும் அவர் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல் காலிமுகத்திடல் போராட்டக் களத்தில்

பதில்: சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்த இது வழிவகுக்கும். தற்போது முழுஉலகமும் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எனவே, சர்வதேச சமூகம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நன்கொடை வழங்கும் நாடுகள் போன்ற நிதி நிறுவனங்களும் இலங்கை தொடர்பான தமது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்வது மிகவும் நல்ல செய்தியாக இருக்கும்.

**கே: காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான சமீபத்திய சம்பவங்கள் குறித்து பிரதான எதிர்க்கட்சி கவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அரசு விசாரணை நடத்துமா?**

பதில்: ஊடகங்களில் காட்டப்பட்ட தகவல் மற்றும் வீடியோ காட்சிகளுக்கமைய அமைதியான போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தவில்லை. அவர்கள் செய்தது ஜனாதிபதி செயலகத்தை விடுவிப்பதாகும். முதலில் வரை அவர்கள் மட்டுப்படுத்தப்பட்டனர். ஜூலை 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களின் விளைவாக ஜனாதிபதி செயலகத்தின் வேலியும் உடைக்கப்பட்டது. மிகவும் மோசமான நிலையில் இருந்ததால் அங்கு அலுவலகம் தொடங்குவது சிரமமாக இருந்தது. ஜனாதிபதி செயலகத்தை விடுவிப்பதற்காக, பாதுகாப்புப் படையினர் ஆர்ப்பாட்டக்காரர்களை வளாகத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**கே: பொதுத்தேர்தலை உடனடியாக நடத்தி புதிய அரசாங்கம் விரைவில் அமைக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். நீங்கள் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

**ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இருந்தால் தேர்தல் நடைபெறும் வரை காத்திருக்க வேண்டும்!**

பதில்: அது அவருடைய தனிப்பட்ட கருத்து. எத்தனையோ அரசியல் கட்சிகள் உள்ளன. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன ஏறத்தாழ மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது.

சில அரசியல் கட்சிகள் வெவ்வேறு நோக்கங்களை அடைய வேண்டும் என்பது வெளிப்படையானது. முதலாவதாக, நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, உணவுப் பொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்திற்கு உத்தரவாதம் அளித்து, பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கான சிறந்த வழிமுறையை அமுல்படுத்த வேண்டும்.

இந்தத் தேவைகளை பூர்த்தி செய்யாமல் தேர்தலை நடத்த முடியாது. மறுபுறம், அரசியலமைப்பு விதிகளின்படி, நாங்கள் பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றாவிட்டால், இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது. அதாவது அடுத்த ஆண்டு மார்ச் வரை காத்திருக்க வேண்டும். பாராளுமன்றத்தை கலைப்பது ஜனாதிபதியின் விருப்பமாகும். நாம் செய்ய விரும்புவது முதலில் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

**கே: எவ்வாறாயினும், அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது குறித்து எதிர்க்கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன, இது எதிர்க்கட்சிகளையும் அமைதியான போராட்டங்களையும் நசுக்கும் முயற்சி என்று அவர்கள் கூறுகிறார்கள். உங்கள் பார்வை என்ன?**

பதில்: எதிர்க்கட்சிகளை அடக்குவதற்காக அந்நடவடிக்கை அல்ல. அவசரகால விதிமுறைகள் இல்லாமல், சில கூறுகளின் நடத்தையை கட்டுப்படுத்த முடியாது. காலிமுகத்திடல் போராட்டத் களத்திலும் மற்ற எல்லா இடங்களிலும் வெவ்வேறு குழுக்கள் உள்ளன. மே 9 அன்று சில தனியார் மற்றும் பொதுச்சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்பதை நாம் பார்க்கலாம். மே 9 கலவரங்களின் விளைவாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தனக்கு உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றி பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

இதுதான் நாட்டின் நிலைமை. காலிமுகத்திடலில் உள்ள அனைத்துக் குழுக்களும் ஒரே நிலைப்பாட்டில் இல்லை. சில உண்மையான இளைஞர் குழுக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகின்றன. இருப்பினும், மறைமுக நோக்கங்கள் மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களைக் கொண்ட சில தரப்பினர்களும் அங்கு உள்ளனர். ஜூலை 9 சம்பவங்களைத் தொடர்ந்து, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொல்துவ சந்திக்கு வந்திருந்ததையும், ஏறக்குறைய 3000 முதல் 4000 பேர் வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையும் எம்மால் பார்க்க முடிந்தது.

அவர்கள் பாராளுமன்ற வளாகத்துக்குள் புகுந்து தாக்க விரும்பினர். ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இருந்தால் தேர்தல் நடைபெறும் வரை காத்திருக்க வேண்டும். அந்த நேரத்தில் நிச்சயமாக அவர்களால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். எனவே, சில குழுக்களின் மறைமுக நோக்கம் அரசியலமைப்புக்கு வெளியே அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். அந்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் கூட அந்த வரிசையில் இல்லை என்று நினைக்கிறேன். நாங்கள் செய்ய விரும்புவது நாட்டில் சட்டம் ஒழுங்கை மீட்டெடுத்து மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதாகும்.

**அமைதியான போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தவில்லை. அவர்கள் செய்தது ஜனாதிபதி செயலகத்தை விடுவித்ததாகும்**

**அரசியலமைப்புக்கு புறம்பாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதே சில குழுக்களின் மறைமுக நோக்கம்!**




# சர்வகட்சி என்பது சாதாரண விடயமல்ல!

கட்சி அரசியல் முறை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் வந்துள்ளது. சம்பிரதாய அரசியல் காட்சிகள் குறைவடைந்துள்ளன. ஆனால் மாற்று ரீதியாக உருவான புதிய கட்டமைப்பும் பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிகிறது. பொதுமக்களின் நம்பிக்கையை வெற்றி கொள்ள முடியாமை இங்கு கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். அதிக அளவில் அரசியல் கட்சிகள் காணப்படுகின்ற சிறிய நாட்டில், தோல்வியடைந்த துறைகள் பற்றி நடுநிலையான திறனாய்வுக்குச் செல்வது நன்றாகும்.

முன்னாள் ஜனாதிபதியும் அமைச்சரவையும் இராஜினாமா செய்த பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமை மிகவும் சிக்கலான தோற்றத்தைப் பெற்றுள்ளது. சர்வ கட்சி அரசாங்கம், அரசியலமைப்புத் திருத்தம் என பலவிதமான கருத்துக்கள் உள்ளன. பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு பெருமுயற்சி அவசியமாகும். ஆட்சியாளர்கள், மாற்றுக் கருத்துக் கொண்ட அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களுக்கு பாரிய பொறுப்புகள் உள்ளன.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான யோசனை பல சந்தர்ப்பங்களில் தோன்றியுள்ளது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். பயங்கரவாதம், சுனாமி பேரழிவு போன்ற சந்தர்ப்பங்களில் அதிகமாக இதுபற்றிக் கலந்துரையாடப்பட்டது. ஆனால் விரிவான கூட்டமைப் பொன்று உருவாகவில்லை. அதற்குப் பாதிப்பு ஏற்படுத்திய காரணிகள் இன்றும் அவ்வாறே உள்ளன.

சர்வகட்சி அரசாங்கத்திற்கு யோசனை கூறப்பட்டுள்ளதோடு, திரையின் பின்னால் காணப்படும் கதை வேறாகும். அமைச்சுப் பதவி, அமைச்சுகளில் பதவி, கூட்டுத்தாபனம், திணைக்களங்களில் பதவிகளை பிரித்துக் கொள்வதற்காக நடத்தப்படும் கலந்துரையாடல்கள் ஆகியன இறுதியில் முக்கியமற்ற முடிவுகளோடு நிறைவுபெறுகின்றன. இலங்கையர்களின் எதிர்பார்ப்பு குறித்து கவனம் செலுத்துவது முக்கியமாகும். சிரமங்களைத் தாங்கிக் கொண்டுள்ளதோடு புதியதாக ஏதேனும் நடக்குமா என நம்பிக்கையுடன் மக்கள் உள்ளார்கள்.

நாட்டுக்குத் தேவை பதவிகளைப் பிரித்துக் கொள்ளும் சர்வகட்சி அரசாங்கமல்ல. நாட்டுக்குத் தேவையான பொருளாதார மற்றும் சமூக கோட்பாடுகளை பாரிய காரணிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஜனநாயகத்தை மதிக்கும் திறந்த பொருளாதார முறை பற்றி ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துகளைக் கொண்ட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களின் எண்ணங்களை ஆராய மேடையொன்று அமைக்க வேண்டியுள்ளது.

அடிப்படைவாதிகளாக இல்லாதிருத்தல் மிகவும் அவசியமான விடயமாகும். அனைவரும் ஒரு அடி பின்னால் எடுக்க வேண்டியதோடு, பொதுவான காரணிகளைக் கண்டுபிடிப்பது அவசியமாகும். அரசியல் சித்தாந்தம், கொள்கை மற்றும் முடிவு எடுக்கும் விதம் பற்றி காணப்படும் பாரிய மாற்றங்களிடையே உருவாகும் பொதுவான திட்டத்தில் தியாகம் உள்ளது. அர்ப்பணிப்பு காணப்பட வேண்டும். தாங்கிக் கொள்வதற்கான தைரியம் அவசியமாகிறது. இந்த அனைத்து விடயங்களோடு பொதுமக்களின் நம்பிக்கையை வெற்றி கொள்வதும் அடங்குகின்றது.

இலங்கை இன்றுள்ள இடம் மகிழ்ச்சிகரமானதல்ல. சர்வகட்சி அரசாங்கத்திற்கு பாரிய பொறுப்புகள் வழங்கப்படும். நவீன, போட்டி மிகுந்த பொருளாதாரக் கொள்கைகளைத் தயாரிக்க வேண்டியுள்ளது. ஆனால் அவை இலகுவானதல்ல. செயல்திறனை ஏற்படுத்தும், முதலீட்டினை கொண்டு வரும், தனியார்மயத்தை செயல்படுத்தும் திட்டங்கள் மூலம் பாரிய அழுத்தங்கள் ஏற்படுத்தப்படும். மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கும், ஆனால் பொருளாதாரத்தை மேம்படுத்தும் சில முடிவுகள் ஒருபோதும் பிரபலத்தை ஏற்படுத்தாதிருக்கலாம். அவ்வாறான முடிவுகள் சில கட்சிகளின் கொள்கைகளுக்கு பொருந்தாமல் இருக்கவும் இடமுண்டு. பொருந்தாத, தாங்க முடியாத நிலைமையின் மத்தியில் நிம்மதியாக முடிவு எடுக்கக் கூடிய சக்தி சர்வகட்சி அரசாங்கத்திற்கு முக்கியமான விடயமாக அமையும்.

வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது இந்நாட்டில் அரசியலில் தனியான போராட்டம் அதிகமாகும். அதிகாரத்துக்கு வந்த பின்னர் சிறுசிறு கட்சிகளின் கருத்துகளை கருத்தில் கொள்ளாமல் செயல்படுவார்கள். கட்சியை மாற்றும், அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்திற்கு தாவும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும். அதிகாரத்துக்குப் பதிலாக பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கும் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைப்பது இலகுவல்ல. முன்னால் குறிப்பிட்டவாறு தங்களுடைய அதிகாரம் மற்றும் பதவிகளுக்காக கட்சிகளுக்கு இடையே பொதுவான காரணியை அறிந்து அவற்றை ஒப்புக் கொள்வதே அவசியமாகும்.

குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட அடிப்படை விடயங்கள் சில அதாவது அரசியலமைப்பு, பொருளாதாரம், கல்வி போன்ற பிரிவுகளுக்காகவோ இணையும் கொள்கைகளுடன் பதவிகளை எதிர்பாராது ஒவ்வொருவரையும் மதிக்கும் கட்டமைப்பை தயாரித்தால் அதுவே சர்வகட்சி அரசாங்கமாகும். இவ்வாறான பொதுக் கட்டமைப்பை தயாரிப்பது எதிர்பார்ப்பதை விட இலகுவான விடயம் அல்ல என்பதை ஞாபகப்படுத்த வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# எரிவாயு பற்றாக்குறை எவ்வாறு ஆரம்பமானது?

லிட்ரோ எரிவாயு நிறுவனம் எரிவாயு இறக்குமதிக்காக செய்திருந்த ஒப்பந்தம் 2022 பிப்ரவரி மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. ஆனால் எரிவாயு விநியோகம் மார்ச் மாதத்திலேயே முடிவுக்கு வந்தது. புதிய வழங்குனருக்காக டென்டர் வழங்கும் நடவடிக்கை நிறுவனத்தால் ஜனவரி மாதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அவ்வேளையில் வழங்குனரால் நீண்ட கால கடன் பத்திரம் தேவை என நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் டொலர் பிரச்சினை தலை தூக்கியிருந்தது. டொலர் பிரச்சினை தீவிரமடைந்து மத்திய வங்கியால் கடன் வழங்குவது நிலைமைக்கும் லிட்ரோ நிறுவனம் தள்ளப்பட்டது.



சாகல ரத்னாயக்க

## மாற்று வழியை தேடல்

நீண்டகால விநியோகஸ்தரை இழந்ததால் பாவனையாளர்களின் தேவையும் அதிகரித்ததன் பேரில் லிட்ரோ நிறுவனம் நாளாந்தம் சம்பாதிக்கும் பணத்தை டொலராக மாற்றி எரிவாயு கப்பலை கொண்டு வந்து எரிவாயுவை விநியோகிக்க முயற்சி செய்தது. அச்சந்தர்ப்பத்தில் உடனடியாக விலைக்கு விற்கும் முறையை பின்பற்றும் நிறுவனங்களிடமிருந்து கையில் உள்ள பணத்திற்காக புதிய தொழில் வாய்ப்பும் உருவாகியது.

## நிதிப் பிரச்சினை

நல்லாட்சி அரசாங்கம் விலகும் போது லிட்ரோ நிறுவனத்திடம் 21 பில்லியன் ரூபா கையிருப்பு காணப்பட்டது. திறைச்சேரிக்கு 11 பில்லியன் ரூபா லாபத்தை செலுத்தும் நிறுவனமாக அது காணப்பட்டது. 2022 ஜூன் மாதம் தற்போதைய தலைவர் முதித்த பீரிஸ் நிறுவனத்தை பொறுப்பேற்கும் போது நிறுவனத்தின் கடன் சுமை 11 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது. இரண்டு வருட காலத்துக்குள் அவ்வாறு கடன் அதிகரித்து காணப்பட்டது. உலக வர்த்தக சந்தையில் விலை அதிகரிப்புக்கு இணைந்ததாக எரிவாயு விலையில் மாற்றத்தை ஏற்படுத்தாதது நிதி பிரச்சினைக்கு முக்கிய காரணமாக அமைந்ததாக அதன் நிதிப் பணிப்பாளர் லக்மாலி சி.ஹபுஆராச்சி கூறினார். 2019 அக்டோபர் தொடக்கம் 2021 ஆகஸ்ட் வரை உலக வர்த்தக சந்தையில் விலை குறைந்தளவு எரிவாயுவே கிடைத்தது. லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை 50 லட்சத்தையும் கடந்ததாகும்.




12.5 கிலோ, 5 கிலோ, 2.3 கிலோ மற்றும் 37.5 கிலோ என களஞ்சியப்படுத்தக்கூடிய ஐம்பது லட்சத்துக்கும் அதிகமான சிலிண்டர்களை லிற்றோ நிறுவனம் விநியோகிக்கின்றது. எரிவாயு பிரச்சினை காணப்பட்ட வேளையில் இந்த தொகையில் 40 லட்சம் தொடக்கம் 45 லட்சம் வரை காலியாகவே இருந்தது. 45 லட்சம் தேவையாக இருந்த போதும் ஐந்து லட்சத்திற்கும் குறைவாகவே விநியோகிக்கப்பட்டது. அதனால் பிரச்சினை அதிகரித்ததோடு மக்கள் சிலிண்டர்களை வீதியை மறித்து வைத்து எரிவாயு பெற்றுத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

அதனால் பிரதமராக பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஓமான் டிரேடிங் நிறுவனத்துடன் குறுகிய கால விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக ஏப்ரல் 8 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது. பின்னர் நிறுவனம் டொலர்தேடும் பிரச்சினையில் சிக்கிக் கொண்டதோடு அரச மற்றும் தனியார் வங்கிகள் கடன் பத்திரத்தை வழங்குவதை இடைநிறுத்தின. எரிவாயுவுக்கான தட்டுப்பாடு அதன் பின்னரே ஆரம்பமாகியது. ஏப்ரல் மாத ஆரம்பத்தில் எரிவாயுவை விலைக்கு வாங்கும் திறனை லிட்ரோ நிறுவனம் இழந்தது.

அதுவரை இருந்த விநியோகஸ்தர்களான ஓமான் டிரேடிங் எரிவாயு நிறுவனத்துடன் தொடர்ந்தும் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான கலந்துரையாடலை மேற்கொள்ள முன்னாள் தலைவர் முயற்சி எடுக்கவில்லை. பெப்ரவரி 28ஆம் திகதி ஓமான் டிரேடிங் நிறுவனத்துடனான எரிவாயுவுக்கான ஒப்பந்தம் நிறைவடைந்ததுடன் டொலர் பிரச்சனையும் படிப்படியாக அதிகரிக்க தொடங்கியது. தற்போதைய டொலர் பிரச்சினை காரணமாகவே நீண்ட கால கடன் பத்திரத்தை நிறுவனம் கோரியுள்ளது.

புதிய விநியோகஸ்தரை தெரிவு செய்வதற்காக நிறுவனம் அச் சந்தர்ப்பத்தில் டென்டரை கோரியிருந்தது. ஒரு வருடத்திற்காக அந்த டென்டரை வெளியிட்டிருந்தது.

அப்போது நீண்டகால கடன் பத்திரத்தை திறக்கக் கூடிய திறன் லிட்ரோ நிறுவனத்திடம் காணப்பட்டது.

பொருளாதாரப் பிரச்சினையின் ஆரம்ப காலகட்டம் என்பதாலும் லிட்ரோ நிறுவனத்திடமும் மத்திய வங்கியிடமும் அதற்கான நிதி பலம் காணப்பட்டது. நிதியை திரட்டுவதற்காகவும் மற்றும் புதிய டென்டருக்கான அனுமதியை பெறுவதற்காகவும் கலந்துரையாடல்கள் அவ்வேளையில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததோடு கலந்துரையாடலின் முன்னேற்றம் பற்றி அமைச்சரவைக்கும் வாரந்தோறும் அறிவிக்கப்பட்டது. மத்திய வங்கி உள்ளிட்ட நாட்டின் அனைத்து வங்கிகளும் நீண்ட கால கடன் பத்திரத்தை வெளியிட முடியாதென கூறியதோடு அமைச்சரவையும் அதில் தலையிட முடியாது என இறுதியாக நிறுவனத்துக்கு அறிவித்தது.

நிறுவனத்திடம் இருந்த எரிவாயு முடிவடைந்தவுடன் நாடு பூராவும் 80,000 தொடக்கம் ஒரு லட்சம் வரையான பாவனையாளர்கள் கியூவரிசையில் நிற்கத் தொடங்கினார்கள். ஒருபுறம் நீண்ட கால விநியோகஸ்தர்களை இழந்ததுடன் மறுபுறம் டொலரை பெறுவதற்கு முடியாத ஏற்றவாறு எரிவாயுவை பெறுவதற்கு பழகிக் கொண்டோம்.

ஏப்ரல் மாத நடுப்பகுதியிலேயே, 3500 மெட்ரிக் தொன் எரிவாயு அல்லது 7000 மெட்ரிக் தொன் எரிவாயு கப்பலை கொண்டு வந்து சந்தையில் விநியோகிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்தது. அது எமது தேவைக்கு ஒரு போதும் போதுமானதல்ல. அதனால் கியூ வரிசை முடிவுக்கு வரவில்லை. எரிவாயு விநியோகிக்கும் அனைத்து நாட்களிலும் பாவனையாளர்கள் 80,000 தொடக்கம் ஒரு லட்சம் வரை க்யூ வரிசையில் இணைந்து கொண்டார்கள்.



லிட்ரோ தலைவர் முதித்த பீரிஸ்

இவ்வாறு நாள்தோறும் இணைந்தவர்களின் எண்ணிக்கை ஒன்று ஒன்றரை மாதங்களில் 4.5 மில்லியனாக அதிகரித்தது. நிறுவனம் கண்டுபிடித்த மாற்று வழிகள் மூலம் கியூவரிசை முடிவுக்கு வராததோடு அது மேலும் அதிகரித்தது.

எரிவாயு விநியோகஸ்தர்கள் நீண்டகால கடன் பத்திரங்களை கேட்ட போது நிறுவனம் அதற்கு தேவையான நிதியை வழங்கக்கூடிய திறன் இல்லை என கூறியதால் எரிவாயு பிரச்சினை மேலும் தீவிரமடைந்தது. பல நாட்கள் வரிசையில் நின்ற மக்கள் இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என நாட்களை எண்ணத் தொடங்கினார்கள். அதனால் வர்த்தகங்களை மேற்கொள்ள முடியாது போனதோடு லட்சக் கணக்கான மக்களின் பசியை தீர்க்க அடுப்பைப் பற்ற வைக்கவும் முடியாமலும் போனது.

பணத்தை செலுத்தும் அளவுக்கே எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டதால் நாளுக்கு நாள் க்யூ வரிசை அதிகரித்தது. எரிவாயுவுக்காக கறுப்பு சந்தையும் உருவாகத் தொடங்கியது. ஒரு எரிவாயு சிலிண்டரின் விலை 25000 ரூபாய் வரை அதிகரித்தது. நாட்டுக்கு தேவையான எரிவாயுவை வழங்க 30,000 மெட்ரிக் தொன் தொடக்கம் 36,000 மெட்ரிக் தொன் தேவைப்பட்டதோடு எமக்கு 3500 தொன் தொடக்கம் 7000 தொன் எரிவாயுவே கிடைத்தது.

எரிவாயு சிலிண்டர்களை பாதுகாக்கும் தேவையும் பாவனையாளர்களுக்கு நேரிட்டது. ஏனென்றால் அவற்றை திருடுபவர்கள் குறித்தும் பொலிஸ் அறிக்கைகள் தெரிவித்தன. எரிவாயு வரிசையில் எரிவாயு சிலிண்டர்களை நாள் தோறும் பாதுகாப்பதற்காக... அதிகரித்தாலும் உள்ளூர் வர்த்தக சந்தையில் எரிவாயு விலையை அதிகரிக்க அன்றைய அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை. அவ்வேளையில் எரிவாயுக்காக விலைச் சூத்திரம் ஒன்று காணப்பட்டாலும் அது செயல்படுத்தப்படவில்லை.

பெரும் நஷ்டத்துக்கு மத்தியிலேயே எரிவாயு நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதால் லாபத்தை எதிர்பார்க்க முடியாது. அச்சந்தர்ப்பத்தில் வங்கி கூட கடனை வழங்க பின்வாங்குவது மீண்டும் கடனை செலுத்த முடியாத நிறுவனம் என்பதாலாகும். ஏனென்றால் எரிவாயு விற்பனையால் நிறுவனம் பெறும் பணம் ஒன்றோ இரண்டோ எரிவாயு கப்பல்களை இறக்குமதி செய்வதற்கே போதுமானதாகும்.

நிறுவனத்திடம் கையிருப்பிலிருந்த10.4 பில்லியன் ரூபா 2021 ஆம் ஆண்டளவில் மறை 100 மில்லியன் ரூபாவரை வீழ்ச்சி அடைந்தது. அதனால் நிறுவனத்துக்கு ரூபா பற்றாக்குறையும் ஏற்பட்டது. அந்த நிறுவனம் 2019 ஆம் ஆண்டு ஆறு பில்லியன் வருடாந்த வருமானம் பெற்ற நிறுவனமாகும். விலையில் திருத்தங்கள் செய்யாமை பலவீனமான முகாமைத்துவம் என்பன இந்த நிறுவனத்தை நட்டத்தில் இயங்கும் நிறுவனமாக மாற்றியது. இது வரியுடன் 11 பில்லியன் லாபத்தை திறைச்சேரிக்கு செலுத்திய நிறுவனமாகும்.

எவ்வாறாயினும் நிதியைத் தேடி எரிவாயுவை கொள்வனவு செய்த போதும். சமையல் எரிவாயு பாவனையாளர்களுக்கு கிடைக்கவில்லை. அத்தியாவசிய சேவைகள் என அறிந்து கொள்ளப்பட்ட இடங்களுக்கும் மற்றும் கைத்தொழிற்சாலைகளுக்கும் பகிரப்பட்டதால் வீட்டு உபயோக பாவனையாளர்களுக்கு பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கையை முன்னெடுத்தார். அதுவே அவர் முதன் முதலில் எடுத்த முடிவாகும். முதல் 4 மாத காலங்களுக்காக குறுகிய கால விநியோகத்தை பெற்றுக் கொடுத்து எரிவாயு பிரச்சினையை தீர்ப்பதற்கும் வழிவகுத்தார். அதே வேளை 12 மாதங்களுக்கு நீண்டகால விநியோகஸ்தர் ஒருவரை கண்டுபிடிப்பதற்காக மீண்டும் டென்டர் கோரும்படி அமைச்சரவை லிற்றோ நிறுவனத்திற்கு உத்தரவிட்டது.

நீண்டகால கடன் பத்திரத்தை விநியோகிக்க முடியாததால் மாற்று முறையினூடாக எரிவாயுவை விலைக்கு வாங்க முயற்சி செய்யும்படி அமைச்சரவை ஆலோசனை வழங்கியுள்ளது. அந்த ஆலோசனையின் பேரில் முன்னாள் தலைவர் நடவடிக்கை எடுத்திருந்தார். ஓமான் டிரேடிங் நிறுவனத்திடமிருந்து குறுகிய காலத்துக்கு எரிவாயுவை பெற்றுக் கொண்டாலும் எரிவாயு விநியோகம் தொடர்பான பொறுப்பு அவர்களுக்கு இல்லாமல் போனது நீண்டகால ஒப்பந்தத்தில் அவர்கள் கைச்சாத்திடாமையாலாகும்

நிதிப் பிரச்சினை காரணமாக விநியோகஸ்தரின் நம்பிக்கை அற்றுப் போனதால் அவர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டே விநியோகத்தை மேற்கொண்டார்கள். கடனுக்கு எரிவாயுவை வழங்குவதை நிறுத்தினார்கள்.

## விநியோகத்தர்கள் மீது குற்றம் சாட்டல்

ஓமான் டிரேடிங் நிறுவனத்துடனான கொடுக்கல் வாங்கல்களில் முன்னாள் தலைவர் தேசர ஜயசிங்க அந்த நிறுவனம் மோசடியான கொடுக்கல் வாங்கலுக்கு முயற்சி செய்வதாக பகிரங்கமாக குற்றம் சாட்டினார். முன்னைய விநியோகஸ்தர் மோசடியான கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டார் என்றால் அதனை சட்டத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளாமல் ஊடகங்களின் ஊடாக குற்றச்சாட்டியதன் மூலம் எரிவாயு விநியோகஸ்தர்கள் லிற்றோவுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட தயக்கம் காட்டினார்கள்.

எரிவாயு விநியோகம் பாதிப்படைப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். முன்னாள் தலைவர் அச் சந்தர்ப்பத்தில் பணத்தைத் தேடி உடனடியாக எரிவாயுவை தருவித்திருந்தாலும் அது பிரச்சினைக்கு தீர்வாகவில்லை. விநியோகத்தர்கள் அரசமட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொண்டார்களே தவிர நட்புறவுடன் பிரச்சினையை தீர்க்க தயாராக இருக்கவில்லை. அவர் குற்றச்சாட்டை சுமத்தியதால் வேறு விநியோகத்தர்கள் கூட கடன் அடிப்படையில் எரிவாயுவை விநியோகிக்க மறுப்பு தெரிவித்தார்கள்.

உலகில் உள்ள நாடுகள் தங்களுடைய விநியோகஸ்தர்களை தக்க வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பார்களே தவிர அவர்களே அதிலிருந்து விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். அதற்கு காரணம் எரிசக்தி பிரச்சினை உலகம் பூராவும் காணப்படுவதனாலாகும். ஆனால் முன்னாள் தலைவரின் நடவடிக்கையால் நல்ல விநியோகஸ்தர் ஒருவர் பகைத்துக் கொள்ளப்பட்டார். அதன் இறுதி பலனாக அவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய நேரிட்டது. உள்நோக்கத்துடன் நடவடிக்கையில் ஈடுபட்டதன் பலனை நிறுவனத் தலைவர் அல்ல பொதுமக்களே அனுபவிக்கின்றார்கள்.

## உலக வங்கியின் ஒத்துழைப்பு

அப்போதைய பிரதமர் ரணில் விக்ரம சிங்க எரிவாயு பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்கும் பொறுப்பை சாகல ரத்னாயக்காவிடம் ஒப்படைத்தார். அவரின் முதலாவது நடவடிக்கை பதில் தலைவர் நீக்கப்பட்டு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். சாகல ரத்நாயக்க புதிய தலைவராக முதித்த பீரிஸை நியமிக்குமாறு பரிந்துரைத்தார். ஏனென்றால் அவர் 2019 ஆம் ஆண்டு வரை லிற்றோ நிறுவனத்தின் முகாமைத்து பணிப்பாளர் மற்றும் தலைமை நிறைவேற்றுனர் போன்ற பதவிகளை வகித்தவராவார்.

ஜூன் 15ஆம் திகதி அவருக்கு தலைமை பதவி கிடைத்ததோடு அதன் பின்னர் ஓமான் டிரேடிங் நிறுவனத்துடன் மெட்ரோ நிறுவனம் மீண்டும் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. பின்னர் அவர்களை இந்நாட்டு நிபந்தனைகளுக்கு இணங்கச் செய்து பணத்தை தேடும் முயற்சியில் இறங்கியதாக நிறுவனத் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

அதன் பின்னர் 20 நாட்களுக்குள் 33000 தொன்னை கொண்டு வருவதற்கு தேவையான கலந்துரையாடல்கள் கியூ வரிசையை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் நடத்தப்பட்டன. உலக வங்கியுடனான கலந்துரையாடல்கள் சாகல ரத்நாயக்கவின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரின் உதவியுடன் இறக்குமதியாளர்கள் சங்கமும் தலையிட்டு டொலரை பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பை செய்ததாக நிறுவனத் தலைவர் தெரிவித்தார்.

தான் வருவதற்கு முன்னரே உலக வங்கியுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது வெற்றிகரமாகக் காணப்படவில்லை என முதித்த பீரிஸ் கூறினார். காலையில் கலந்துரையாடி மாலையில் ஏனைய நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பலனாக ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடிந்ததாக அவர் குறிப்பிட்டார்.

உலக வங்கி அதிகாரிகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் அது மிகவும் வெளிப்படையான தன்மையுடன் செயலாற்றும் நிறுவனமாகும். ஊழல் மோசடிகளுக்கு அந்நிறுவனத்தில் இடமில்லை. லிற்றோ நிறுவனம் சரியான முறையில் வேலை செய்துள்ளதா என அவர்கள் எல்லா பிரிவிலும் ஆராய்ந்திருந்தார்கள். உலக வங்கி இலங்கைக்காக வெவ்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கியிருந்த நிதியை வேறு நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்கள் தற்போது வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளன.

அதன் பிரகாரம் உலக வங்கியிடமிருந்து 70 மில்லியன் டொலரை பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் லிற்றோ நிறுவனத்துக்கு கிடைத்தது. முத்தரப்பு ஒப்பந்தத்தில் ஈடுபட்டதோடு அங்கு உலக வங்கி 70 மில்லியன் டொலரை பெற்றுக் கொடுப்பதற்கும், லிற்றோ நிறுவனம் 20 மில்லியன் டாலரை பெற்றுக் கொடுப்பதற்கும் இணங்கியதன் பின்னர் ஒரு லட்சம் மெட்ரிக் தொன் எரிவாயுவை அக்டோபர் மாத முடிவு வரை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இதுவரை 30,000 தொன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதோடு அதன் மூலம் எரிவாயு வரிசையை இல்லாமற் செய்யும் சந்தர்ப்பமும் கிட்டியுள்ளது.

உலக வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இன்னும் ஒரு நன்மையும் உண்டு.

தொடர் 18ஆம் பக்கம்...

தமிழில்
வீ.ஆர்.வயலட்







கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கரவெட்டி சங்கத்தின் பிரதான நுழைவாயில் வீதியை நெல்லியடி வர்த்தகர் T.தயாபரனின் நிதியுதவிகொண்டு புனர் நிர்மாணம் செய்து (காப்பேற் செய்து) அண்மையில் கையளித்தது. சங்கத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்ற 11 பணியாளர்கள் சங்கத்தின் தலைவர் தலைமையில் சேவை நலன் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். படம்:கரவெட்டி நிருபர் செ.அமலதாஸ்



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன CITY.F.M. வானொலி ஏற்பாட்டில் பிரபல பாடகி மரியசெல் குணதிலக்கவின் இசைக்கச்சேரி ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் புதன் கிழமை (3) மாலை நடைபெற்ற போது கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் நவீன் குமார நிசான்க பாடகி மரியசெல் குணதிலக்கவுக்கு நினைவு சின்னம் வழங்குவதையும்,சிடி.F.M.கட்டுப்பாட்டாளர் அனுர பிரியந்த, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசீம் உமர், பிரதி பணிப்பாளர் மயூரி அபோசிங்ஹ மற்றும் ஜீவனி ஜயதிலக்க ஆகியோரையும் காணலாம்.

மக்கள் இடம்பெயர்வில் தீவிர முனைப்பு

# கடந்த ஏழு மாதங்களில் 06 இலட்சம் பாஸ்போர்ட்கள்

## 33 வீத அதிகரிப்பு என்கிறது குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

இலங்கையில் முதல் ஏழு மாதங்களில் சுமார் 06 இலட்சம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இது பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் இடம்பெயர்வதற்கான முனைப்புக்கள் தீவிரமடைந்துள்ளதை குறிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் இலங்கையில் 1,47,192 கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்பட்டன.

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் கடவுச்சீட்டு வழங்கல் 33% ஆல் அதிகரித்து 5,90,260 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஜூலை மாதத்தில் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவை கடவுச்சீட்டுக்காக மொத்தம் 1,01,777 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

அதில் 98,124 பேருக்கு மாத்திரமே கடவுச்சீட்டுக்களை வழங்க முடிந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார தெரிவித்துள்ளார்.

திணைக்கள வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான கடவுச்சீட்டுகள் 2016 இல் விநியோகிக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டில் 6,58,725 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த ஆண்டின் ஏழு மாதங்களில் 5,90,260 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமையால், 2016ஆம் வருடத்தின் சாதனை முறியடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, இந்த ஆண்டின் முதல் பாதியில் 1,40,701 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை சென்றுள்ளனர். எனினும் 2021ஆம் ஆண்டு முழுவதும் 01 இலட்சத்து 17 ஆயிரத்து 952 பேர் மட்டுமே வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்காக சென்றுள்ளனர்.

சீனி, பருப்பு, கிழங்கு, வெங்காயம், மிளகாய்

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கணிசமாக குறைவு

## புறக்கோட்டை வர்த்தகர் சங்கம் தெரிவிப்பு

சீனி, பருப்பு, கிழங்கு, வெங்காயம், வற்றல் மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கணிசமாக குறைவடைந்துள்ளதாக புறக்கோட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய 600 ரூபாவாக இருந்த பருப்பு மொத்த விலை 410 ரூபாவாகவும், 330 ரூபாவாக இருந்த சீனியின் மொத்த விலை 270 ரூபாவாகவும், ரூ.215 ஆக இருந்த உருளைக்கிழங்கின் மொத்த விலை ரூ.150 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. 600 ரூபாவாக இருந்த வெங்காயத்தின் மொத்த விலை 420 ரூபாவாகவும், 1,900 ரூபாவாக இருந்த வற்றல் மிளகாய் விலை 1,300 ஆகவும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டொலரின் ஸ்திரத்தன்மை மற்றும் வங்கிகள் டொலர்களை வழங்குவதால் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# எதிர்வரும் செப்டம்பரில் இடைக்கால பட்ஜட் -ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இடைக்கால வரவு செலவுத் திட்டமொன்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதிநிதிகளை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினூடாக மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும். அரச ஊழியர்கள் காத்திரமான சேவையை நாட்டுக்கு வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதன்போது 22ஆம் திருத்தச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது குறித்து பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு தேவையெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## 'தினகரன்' News Alert...

News Alert சேவையை ஆரம்பித்துள்ளது.

Reg (space) TKN என டைப் செய்து 77010 என்ற எண்ணுக்கு SMS அனுப்புவதன் மூலம், தினகரன் SMS News Alert செய்தி சேவையுடன் இணைய முடியும். அவ்வாறே Reg (space) DIN என டைப் செய்து 77010க்கு SMS அனுப்புவதன் மூலம் தினமின செய்திகளையும், Reg (space) DAILYNEWS என டைப் செய்து 77010க்கு SMS செய்து அனுப்பவதன் மூலம் டெய்லி நியூஸ் SMS செய்திச் சேவையிலும் இணையலாம்.



வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் அனுஷ பெல்பிட்ட இந்த குறுஞ்செய்தி சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

புதிய தலைமுறையினர் புதிய ஊடகங்களில் அதிக நாட்டம் கொண்டுள்ள இன்றைய காலகட்டத்தில், இலங்கை பத்திரிகைகளின் தாய்வீடான லேக்ஹவுஸ் புதிய ஊடக முறைகளுக்கு ஏற்றவாறு தகவல்களை வாசகர்களுக்கு தெரிவிக்க வேண்டுமென நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தலைவர் தெரிவித்தார். மேலும், புதிய தொழில்நுட்ப முறைகளுக்கு ஏற்றவாறு, வாசகர்களுக்கு தகவல் தெரிவிக்கும் ஆதாரங்களை மாற்ற வேண்டும் என்றும், செய்தித்தாளில் இணைந்த வாசகர்கள், தகவல் பரிமாற்றம் செய்வதற்கான பிற புதிய முறைகளுடன் உடனடியாக இணைய வேண்டுமென்றும் அவர் கூறினார். புதிய இலத்திரனியல் ஊடகங்களுடன் கைகோர்த்து ஆரம்பிக்கும் இந்த குறுஞ்செய்தி சேவை ஒரு சிறிய செடியைப் போன்றது என்றும், ஆனால் அது விரைவில் பாரிய விருட்சமாக வளரும் என்றும் நம்புவதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகரித்து வரும் அச்சடிப்புச் செலவு அனைத்து அச்சு நிறுவனங்களுக்கும் தாக்குப் பிடிக்க முடியாததாகி வருவதாகத் தெரிவித்த தலைவர், நாட்டில் அமைதியான சூழலைப் பேண முடிந்தால் எதிர்காலத்தில் இந்நிலைமையை ஓரளவுக்கு தணிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

ஆசிரியர் பீட பணிப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் சிசிர பரணதந்திரி,நிறுவனத்தின் சட்ட அலுவல்கள் பணிப்பாளர் ஜனக ரணதுங்க, நிதி அலுவல்கள் பணிப்பாளர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம், பிரதம ஆசிரியர்கள் உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பிறந்தநாள் பரிசாக...

இதேவேளை , மேற்படி கிராம உத்தியோகத்தரின் பணிகளை இடையூறின்றி மேற்கொள்ளும் பொருட்டே பிறந்தநாளில் பெற்றோல் வழங்கியதாக இங்கு குறிப்பிடத்தக்கது .

## நாளை நள்ளிரவு முதல் ...

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலேயே இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த 20 தினங்களில் 22 இலட்சம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். பிரதேச விற்பனையாளர்களுக்கு தொடர்ச்சியாக சமையல் எரிவாயுவை விநியோகித்து வருவதாக தெரிவித்துள்ள அவர் தினமும் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு பொலிஸ்...

பொலிஸ் சார்ஜன்ட் 29651 கிட்னண் குலேந்திரன் என்பவர் அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கருகில் கடந்த 03 ஆம் திகதி பணப்பை ஒன்றை கண்டெடுத்திருந்தார்.

அதனை பரிசோதித்து பார்த்த போது 75,520 ரூபா பணமும் ஏனைய பெறுமதியான ஆவணங்களும் காணப்பட்டன. உடனே இவ்விடயத்தை அவரது உயரதிகாரிகளுக்கு தெரிவித்து அவர்கள் முன்னிலையில் பணத்தையும் ஆவணங்களையும் உரிய நபரிடம் வழங்கியிருக்கின்றார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத்த பால தலைமையில் பணப்பை உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் உயரதிகாரிகள் பொலிஸ் உத்தியோகத்தரை பாராட்டினர்.

இந்த பொலிஸ் உத்தியோகத்தர் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் கிட்னண் கோவிந்தராஜாவின் உடன்பிறந்த சகோதரரென்பதும் குறிப்பிடத்தக்கதாகும் .

## சமையல் GAS தட்டுப்பாடு...

சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

கடந்த ஜூன் 15 ஆம் திகதி முதித பீரிஸ் லிட்ரோ நிறுவனத் தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர் ஓமான் வர்த்தக நிறுவனத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன் பின்னர் எமது நிபந்தனைகளுக்கு அவர்களை இணக்கம் தெரிவிக்க வைத்ததன் பின்னர் , எரிவாறு இறக்குமதிக்கான டொலரைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன் பின்னர் 20 நாட்களுக்குள் 33,000 தொன் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்டோரது ஒத்துழைப்புடன் டொலரை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்தோடு உலக வங்கியுடனான பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டன. அதற்கமைய உலக வங்கியிடமிருந்து 70 மில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

உலக வங்கியின் 70 மில்லியன் டொலர்களையும் , லிட்ரோ நிறுவனத்தின் 20 மில்லியன் டொலர்களையும் கொண்டு ஒக்டோபர் மாதம் வரை ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நகர பொருளாதார ..

தனியார் நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான இவர், இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் ஆவார்.

மேலும், அவர் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திறைசேரி விவகாரங்களுக்கான ஆலோசகராக பணியாற்றி வருகிறார்.

## சுற்றுலாத்துறை ...

சனத் ஜயசூரிய உலகம் முழுவதும் மிகவும் பிரபலமானவர், மேலும் அவர் தானாக முன்வந்து, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவுகளை இலக்காகக் கொண்ட இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வுகளில் ஒரு பகுதியாக இருக்க ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தமிழ் குடும்பத்திற்கு ...

தெரிவித்துள்ளனர்.

2018ம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி வீட்டில் சோதனை நடத்தி நடேசலிங்கம் குடும்பத்தினரை அதிகாரிகள் கைதுசெய்து கொண்டு சென்று மெல்பேர்ன் தடுப்பு முகாமிலும் கிறிஸ்மஸ்தீவு தடுப்பு முகாமிலும் தடுத்து வைத்திருந்தனர்.

அதன் பின்னர் அவர்கள் பேர்த்தில் சமூக தடுப்பில் வாழ்ந்தனர், இந்த நிலையில் இந்த வருடம் ஜூன் மாதம் அவர்களிற்கு பிரிட்ஜிங் விசா வழங்கப்பட்டு அவர்கள் குயின்ஸ்லாந்தின் பயோலாவிற்கு திரும்பினர்.

மீண்டும் அமைதியான வாழ்க்கைக்கு திரும்ப முடிந்தமை குடும்பத்தினர் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இரண்டு சிறுமிகளும் பாடசாலை செல்கின்றனர்,நடேஸ் மீண்டும் வேலைக்கு செல்லவுள்ளார்.

நிரந்தர விசா குறித்த செய்தியால் குடும்பத்தினர், நண்பர்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

## அடுத்த வாரமும் மூன்று...

தினமானதால் கல்வியமைச்சு மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி மற்றும் போக்குவரத்து சேவை அசௌகரியங்கள் காரணமாக நகர்ப்புற பாடசாலைகளில் 3 தினங்களுக்கு மாத்திரம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

எனினும் அவ்வாறான பாதிப்புகள் இல்லாத நாட்டின் சில மாவட்டங்களில் வாரத்தின் ஐந்து தினங்களிலும் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இம்மாதம் 8ஆம் திகதி முதல் வடமாகாணத்தின் அனைத்து பாடசாலைகளையும் கல்வி நடவடிக்கைகளுக்காக ஐந்து தினங்களிலும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்விச் செயலாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டங்கள் நடத்துவதன்...

கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எனது தந்தையாகட்டும், அநுரகுமார திஸாநாயக்கவாகட்டும், சஜித் பிரேமதாசவாகட்டும், டலஸ் அழகப்பெருமவாகட்டும், நம் அனைவரின் அரசியல் பயணம் மக்களின் விருப்பத்திற்கேற்ப தீர்மானிக்கப்படுகிறது. அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் கிளர்ச்சியை நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்.

ஜனநாயக ரீதியிலான தேர்தலில் எம்மை வெற்றி பெறச் செய்யவோ அல்லது தோல்வியடையச் செய்யவோ மக்களுக்கு வாய்ப்புள்ளது. தனிப்பட்ட முறையில் போராட்டத்தை நடத்துவதில் எனக்கு எந்த அதிருப்தியும் இல்லை.

போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட சில ஆலோசனைகளும் யோசனைகளும் மிகவும் பெறுமதியானவை. போராட்டத்தில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லையென்றாலும், போராட்டக்காரர்கள் சிலருடன் எனக்கு பிரச்சினை இருக்கிறது.

செயற்பாட்டாளர்கள் எப்பொழுதும் ஜனநாயக விரோதக் கிளர்ச்சியுடன் அரசாங்கத்தைக் கவிழ்க்க முற்பட்டால், வன்முறையைப் பரப்ப முற்பட்டால், தேசியத் தொலைக்காட்சி அல்லது அரசு நிறுவனங்களுக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து, அந்த அரசாங்கச் சொத்துக்களைக் கைப்பற்றுவதே செயற்பாட்டாளரின் எண்ணமாக இருந்தால் அத்தகைய செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளை நாம் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

எனவே, ஜனநாயகத் தேர்தல் மூலம் தான் நம் அனைவரின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படுமென்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்” என்று பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் நாமல் ராஜபக்ஷ இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

# எங்கள் கருத்து

## மக்கள் மத்தியில் எழுந்துள்ள தவிர்க்க முடியாத சந்தேகம்!

அது மாத்திரமன்றி, ஆர்ப்பாட்டமென்பதன் பேரில் இதுவரை இடம்பெற்றுள்ள வன்முறைகளும் சட்டமீறல்களும் எண்ணிலடங்காதவை ஆகும். ஜனாதிபதி மாளிகைக்குள்ளும், அலரிமாளிகைக்குள்ளும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய வன்முறைகள் இலங்கையின் வரலாற்றில் கறைபடிந்த சம்பவங்களாகும்.

சாத்விக முறையிலான ஆர்ப்பாட்டமென்பது வேறு, சட்டத்துக்குப் புறம்பான வன்முறையென்பது வேறு. ஆர்ப்பாட்டக்காரர்கள் விளைவித்த சேதங்கள் விபரிக்கக் கூடியவையல்ல. போராட்டம் ஒருபுறத்தில் தீவிரமடைந்து கொண்டிருக்கையில், சட்டத்தை உதாசீனம் செய்கின்ற தொரு சுபாவம் வேகமாகவே நாட்டில் வளர்ந்து கொண்டு போனது. அதாவது ஆர்ப்பாட்டமென்பதன் பேரில் எத்தகைய சட்டமீறலிலும் ஈடுபடலாமென்ற அசாத்திய துணிச்சல் பலரிடம் குடிகொண்டு விட்டது.

இவ்வாறான ‘பலாத்கார கலாசாரம்’ நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல என்பதை கற்றோரும் புத்திஜீவிகளும் நன்கறிவர். ஆனாலும் அவர்கள் வாய்திறந்து கருத்துக் கூற அஞ்சுகின்றனர். சட்டமும் ஒழுங்கும் உதாசீனம் செய்யப்படுகின்ற நாடு ஜனநாயக நாடு அல்ல.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கை நிறைவேறி விட்டது. முன்னைய அரசாங்கம் பதவியிலிருந்து நீங்கியுள்ளது. புதிய ஆட்சித் தலைமையும் உருவாகியுள்ளது. நாட்டின் அரசியலமைப்புக்கு ஏதுவாக புதிய ஜனாதிபதி தெரிவாகியுள்ளார். அமைச்சர்களும் நிருவாகத்துக்குப் பொறுப்பான புதிய அதிகாரிகள் பலரும் நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் எரிபொருள், சமையல் எரிவாயு கியூ வரிசைகள் பெரிதும் குறைந்து விட்டன. பொருட்கள் பலவற்றின் விலைகளும் குறைவடைந்து செல்கின்றன.

ஆனாலும் போராட்டங்கள் முடிவடையவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்பார்ப்பது என்ன? அவர்களது உள்நோக்கம் யாது? அவர்களது மறைமுக நிகழ்ச்சித் திட்டம் என்ன? அவர்களின் பின்புலத்தில் அரசியல் கட்சிகள் தனிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் இயங்குகின்றனவா?

ஆர்ப்பாட்டங்கள் இன்னுமே முடிவின்றித் தொடர்கின்ற போது, இவ்வாறான சந்தேகங்கள் தவிர்க்க முடியாமல் எமக்குள் எழுகின்றன.

## நிறைவேற்றதிகாரமுறை...

தேசிய காங்கிரஸ் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் கட்சியின் நிலைப்பாடு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஏ,எல்,எம்,அதாஉல்லா தெரிவித்ததாவது,

புதிய அரசியலமைப்புக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது பாராட்டுக்குரியது. நாட்டில், ஏற்பட்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் ஸ்திரம் அவசியம்.இந்த ஸ்திரத்தை உருவாக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு அமைய வேண்டும். எந்த அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும் சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்பு,இருப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் அதில் உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு உறுதி செய்யப்படும் வரை,நிறைவேற்றதிகார முறைமை ஒழிக்கப்படக் கூடாது.பட்டம்,பணம் மற்றும் பதவிகளுக்காக சோரம்போகும் எம்.பிக்கள் இருக்கும் வரைக்கும், பாராளுமன்றத்தை பலப்படுத்த முடியாது. இதனால்தான், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் அவசியத்தை எமது கட்சி வலியுறுத்துகிறது.முன்னாள் ஜனாதிபதி ஜே,ஆர், ஜெயவர்தனவால் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபைகள் முறை,எமது நாட்டுக்குத் தேவையில்லை.

சின்னஞ் சிறிய நாட்டை ஒன்பதாகப் பிரித்து நிர்வாகம் நடாத்துவதால் செலவுகளே அதிகம். ஏதாவது நாடுகளின் அழுத்தங்களுக்காக இந்த மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டிருந்தால், அந்த நாட்டுக்கு எமது நாட்டின் நிலை குறித்து அரசாங்கம் தெளிவு படுத்தல் அவசியம்.பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளதால் பிரிவினைச் சிந்தனைகள் பலமிழந்துள்ளன.சகல இனங்களும் ஒன்று சேர்ந்து உழைக்கும் புதிய கலாசாரத்தை காலிமுகத்திடலில் காணக்கிடைக்கிறது.எனவே, பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது போன்று,இனவாதமும் ஒழிக்கப்படல் அவசியம்.இதை ஒழிக்கும் வகையிலான புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதுதான் சிறந்தது.

## பாராளுமன்றத்தை அரசாங்கமாக...

22ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் கலந்துரையாடி பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்ததெனவும் அதற்கு அனைவரினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் இடைக்கால வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், அதன் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக்களை உடனடியாக ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அவற்றின் தலைவர்களுக்கு அலுவலக வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டுக்கு அரச சேவையிலிருந்து அதி வினைத்திறன் வாய்ந்த சேவை தேவையென்றும் தெரிவித்தார்.

துறைசார் கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களை அமைச்சரவைக்கு அழைக்க தாம் தயாரென்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான ஆலோசனைக்கு மதிப்பளித்ததற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, சர்வகட்சி அரசாங்கத்துக்கு தமது கட்சி பூரண ஆதரவை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

சர்வகட்சி ஆட்சிக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட 11 ஆலோசனைகள் அடங்கிய வேலைத்திட்டமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, லசந்த அழகியவன்ன, ஜகத் புஸ்பகுமார, அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சட்டச்சிக்கல் இன்றி...

தொழில்கள், சுற்றுலா தொழில்துறை, மற்றும் பல்வேறு வேலைத் திட்டங்கள் மூலம் சம்பாதித்துள்ள பணம், பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளுக்காக வெளிநாடுகளிலிருந்து சம்பாதித்துள்ள வெளிநாட்டுப்பணத்தை அரசாங்கம் வழங்கியுள்ள இந்த கால அவகாசத்தினுள் வங்கிகளில் வைப்பிலிட முடியுமெனவும் நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த முறைமையின் கீழ் இப்பணத்தின் உரிமையாளர்கள் அவர்களது தேவைகளுக்கேற்ப RFC யாகவோ அவ்வாறில்லாவிட்டால் ரூபாயாக மாற்றி வைப்பிலிடுவதற்கும் அதன் மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வழங்கப்படும் இந்த நிவாரண கால அவகாசம் நிறைவடைந்த பின்னர் இப் பணத்துக்கான உரிமையாளர் பத்தாயிரம் டொலர்களை மட்டுமே கையிருப்பில் வைத்துக் கொள்ளும் வகையில் சட்டங்கள் மீள அமுல்படுத்தப்படுமென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்துக்கு பின்னர் இடம்பெற்றுள்ள அமைச்சர்களின் சந்திப்பில் கலந்து கொண்டுள்ள மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோரிடம் மேற்படி கால அவகாசத்தை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென அமைச்சர் பந்துல குணவர்த்தன யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

அதனை கருத்திற் கொண்டே மேற்படி ஒரு மாத கால அவகாசத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதியமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.



# ஸ்திரத்தன்மையை நிலைநாட்டும் முயற்சிகளை குழப்பும் நோக்கில் அர்த்தமற்ற போராட்டங்கள்!

**நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான படிப்படியான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நிலையில், தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் அரசின் முயற்சிகளைப் பாதிக்கும் வகையில் அமைவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன.**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குச் செல்லுமாறு கோரி ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் தற்பொழுதும் தொடர்ந்து வருகிறது. இந்தப் போராட்டக்காரர்கள் சரியான குறிக்கோள் இன்றி தற்போதைய ஜனாதிபதியையும் வீட்டுக்குச் செல்லுமாறு போராட்டத்தை நீடித்துள்ளனர்.

இலங்கை வரலாற்றில் மக்கள் போராட்டம் ஒன்றின் காரணமாக நாட்டின் தலைவர் ஒருவர் பதவி விலகும் நிலைமை ஏற்பட்டு ஆட்சிமாற்றமொன்று உருவாகியமை குறிப்பிடத்தக்க நிகழ்வாக இருக்கின்ற போதும், இந்தப் போராட்டம் ஒவ்வொருவருக்கும் எதிராக விஸ்தரிக்கப்பட்டுச் செல்வது பல்வேறு தரப்பிலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. கள யதார்த்தத்தை உணர்ந்து கொண்ட போராட்டமாக இது தென்படவில்லையென்று பொதுவாக அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களின் வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படவில்லையென விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும், மக்கள் பிரதிநிதிகளே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைத் தெரிவு செய்துள்ளனர் என்பதே உண்மை. அதுவும் எமது நாட்டின் அரசியலமைப்பின்படியே ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களின் நம்பிக்கையைப் பெற்று, அரசியலமைப்பிற்கு உட்பட்டதாகவே அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில் அவருக்கு நியாயமான காலஅவகாசத்தை வழங்க வேண்டும். அவ்வாறு காலஅவகாசத்தை வழங்காது அவருக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பது என்பது நியாயமானதாகத் தென்படவில்லை.

இலங்கையில் காணப்படும் நெருக்கடி நிலைமை ஒரு இரவில் தீர்க்கப்படக் கூடிய தொன்று அல்ல என்பதை போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே தற்பொழுது முன்னெடுக்கப்படும் போராட்டங்களின் பின்னணியில் அரசியல் சக்திகள் செயற்படுகிறது என்பது தெளிவாகியுள்ளது.

அதேநேரம், நாட்டில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையைத் தணிப்பதற்கு அரசியல் கட்சிகள் தமக்கிடையிலான வேறுபாடுகளைக் களைந்து நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையும் காணப்படுகிறது. நாட்டின் அரசியலில் ஸ்திரமற்ற தன்மை ஏற்பட்ட நாளிலிருந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்த பேச்சுவார்த்தைகள் அடிபட்டுக் கொண்டிருந்தாலும், இதுவரை அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் முன்வரவில்லையென்றே கூற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தேசிய அரசாங்கமொன்றை அமைத்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வாருங்கள் என அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். இருந்தபோதும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஏனைய எதிர்க்கட்சிகளான தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எந்தவொரு கட்சியுமோ இதற்குத் தமது இணக்கத்தைத் தெரிவித்திருக்கவில்லை.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையில், தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும், அதில் இணைந்து நாட்டுக்காக சேவையாற்றுமாறும் சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பினை அரசியல் கட்சிகள் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரியவருகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட பல தலைவர்கள் அராசங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்ற சமிக்ஞையை வெளியிட்டுள்ளனர். ஜனாதிபதியைப் பாராளுமன்றத்தினால் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுடன் போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பதற்குத் தீர்மானித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் நலன் சார்ந்த 10 முக்கிய விடயங்களை நிறைவேற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதாக இதில் பங்கெடுத்த உறுப்பினர்கள் கூறியிருந்தனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, கல்முனை உபபிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவது, காணிகளை விடுவிப்பது, தொல்பொருள் திணைக்களத்தினால் காணிகள் கையகப்படுத்தப்படுவதை நிறுத்துவது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது, காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் இதன் போது முன்வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சர்வகட்சிகளின் தேசிய வேலைத்திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்ற விடயமும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேரடியாக இக்கூட்டத்தில் கலந்து கொள்ளாத போதும் தனது முழுமையான ஒத்துழைப்பைத் தெரிவித்து கடிதமொன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அடுத்த கட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானிக்கும் என்ற விடயத்தை ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமன்றி ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் பலரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை ஆற்றிய கொள்கைப் பிரகடன உரையை வரவேற்றிருந்தனர். முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட பலரும் வரவேற்றிருந்ததுடன், சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

மறுபக்கத்தில் ஜனாதிபதி சார்பில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளுடனும் நேரடியான சந்திப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. விமல் வீரவன்ச உள்ளிட்ட அரசாங்கத்திலிருந்து அதிருப்தியடைந்து எதிர்க்கட்சியில் உள்ள சுயாதீனக் குழுவினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலும் சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இவ்வாறு கட்சிகளுக்கிடையில் பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட்டதும் சர்வகட்சி தேசிய வேலைத்திட்டம் குறித்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

## இன்னும் தொடருகின்ற ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் அரசியல் கட்சிகள்!







## ஜனாதிபதித் தெரிவில் டலஸ் அழகப்பெருமவை ஆதரித்த கட்சிகள் தற்போது தேசிய அரசாங்கத்தை அமைப்பதில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பது ஆரோக்கியமான அரசியல் கலாசாரம்!

# இந்திய எல்லைப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் தந்திரத்தில் சீனா!

**இந்திய எல்லைப் பிரதேசங்கள் பலவற்றில் சீனாவின் தொந்தரவுகள் தொடர்ந்து கொண்டே இருப்பதாக இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் இந்திய மாநிலங்களில் ஒன்றான அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள 15 இடங்களின் பெயர்களை சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சு அண்மையில் மாற்றியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.**

அருணாச்சலப் பிரதேசத்தை 'தெற்கு திபெத்' என்று கருதும் சீனா, இப்போது இந்தப் பெயர்களை தனது அதிகாரபூர்வ ஆவணங்களிலும், வரைபடங்களிலும் பயன்படுத்துகிறது. சீனாவின் இந்த நடவடிக்கைக்கு இந்தியா ஏற்கனவே கண்டனம் தெரிவித்திருந்தது. மேலும், 'பெயர் மாற்றுவது' கள நிலைவரத்தின் உண்மைகளை மாற்றாது என்றும், 'அருணாச்சல பிரதேசம் எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகும்; எப்போதும் அப்படியே இருக்கும்' எனவும் இந்தியா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சீனா தனது புதிய 'நில எல்லைச் சட்டத்தின்' கீழ் இந்தப் பெயர்களின் பட்டியலை முன்னர் வெளியிட்டிருந்தது. இது குறித்து இந்தியா கவலையும் தெரிவித்திருந்தது.

அருணாச்சலப் பிரதேசத்துக்குள் சீனா ஊடுருவுவது பல வருட காலமாகத் தொடர்கின்றது. கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் முறையாக, அருணாச்சல பிரதேசத்தின் ஆறு 'அதிகாரபூர்வ' பெயர்களை சீன நிர்வாகம் வெளியிட்டது. அப்போது, சீனாவின் இந்த நடவடிக்கை தலாய் லாமா அந்நாட்டுக்கு வருகை தருவதை எதிர்க்கும் விதமாகப் பார்க்கப்பட்டது.

சீனா வெளியிட்டிருந்த புதிய பட்டியல் முந்திய பட்டியலை விட நீளமானது. இது எட்டு நகரங்கள், நான்கு மலைகள், இரண்டு ஆறுகள் மற்றும் ஒரு மலைப்பாதை உட்பட 15 இடங்களின் பெயர்களை உள்ளடக்கியது. மேற்கில் தவாங் முதல் கிழக்கில் அஞ்சோ வரை அருணாச்சல பிரதேசத்தின் 11 மாவட்டங்களை இது கொண்டுள்ளது. அருணாச்சலப் பிரதேசத்தின் 90 ஆயிரம் சதுர கிலோமீட்டர் பிரதேசம் தங்களுக்குச் சொந்தமானது என சீனா உரிமை கோருகிறது.

இந்தப் பெயர்கள் வெளியான பிறகு, இந்த இடங்கள் அனைத்து அதிகாரபூர்வ சீன வரைபடங்களிலும் அதே பெயரில் காணப்படுகின்றன. இது ஒரு குறியீட்டு நிலைப்பாடுதான். இதனால் இந்தியாவின் உண்மை நிலப்பரப்பில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால், இது பிராந்திய பிரச்சினையில், சீனாவின் ஒரு புதிய அணுகுமுறையைக் குறிக்கிறது.

இந்திய நிலப்பரப்பில் தனது உரிமை கோரலை அடிக்கோடிட்டுக் காட்டவே சீனா இத்தகைய முயற்சியை மேற்கொண்டது என்பது புரியாத விடயமல்ல. அருணாச்சலப் பிரதேசத்திற்கு சீனா பெயரிட்டதும் அத்தகைய முயற்சியில் ஒரு பகுதியே ஆகும்.

இதேவேளை கடந்த 2017ஆம் ஆண்டு எல்லையில் கிராமங்களை அமைக்க சீனா திட்டம் வகுத்திருந்தது. அதன் கீழ் இந்தியா, பூட்டான், நேபாளம் ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதிகளில் 'முதல் வரிசை , இரண்டாவது வரிசை' என 628 கிராமங்களை சீனா அமைத்தது. அங்கு வசிக்க, சீனா ஆடு மேய்ப்பவர்களையும் அனுப்புவது வழக்கம்.

(19ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...





## அருணாச்சலப் பிரதேசத்தில் சீனாவின் ஊடுருவலை முறியடிக்கும் வகையில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ள இந்தியப் படைகள்!

## சீனாவுடன் முரண்பாட்டுக்குச் செல்வதை இந்தியா விரும்பியதில்லை. ஆனாலும் தனது நாட்டில் எல்லைகளைப் பாதுகாப்பதில் இந்தியா தீவிர பலத்துடனேயே உள்ளது

**ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கொள்கைப் பிரகடன உரையில், தேசிய அரசாங்கத்தை அமைக்க அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார்.**


கடந்த காலத்தைப் பின்தள்ளி விட்டு நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அனைவரும் ஒன்றிணைவதற்கு தான் நேசக்கரம் நீட்டுவதாகவும், இந்தச் சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜினாமாவைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதி தெரிவு இடம்பெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்துடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, கடந்த 28 ஆம் திகதி ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை முடிவுக்குக் கொண்டு வந்து ஒகஸ்ட் 03 ஆம் திகதி புதிய கூட்டத்தொடருக்கான ஆரம்பத் திகதியை வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தார்.

இதற்கமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வைப

மறுபுறம். எனினும் நாட்டுக்காக இந்தக் கடினமான சவாலை பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். அதற்குக் காரணம் இருளுக்கு சாபமிட்டுக் கொண்டு இருப்பதை விட ஒரு விளக்கினையேனும் ஏற்றுவது நாட்டிற்காக நான் செய்யும் கடமை என நான் கருதியமையாகும்.

நாம் இன்று நவீன வரலாற்றிலே ஒருபோதும் எமது நாடு முகம்கொடுத்திராத கடுமையான பிரச்சினையொன்றுக்கு முகம் கொடுத்துள்ளோம். நாம் பாரிய அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளோம்.



றைத் தயாரிக்கவிருப்பதாகச் சுட்டிக் காட்டிய அவர், 2025 ஆம் ஆண்டளவில் ஆரம்ப நிலை வரவுசெலவுத் திட்டத்தில் மிகை ஒன்றினை ஏற்படுத்துவது தமது முயற்சியாகும் என்றார்.

பொருளாதார அபிவிருத்தி வேகத்தை நிலையான தன்மைக்கு உயர்த்துவதும் நமது முயற்சியாகும். 2026 ஆம் ஆண்டாகும் போது நிலையான பொருளாதார அடிப்படை ஒன்றினை உருவாக்கிக் கொள்வது தமது எதிர்பார்ப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது இவ்விதமிருக்க, அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு உரிய


கப் போவதில்லை. அமைதியான போராட்டக்காரர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்காக முன்வருவதற்கும் நான் விசேட செயலணியொன்றை தாபிப்பேன்.

அமைதியான போராட்டக்காருக்கு அநீதி விளைவித்தால் அந்தச் செயலணிக்கு 24 மணித்தியாலத்தில் எந்த ஒரு நேரத்திலும் முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறான அறிவித்தல்கள் குறித்து விசாரித்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழுவொன்றை தாபிப்பேன்.

ஆயினும், திட்டமிட்டு சட்டத்தை மீறி, வன்முறை மற்றும் பயங்கர

**நாட்டுக்காக ஒரு விளக்கினையேனும் ஏற்றுவதே நான் செய்யும் கடமை**

# இருளுக்கு சாபமிட்டுக் கொண்டிருப்பதால் நன்மை எதுவும் விளையப் போவதில்லை!



## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலைமையை தெளிவாக விளக்கியுள்ள ஜனாதிபதி, அனைத்து அரசியல் தரப்பினரும் இணைந்து பயணிப்பதற்கான ஆதரவைக் கோருகிறார்

**சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் ஜனாதிபதியின் யோசனைக்கு அரசியல் களத்தில் பெருகிவரும் ஆதரவு; எதிரணி தரப்பிலிருந்தும் பல்வேறு கட்சிகள் பச்சைக்கொடி!**

வரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு எளிமையான முறையில் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யுமாறு பாராளுமன்ற படைக்கல சேவிதருக்கு ஜனாதிபதி தரப்பிலிருந்து அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதற்கு அமைய மரியாதை நிமித்தமான பீரங்கி வேட்டுக்கள் தீர்த்தல், குதிரைப்படை உள்ளிட்டவற்றின் வாகனத் தொடரணி போன்ற அம்சங்கள் நிறுத்தப்பட்டு, சாதாரணமாக முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை மட்டும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முற்பகல் 10.15 மணியளவில் பாராளுமன்றத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

அரசியலமைப்பின் பிரகாரம் பாராளுமன்றக் கூட்டத் தொடரொன்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு புதிய கூட்டத்தொடரை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுக்கு ஜனாதிபதியே தலைமை தாங்குவார். அது மாத்திரமன்றி, அன்றைய தினம் சபாநாயகருக்கான அக்கிராசனத்தில் ஜனாதிபதி அமர்ந்து சபை அமர்வுகளுக்கும் அவரே தலைமை தாங்குவார்.

இதற்கமைய பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க அக்கிராசனத்தில் அமர்ந்து அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் பற்றிய உரையை நிகழ்த்தியிருந்தார். நாடு எதிர்கொண்டுள்ள சவால்கள் மற்றும் அவற்றிலிருந்து நாட்டை வெளியே கொண்டு வருவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்வைத்திருந்தார்.

ஜனாதிபதி தனது உரையில், 'நான் கஷ்டத்தில் விழுந்திருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான பொருளாதாரப் பிரச்சினை ஒருபுறம். பாரிய மக்கள் எதிர்ப்பு

அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணையும் சவாலை வெற்றி கொண்டால் மாத்திரமே முடியும். இந்தப் பாராளுமன்றத்தில் இருக்கும் கௌரவ உறுப்பினர்களும், அதுபோன்றே நாட்டு மக்கள் அனைவரும் நாட்டினைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு தத்தமது சக்திக்கு உட்பட்டவாறு பங்களிப்புச் செலுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்காக ஒன்றிணையுமாறு அழைப்பு விடுப்பதாகவும், இது பற்றிய பேச்சுவார்த்தைகளை அரசியல் கட்சிகளுடன் நடத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் என்பது ஒரு கட்சியின் தனி விருப்பத்திற்கேற்ப செயற்படுகின்ற அரசாங்கமொன்றல்ல. அது பொதுவான கொள்கை வட்டத்தினுள் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களின் பிரகாரம் பயணிக்கும் அரசாங்கமொன்றாகும். அனைவரினதும் கருத்துக்களின் பிரகாரம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நாட்டிற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் அரசாங்கமாக அமையும் என்றும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா வழங்கிவரும் தொடர்ச்சியான உதவிகளுக்குத் தனது உரையில் நன்றி தெரிவித்திருந்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தார். இது தவிரவும் கடந்த காலத்தில் வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சிகள் விமர்சிக்கப்பட்ட விதம் தொடர்பிலும் அவர் தனது உரையில் பிரஸ்தாபித்திருந்தார்.

'யாரேனும் சொல்வதை ஆராய்ந்து பார்க்காமல் ஏற்றுக் கொண்டு வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதனால் எமது நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பை அளவிட முடியாது. ஊழல் மற்றும் மோசடி ஊடாக நாட்டின் நிதி மற்றும் வளங்களைக் களவாடியதனால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி மக்கள் அறிவார்கள். ஆனாலும் பொய்ப்பலிக்கடாக்களை எடுத்துக்காட்டி வெளிநாட்டு முதலீடுகளைத் தடை செய்து நாட்டுக்கு ஏற்படுத்திய இழப்பு கணக்கிட முடியாத அளவுக்கு விசாலமானதாகும்.

இந்தியாவோடு ஒன்றிணைந்து திருகோணமலை எண்ணெய்த்தாங்கித் தொகுதியினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போது இந்தியாவுக்கு இலங்கையை விற்கின்றார்கள் என்று கூறி அபிவிருத்தித் திட்டத்துக்கு இடையூறு விளைவித்தனர். அன்று எமக்கு எண்ணெய்த் தாங்கித் தொகுதியினை அபிவிருத்தி செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பின் இன்று மக்கள் எரிபொருள் வரிசைகளில் நீண்ட நாட்கள் அலைவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது.

சுவசெரிய நோய் காவு வண்டிகளின் சேவையை ஆரம்பிக்கும் போது அதேபோன்று எதிர்ப்புகளைச் செய்தார்கள். சுவசெரிய நோய் காவு வண்டிகள் வைத்திய சாலைகளுக்கு வந்தால் ஏற்படுவது மரணம் எனக் கூறி சில வைத்தியர்கள் ஊடகக் கலந்துரையாடல்கள் நடத்தினார்கள். ஆனாலும் நாம் எவ்வாறாயினும் சுவசெரியவை ஆரம்பித்ததனால் தற்போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை வழிதவறி நடத்தி தடைசெய்த கருத்திட்டங்கள் காரணமாக எமது பொருளாதாரக் கட்டமைப்பு அழிவடைந்தது.

இலகு புகையிரதச் சேவையைத் தாபிப்பதற்கும், துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் ஜப்பான் நாடு முன்வந்த சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக அடிப்படையற்ற வீணான காரணிகள் பலவற்றை எடுத்துக் காட்டியதன் காரணமாக எமது நாட்டுக்குக் கிடைப்பதற்கிருந்த 3 பில்லியன் டொலருக்கு அதிகமான அளவு கிடைக்காமல் போயிற்று. அதுமட்டுமன்றி ஜப்பான் மற்றும் இலங்கைக் கிடையே இருந்த நீண்டகால நட்பு சிதறிப் போனது' என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் தெரிவித்திருந்தார்.

கடந்தகால அனுபவங்களைப் பாடமாகக் கொண்டு 25 வருடங்களுக்கான திட்டமொன்

அனுமதி வழங்கப்படும் என்றும், இதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களுக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

'நான் இந்தப் போராட்டக்காரர்களை வேட்டையாடப் போவதாக பாரிய பிரசாரத்தை சில குழுக்கள் சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப முயற்சித்து வருகின்றனர். ஆயினும் அது உண்மையல்ல. நான் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எந்தவொரு வகையிலும் பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்

வாத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களும் உள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தை மீறி செயல்பட எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. சட்டம் எனக்கும், உங்களுக்கும், அனைவருக்கும் ஒன்று' எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுபோன்று பல்வேறு விடயங்கள் குறித்து தனது உரையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் உரை அரசியல் கட்சிகள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருப்பதையும் காணக் கூடியதாகவிருந்தது. சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் ஜனாதிபதியின் கோரிக்கையைப் பெரும்பாலான கட்சிகள் சாதகமாகப் பார்த்திருப்பதாகவே தெரிகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன் போன்ற சிறுபான்மைத் தலைவர்கள், விமல் வீரவன்ச உள்ளிட்ட ஆளும் கட்சியின் அதிருப்திக் குழுவினர் சர்வகட்சி அரசாங்க அழைப்புத் தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர். அரசியல் அரங்கத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் நாட்டை சவால்களிலிருந்து மீட்டெடுப்பதற்கு உதவுவதாக அமைய வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

**அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள், பிரசாரங்களால் கடந்த காலத்தில் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டம் அதிகம். வெளிநாட்டு முதலீடுகள் கைக்கெட்டாமல் போய் விட்டன!**



© Nuwan Duminda UG

**போராட்டக்காரர்களை நான் வேட்டையாடப் போவதாக சமூக ஊடகங்களில் சில குழுக்கள் பாரிய பிரசாரம். அக்கூற்றில் உண்மை கிடையாது. அமைதியான போராட்டக்காரர்களுக்கு எந்தவொரு வகையிலும் பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை**

# கடும் மழையால் நுவரெலிய மரக்கறி உற்பத்தி பாதிப்பு



## காய்கறி விலை விற்பனை விண்ணை முட்டலாம் என்கிறார்கள் விவசாயிகள்



மலையகத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து அதிக மழையுடனான வானிலை காரணமாக நுவரெலியா, கந்தப்பொல, தலவாக்கலை, நானுஓயா, கொட்டக்கலை, அட்டன், மஸ்கெலியா, டிக்கோயா, அக்கரப்பத்தனை, டயகம, போடைஸ், வட்டவளை, கினிகத்தேன, நாவலப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் மழையும் பலத்த காற்றும் நுவரெலியா மாவட்டத்தின் மரக்கறிச் செய்கையை பாரிய சேதத்துக்குள்ளாக்கியுள்ளது. கன



மழையால் மாவட்டத்தில் பலநூறு ஏக்கருக்கும் அதிகமான மரக்கறி செய்கை நாசமடைந்துள்ளதாகவும், இதனால் பெரும் நஷ்டத்தை விவசாயிகள் சந்திக்க நேரிடும் என்றும் கவலை வெளியிடப்பட்டுள்ளது. இதனால் எதிர்வரும் காலங்களில் காய்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு, மூன்று நாட்களாக பெய்த கடும் மழையால் விவசாய நிலங்களில் நீர் நிரம்பி, பயிர்கள் முற்றிலும் அழிந்து வருகின்றன. நுவரெலியா, நானுஓயா, தலவாக்கலை, கந்தப்பொல, அக்கரப்பத்தனை, டயகம, பத்தனை, கொட்டக்கலை ஆகிய பிரதேசங்களில் மரக்கறி பயிர்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளன.

கன மழை மற்றும் மண்சரிவால் வீதிகள் மூடப்பட்டமையினால் மரக்கறி தோட்டங்களுக்கு அன்றாடம் வேலைக்கு செல்லும் தொழிலாளர்களின் வருகையும் அதிகளவில் குறைந்துள்ளதாக மரக்கறி தோட்ட உரிமையாளர்கள் கூறுகிறார்கள். இயற்கை அனர்த்தங்களினால் ஒரு வருடத்தில் பல தடவைகள் மரக்கறி செய்கை பாதிக்கப்படுகின்றது. இதனால் மரக்கறி செய்கை மூலம் குறிப்பிட்ட ஒரு இலாபத்தை ஈட்ட முடியாத நிலை ஏற்படுகின்றது. ஒரு தடவை பயிரிடப்பட்ட பயிர்கள் குறிப்பிட்ட 3 மாதத்துக்குள் அறுவடை செய்வதற்கு முன்னர் பல்வேறு இன்னல்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.

ஒரு பக்கம் இயற்கையின் கோரத்தாண்டவம் மற்றொரு பக்கம் காட்டு விலங்குகளிடமிருந்து இன்னொரு பக்கம் உரம் மற்றும் கிருமிநாசினிகளின் பற்றாக்குறை இ;பபடி சொல்லென்னா துன்பங்களை மரக்கறி உற்பத்தியாளர்கள் அனுபவிக்கின்றனர். அதிக மழை காலங்களிலும் அதிக வெயில் காலங்களிலும் மரக்கறி செய்கையின் போது செடிகளுக்கு பல்வேறு விதமான நோய்த்தாக்கங்கள் உண்டாகின்றன. இதனை கட்டுப்படுத்துவதற்கு கிருமிநாசினிகள் தேவைப்படுகின்றன. நோயை கட்டுப்படுத்தும் கிருமிநாசிகளின் பற்றாக்குறையினாலும் மரக்கறி உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சியடைகின்றது.

இவ்வாறான பல்வேறு இன்னல்களை கடந்து வந்து அதனை அறுவடை செய்தால் அதற்கு நியாயமான விலைகள் சந்தையில் கிடைப்பதில்லை. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறையினால் பாரியளவில் மரக்கறி உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுவாக நுவரெலியா மாவட்ட விவசாயிகள் தங்களுடைய விளைச்சலை வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல முடியாதுள்ளது.

நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறி வகைகளே நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன. தொடர்ச்சியாக பாராமரிக்கப்பட்டு வந்த மரக்கறி செடிகள் தீடீரென ஏற்படும் வானிலை மாற்றத்தினால் முற்றாக அழிந்து விடுகின்றன. மீண்டும் ஆரம்பத்திலிருந்து அதனை உற்பத்தி செய்ய



வேண்டுமெனில் அதற்கு மேலும் மூன்று மாதங்கள் தேவைப்படுகின்றன. அதற்கான மனித வளம், நிதி, உரம் மற்றும் கிருமிநாசினி போன்றன மீண்டும் தேவைப்படுகின்றன. இதனால் பெருமளவு பணம் விரயமாகிறது. இவ்வாறான நிலமையினால் மரக்கறி உற்பத்தியாளர்கள் பொருளாதார ரீதியாக பெருமளவில் நட்டமடைகின்றனர். இது போக, பெரும் மனவுளைச்சலுக்கு ஆளாகின்றனர். பாரிய கடன் சுமையில் வீழ்கின்றனர். அதிலிருந்து அவர்கள் மீள்வதற்கு வருட கணக்காகிறது. மரக்கறி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க இந்த அரசாங்கமும் தவறிவிட்டது. விவசாய கடன் உதவிகள், மரக்கறி உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நல்ல பல திட்டங்கள் இந்த அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரி



யவில்லை. தங்களின் வீழ்ச்சிக்கு இதுவே காரணம் என மரக்கறி உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகளவில் உருளைக்கிழங்கு மற்றும் ஏனைய மரக்கறி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதனை விற்பனை செய்து கொள்ள முடியாமல் வியாபாரிகளும் மரக்கறி உற்பத்தியாளர்களும் இம் மழைக் காலத்தில் திண்டாடுகின்றனர்.

நுவரெலியாவிசேடபொருளாதாரமத்திய நிலையத்தில் ஒரு வியாபாரி நாளொன்றுக்கு 3000 கிலோ முதல் 5000 கிலோ மரக்கறி மற்றும் உருளைக்கிழங்கு விற்பனை செய்து வந்த நிலையில் தற்போது 100 கிலோ மரக்கறிகளைக்கூட விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மரக்கறி வியாபாரிகள் கூறுகின்றனர். இதனால் மரக்கறி விலையிலும் மாற்றங்கள் ஏற்படலாம்.

உதாரணமாக, உருளைக்கிழங்கு, போஞ்சி, கரட், லீக்ஸ், முள்ளங்கி, கோவா ஆகியவற்றின் விலைகள் சடுதியாக அதிகரிக்கலாம். எதிர்காலத்தில் இந்த மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம். சீரற்ற வானிலை காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு மரக்கறி தோட்டங்களிலும் மரக்கறி வியாபாரிகளிடம் தொழில்புரியும் தொழிலாளர்களும் தொழில் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.

எனவே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மரக்கறி உற்பத்தியாளர்களையும் விவசாயிகளையும் பாதுகாப்பதற்கு இந்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் மரக்கறி உற்பத்தியை ஊக்கவிக்கக்கூடிய நல்ல பல திட்டங்களை உருவாக்கி அதனூடாக மரக்கறி உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்.

தொடர் மழைக்காலத்தில் புறொய்லர் கோழிகளுக்கு நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்றும் அவை நோய் கண்டு இறந்து விடுவதாகவும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர் கவலைப்படுகின்றனர்.

பொதுவாகவே நாட்டுக் கோழிகள் மழைக் காலத்தில் முட்டையிடுவதைக் குறைத்துக் கொள்ளுமாம். இதே சமயம் மலையகப் பகுதிகளில் சோளம் கிடைப்பது கஷ்டம். ஒரு கிலோ 80, 90 ரூபாவாக இருந்த சோளம் இப்போது 360, 390 ரூபாவுக்கே கிடைக்கிறது. அதேபோல 130 ரூபாவுக்கு விற்பனையான கிலோ கோழி உணவு 390க்கு விற்பனையாகிறது. பண்ணைத் தொழிலுக்கும் கஷ்டத்துக்கு மேல் கஷ்டம் என்கிறார்கள் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர்.

தலவாக்கலை
பி. கேதீஸ் ...

# சர்வகட்சி அரசாங்கத்தில் கட்சிகள் மலையக சமூகத்தின் பிரச்சினைகளை கண்டுகொள்ளுமா?

தேசிய அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகும் போதெல்லாம் மலையக அரசியலும் அல்லாடுவது வழமையாகிவிட்டது. அது குறித்ததான ஓர் அலசல் இது.

மலையக கட்சிகள் தாம் பங்காளியாகும் கட்சிகளுக்கு கடைசி வரை விசுவாசமாகவே நடப்பதில் பெயர் பெற்றவை. எந்த மக்களின் பெயரால் ஆட்சிபீடத்தில் அமர வாய்ப்புக் கிட்டுகின்றதோ அந்த மக்கள் பாதிப்படைந்தாலும் பரவாயில்லை, ஒட்டிய கட்சியுடன் உறவை வெட்டி விட எந்தவொரு மலையக தலைவரும் துணிந்ததே இல்லை. இதன் காரணமாகவே தேசிய கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் (மட்டும்) மலையக மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கான வாக்குறுதிகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதேநேரம் மலையகம் ஒன்றும் சில்லறை வாக்குகளைக் கொண்ட பிரதேசமல்ல. கணிசமான வாக்குகளைக் கொண்ட அரசியல் தளம் இங்கே உள்ளது.

ஆனால் கட்சி அரசியலுக்காக அதைக் கூறுபோட்டுக் குளிர்காயும் சந்தர்ப்பவாத அரசியல் இம்மக்களது சக்தியை மழுங்கடிப்பது என்னவோ மறுதலிக்கப்பட முடியாத உண்மை. ஆளும் தரப்போடு மல்லுக்கு நின்று எதனையாவது சாதிக்க முடியாது என்பது வெள்ளிடை மலை. இதை சாட்டாக வைத்துக் கொண்டு தமக்கு யார் சாதகமோ அவர் பக்கம் சாய்வதே தலைமைகளின் அரசியல் நாகரிகமாக காணப்படுகின்றது.

நாடு இன்னும் அரசியல் நெருக்கடியில் இருந்து கொஞ்சமேனும் விடுபடவில்லை. அரசியல் தளம்பல் நிலை நாட்டு மக்களின்

> இயல்பு வாழ்க்கைக்கான சுமுகமான சூழ்நிலை பெருந்தோட்ட சமூகத்துக்கு அன்றும் இருந்தது இல்லை. இன்றும் இல்லை. சுருங்கக்கூறின் அத்தியாவசிய தேவைகள் கூட முழுமையாக உள்வாங்கப்படாத ஒரு கட்டமைப்புக்குள் காலம் போய்க் கொண்டிருக்கின்றது. வீடமைப்புத் திட்டம், சுகாதார மேம்பாடு, காணி உரிமம் போன்ற பல அம்சங்கள் தேசிய பொது வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படாததால் கெஞ்சிக் கூத்தாடி கூப்பாடு போட வேண்டிய நிலைமை

இயல்பு வாழ்க்கையை புரட்டிப் போட்டுள்ளது. எரிவாயுக்கும் அத்தியாவசிய தேவைகளுக்குமான வரிசை இன்னும் அப்படியேதான் உள்ளது. இத்தனைக்கும் காரணம் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் என்பது முழுநாடே அறியும். அந்நியச் செலாவணி வர வாய்ப்பில்லாததால் சவாலுக்கு மேல் சவால். இதை எழுதும்போது சர்வதேச நாணய நிதியம் (IMF) நிபந்தனைக்கு மேல் நிபந்தனைகளைப் போட்டு வருகின்றது. உலக வங்கி 'உள்நாட்டில் அரசியல் ஸ்திரம் ஏற்படும்வரை உதவி செய்ய வழியில்லை" என்று கையை உதறிக் கொண்டுள்ளது. அமெரிக்காவோ புதுப்புது வியாக்கியானங்களைச் சொல்லிக்கொண்டு காலம் கடத்துகிறது.

இதே சமயம் தற்போதுள்ள வரிசை நிலையை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டால் நாடு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விடும் என்று கத்துக்குட்டி அரசியல் கணக்கு போடும் அரசியல்வாதிகளும் இருக்கின்றார்கள்.

உண்மையில் இயல்பு வாழ்க்கை என்றால் என்ன? சராசரி மனிதன் ஒருவன் தனக்கு

பன். பாலா ...

தேவையானதை தேவைக்கேற்ப பெற்றுக் கொண்டு சுதந்திரமாக வாழ்க்கையை அனுபவிக்கும் ஒரு சூழல். ஆனால் இந்த இயல்பு வாழ்க்கைக்கான சுமுகமான சூழ்நிலை பெருந்தோட்டச் சமூகத்துக்கு அன்றும் இருந்தது இல்லை. இன்றும் இல்லை. சுருங்கக்கூறின் அத்தியாவசிய தேவைகள் கூட முழுமையாக உள்வாங்கப்படாத ஒரு கட்டமைப்புக்குள் காலம் போய்க் கொண்டிருக்கின்றது. வீடமைப்புத் திட்டம், சுகாதார மேம்பாடு, காணி உரிமம் போன்ற பல அம்சங்கள் தேசிய பொது வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படாததால் கெஞ்சிக் கூத்தாடி கூப்பாடு போட வேண்டிய நிலைமை. இவ்வாறான புறக்கணிப்புகள் சராசரி இலங்கைப் பிரஜையொருவரின் இயல்பு வாழ்க்கை அடையாளங்களில் இருந்து பெருந்தோட்ட சமூகத்தை வேறு பிரித்து வைக்கின்றது.

இத்தனைக்கும் இடையில் தேசிய அரசியலில் தாமும் பங்காளிகள் என்னும் மகுடம் சூடல். பிந்திய மலையக அரசியல் தளத்தில் இன்று இந்த மகுடத்தைச் சூடிக்கொள்ளப் பலர் பிரயத்தனப்படும் காட்சிகளைக் காணமுடிகின்றமை தான் எமது இந்த பதிவுக்கான பின்புலம். மலையகத் தலைமைகள் அமைச்சுப் பதவிக்காக அல்லாடுகிறார்களே என்று சிங்கள நண்பர் ஒருவர் கேட்டார்.

ஜீவன் தொண்டமான் இதற்கான முஸ்தீபுகளை ஏற்கனவே ஆரம்பித்து விட்டார். இவரின் சகா ராமேஸ்வரன் ஜீவனை விட இதில் தீவிரம் காட்டுபவராக இருக்கிறார். அவர் மஹிந்த ராஜபக்ஷவோடு நெருக்கமான தொடர்பினைப் பேண விரும்பியவர். தற்போதைய ஜனாதிபதியோடு கை கோர்க்கும் முயற்சியில் இ.தொ.கா. ஈடுபாடு கொண்டுள்ளது.

இதேவேளை மனோ கணேசனும் கோதாவில் குதிக்கத் தயாராகி விட்டார். (சில வேளை இதை வாசிக்கும்போது அவர் மனோரதம் ஈடேறியிருந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை) இதற்காக முன்னுக்குப் பின் முரணாக கருத்துக்களை ஊடக சந்திப்பில் கொட்டித் தீர்க்கின்றார். சர்வகட்சி ஆட்சி என்ற கோரிக்கை நீட்சிப் பெற்றிருக்கும் சூழ்நிலையில் மனோ கணேசன் ஜனாதிபதியோடு கைகோர்க்கும் பட்சத்தில் அவர் தலைமை ஏற்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாடு என்னவாயிருக்கும் என்னும் கேள்வி எழுவதற்கு முன்பே அதன் தலைவர்களில் ஒருவாரன பழனி திகாம்பரம் சர்வகட்சி அரசாங்கத்தில் பங்கேற்கத் தயார். ஆனால் கூட்டணியாக மட்டுமே என்று கூறியிருக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி தற்போதைய சூழலில் சர்வகட்சி ஆட்சி என்ற பொறிக்குள் சிக்கிக்கொள்ளத் தயாரில்லை என்பது வெளிப்படை.

சரி, மலையக தலைமைகள் சர்வகட்சி ஆட்சியில் பங்கேற்பதும் ஏற்காததும் அவர்களின் கைகளில். ஆனால் பெருந்தோட்ட மக்களின் எதிர்பார்ப்பு இதுவல்ல. முழுமையான சம்பள உயர்வு, விலைவாசி உயர்வுக்கான இடர்கால, இடைக்கால நிவாரணம், வேலைவாய்ப்பு, தடைப்பட்டுப் போயிருக்கும் வீடமைப்புத் திட்டம் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள், தரிசு காணி விநியோகம் சம்பந்தமான முன்னுரிமை என்று பல அத்தியாவசியங்கள்.

இதுவரை பேரம் பேசலால் பெரிதாக எதுவும் சாதித்தப்பாடில்லை. எனவே பேச்சுவார்த்தை என்பதெல்லாம் பம்மாத்து என்கிறார்கள் மக்கள். நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கவே கூட்டு என்றால் அதை அப்படியே நம்பிவிட பெருந்தோட்ட மக்கள் தயாரில்லை.



# பொருளாதார நெருக்கடியை சிந்திக்காமல் அதிகாரப் போட்டியில் அரசியல் கட்சிகள்

நாட்டின் பொருளாதார நெருக்கடி வரவரக் கூடுமே தவிர, இப்போதைக்குத் தீராது என்பது மிகத் தெளிவாகியுள்ளது. இது ஒரு பெருந்துயர நிலையே. ஆனால் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியும். தீர்க்க முடியும் என்று சொல்வதை விடத் தீர்க்கவே வேண்டும். அப்போதுதான் பல பிரச்சினைகள் குறையும். இல்லையென்றால் பிரச்சினைகள் பெருகும். நாடு மேலும் மேலும் நெருக்கடிக்குள் சிக்குண்டு அந்நிய சக்திகளின் கைகளில் சிக்கி, காலில் மிதிபடும். இது ஒரு அபாய எச்சரிக்கையே.

முதலில் பொருளாதார நெருக்கடி கூடுமே தவிர, இப்போதைக்குத் தீராது என்பதற்கான காரணங்கள் என்னவென்று பார்க்கலாம்.

1. இன்னும் பொருளாதார நெருக்கடியின் தீவிரத் தன்மையைக் குறித்த உணர்வு அரசாங்கத்துக்கும் ஏற்படவில்லை. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள், தலைமைகளுக்கும் ஏற்படவில்லை. இதனால்தான் இவை மையப்பிரச்சினையைப் பற்றி (பொருளாதார நெருக்கடியைப் பற்றி) சிந்திக்காமல் தமக்கிடையிலான அதிகாரப் போட்டியில், அதற்கான தந்திரங்களில் ஈடுபடுகின்றன. இதேவேளை மக்களுக்கும் இதைப் பற்றிச் சரியாகப் புரியவில்லை. அதைச் செய்ய வேண்டிய ஊடகங்கள், புத்திஜீவிகள் போன்ற தரப்பினரும் அதைப்பற்றிப் பொருட்படுத்தாதே ஏனோ தானோ என்று இருக்கின்றனர்.

2. இனப்பிரச்சினை உள்ளிட்ட எந்தத் தேசியப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணாமல் அவற்றைப் பற்றிப் பேசிப் பேசியே காலத்தைக் கடத்தியதைப்போல இந்தப் பிரச்சினையையும் பேசிக் கடத்தி விடலாம். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டித் தப்பி விடலாம் என்றே பலரும் கருகிறார்கள். இதுதான் நடந்து கொண்டுமிருக்கிறது. முன்னையை பழக்கதோசத்திலிருந்து விடபட முடியாமல், விடுபட விரும்பாமல் தான் எல்லோரும் உள்ளனர்.

3. ஆனால், இந்தப் பிரச்சினை அவ்வாறானதல்ல. இது பசி, பிணி என ஒவ்வொருவரின் உடலோடும் உயிரோடும் சம்மந்தப்பட்டது. மேலும் கல்வி, மருத்துவம் என்று வாழ்க்கையின் அடிப்படைகளில் நேரடியாகவே தாக்கத்தை உண்டாக்குவது. நிகழ்காலம், எதிர்காலம் என இரண்டிலும் உச்சப் பாதிப்பை ஏற்படுத்துவது. மட்டுமல்ல, நாடே இயங்க முடியாத நிலையை உருவாக்கக் கூடியது.

4. அரசியல் உறுதிப்பாடு இல்லாத நிலை இருக்கும் வரையில் எந்தவிதமான பொருளாதாரத் திட்டங்களையும் மேற்கொள்ள முடியாது. ஏனென்றால் நாட்டில் குழப்பங்களும் ஸ்திரமற்ற நிலைமையுமே நீடிக்கும். எத்தகைய கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்க முடியாது. இதனால்தான் அரசியல் உறுதிப்பாடு அவசியம். இல்லையென்றால் பொருளாதார ரீதியான உதவிகளைச் செய்ய முடியாது என்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை வெளிப்படையாகவே சொல்கின்றன. இதே நிலைப்பாட்டையே அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன், அவுஸ்திரேலியா, யப்பான் போன்ற உதவும் நாடுகளும் கொண்டுள்ளன.

5. பொருளாதார நெருக்கடி நாட்டுக்கும் மக்களுக்கும் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும்? ஆகவே அதிலிருந்து மீள்வது எப்படி? இதற்கு அரசின் பொறுப்பென்ன? மக்களின் கடமைகள் என்ன? உண்மையான மாற்றுத்திட்டங்கள் என்ன? தீர்வு என்ன? அவற்றை எப்படி நடைமுறைப்படுத்துவது? என்பதைக் குறித்த ஆய்வுகள், உரையாடல்கள் அவசியமானது. இது தொடக்க நிலைப்பணியாகும். இதுவே இன்னும் மேற்கொள்ளப் படவில்லை. அதாவது இதையே இன்னும் யாரும் ஆரம்பிக்கவில்லை. அரசும் செய்யவில்லை. மக்கள் தரப்பிலுள்ள அமைப்புகள், ஊடகங்கள், புத்திஜீவிகள், பொருளாதாரத் துறையினர் என யாருமே செய்யவில்லை. என்றால், இந்த நெருக்கடியின் தீவிரத்தை யாரும் சரியாக உணரவில்லை என்றுதானே அர்த்தம்! இதில் முக்கியமாகப் பங்களிக்க வேண்டிய தரப்புகள் பொருளாதாரத்துறை சார்ந்த நிபுணர்கள், உற்பத்தி மற்றும் தொழில்துறையினர், முதலீட்டாளர்கள், ஊடகங்கள் ஆகும். ஆனால் கவலையளிக்கும் விதமாக இந்தத் தரப்புகள் இதற்கு வெகு தொலைவில் ஏனோ தானோ என விலகி நிற்கின்றன. அல்லது கனத்த மௌனம் காக்கின்றன. இது மிக மோசமான நிலையாகும். உண்மையில் இந்த நெருக்கடியில் இவை இரண்டு வகையான பங்களிப்புகளை – வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருக்க வேண்டும். ஒன்று, நிலைமையின் – நெருக்கடியின் தீவிரத்தை, அதன் ஆபத்தை வெளிப்படுத்த வேண்டும். இப்போது கூட அதைச் செய்யலாம். மேலும் தாமதிக்கக் கூடாது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் நெருக்கடி பல மடங்கு அதிகரித்துச் செல்லும். உதாரணமாக இந்தப் பொருளாதார நெருக்கடி வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி இப்பொழுது ஓராண்டாகிறது. இந்த ஓராண்டுக்குள் இது எவ்வளவு விரைவான சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று பார்த்தீர்களா? இந்தவாரத் தொகை மதிப்பீட்டின்படி தற்போதைய பணவீக்கம் 60 % த்தைக் கடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றுமே இல்லாத அளவுக்கு உணவுப் பொருட்களின் விலையே அதிகரித்துள்ளது. அடுத்த கட்டமாக உணவுப் பொருட்களே இல்லாத நிலை ஏற்படப்போகிறது. ஆகவே, முதலில் அங்கங்கே தனித் தனி ஆளாக ஒற்றைக் குரலாக ஒலிக்காமல் அமைப்பாகத் திரண்டு, இதை ஆக்கபூர்வமான முறையில் அரசுக்கும் மக்களுக்கும் விளக்க வேண்டும். இதை எழுந்தமானமாகச் செய்யாமல் முறைப்படியான தரவுகள், விளங்கங்களோடு ஆய்வு ரீதியாக, மதிப்பிடலுக்குள்ளாக்கி வெளிப்படுத்த வேண்டும். இதை மக்களிடத்தில் கொண்டு கொண்டு போவதற்கும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கும் ஏற்ற வகையிலான வழிமுறைகளில் செயற்பட வேண்டும். அரசுடன் சந்திப்புகளை மேற்கொண்டு திரட்டிய ஆவணத்தை கையளித்து உரையாடுவது அவசியம். இணைந்து திட்டங்களை உருவாக்கவும் அவற்றைச் செயற்படுத்தவும் வேண்டும். அதைப்போல, மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு கலந்துரையாடல்கள், ஊடகங்கள் வழியான எடுத்துரைப்புகள், பகிர்தல்கள், மக்கள் சந்திப்புகள் என நிகழ வேண்டும். இதற்கு அர்ப்பணிப்பு மிக்க உழைப்பு செலவிடப்படுவது கட்டாயம். ஏனென்றால் இதொரு தேசிய நெருக்கடியாகும். எந்தத் தேசிய நெருக்கடியும் கனதியுடையதாகவே இருக்கும். இதனால்தான் இத்தகைய நெருக்கடிகளின்பொழுது செயற்படுவதை இடர்காலப் பணி, அவசரகாலப் பணி, அவசியப் பணி என்று சொல்லப்படுகிறது. அதுவும் உயிரையும் உடலையும் பாதிக்கின்ற நெருக்கடி இதுவல்லவா. ஆகவே இதனுடைய தாற்பரியத்தைப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம். இரண்டாவது, துரிதமாக மாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகப் பங்களிப்பது, உழைப்பதாகும். இது தனியே அரசுடன் அல்லது அதன் நிர்வாகக் கட்டமைப்புடன் மட்டுமல்லாது, மக்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். களப்பணி என்ற அடிப்படையிலேயே இதைச் சிந்திப்பது நல்லது.

அரசாங்கத்தின் திட்டங்களும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான அரச நிர்வாகமும் முற்று முழுதாக மறுசீரமைப்புக்குள்ளாக்கப்படுவது அவசியம். இதற்கான சுற்று நிருபங்கள், சட்டங்களும் சீரமைப்புக்குள்ளாக வேண்டும். இடர்கால நிலைமையைக் கருத்திற் கொண்டு அனைவரும் குறிப்பிட்ட காலத்துக்கு சிறப்பு வேலைத்திட்டத்துக்குத் தயார்ப்படுத்தப்படுவது அவசியம். இதன்படி அனைவரும் களப்பணியாளராக – உற்பத்தித்துறைகளின் மேம்பாட்டுக்கும் பொருளாதார விருத்திக்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். பணியாற்ற வேண்டும். இதில் கூடுதலாகப் பங்களிப்போருக்கு – சிறப்பாக வேலை செய்வோருக்கு ஊக்குவிப்புகள் வழங்கப்படலாம். பதவி உயர்வு, கொடுப்பனவு மற்றும் சிறப்பு வழங்கல்கள் என்றவாறாக. குறைவாகப் பங்களிப்போர் அல்லது ஒத்துழைக்க மறுப்போருக்கான இடத்தை நிராகரித்தல், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் என்பதாகவும். இவ்வாறே அரசாங்கத்திலும் அதிக வருவாயை ஈட்டித்தரும் அமைச்சுகள், மக்கள் நலனை மேம்படுத்தும் அமைச்சுகள், உற்பத்தியில் சிறப்பாகச் செயற்படும் அமைச்சுகள் என வகைப்படுத்தப்பட்டு அவற்றுக்கான சிறப்புத் திட்டங்களும் மதிப்பளித்தல்களும் வழங்கப்படுவது அவசியம்.

6. மக்கள் இன்றைய நிலையை முற்று முழுதாக விளங்கிக் கொள்ள முற்பட வேண்டும். இது பல வகையில் அமையும். ஒன்று செலவீனங்களை மட்டுப்படுத்துவது. விழாக்கள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் எல்லாவற்றையும் நாளாந்த வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது. அதாவது ஒவ்வொருவரும் சுயமாக இயங்கக் கூடியவாறாக. பிள்ளைகள் தாமாகப் பாடசாலை செல்வது வரையில். அதைப் போல குடும்பத்தில் உள்ள அனைவரும் கட்டாயமாக உழைக்க வேண்டும் என்பது. குறிப்பிட்ட நேரமாவது இதில் அடங்கும். உடல், உள வலுவுடையோர் குறைந்தது 12 மணி நேரமாவது வேலை செய்யவேண்டும். இதை ஒரு சட்டம்போல ஒவ்வொருவரும் உணருவது அவசியம்.

7. எத்தகைய அடிப்படையில் மக்கள் இந்த நெருக்கடியை எதிர்கொள்ள முடியும் என்று காட்டப்படும் வழிகளில் மக்கள் பங்களிப்புகள் நடக்க வேண்டும். இதை ஊக்கப்படுத்துவது, மேலும் வளப்படுத்துவது, பரவலாக்கம் செய்வது என இது அமைதல் அவசியம். இப்படிப் பலவற்றை நாம் அவசர அவசியமாகச் செய்ய வேண்டியுள்ளது. இதை விடவும் மாற்றத் திட்டங்கள், தீர்வுகள் பலவிருக்கலாம். வழிகள் பல இருக்கலாம். அதில் நாம் செய்யும் பயணம் எப்படி என்பதுதான் முக்கியமானது.

**கருணாகரன்**

---




# ஹர்த்தாலுக்கு பணிந்து டட்லி ராஜினாமா புதிய பிரதமராக சேர் ஜோன் கொத்தலாவல

இலங்கையை உலுக்கி எடுத்த அந்த ஹர்த்தால் 1953 ஒகஸ்ட் 12ம் திகதி நடைபெற்றது. ஒரே தினத்தில் வடக்கு, கிழக்கு, தென், மத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் வெற்றிகரமாக ஹர்த்தால் நடைபெற்றது. கொழும்பு அப்படியே ஸ்தம்பித்துப் போனது. மாட்டு வண்டில்காரர்களும் அப்பனே முருகா என வீட்டில் இருந்து விட்டனர். தனியார் பஸ் கம்பனிகள் கதவுகளை இழுத்து மூடின. டிராம் வண்டிகள் இயங்கவில்லை. ரயில்கள் ஓடவில்லை. கொழும்பின் பல இடங்களில் பாதைக்கு குறுக்கே மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. சில இடங்களில் தண்டவாளங்கள் அகற்றப்பட்டிருந்தன. அக் காலத்தில் தனியார் வாகனங்கள் மற்றும் லொரிகள் குறைவு. தாக்கி சேதம் விளைவித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் அவையும் வாலைச் சுருட்டிக் கொண்டன. போராட்டக்காரர்கள் வீதிகளில் ஆங்காங்கே கூட்டமாகக் காணப்பட்டதால் கடைகள், அரசு கட்டடங்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டதால் நாடே வெறிச்சோடிப் போனது. திறக்கப்பட்டிருந்த கடைகளும் பலாத்காரமாக மூடப்பட்டன. மொத்தத்தில் முழு நாடுமே ஸ்தம்பித்துப் போனது.

அன்றைய பிரதமர டட்லி சேனநாயக்கவும் அவரது மதியூகியும் நிதியமைச்சருமான ஜே.ஆர்.ஜயவர்தனவும் இடதுசாரிகளால் இலங்கை மக்களைத் தம் வசப்படுத்திவிட முடியும் என்பதை கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பொய் வாக்குறுதிகளை வழங்குவதும் பின்னர் அதற்கு மாறானவற்றை செய்வதும் இலங்கை அரசியலில் வழமையே. எழுபதுகளில் பதவிக்கு வருவதற்காக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அளித்த வாக்குறுதிகளில் ஒன்று குறைந்த விலையில் அரிசி கொண்டுவந்து தருவோம் என்பதாகும். இரண்டு கொத்து அரிசியை இலவசமாகத் தருவோம் என்றார். அப்போது உலகில் அரிசி விளைச்சல் குறைவு. விலை அதிகம். அதிக விலைக்கும் அரிசி இறக்குமதி செய்ய முடியாது என்பதே உண்மை நிலை. எதிர்த்தரப்பினர், கொண்டுவந்து தருவதற்கு எங்கே அரிசி? என்று எதிர்க்கேள்வி எழுப்பினர். ஸ்ரீமாவோ தளரவே இல்லை.

“நான் சொன்னால் சொன்னது தான்! சந்திரனில் இருந்தாவது அரிசி கொண்டுவந்து தருவேன்” என்றார் ஒரே போடாக! தேர்தல் பரப்புரையின் போது அக்கோஷம் ஒரு பாடலாகவே மாறிப்போனது. சீனி இல்லாமல் தேனீர் அருந்துவோம், சந்திரனில் இருந்தாவது அரிசி கொண்டு வருவோம் என கூட்டத்துக்குக் கூட்டம் கோஷம் போட, கரகோஷமும் விசிலும் வானைப் பிளந்தது! 1970 தேர்தலில் டட்லியின் ஐ.தே.க. பயங்கரத் தோல்வியைத் தழுவ, ஸ்ரீமாவோவின் கூட்டணி அதிரி புதிரி வெற்றிபெற்று ஆட்சியில் அமர்ந்தது. அவரது ஆட்சியில்தான் பின்னர் அரிசி, மா பஞ்சமும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டது!

ஸ்ரீமாவிடமிருந்த ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக 1977 தேர்தலின் போது ஐ.தே.க.வின் ஜே.ஆர்.ஜயவர்தன, எட்டு இறாத்தல் தானிய வகைகளைத் தருவேன் எனத் தேர்தல் வாக்குறுதியைத் தந்தார். அரிசிக்கும் மாவுக்கும் அல்லாடிக் கொண்டிருந்த இலங்கைக் குடிமக்கள் பஞ்சம் போக்க வந்த தம்பிரானே! என அவர் பக்கம் சேர்ந்து கொண்டு அத்தேர்தலில் ஐ.தே.க.வுக்கு வரலாறு காணாத வெற்றியைத் தந்து ஆட்சிபீடத்தில் அமர வைத்தார்கள். கூடவே தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வட்டமேசை மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்வேன் என்ற வாக்குறுதியையும் தந்தார் ஜே.ஆர்.

பதவிக்கு வந்ததும் ஜே.ஆர். அரசு இரண்டையும் செய்யவில்லை! வட்டமேசை மாநாட்டைக் கூட்டி தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க முடியும். பதிலாக வடக்கின் தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதற்கென விசேட இராணுவ அதிகாரி புல் வீரதுங்கவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்து, அவருக்கு ஆறு மாதகால அவகாசத்தை தந்தார். வீரதுங்க போய் வந்ததன் பின்னர் முன்னரைவிட தீவிரவாதம் வடக்கில் வளரவே செய்தது. ஆறு இறாத்தல் தானியம் எங்கே என்று எதிர்த்தரப்பினர் கேட்டபோது, நாட்டை திறந்த பொருளாதாரத்துக்கு திறந்துவிட்டு விட்டேன். யார் வேண்டுமானாலும் கடைகளில் தமக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார் ஜே.ஆர்! அரிசி, தானியங்கள் குறைந்த விலையில் கிடைக்கும் என்ற மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புக்கு வேட்டு வைத்ததன்மூலம் ஜே.ஆர். அரிசி அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்தார் என்பது உண்மையே.

அதேபோல வறுமைக் கோட்டுக்கு கீழுள்ளவர்களைத் தவிர ஏனையோருக்கான அரசி பங்கீட்டு புத்தகம் மற்றும் குடும்ப அட்டைகளை ஜே.ஆர். பறித்துக் கொண்டார். இனாமாக எதையும் தர மாட்டோம். உழைக்கவும் அதற்கான ஊதியம் பெறவும் வாய்ப்புகளை உருவாக்கித் தருவோம் என்பது ஜே.ஆரின் கொள்கையாக இருந்தது. 1952 ஹர்த்தால் வெற்றியை சகித்துக் கொள்ள முடியாதவராக, அடிபட்ட புலியாக காத்திருந்த ஜே.ஆர். அரிசி அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்ததை வரவேற்கத் தக்கதாகவே மக்களும் பார்த்தார்கள்.

1953 ஹர்த்தால் டட்லி சேனநாயக்காவை வெகுவாகவே பாதித்து விட்டது. சில மாதங்களுக்கு முன்னர் தமது கட்சிக்கு கௌரவமான வெற்றியைத் தந்த அதே மக்கள் தனது அரசுக்கு எதிராக இவ்வளவு ஆவேசமாக இறங்குவார்கள் என்பதை அவரால் நம்ப முடியவில்லை. அலரி மாளிகையில் தான் டட்லி சேனநாயக்க வாசம் செய்தார். அன்றைய அலரி மாளிகைக்கும் காலி வீதிக்கும் இடையே ஒரு அரைச்சுவர் இருக்கும். எட்டிப் பார்த்தால் அலரி மாளிகை வாசலைப் பார்க்கலாம். பொதுவாகவே ஆள்அரவமற்றிருக்கும். காவலுக்கு சில பொலிசார். இன்றிருக்கும் பிரமாண்டமான கட்டடங்கள் அன்றில்லை.

பிரதமர் டட்லி சேனநாயக்க தொடர்ந்தும் அலரி மாளிகையில் வசிப்பது நல்லதல்ல என அவருக்கு சொல்லப்பட்டது. அங்கு அரச உயர் மாநாடுகள் நடத்தப்படுவது பாதுகாப்பானதல்ல என்று அறிவுறுத்தப்பட்டதால் அன்று கொழும்பு துறைமுகத்தில் நங்கூடமிட்டிருந்த எச்.எம்.எஸ். நியுபவுன்ட்லான்ட் என்ற போர்க் கப்பலில் அமைச்சரவை மாநாடு நடைபெற்றது. நாடு அச்சமயத்தில் செயலிழந்து கிடந்தது. நாடெங்கும் லட்சக்கணக்கானோர் வீதிகளில் இறங்கியிருந்ததால் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே ஆங்காங்கே மோதல்கள் இடம் பெற்றிருந்தன. அடுத்ததாக என்ன நடக்கும் என்பது தெரியாத நிலை. முக்கிய அரசு அலுவலகங்கள், துறைமுகம், இரத்மலானை விமான நிலையம் என்பனவற்றுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பிரச்சினை எழுந்திருந்தது. எதிர்க்கட்சிகள் ஒரு நாள் ஹத்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தபோதும் மக்களின் ஆவேசத்தைப் பார்க்கும்போது இது எத்தனை நாள் நீடிக்கும் என்பது தெரியாத நிலை ஏற்பட்டிருந்ததால் அரசு அரண்டு போயிருந்தது.

அன்றைய தினம் தொடர்ச்சியாக பல முக்கிய மாநாடுகள் அக்கப்பலில் நடைபெற்றன. பொலிஸ் அதிகாரிகள், முப்படைத் தளபதிகள் இந்த ஆலோசனை மாநாடுகளுக்கு அழைக்கப்பட்டனர். அன்று தேசாதிபதியாக விளங்கியவர் சேர் ஒலிவர் குணதிலக்க. பிரதமரின் ஆலோசகராகவும் அவர் செயல்பட்டு வந்தார்.

அச்சமயத்தில் மனம் பேதலித்துப் போயிருந்த டட்லி சேனநாயக்க உடல் பாதிப்புற்று நோயுற்றார். உண்மையாகவே நல்ல மனிதரான டட்லியால் இந்த ஹர்த்தாலைத் தாங்கிக் கொள்ளவும் முடியவில்லை. இதில் இருந்து எப்படி மீள்வது என்பதையும் அவர் அறிந்திருக்கவில்லை. எனவே நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளை துரித கதியில் மேற்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சு சேர் ஒலிவர் குணதிலக்கவிடம் கையளிக்கப்படடது. அவர் அவசரகால சட்டத்தைப் பிறப்பித்து பொலிசாருக்கு உதவும் வகையில் இராணுவத்தை சேவைக்கு அழைத்தார். ஒலிவர் குணதிலக்க அன்றைய இராணி மாளிகையில் இருந்து அவசரகால நடவடிக்கைகளை மேற்கொண்டார்.


ஒலிவர் குணதிலக்க ஒரு பனங்காட்டு நரி. பிரிட்டிஷ் விசுவாசி. சில ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரம் பெற்ற இலங்கையை மார்க்சிஸ்டுகளின் கையில் கொடுப்பதா? என்று ஆத்திரப்பட்ட அவர் ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார். இம் மோதல்களில் பத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் உயிரிழந்தனர். 13ம் திகதி அதிகாலை அளவில் ஹர்த்தாலின் வீச்சு பெரும்பாலும் ஓய்ந்திருந்தது. தமது இடதுசாரி தலைவர்கள் கேட்டுக் கொண்டால் மட்டுமே ஹர்த்தாலைக் கைவிடுவோம் என அவர்கள் தெரிவித்து வந்ததாகவும் 13ம் திகதி நண்பகல் அளவில் ஹர்த்தால் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

பிரதமர் டட்லி சேனநாயக்க நோயுற்று ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதால் புதிய பிரதமர் நாட்டுக்குத் தேவைப்பட்டார். டட்லி தன் பதவியை இராஜிநாமா செய்தார். உடனடியாக ஐ.தே.க. உயர்மட்டம் கூடி கேணல் சேர். ஜோன் கொத்தலாவலையை புதிய பிரதமராக நியமனம் செய்தது. கொத்தலாவலை அரிசி விலை உயர்வை குறைப்பதாக அறிவித்தல் விடுத்தார்.

இலங்கையின் அரிசி அரசியல் ஒரு பிரதமரை இராஜிநாமா செய்ய வைத்தது! ஆசிய நாடுகளில், குறிப்பாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இருந்து விடுதலை பெறும் நாடுகளில் கம்யூனிஸ்டுகள் கை ஓங்குவதாகவும் உணவை ஒரு ஆயுதமாக கம்யூனிஸ்டுகள் பயன்படுத்துவதாகவும் மேற்குலகம் நம்புவதற்கு இந்த ஹர்த்தால் வழி வகுத்தது. எனவே இந்தகைய அபாயம் கொண்ட நாடுகளை கைவிட்டுவிடக்கூடாது என அமெரிக்காவும் மேற்குலகும் கருதின.


1953 ஹர்த்தால் காட்சிகள்

(தொடரும்)




## மேஷம்

உழைப்பதன் மூலமே உன்னத வாழ்வை அடையலாம் என்று சொல்லும் மேஷ ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் உங்கள் ராசியிலேயே பலம்பெற்று சஞ்சரிப்பது யோகம் தான். பொருளாதார நிலை உயரும். சிம்ம ராசியில் புதன் சஞ்சாரம் செய்வதன் காரணமாக உங்கள் ராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். எனவே சகோதரர்களால் ஆதாயம் கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்களும் ஊதிய உயர்வும் உண்டு பணி நிரந்தரமாகும் வாய்ப்பு சிலருக்கு வாய்க்கும். பாகப்பிரிவினைகளில் இருந்த தடைகள் அகலும். இனிய பலன்கங்கள் நிறைய நடைபெறும் நேரமிது.

## ரிஷபம்

கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கும் ரிஷப ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்கிரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார நிலை உயரும். சிம்மம் புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 4ம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்பர்.இல்லத்தில் மங்கல ஓசை கேட்கும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டு.

## மிதுனம்

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் மிதுன ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் தனஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி சூரியனோடு இணைந்து சஞ்சரிப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக இந்த நேரம் வெற்றிகள் வீடு தேடி வரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். உடன்பிறப்புகளும் உடன் இருப்பவர்களும் உறுதுணையாக இருப்பர். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு ஒரு நல்ல காரியத்தை செய்து முடிப்பீர்கள். பொதுவாழ்வில் பொறுப்புகள் வந்து சேரும்.

## கடகம்

எதிர்காலத்தைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் கடக ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசியை குரு பார்ப்பதால் பிரச்சினைகள் படிப்படியாக தீரும். கண்டக சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்திற்கு வரும்போது வருமானம் வந்துகொண்டே இருக்கும். வீடு மாற்றம் உத்தியோக மாற்றம் ஏற்படலாம். பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். நல்ல நிறுவனங்களில் இருந்து அதிக சம்பளம் தருவதாகச் சொல்லி அழைப்புகள் வரலாம்.

## சிம்மம்

மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்று நினைக்கும் சிம்ம ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன் விரய ஸ்தானத்தில் இருப்பதால் விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கலாம். குரு பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பொருளாதார வளர்ச்சி உண்டு. சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பது மிக மிக யோகமாகும். தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். வெற்றி வாய்ப்புகள் தேடி வரும். கூட்டாளிகள் உங்கள் குறைகளை தீர்க்க முன்வருவர் பணப்புழக்கம் அதிகரிக்கும். அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளால் முன்னேற்ற பாதையை நோக்கி செல்வீர்கள்.

## கன்னி

நல்ல யோசனைகளை அள்ளி வழங்கும் கன்னி ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதாலும் குரு பார்வையும் உங்கள் ராசியில் பதிவதால் நினைத்த காரியம் நிறைவேறும். சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிநாதன் விரய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் விரயங்கள் அதிகரிக்கலாம். சுபச் செலவுகளை செய்தால் வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம். வீடு மாற்றம் இடமாற்றம் ஏற்படும் வெளிநாட்டு முயற்சியில் இதுவரை இருந்த தடை அகலும். தொழில் முன்னேற்றத்திற்காக புதியவர்களை பங்குதாரர்களாக சேர்த்துக் கொள்வீர்கள்.

## துலாம்

வாய்ப்பைத் தேடிச் சென்றால் தான் வெற்றி காண இயலும் என்று சொல்லும் துலாம் ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசியில் கேதுவும் சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். அர்த்தாஷ்டம சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் லாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது பெற்றோர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டு வேலை கை கூடலாம்.

## விருச்சிகம்

விடாமுயற்சியே வெற்றியை எட்டிப் பிடிக்கும் என்று சொல்லும் விருச்சிக ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் சொந்த வீட்டில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார். குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. எனவே நற்பலன்கள் அதிகம் நடைபெறும். சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு அட்டமாதிபதி லாபாதிபதியான புதன். லாபாதிபதியான அவர் தொழில் ஸ்தானத்திற்கு வரும்போது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும் உயர்ந்த பொறுப்புகளும் கிடைக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்பத்தில் உதிரி வருமானம் கிடைக்கும்.

## தனுசு

மனதில் பட்ட கருத்துக்களை மறைக்காமல் எடுத்துரைக்கும் தனுசு ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு சுகஸ்தானத்தில் இருப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 9ம் இடமான பாக்கிய ஸ்தானத்திற்கு வரும்போது நினைத்த காரியங்கள் நிறைவேறும். நீடித்த நோய் அகலும். அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும் விதத்தில் கிரக நிலைகள் சஞ்சாரம் இருக்கிறது. ஆயினும் ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் ஒரு சில காரியங்கள் தடைப்படலாம். தசாபுத்திக்கு ஏற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

## மகரம்

எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செயல்படும் மகர ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் திட்டமிட்ட காரியங்கள் திசைமாறி செல்லலாம். ஜென்ம சனி நடைபெறுவதால் எதிலும் கூடுதல் கவனம் தேவை. சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக மறைந்த புதன் நிறைந்த தனலாபம் கிடைக்கும். இருப்பினும் சனி வக்ர இயக்கத்தில் உள்ளதால் வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் சேமிக்க இயலாது. விரயங்களும் சுப விரயங்களும் மாறிமாறி வரும். புதன் 9ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குவதால் பூர்வீக சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவு எடுப்பீர்கள். பயணங்கள் பலன் தரும்.

## கும்பம்

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் கும்ப ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் வக்ரம் பெறுகிறார். வெற்றிகள் ஸ்தானத்தில் ராகுவும் பாக்கிய ஸ்தானத்தில் கேதுவும் இருக்கிறார்கள். எனவே விரயங்கள் அதிகரிக்கும். சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் பஞ்சம அஷ்டமாதிபதியான அவர் சப்தம ஸ்தானத்தில் வரும்பொழுது பிள்ளைகள் வழியில் சுப விரயங்கள் ஏற்படும். மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும் தொழிலில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக பணியாளர்களால் சிறு தொல்லைகள் வரலாம்.

## மீனம்

மனசாட்சிப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லும் மீன ராசி நேயர்களே! ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் வியாழன் பலம் பெற்று உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். சிம்ம புதன் சஞ்சாரம் காரணமாக உங்கள் ராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன் கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகமான அவர் 6ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது நற்பலன்களை வழங்குவார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் நெருக்கம் ஏற்படும். உற்சாகத்தோடு பணிபுரியும் நேரமிது.




# எப்படி உருவானது கொழும்பு நகரசபை

இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனம் தான் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலை விட பழமையானது. இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலானது 1911 இல் தான் இடம்பெற்றது என்பதை அறிவீர்கள். இலங்கையின் ஆளுநராக 1865 முதல் 1872 காலப்பகுதியில் ஆட்சி செய்த சேர் ஹர்கியூலிஸ் ரொபின்சனின் (Hercules Robinson) காலத்தில் தான் இலங்கைக்கான உள்ளூராட்சி நிருவாகம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையின் ஆட்சி அதிகார நிர்வாகத்துறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு பங்காற்றியவர்களில் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டனின் பங்கு முக்கியமானது. ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் முழு நாடும் வருவதற்கு முன்னரே 'பிரித்தானிய அரசியலமைப்புக்கு ஏற்றாற்போல யாப்பு முறையை இலங்கையிலும் கொண்டு வரவேண்டும் என்று ஆரம்பத்தில் தெரிவித்தவர் அவர் தான். அவர் பின்னர் இலங்கையின் முதலாவது நீதியரசராக ஆனார்.

1809 இல் அப்போதைய வெளியுறவுத்துறை செயலரிடம் ஒரு குறிப்பாணையை சமர்ப்பித்து இப்படிக் கூறினார்:

"இந்தத் தீவில் வசிப்பவர்களின் வாழ்க்கை–நடத்தைக்கும், மதச் சூழலுக்கு ஏற்ற, பிரிட்டிஷ் அரசியலமைப்பின்படியும் இலங்கைக்கு ஒரு ஆட்சி முறை வழங்கப்பட வேண்டும்."

அப்படித்தான் 1833 இல் கோல்புரூக் கமிஷனின் முன்மொழிவுகளும் ஒரு சுதந்திர அரசாங்கத்தின் தேவையை பரிந்துரைத்தன. 1848 இல் இலங்கையில் வெடித்த பிரிட்டிஷ் எதிர்ப்புக் கிளர்ச்சியின் காரணமாக, இலங்கைக்கு ஏதாவது ஒரு சுயராஜ்யத்தை வழங்க வேண்டிய தேவை வலுவாக எழுந்தது. இந்தக் காரணங்களின் விளைவாக, 1850 இல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் கொழும்புக்கு ஒரு நகர சபை முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது.

1865 இல் ஆளுநராக பதவியேற்ற சேர் ஹர்கியூலிஸ் அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் இதற்கான யோசனையை அரசாங்க சபையில் சமர்பித்தார். இதன்படி 1865ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் கொழும்பு நகர சபை நிறுவப்பட்டது. அது மட்டுமல்ல 1866ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இயங்கக் கூடிய வகையில் கொழும்பு, கண்டி ஆகிய இரு நகர சபைகளும் உருவானது. அதுபோல நகரசபை எல்லைகளும் தீர்மானிக்கப்பட்டன. கொள்ளுப்பிட்டி, கொம்பனிவீதி, கொழும்பு கோட்டை, புனித செபத்தியன் வீதி, புறக்கோட்டை, செயின்ட் போல்ல் பிளேஸ், கொட்டாஞ்சேனை, நியூ பஸார் மற்றும் மருதானை ஆகியவை அதன் அப்போதைய நகர எல்லைகளாகும்.

நகராட்சி உறுப்பினர்களாக தெரிவாக தகுதிபெற்றவர்கள் பற்றிய பட்டியலை தயார் செய்வதற்கான விசேட கூட்டம் 1865 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் திகதி கச்சேரியில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ஏ. எம்.பெர்குசன், டாக்டர். எஃப். டபிள்யூ. வில்ஸ் ஃபோர்டட், சீ.ஏ.லோரன்ஸ், ஜே. டி. அல்விஸ், சி. டயஸ், எஸ்.சண்முகம். ஒசின் லெப்பை, அபுதுல் காதர் மரிக்கார் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள். இந்தக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் 14 நாட்களுக்கு கொழும்பு கச்சேரியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் நகரசபை உறுப்பினர்களைத் தெரிவு தெரிவுசெய்வதற்கான கூட்டம் ஏற்பாடாகும் என்றும் பத்திரிகைகளிலும், வர்த்தமானி அறிவித்தலாகவும் அறிவிக்கப்பட்டது.

நகராட்சி உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான முதல் கூட்டம் 1866 ஜனவரி 12, 13 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெற்றது. இந்தத் தேர்தல் ஒன்பது தொகுதிகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்டது. கொழும்பு நகரில் வரி செலுத்துபவர்கள் வாக்காளர்களாக தகுதி பெற்றிருந்தார்கள். இதற்கு மக்கள் மத்தியில் தனி ஆர்வம் இருந்ததையும் உணர முடிகிறது. கொழும்பு நகர சபைக்கு ஆசன மட்டத்தில் முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பின்வருமாறு.

**சி. எல். பெர்டினாண்ட்ஸ்** (கொள்ளுப்பிட்டி)
**கலாநிதி எஃப். டபிள்யூ. வில்ஸ்ஃபோர்ட்** (கொம்பனி வீதி)
**ஜே. டபிள்யூ. வென்** (கோட்டை)
**எஃப். ஜே. த. சேரம்** (செண்ட் செபாஸ்தியன்)
**டாக்டர் ஜே. டபிள்யூ. வான் கேசல்** (புறக்கோட்டை)
**எஸ். தம்பையா** (செண்ட் போல்)
**சி. ஏ. லோரன்ஸ்** (கொட்டாஞ்சேனை)
**ஜே. டி. அல்விஸ்** (நியூ பஸார்)
**எம். சி. லோஸ்** (மருதானை)

ஜனவரி 5 , 1866 இல், பின்வரும் ஐந்து பேரை நகராட்சி கவுன்சிலர்களாக ஆளுநர் நியமித்தார்.

**சி. பி. லெயார்ட்** (அரச அதிபர், மேல் மாகாணம்)
**கலாநிதி டபிள்யூ. பி. சார்லி** (தலைமை சிவில் மருத்துவ அதிகாரி)
**எச். ஏ. லெட்** (நெடுஞ்சாலை ஆணையர், தலைமை பொறியாளர்)
**டி. பெர்விக்** (பிரதி சட்ட மா அதிபர்)
**ஜே. ஜே. கிரின்ளிண்டன்** (நில அளவையாளரின் உதவியாளர்)

இதே வேளை அதிகாரபூர்வமாக தலைவராக தெரிவானவர் சி. பி. லெயார்ட். அதாவது இலங்கையின் முதலாவது மேயர் அவர். இன்றும் கிராண்ட்பாசில் லெயர்ட்ஸ் புரோட்வே என்கிற வீதி அவரின் நினைவாகத் தான் இருக்கிறது. சாமுவேல் கிரேனியர் செயலாளராக தெரிவானார். இந்த ஐந்து உறுப்பினர்களும் பின்னர் நைட் பட்டம் பெற்றனர். சி. பி. லெயார்ட் இலங்கை சிவில் சேவையின் மூத்த உறுப்பினராக இருந்தார். அது மட்டுமன்றி 30 வருட காலமாக மேல் மாகாணத்துக்கான அரச அதிபராகவும் இருந்தவர். கோல்ப்ரூக் கமிஷனின் உறுப்பினராக இருந்த சி. எச். கமரூனின் மகன் எச். எச். கமரூன் கொழும்பு நகர சபையின் முதலாவது முழுநேரத் தலைவராக ஆனார்.

1887 இல் இயற்றப்பட்ட நகர சபை கட்டளைச் சட்டத்தின்படி ஆங்கில மொழி தெரியாத எவரும் நகர சபை பிரதிநிதியாக நியமிக்கப்படக் கூடாது. மேலும், ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள அசையாச் சொத்தின் உரிமை அல்லது ஆண்டுக்கு ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாத அசையாச் சொத்தின் உரிமை இருத்தலே. ஒரு பிரதிநிதியை தேர்ந்தெடுக்க வேண்டிய தகுதியாக இருந்தது. 1887 ஆம் ஆண்டு ஆணைச் சட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் எழுந்த சர்ச்சையால் மீண்டும் ஒருமுறை அவசரச் சட்டம் திருத்தப்பட்டது. 1910 ஆம் ஆண்டின் நகர சபைச் சட்டம் இல. 06இன் மூலம், தற்போதுள்ள நகராட்சி எல்லைகள் மேலும் விரிவாக்கப்பட்டன.

1935ஆம் ஆண்டு யாப்பின் பிரகாரம் கொழும்பு நகரை ஆளுவதற்கு முதல் முறையாக மேயர் மற்றும் துணை மேயர் என இரண்டு புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன. மேலும், இந்த புதிய யாப்பின் மூலம் நகர்ப்புற பிரிவுகளின் எண்ணிக்கை 20 ஆக விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி, கொழும்பு நகர சபையின் புதிய பிரிவுகள், கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, மருதானை வடக்கு, மருதானை தெற்கு, வடக்கு செண்ட் போல் , தெற்கு செண்ட் போல், கிழக்கு புதிய பஸார் , மேற்கு புதிய பஸார், கோட்டை, புறக்கோட்டை, வடக்கு கொம்பனி வீதி, தெற்கு கொம்பனி வீதி, செண்ட் செபஸ்தியான், தெமட்டகொட, திம்பிரிகசாய மற்றும் கறுவாத்தோட்டம் என்கிற நகரசபைத் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. 1943 இல் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டு அப்பிரிவுகளின் எண்ணிக்கை 30 ஆக உயர்த்தப்பட்டது. கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, திம்பிரிகசாய, ஹெவ்லொக் டவுன், தெற்கு வெள்ளவத்தை, கறுவாத்தோட்டம், பொரளை, தெமட்டகொட, முகத்துவாரம், மாதம்பிட்டிய, கிழக்கு கொட்டாஞ்சேனை, மேற்கு கொட்டாஞ்சேனை, நியூ பஸார், கிராண்ட்பாஸ், கொம்பனிவீதி, ஹுனுபிட்டி, வேகந்த, மாளிகாவத்தை, செண்ட் போல், செண்ட் செபஸ்தியான், கொச்சிக்கடை, புதுக்கடை, புறக்கோட்டை போன்ற பகுதிகளாக பிரிக்கப்பட்டன.

1946ஆம் ஆண்டு திருத்தத்தின் மூலம் வாக்காளர், வேட்பாளர் ஆகியோரின் தகுதிகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டன. அதன்படி 21 வயதுக்கு குறையாத பிரிட்டிஷ் குடிமகனாக இருப்பது கட்டாயமாக்கப்பட்டது.

(அப்போது இலங்கையர்கள் என்றால் பிரித்தானிய முடியாட்சியின் குடிகள் தான்)மீண்டும் 1953 ஆம் ஆண்டின் 25 ஆம் எண் நகரசபைச்சட்டத்தின் மூலம் மீண்டும் ஒருமுறை திருத்தப்பட்ட போது இலங்கை பிரஜைகளுக்கு மட்டும் வாக்காளர்களாக ஆகும் தகுதியுண்டு என்று மாற்றப்பட்டது. 1963 இல் உள்ளூராட்சி அமைச்சரினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் பிரகாரம் கொழும்பு நகர சபைத் தொகுதிகளின் எண்ணிக்கை 47 ஆக அதிகரிக்கப்பட்டது.

1978 இல் புதிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட போது, நகராட்சி நிர்வாக அமைப்பு மற்றும் சட்ட விதிகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. அதன்படி, 1979 ஆம் ஆண்டு விகிதாசார வாக்குப்பதிவு முறையில் தான் மாநகர சபைத் தேர்தல்களும் நடத்தப்பட்டன. அதன் பின்னர் மாநகர சபை சட்டம் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வந்திருக்கிறது.

1866 இல் கொழும்பு மாநகர சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1937 வரை கொழும்பு மாநகர சபையின் கட்டுப்பாடு 71 வருடங்கள் முழுமையாக ஐரோப்பியர்களின் கைகளிலேயே இருந்தது. கொழும்பு மாநகர சபையின் முதலாவது இலங்கை மேயர் என்ற பெருமை ரட்ணஜோதி சரவணமுத்துவுக்கே உண்டு. அதுபோல அவரின் மனைவி திருமதி நேசம் சரவணமுத்து இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் முதலாவது தமிழ் பெண் பிரதிநிதி ஆவார். பிரபல தொழிற்சங்கவாதியான ஏ.ஈ.குணசிங்க 1940 இல் கொழும்பு மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இலங்கையின் மூன்றாவது சுதேசிச மேயர் எனக் கூறலாம். இந்நாட்டின் அரசியல் வரலாற்றைப் பார்க்கும் போது இலங்கையின் ஜனாதிபதியாகவும், பிரதமராகவும், அதிகாரமிக்க அமைச்சர்களாகவும் பதவி வகித்த பலர் கொழும்பு மாநகர சபையின் ஊடாகவே அரசியல் களத்திற்கு வந்தவர்கள் என்று கூட கூற முடியும். கொழும்பு மாநகர சபையானது இந்நாட்டின் தேசிய அரசியலில் வலுவான செல்வாக்கு செலுத்திய ஒரு மையம் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.


1869 இல், கொழும்பு நகர சபையை இல்லாமற் செய்ய நகரவாசிகள் சிலர் சமர்ப்பித்த மனு காலனித்துவ செயலாளரால் சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

1905 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபையில் பதிவு செய்யப்பட்ட வண்டிகள் மற்றும் மாட்டு வண்டிகளின் எண்ணிக்கை 256 ஆக இருந்தது. ரிக்ஷாக்களின் எண்ணிக்கை 2369. சரக்குகளை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை 1676 ஆகும். குதிரை வண்டிகளின் எண்ணிக்கை 191.

1905 இல் கொழும்பு நகரில் மின்சார டிராம்கள் மூலம் கொண்டு செல்லப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை 6,555,338 என மதிப்பிடப்பட்டுள்ளது. மைல்களின் அடிப்படையில், அந்த ஆண்டு ஓட்டப்பட்ட மைல்களின் எண்ணிக்கை 814,725 ஆகும். மின்சார டிராம் பயணத்திற்கான குறைந்தபட்ச கட்டணம் ஒன்றரை மைல்களுக்கு 025 சென்ட் ஆகும். இதேவேளை, வடக்கு கிழக்கிலிருந்து கொழும்புக்கு செல்லும் பிரதான பாதையான விக்டோரியா பாலம் மூலம், அந்த வருடம் கொழும்பு மாநகர சபை 92,676 ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

1899 இல், கொழும்பு நகரசபை மாநகர சபையானது, கொழும்பு நகரில் ஒரு விளக்கைப் பராமரிப்பதற்கான கட்டணமாக வருடத்திற்கு 45 ரூபாய் செலுத்தி 2000 விளக்குகளை நிறுவ எரிவாயு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)


கொழும்பு மாநகர சபையின் முதலாவது தலைவர் சேர். சி.பி . எல்லார்ட்


மாநகர சபைச் சட்டத்தைக் கொண்டுவந்த ஆளனர் ஹேர்கியூலிஸ் ரொபின்சன்


அன்றைய கொழும்பு நகரசபைக் கட்டடம்



# சீர்மை பெறாத திட்டங்கள், சீரமைக்கப்படாத கால்வாய்களினால்

# சீறிப் பாய்ந்த ஆடி மழை வெள்ளம்



நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து மத்திய மலைநாட்டில் கடந்த 31ம் திகதி முதல் கனத்த மழை பெய்துவருகிறது. சீறிப் பாய்ந்த வெள்ளத்தால் பல உயிர்கள் காவு கொள் ளப்பட்டன.

இவ்வருடம் பெய்த ஆடி மழையின் கோரப் பிடியில் சிக்கிய நுவரெலியா மாவட்டத்தில் 04 பேர் பலியானதுடன் கண்டி மாவட்டத்தில் மூவர் காணாமல் போயுள்ளனர். நுவரெலியா மாவட் டத்திற்கே பாதிப்பு அதிகம் என்று கூற வேண்டும். இந்த இயற்கை அனர்த்தங்களினால் பல பாடசாலை கட்டடங்கள் சேதமடைந்து பாடசாலை கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள் ளன. பட்ட காலிலே படும் என்பார்களே, அதுதான் மலையகக் கல்விக்கும்!

கடந்த முதலாம் திகதி கினிகத்தேனை பொல் பிட்டிய ஹிம்டிகேகம பகுதியில் நான்கு வயது சிறுமியை பாலர் பாடசாலைக்கு கூட்டிச் சென்ற 60 வயது பாட்டி இடையில் குறுக்கிட்ட ஓடையை கடக்க முற்பட்டபோது வெள்ளத்தில் சிக்குண்டு இருவரும் அடித்துச் செல்லப்பட்டனர்.



இதே போன்று நோட்டன் விதுலிபுர டெப்ளோ ஜனபத பகுதியில் மண்சரிவில் வீடு ஒன்று முற்றாக மண்ணில் புதையுண்டதில் குடும்பஸ் தர் ஒருவர் பலியானார். இந்த அனர்த்தத்தின் போது குறித்த வீட்டின் குடும்பத் தலைவி மற்றும் மகள் வெளியில் சென்றிருந்த வேளையில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாகவும் அதனால் அவர்கள் இருவரும் உயிர்தப்பியதாகவும் தெரிய வருகிறது. இப்பகுதியிலிருந்து மண்சரிவு அபாயம் காரணமாக வெளியேறுமாறு அவர்க ளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசார ணையில் தெரிய வந்துள்ளது. எனினும் மண்ச ரிவு அபாயம் காணப்பட்டு வெளியேறுமாறு அறி விக்கப்படுகின்ற போதிலும் அவர்களுக்கு காணி வீடு போன்றவற்றை உடனடியாக பெற்றுக் கொள்ள முடிவதில்லை. சில வேளைகளில் காணிகள் பெற்றுக் கொடுத்தாலும் வீடுகளை மீண்டும் அமைத்துக் கொள்வதற்கான வசதிகள் எல்லோரிடமும் காணப் படுவதில்லை. கட்டடம் அமைப்பதற்கு முன் வரைபடங்கள், மற்றும் மண்சரிவு பற்றிய ஆய்வு அறிக்கைகள் என்பன காலதாமதத்தை ஏற்படுத் துகின்றன. கட்டட ஆராய்ச்சி நிலையத்தால் அனு மதிக்கப்பட்டவாறே பெரும்பாலும் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. அனுமதியின்றி நிர்மா ணிக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக உரிய சட் டநடவடிக்கைகளை பொலிஸாரும் உள்ளூராட்சி அதிகார சபைகளும் எடுக்காதிருப்பது இவ்வாறு அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன என்றால் அது மிகையாகாது.

இதேவேளை கடந்த 02ம் திகதி நாவலபிட்டிய கெட்டபுல அக்கரகந்த தோட்டத்தில் தேயிலை மலையில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பி கொண்டிருந்தபோது வீதியின் குறுக்கே அமைக் கப்பட்டிருந்த பாலத்தின் மேல் ஆற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்ததால் கயிறு ஒன்றின் உதவியுடன் பாலத்தைக் கடக்க மனித சங்கிலி அமைத்து சென்றபோது அதில் கைநழுவி மூன்று தொழிலாளர்கள் மிகவும் பரிதாபமான முறையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்கள்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் இப்பா லத்தில் பாதுகாப்பு கம்பிகள் எதுவும் கிடையாது. இந்த பாலத்தை அபிவிருத்தி செய்யும வைபோது நீரின் அளவை கருத்தில் கொண்டு பாலத்தின் உயரத்தை மதிப்பி ட்டிருக்க வேண்டும். மதகு போன்று அமைக்கப்பட்டமையும் இந்த அனர்த் தத்துக்குக் காரணம் எனப் பலரும் சுட்டிக்காட்டு கின்றனர்.

இதே நே ரம் கலபொட நீர்வீழ்ச்சியைப் பார் வையி டுவதற்காக தனது காதலனுடன் சென்ற போது காதலி வழுக்கி விழுந்து மரணமடைந் தார். இந்த சம்பவம் உயிரினை துச்சமாக மதித்து பாதுகாப்பற்ற முறையில் கவன மின்றி செயற்படுவதனையே எடுத்து காட்டுகின்றது.

எது எவ்வாறான போதிலும் சீரற்ற காலநிலை காரணமாக 7649 பேருக்கும் அதிக மானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் 25 வீடுகளுக் கும் மேல் சேதமடைந்துள்ளன. 643 குடும்பங்க ளுக்கு மேல் இடம்பெயர்ந்துள்ளன. 16 இற்கும் மேற்பட்ட இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ளது.

அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல பகுதிகள் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரண மாக பல சேதங்களை எதிர்கொண்டுள்ளது. வட் டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை ஹைட்ரி தோட்டத்தை ஊடறுத்து செல்லும் ஆறு பெருக்கெடுத்ததன் காரணமாக அத்தோட்டத்தில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் பாய்ந்து 25 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் எண்பது பேர் வரை பாதிக்கப்பட்டனர்.

இப்பகுதி இவ்வருடத்தில் மாத்திரம் இரண்டு தடைவைகள் பாதிப்புக்குள்ளாகியது. வீடுகளுக் கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன் உடைமைக ளும் சேதமடைந்துள்ளன.

ஹட்டன் பகுதியில் வடிகால்வாய்கள் முறையாக அமைக்கப்படாத நிலையே காணப்படு கிறது. ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் சிறிய மழையில் கூட மாணிக்கப்பிள்ளையார் ஆலயத் திற்கு முன்பு உள்ள பிரதான வீதி நீரில் மூழ்குவது இதனால்தான்.



இதனால் பொதுமக்கள் பல்வேறு பாதிப்புக் களை சந்தித்து வருகின்றனர். மழை நேரங்களில் இவ்வீதியில் நடந்து செல்லும் பலரின் பாதணி கள் நீரில் அடித்துச்செல்லப்படுகின்றன பெறும திமிக்க பொருட்கள் நீரில் வீழ்ந்து அடித்துச்செல் லப்பட்டுள்ளன. இதற்கு பல வருடங்களுக்கு முன் ஹட்டன் பிரதான பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 09 வயது மாணவி பாடசாலை விட்டு வீடு திரும்பி கொண்டிருந்தபோது வீதியில் நீர் நிரம்பி இருந்ததால் கால்வாயில் வீழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த சம்பவம் வாச கர்களுக்கு நினைவில் இருக்கலாம். ஒவ்வொரு வருடமும் மழைக் காலத்தில் இப்பகுதியில் வாகன நெரிசலும் ஏற்படுகின்றது.

ஹட்டன் டிக்கோயா நகர சபை இவை எதனை யும் கண்டு கொள்வதில்லை. அவ்வப்போது தற் காலிகமாக எதனையாவது செய்து கண்டும் காணாததுபோல் இருந்து விடுகிறது.

மக்கள் அடையும் பாதிப்புக்கள் பற்றி எவ்வித கவலையும் குறித்த சபைக்கு கிடையாதென்றே கூறவேண்டும். குறித்த நகரசபை பிரதேசத்தில் பல சட்டவிரோத கட்டடங்கள் காணப்படுகின்றன. இந்த கட்ட டங்களில் ஆபத்து குறித்து நகரசபை அதி காரிகளுக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தாலும் கூட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்ட தாகத் தெரியவில்லை.

கட்டடங்களுக்கான அனுமதியினை பெற் றுக்கொடுக்கும் போது அந்த சபையில் ஒரு தொழிநுட்பவியலாளர் மற்றும் கட்டட அமைப்புக்குழு இருந்தும் முறையாக எதற்கும் அனுமதி வழங்குவதாகத் தெரிய வில்லை. இதனால் அண்மைக்காலமாக பல கட்டடங்கள் தாழிறக்கத்திற்குள்ளாகி தற்போது அவற்றிலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



இம் மழையின் போது ஹட்டன் எம்,ஆர் நகர் பகுதியில் அமைந்துள்ள ஐந்து மாடி கட்டடம் ஒன்று தாழிறக்கத்திற்கு உள்ளாகி 04.08.2022 திகதி கட்டட ஆராச்சி நிலை யத்தின் அதிகாரிகளால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அக்கட்டத்திலிருந்து வெளி யேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நகரப்பகுதியில் உள்ள கால்வாய் கள் முறையாக திருத்தியமைக்காததன் கார ணமாகவும் சுத்தமாக வைக்கப்படாததாலும் மழை நேரங்களில் நகரத்தின் பல இடங்களில் நீர் வீதியில் பெருக்கெடுப்பது வழமை. இது கண்டு கொள்ளப்படவில்லை.



இது குறித்த அதிகாரிகளின் கவனத்திற்கு சமூக வலைத் தளங்களின் மூலமாகவும், ஊடகங்களின் மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பொது மக்கள் முறைப்பாடுகள் செய் துள்ள போதிலும் அவை செவிடன் காதில் ஊதிய சங்கு போல இருப்பதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்ற னர்.

இதே நேரம் வெள்ளம் கார ணமாக கொட்டகலை வட்ட வளை உள்ளிட்ட பிரதேசங்களில் பல வீடுகளுக்கு வெள்ள நீர் புகுந்து பொது மக்கள் மிக சிரமங் களுக்கு முகம் கொடுத்தனர். இதைத் தடுப்பதற் கான முறையான தீர்வு இதுவரை முன்வைக்கப் படவில்லை.

ஹட்டன் கொழும்பு, ஹட்டன் கண்டி, ஹட்டன் நுவரெலியா உள்ளிட்ட பல வீதிகள் பல தடவை கள் மண்சரிவால் பொதுப்போக்குவரத்து முற்றா கத் தடைப்பட்டுள்ளன.

கொழும்பு பதுளை பிரதான புகையிரத மார்க் கத்தில் சுமார் 15கும் மேற்பட்ட இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு பல நாட்கள் புகையிரத சேவைகள் தடைப்பட்டன. விவசாய காணிகள் நீரில் மூழ்கி பல விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்படுபவர்களுக்கு உடன டியாக நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று கூட முறையாக இல்லை. ஏனைய மாவட்டங்களில் தாழ் நிலப்பகுதிகள் நீரில் மூழ்கப்போகிறது என்று அறிந்த உடன் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன. எனினும் மலையகத்தின் பல பகு திகள் வருடாவருடம் பாதிக்கப்படுகின்ற போதிலும் அவ்வாறான ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்படு வதாகத் தெரியவில்லை.

இந்த இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப் படுவது நாட்டின் பொருளாதாரமே. எனவே இத்த கைய சேதங்கள் ஏற்படாதிருக்கும் வகையில் உட னடியாக தீர்வுகள் காண்பது மிகமுக்கியம்.

மேலும் இந்த இயற்கை அனர்த்தங்களில் பெரும்பாலானவை மக்களின் தூர நோக்கற்ற நட வடிக்கைகள் காரணமாகவும் இடம்பெறுகின்றன என்றால் அது மிகையாகாது. ஆற்றை மறித்து வீடுகளையும் கடடங்களையும் அமைப்பதுவும், குப்பைகளை கால்வாய்களிலும் ஆறுகளிலும் வீசுவதும், மரங்கள் பாதுகாப்பற்ற முறையில் தறிப்பதுவும், அபிவிருத்தி என்ற போர்வையில் பல்வேறு முறைகேடான விடயங்கள் மேற் கொள்ளப்படுவதும் திட்டமிடப்படாத அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமையும் பெரும் பாலான இயற்கை அனர்த்தங்களுக்கு காரண மாகின்றன.







எனவே நாட்டில் உள்ள சட்டத்திட்டங்க ளுக்கேற்ப உடன் நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். அவை முறையாக அமுல் படுத்தப்பட வேண்டும். தேவை கருதி பல புதிய சட்டங்களும் கொண்டு வருதல் வேண்டும். அரசியல் இலாப நோக்கத் திற்காக செயற்படுவதனை தவிர்த்து பிர தேசத்தின் அபிவிருத்தி, மக்கள் நலம் போன்றவற்றில் அதிக அக்கறை கொண் டவர்களாக ஆட்சியாளர்கள் என்றைக்கு மாறுகிறார்களோ அன்றுதான் இவ்வாறான பாதிப்புகளிலிருந்து நாம் விடுபட முடியுமே தவிர வேறு எந்த மாற்றீடும் இதற்கு தீர்வா காது.

**மலைவாஞ்ஞன் ...**

(படங்கள் : ஹட்டன் விசேட நிருபர்





கொழும்பு மத்தி பொதுச்சுகாதார அதிகாரி அலுவலகமும், லேக்ஹவுஸ் நிறுவன மும் இணைந்து, லேக் ஹவுஸ் ஊழியர்களுக்கு கொரோனா நோய்க்கெதி ரான பூஸ்டர் தடுப்பூசியை நேற்று முன்தினம் வழங்கியது.
லேக்ஹவுஸில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நிறுவன ஆசிரியபீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி மற்றும் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டபோது ....

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# அரசின் தற்போதைய அவசர முன்னுரிமை தேர்வு மக்களின் உணவுப் பாதுகாப்பே!

இலங்கையில் மில்லியன் கணக்கான மக்கள் உணவு எரிபொருள் எரிவாயு மற்றும் மருந்துப் பொருட்களுக்கு கடுமையான பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள நிலையில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடி ஒரு மனிதாபிமான அவசர நிலையாக (humanitarian emergency) மாறியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களான உலக உணவுத் திட்டம் (WFP) ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA) போன்ற நிறுவனங்களும் உலக செஞ்சிலுவைச் சங்கம் போன்ற மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களும் அபாயச் சங்கு ஊதியுள்ளதுடன் பாதிக்கப்பட்டுள்ளோருக்கு உதவும் பொருட்டு சர்வதேச நிதி உதவிகளையும் கோரியுள்ளன. ஆனால் உள்நாட்டில் இப்பிரச்சினையின் தீவிரத்தன்மை பற்றி யாரும் கண்டு கொண்டதாகவோ உரிய எதிர்வினையாற்றியதாகவோ தெரியவில்லை. மாறாக பொறுப்புக் கூறவேண்டியவர்கள் அரசியல் சித்துவிளையாட்டுகளிலேயே காலத்தைக் கடத்துவதாகத் தெரிகிறது.

கடந்த இரு வருடங்களாக கொவிட் 19 நோய் நிலை காரணமாக போதிய உணவைப் பெற்றுக் கொள்ள போராட்டம் நடத்திவந்த மக்கள் மீது பொருளாதார நெருக்கடியும் இடியாக வந்திறங்கியுள்ளது. குறிப்பாக ஒரே பெற்றோரைக் கொண்ட குடும்பங்கள் (*single parent households*) மீதும் நிலையான தொழில் புரியாதவர்கள் மீதும் ஏற்கெனவே தொழில்களை இழந்து தவிப்பவர்கள் மீதும் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் முறையற்ற விவசாயக் கொள்கை காரணமாக சடுதியாக வீழ்ச்சியடைந்த தானியங்கள், மரக்கறிகள், பழவகைகள் போன்ற விவசாய விளைபொருட்களின் உற்பத்திகள் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மேலும் வீழ்ச்சியடைந்தது.

குறிப்பாக மீன்பிடித்துறையிலும் நெல் விவசாயத்துறையிலும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவற்றைச் சந்தைகளை நோக்கி நகர்த்துவதற்கான போக்குவரத்துக்கு தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் மிகப்பெரிய சிரமம் எதிர்நோக்கப்பட்டமையால் அரிசி மரக்கறி உட்பட்ட உணவுப் பொருள்களின் விலைகள் துரிதமாக அதிகரித்துச் சென்றன. 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 இல் கடந்த ஏழு மாத காலப்பகுதியில் இலங்கையில் உணவுப்பொருள்களின் விலையதிகரிப்பைக் காட்டும் உணவுப் பணவீக்கத் தரவுகள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| மாதம் 2022 | உணவுப் பணவீக்கவீதம் |
|---|---|
| ஜனவரி | 25.0 |
| பெப்ரவரி | 25.7 |
| மார்ச் | 30.2 |
| ஏப்ரல் | 46.6 |
| மே | 57.4 |
| ஜூன் | 80.1 |
| ஜூலை | 90.9 |

இவ்வருடத்தின் ஆரம்பத்திலிருந்தே உணவுப்பொருள் விலைகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் சென்றுள்ள போதிலும் கடந்த இரண்டு மாதங்களில் உணவுப்பொருட்களின் விலைகள் கடுகதி வேகத்தில் உயர்ந்துள்ளமை தெளிவாகிறது.

இதனால் அடித்தட்டு மக்கள் உட்பட இலங்கை மக்களில் பெரும்பாலானோர் கடும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர். 24 இலட்சம் பேர் வறுமைக் கொட்டின் கீழ் விழுந்துள்ளனர். தமது வாழ்வாதாரத்தை இழந்து உணவுப்பொருட்களின் சுழல் விலையதிகரிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள பத்து குடும்பங்களில் மூன்று குடும்பங்கள் அதாவது சுமார் 6.3 மில்லியன் பேர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக உலக உணவுத்திட்டம் கூறுகிறது. இவர்களில் 65000 பேர் உணவுப் பற்றாக்குறையால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. சுமார் 6.7 மில்லியன் பேர் ஏற்றுக் கொள்ளத்தக்க நல்ல உணவைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். அத்துடன் இரண்டு இலட்சம் குடும்பங்கள் அவசர வாழ்வாதார சமாளிப்பு உபாயங்களான உணவு வேளைகளைத் தவிர்த்தல் உண்ணும் உணவின் அளவைக்குறைத்தல் உண்ண விரும்பத்தகாத உணவு வகைகளை உண்ணத் தலைப்படல் போன்றவற்றை கடைப்பிடிப்பதாகவும் கூறப்படுகிறது.



பாதிக்கப்பட்டுள்ள மக்களில் பெருந்தோட்டத்துறையில் உள்ளவர்களே நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களை விடவும் மிக மோசமான பாதிப்பகளை எதிர்கொண்டுள்ளனர். அங்கே வாழும் மக்களில் அரைப்பங்கிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போதியளவு உணவைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். நகர்ப்புறங்களில் வாழும் வறிய மக்கள் தம்மிடம் உள்ள தங்க நகைகள் சேமிப்புகளை விற்றுத் தீர்த்து பிச்சினையைச் சமாளிக்க முயலும் அதேவேளை தோட்டப்புற மக்கள் ஏற்கெனவே உணவுக்காகக் கடன் பெற்று வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்போதைய உணவுப் பொருள் விலையதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு என்பவற்றுக்கு தீர்வாக பொதுமக்கள் இப்போது கடைப்பிடிக்கும் உபாயங்கள் எதிர்காலத்தில் அவர்களின் வருமானம் உழைக்கும் ஆற்றலை மோசமாகப் பாதிக்கும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக கர்ப்பிணி மற்றும் பாலுளட்டும் தாய்மார்கள் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் போதிளவு நிறையுணவைப் பெற முடியாத நிலையில் அவர்களது போஷாக்கு நிலை பாதிக்கப்பட்டு எதிர்காலத்தில் ஒரு ஆரோக்கியமற்ற சந்ததி உருவாவதுடன் அவர்களது தொழில்படையின் தரமும் வீழ்ச்சியடைந்து வருமானம் உழைக்கும் ஆற்றலும் வீழ்ச்சியடையும். ஏற்கெனவே இலங்கைச் சிறார்களின் போஷாக்கு மட்டம் குறைவாக உள்ளதென்று சர்வதேச ஆய்வுகள் காட்டியுள்ள நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலை மிக ஆழமான பாதிப்புகளை உருவாக்கும்.

மற்றுமொரு சர்வதேச செய்தி நிறுவனமொன்றின் தகவலின்படி இலங்கையில் வாழம் குடும்பங்களில் எழுபது சதவீதமானவை உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. உலக சுகாதார தாபனம் பரிந்துரை செய்துள்ளதன்படி போஷாக்கு மிக்க உணவைப் பெற வேண்டுமாயின் ஒரு குடும்பம் மாதமொன்றுக்கு 93675 ரூபா தொடக்கம் 148868 ரூபா வரையிலான வருமானத்தை ஈட்ட வேண்டும். ஆனால் இலங்கையில் குடும்பம் ஒன்றின் சராசரி வருமானம் 76414 ரூபாவாகும். இலங்கையில் மிக வறிய 20 சதவீதமான குடும்பங்கள் 17572 ரூபாவை மட்டுமே மாதாந்த வருமானமாகப் பெறுவதாக உத்தியோக பூர்வ புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

ஆகவே இலங்கை மக்களில் மிகக் கணிசமான பேர் உணவுப்பாதுகாப்பில் சவால் மிக்க நிலையில் காணப்படுகின்றனர். எனவே இலங்கை அரசாங்கத்தின் அவசர முன்னுரிமைத் தெரிவாக மக்களின் உணவப் பாதுகாப்புை உறுதிப்படுத்தல் அமையவேண்டும். உடனடியாக அது செய்யப்படல் வேண்டும். இது தொடர்பில் உரிய தரப்பினர் கரிசனை கொள்வது முக்கியம். அரசின் தற்போதைய அவசர முன்னனுரிமை தேர்வு மக்களின் உணவிப் பாதுகாப்பே!

# கருங்கடல் உடன்பாடும் மேற்கின் தந்திரோபாயமும்!



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

சர்வதேச அரசியல் களத்தில் உக்ரைன் ரஷ்ய விவகாரம் நீட்சி பெற்றதொன்றாக விளங்குகின்றது. இரு நாடுகளுக்குமிடையிலான போர் ஐரோப்பிய பொருளாதாரத்தில் மட்டுமன்றி உலகளாவிய பொருளாதாரத்தையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளி வருகிறது. அதேநேரம் ரஷ்யாவின் பொருளாதார பலப்படுத்தலும் கீழைத்தேய நாடுகளின் பொருளாதார எழுச்சியும் பேசப்படும் விடயமாக காணப்படுகிறது. இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி பற்றிய குறியீடுகளும் ரஷ்ய பொருளாதாரத்தின் ஏற்றமும் சீனப் பொருளாதாரத்தின் மந்த நிலையும் அடையாளப்பட்டாலும் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளின் பொருளாதார மந்தநிலை அதிகரித்திருப்பதாக புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துகின்றன. இத்தகைய நெருக்கடிக்குள் உக்ரைனின் தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கான உக்ரைன் ரஷ்ய உடன்படிக்கை (22.07.2022) ஐ.நா சபை முன்னிலையில் துருக்கியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டது. இக்கட்டுரையும் கருங்கடல் துறைமுகம் சார்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கையின் பின்னாலுள்ள அரசியலையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக அமையவுள்ளது.

கருங்கடலை நோக்கிய ரஷ்யாவின் முற்றுகை உலகம் முழுவதும் உள்ள சந்தைகளின் உணவு விநியோகத்தை முற்றாகவே பாதித்திருந்தது. இதனால் பாரியளவிலான உக்ரைனின் தானிய உற்பத்தியை ஏற்றுமதி செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது. இதனை கருத்திற்கொண்டு உலகநாடுகள் குறிப்பாக மேற்குநாடுகள் ரஷ்யா மீது பாரிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது. அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் உக்ரைனுக்கு பல மில்லியன் கணக்கான ஆயுதங்களை வழங்குவதற்கு முன்வந்த சூழலில் ரஷ்ய கருங்கடல் முற்றுகையை பதில் நடவடிக்கையாக மேற்கொண்டிருந்தது. மிகப்பிந்திய தரவுகளின்படி உக்ரைனுக்கு 270மில்லியன் அமெரிக்க டொலரை பாதுகாப்பு செலவீனத்துக்காக அமெரிக்கா உதவியாக வழங்கி உள்ளது. இதில் நடுத்தர தூர தாக்குதலை மேற்கொள்ளும் ரொக்கெட் வகைகள், ஆளில்லாத விமானங்கள் விமான எதிர்ப்பு பீரங்கிகள், ஆட்லறி ரொக்கெட்டுகள் போன்றவை உள்ளடங்கலாக ஆயுத தளபாடங்களை வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது. ரஷ்யாவின் பீரங்கி படைகளை எதிர்கொள்ளும் விதத்தில் தகவல் தொடர்பு பரிமாற்றங்களையும் ஒருங்கிணைப்புக்கான தொழில்நுட்பங்களையும், கூடுதல் வெடிமருந்துகளையும், 36 000பீரங்கி வெடிபொருட்களையும் வழங்குமென வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு சபையின் ஒருங்கிணைப்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார். இவ்வறிவிப்பு வெளியாகிய சந்தர்ப்பத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தையே ரஷ்யா மீறியுள்ளதாக உக்ரைன் குற்றம்சாட்டியுள்ளது. எனவே, இங்கு இரு நாடுகளுக்குமிடையிலான போர் என்பது ஐரோப்பாவுக்கு மட்டுமன்றி உலகம் முழுவதற்குமான பொருளாதார நெருக்கடிக்கான பொறியை கட்டமைத்துள்ளது. இத்தகைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான உத்திகளை ரஷ்யாவும் உக்ரைனும் வகுத்து கொண்டாலும் அதன் நடைமுறையை சாத்தியப்படுத்துவதில் அதிக நெருக்கடியை கொண்டுள்ளது. அதனை விரிவாக நோக்குவது அவசியமாகும்.

முதலாவது, கருங்கடல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட குறுகிய காலத்தில் உக்ரைனுடைய எல்லைப்பகுதியை அண்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள விமானைப் படை தளம் மற்றும் புகையிரத பாதை கட்டமைப்பு, ஆயுதக்கிடங்கு மற்றும் உக்ரைனின் போர்க்கப்பலை இலக்கு வைத்து ரஷ்யா பாரிய ஏவுகணை தாக்குதலை நிகழ்த்தியதாக தெரிய வருகிறது. இத்தாக்குதல் குறித்து ரஷ்யா கருத்து தெரிவிக்கும் போது இராணுவ இலக்குகளை மாத்திரமே குறிவைத்து தாக்கியதாகவும், எந்த அடிப்படையிலும் தானிய ஏற்றுமதியை அது பாதிக்காதெனவும் அறிவித்துள்ளது. கருங்கடல் துறைமுகம் மீது ரஷ்யா நடத்திய தாக்குதல் ஒப்பந்தத்தை மீறும் செயலென உக்ரைன் தெரிவித்த போது தானிய ஏற்றுமதி நடவடிக்கையை துரிதப்படுத்த முன்வந்துள்ளது. உலகளாவிய ரீதியில் உக்ரைன் மேற்கு நாடுகளின் ஒத்துழைப்போடு ரஷ்யாவிற்கு எதிரான போரை மேற்கு நாடுகளுக்காக நிகழ்த்திவருவதை அவதானிக்க முடிகின்றது. அதனையே தானிய ஏற்றுமதியிலும் வெளிப்படுத்துவதாக தெரிகின்றது. பி.பி.சிஇன் செய்தி அறிக்கையின்படி ரஷ்ய ஒப்பந்தத்தை மீறியுள்ளது எனக்குறிப்பிட்டுள்ள மறுகணம் தானிய ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியுள்ளமை அவதானிக்க முடிகிறது.



இரண்டாவது, உக்ரைனின் தானிய ஏற்றுமதி மேற்கு நாடுகளின் அடிப்படைத்தேவைகளை பூர்த்தி செய்யும் என்ற அடிப்படையில் செயற்பட்டுள்ளதோடு ரஷ்யாவின் பொருட்கள் ஏற்றுமதிக்கான தடையை விதித்த லித்துவேனியா அதனை நீக்கியுள்ளதோடு ரஷ்யாவின் ரயில் இணைப்பை பயணிகள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கும் ரயில் பயணத்தையே அனுமதித்துள்ளது. கடந்த ஜூன் மாதம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து அத்தகைய தடைகளை பிறப்பித்த லித்துவேனியா உடனடியாக அமுலுக்குவரும் விதத்தில் அத்தகைய தடைகளை 25.07.2022அன்று நீக்கியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்ய வங்கிகளுக்கு விதித்த தடையினை நீக்கியுள்ளது என்பதை இதே பகுதியில் குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் ரஷ்யாவின் பொருளாதார நெருக்கடி ஐரோப்பாவை அதிக பாதிப்புக்கு உள்ளாக்கி உள்ளது என்பதையும் அதிலிருந்து விடுபடுவதற்கான உத்திகளை ஐரோப்பா கட்டமைத்து வருவதாகவும் ஐரோப்பாவிலிருந்து வெளிவரும் ஊடகங்களில் முதன்மையான கருத்துக்களாக காணப்படுகின்றது.

மூன்றாவது, கருங்கடல் விவகாரம் உக்ரைன்ஐரோப்பிய பொருளாதார கட்டுமானத்தில் ஆரோக்கியமாக காணப்படுகின்ற அதேவேளை ரயாவும் தனது போர்வலுவை கருங்கடலில் உறுதிப்படுத்திக்கொள்ளவும் அதனூடாக மேற்குஉக்ரைன் ஆயுத விநியோகத்தினை நெருக்கடி உள்ளாக்கவும் திட்டமிட்டுள்ளது. குறிப்பாக. தானிய ஏற்றுமதிக்கான கருங்கடல் துறைமுகங்களை திறந்துவிடும் போக்கானது ஆயுத பரிமாற்றத்துக்கான தடையினை அதிகப்படுத்தவதாகவே தெரிகின்றது. இதனூடாக உக்ரைனில் ஆயுத தளபாடங்களின் அளவீட்டையும் போர்க் கப்பல்களின் வலிமையையும் முடிவுக்கு கொண்டுவருகின்ற நோக்கில் ரஷ்யாவின் நடவடிக்கை அமைந்துள்ளது.

நான்காவது, கருங்கடல் உடன்பாடு வெளிப்படையாக ரஷ்யாவின் இராணுவ தளபாடங்களை பாதுகாப்பதற்கும் அதனை பலப்படுத்துவதற்கும் உத்தியாக அமைந்துள்ளது. குறிப்பாக ஈரானிடமிருந்து தருவிக்க முயலும் ஆளில்லாத விமானங்கள் ரஷ்யாவின் ஆயுத தளபாட விநியோகத்தையும் தொடர் ரோந்துகளையும் உக்ரைனின் ஆளில்லாத விமானங்களிலும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது. இதனை தடுக்கவும் இதற்கான பதிலீட்டை மேற்கொள்ளவும் அத்தகைய உடன்படிக்கை வலுவான பலத்தை ரஷ்யாவிற்கு ஏற்படுத்தி கொடுக்க முடியுமென்று போர் வல்லுனர்கள் கணிப்பிடுகின்றனர். இதன்மூலம் கருங்கடல் உடன்படிக்கை பாதுகாப்பு நலன்சார்ந்த உடன்படிக்கையாக காணப்படுகின்றது.

ஐந்தாவது, துருக்கியுடனான ரஷ்யாவின் நகர்வு கருங்கடல் உடன்படிக்கை சார்ந்த அம்சமாகவே மதிப்பீடு செய்யப்படுகின்றது. நேட்டோ அணியிலும் மேற்கு அணியிலும் அங்கத்துவம் பெற்ற துருக்கியுடன் ரஷ்யா உடன்படிக்கையை எட்டுவதென்பது பிராந்திய அரசியல் சமநிலையின் புதிய வடிவமாகவே காணப்படுகின்றது. அவ்வகை மாற்றமானது, உக்ரைன் ரஷய போரின் பங்குதாரராக துருக்கி மாற்றப்பட்டுள்ளதுடன், கருங்கடல் துருக்கியின் செல்வாக்குக்கு உட்பட்டது என்பதனாலும் ரஷ்யா துருக்கியுடன் நெருக்கமான உறவை அல்லது முரண்பாடற்ற உறவை கட்டமைப்பதில் கரிசனை கொண்டு செயற்படுகின்றது. எஸ்400இனை ரஷ்யாவிடமிருந்து தருவித்த துருக்கி கருங்கடல் உடன்பாட்டின் மூலம் இராணுவரீதியிலான மூலோபாய நோக்குநிலையில் நெருக்கமான நாடாக ரஷ்யாவை அடையாளம் கண்டுள்ளது. இதனால், மேற்கு நாடுகளின் அரசியல் இராணுவரீதியிலான பிரிப்புகளுக்குள் உட்படாத உறவுநிலையை துருக்கி ரஷ்யாவோடு கொள்ள முயலுகிறது.

ஆறாவது, கருங்கடல் உடன்படிக்கை ரஷ்யா, துருக்கி, உக்ரைனுடன் இணைந்து செயற்படுவதென்பதுவும் ஈரானை பக்கபலமாக கொண்டுள்ளமையும் இஸ்ரேலிய அரசியல் இருப்பை அதிகம் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. சிரிய விவகாரத்தில் முரண்பட்ட ஈரான் துருக்கியை ஒன்றிணைப்பதிலும் துருக்கி சிரிய எல்லையில் குர்திஷ்தானியர்களுக்கு பாதுகாப்பு வலையமொன்றை கட்டமைப்பதிலும் உரையாடல் முன்னகர்த்தப்பட்டுள்ளது. எனவேதான் இஸ்ரேலின் இருப்பும் சிரியாவின் எல்லைப்பகுதியும் அரசியல் ரீதியான நெருக்கடியை இஸ்ரேலுக்கு ஏற்படுத்த விளைந்துள்ளதென போரியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய அரசியல் நெருக்கடி இராணுவ நெருக்கடியாக பரிணாமம் பெறுகின்ற போது பிராந்திய அரசியலுக்கான சமநிலை புதிய தோற்றப்பாட்டை எட்டுமென்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

எனவே, கருங்கடல் சார்ந்து ரஷ்யா, துருக்கி,உக்ரைன் மற்றும் ஐ.நா சபை மேற்கொண்டஉடன்பாடென்பது ரஷ்யாவின்நலன்களையும் மேற்கு நாடுகளின் நலன்களையும் அதிகம் முதன்மைப்படுத்தி கட்டமைக்கப்பட்டுள்ளது. இதில் உக்ரைன் மேற்கு நாடுகளுக்கு தானியத்தை ஏற்றுமதி செய்வதனூடாக ஆயுத தளபாடங்களை இறக்குமதி செய்யவும் ரஷ்யாவுடனான போரை நீடிக்கவும் வாய்ப்பானதாகவே மட்டுமே அமையும். ஐரோப்பிய பொருளாதாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு இவ்உடன்பாடு இடைக்கால தீர்வை ஏற்படுத்தும். மறுவலமாக மேற்கு நாடுகளின் ஆயுத குவிப்பும் ரஷ்யாவின் போர்நகர்வும் இவ்வுடன்படிக்கைக்கூடாக எட்டப்படும் நிலை தவிர்க்க முடியாததாகும். ஐ.நா சபையின் தற்காலிக ஏற்பாடுகளை தவிர போரை முடிவுக்கு கொண்டுவரும் நிரந்தர ஏற்பாடுகளே இன்றைய அவசியப்பாடாக உள்ளது.

## வாழ்வாதாரமா சேதாரமா 234



தமிழ்க் கவி பேசுகின்றார்

# நேர்மையும் திறமையும் இருந்தால் எந்தத் தொழிலும் தவறானதல்ல

வாழ்க்கையில் பிரச்சினைகளே இல்லாத காலம் எதுவுமில்லை. அதுவும் இலங்கையில் பிறந்து வாழும் மக்களுக்கு சொல்லவே வேண்டாம். பிரச்சினைகள் எந்தளவுக்கு வருகிறதோ அதே அளவுக்கு அதை எதிர் கொண்டு வீரம் பேசுவோரும் நிறையவே உள்ளனர். இதுகாறும் நாம் பஞ்சம் பசி. புற்றாக்குறை என்பவை பற்றியே பேசிப் பேசி களைத்துப் போனோம். இன்று கெட்டித்தனங்களைப்பற்றி பார்ப்போமா?

உடலால் வருந்தி உழைத்து வாழ்க்கையை நடத்துவோர் உண்டு. தாம் கற்ற கல்வியால் மதிப்புக்கேற்ற தொழில் பெற்று தாம் அடைந்த உத்தியோகத்தின் மூலம் வாழ்க்கையை நடத்துவோரும் உண்டு. தம்மிடமிருக்கும் பணத்தை முதலீடாக்கிஅதன்மூலம்வர்த்தகமோவட்டியோ பெற்று வாழ்வாரும் உண்டு. வாயை வைத்துப் பிழைக்கும் வல்லமை உடையோரும் உண்டு. எமது சந்தையில் காலையில் பார்க்கலாம் இவர்கள் காலையிலேயே குளித்து முழுகி விபூதிபூசி முடிந்தால் ஒரு பொட்டும் வைத்துக்

இவர்களைப் போலவே இன்னுமொருவகை தரகர்கள் உள்ளனர். இவர்களுக்கு மிகவும் கூர்மையான கண்கள். அவை எதிரில் நடமாடித் திரிபவர்களை ஆழ்மனது வரை ஊடுருவ வல்லவை. மற்றவர்களுடைய தேவைகளை ஆசைகளை மற்றவர்களிடம் பேசிப்பேசியே துப்பறிந்து கண்டுபிடித்து விடுவார்கள். அதை நிறைவேற்ற இவர்கள் அலைவார்கள். திருமணம், வீடு, வியாபார முயற்சி கடன் தேவைகள் என எதுவும் இவர்கள் பார்வையில் தப்பாது குழைந்து பேச வேண்டியதை குழைந்து பேசி இறுக்கமான இடங்களில் இறுக்கமாக பேசி காரியத்தை கச்சிதமாக முடிப்பார்கள். குழைபவர்கள், சில நேரம் ஆபத்தில் மாட்டிக் கொண்டாலும் சமாளித்துக் கொள்ளும் வல்லமையும் கொண்டவர்கள். திருமண தரகர்கள் கள் பெரும்பாலும் கவலைக்குரியவர்கள்தான் அவர்களது முயற்சி பலனளித்து திருமணம் நடக்க பல மாதங்கள் ஆகலாம். அதுவரை அவர் காத்திருந்து அப்பப்ப கிடைத்ததை பெற்றாலும், முழு தரகுப் பணமும் கல்யாணத்தின் பின்னர்தான் கிடைக்கும்.

கல்யாணத்தின் பின்னர் அநேகமானவர்கள் அவர்களை ஏமாற்றி விடுவதை மிகவும் மனம் நொந்து பேசியிருக்கிறார்கள். ஒருதரகர் சொன்னார், கல்யாணம் என்றால் இரு வீட்டாரிடமும் பேசிப்பேசி அவர்களின் தேவை விருப்பம் எ ல்லாவற்றையும் ஒப்பேற்றி இறுதிக்கட்டத்தில் ஒரு சின்ன விடயத்தில் கல்யாணம் தடையாகிவிடும். எமது ஒருமாத முயற்சியும் வீணாகிவிடும். உதாரணமாக ஒரு

தொடர்பு வைத்திருக்க முடியாது நிறுவனம் விரும்பினால் ஒழிய தனக்கான இணையை தேடிக் கொள்ளும்படி தன் இணையை தொடர்புகொள்ள அனுமதி இல்லை. அதை நிறுவனம்தான் செய்யும் அதுவரை நிறுவனத்துககு மாதாந்தம் கட்டணம் செலுத்த வேண்டும்.

கணனிகள் ஏழைகளை சுரண்டி கொழுக்கின்றன. இன்னமும் இலங்கையில் மட்டுமல்ல மூன்றாம் உலக நாடுகளில் கணனியின் சேவை பரவலாகவில்லை. அதை தொலைபேசிகளுக்குள் வைத்திருந்தாலும் நம்மவர்கள் யூரியூப் சினிமா என பார்க்க பழகியிருப்பார்கள் சிறுவர்கள்முதல் பெரியோர் வரை விளையாட்டுகள் விளையாடப் பழகியிருப்பார்கள்.

அதைவிட இப்படி அரச கட்டளைகள் வரும்போது அவர்கள் ஏதாவது பதிப்பகங்கள் கணனி மையங்களை நாடித்தான் செல்கிறார்கள். இன்று 'கியூ ஆர் கோட்' ஒன்றை பிரதி செய்ய மக்கள் அலைமோதிக் கொண்டிருப்பது இந்த நிலையங்களைத்தான். வாடிக்கையாளர்களை மகிழ்ந்து வரவேற்கும் இந்த நிறுவன ஊழியர்கள் கடுப்புடன் வேலை செய்வதை காணக்கூடியதாக உள்ளது. இதைவிட வீட்டுக்கு வீடு கணனி வைத்திருக்கும் பொருளாதாரம் இன்னும் எமது கிராமங்களில் இல்லை ஆனால் என்னதான் கஷ்டமான வாழ்க்கையை நடாத்தினாலும், வீட்டுக்கு வீடு ஒன்றிரண்டு உந்துருளிகளை வைத்திருக்கிறார்கள். அது அவசியமானதும்கூட. குறித்த நேரத்தில் கூட பேருந்து சேவை இல்லாத கிராமத்து மக்களுக்கு அத்தியாவசியப் பயணங்களுக்கு அது தேவையும்கூட.



கொண்டு தொழிலுக்கு வருகிறார்கள. இவர்களுக்கு முதலாளி என்று குறிப்பிட்டு சொல்ல யாரும் இல்லை என்றாலும் முதலாளிகள் இருப்பார்கள்.

சந்தைக்கு உற்பத்தியாளர்கள் பொருட்களை கொண்டு வரும்போது ஓடோடிச் சென்று அதை கைகளில் தாங்கி இறக்கி 'ஆ... வெண்டிக்கா வெண்டிக்கா ஆருக்கு ஓடர்' என்று கூச்சலிட்டு முதலாளிகளை கவர்ந்திழுத்து பேரம் பேசும் வரை கூட நின்று பேரம் முடிந்ததும் உற்பத்தியாளரிடமும் வாங்கிய வியாபாரியிடமும் சாமர்த்தியமாகப் பேசி சிறு தொகை வசூலிப்பார். அதே வேகத்துடன் ஓடி அடுத்து வரும் சுமைகளை பற்றி உதவுபவர் போல தன் சாமர்த்தியமான பேச்சால் விற்பனைக்கு உதவி தனக்கும் ஒரு சிறு தொகை பெற்று விடுவார். அப்படியே பஸ்தரிப்பு நிலையத்துக்கு போவோமா?

'ஆ வாங்க வாங்க யாழ்ப்பாணம் யாழ்ப்பாணம்'

'இந்தா வெளிக்கிடுது மன்னார் மன்னார்' இப்படியே ஒரு மணித்தியாலமாக கத்தி அது போவதற்காக நகருகையில் தனது கமிஷனை பெற்று விடுவார் அவர் அப்படியே மரக்கறி சந்தையடிக்கு போவோமா?

' சின்னவெங்காயம் கிலோ நூறு ரூவா கத்தரிக்கா காக்கிலோ அம்பது, போனா கிடையாது பொழுதுபட்டா கிட்டாது வாங்க வாங்க' என்று ஒரிருவர் கத்திக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு கத்துவதற்குத்தான் சம்பளம்..

திருமணம் மாப்பிள்ளை மச்சம் சாப்பிடுவார் என்பதால் குழம்பிவிட்டது. வாயை வைத்து பிழைப்பு நடத்துபவர்கள் என்று மிக இலகுவாக சொல்லி விடலாம். ஆனால் அதற்கும் திறமை நேர்மை எல்லாம் உண்டு. கூடவே கவுரமற்ற நிலையை எண்ணி மன உளைச்சல் அலைச்சல். விரயம், எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டும்.

இதேயளவு எல்லாத் தரகுத் தொழிலிலும் நாம் எதிர்பார்ப்பதுபோல லாபம் என்பதை விட அலைச்சலே மீதமாக இருக்கிறது. வாழ்க்கையை நடத்த தனது குடும்பத்தை காப்பாற்ற எத்தனைவிதமாக மக்கள் செயற்படுகிறார்கள். என்பதை பாருங்கள். இதற்காக தகவல்களை திரட்டி வைத்திருக்கும் ஒருவரை நாம் தேடியே ஆக வேண்டும்

ஒரு திருமணத்தை பெற்றோர் தனியே செய்துவிட முடியாது அதே போல வர்த்தக முயற்சிகளும் தனித்து செய்வது கடினம் தகவல்களைத் திரட்டிவைத்திருப்பது ஒருவர் கட்டாய தேவையாகும். இப்படி தனிநபர்களின் உழைப்பை வாழ்வாதாரத்தை மட்டுமல்ல, இந்தத் திறமைகளையும் முதலாளித்துவம் விழுங்கி வருகிறது. ஒவ்வொரு ஊடகங்களுக்குள்ளும் திருமண சேவைகள் நிரம்பியிருக்கின்றது அது மட்டுமல்ல அவர்களது சேவை தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் முதலாளிகளுக்கு பெரும் வருமானத்தை ஈட்டித் தருகிறது. விளம்பர சேவையில் தன்னை இணைத்துக் கொள்ளும் ஒருவர் தனிப்பட

இப்போது இந்த கணனி மையங்களும் ஒரு தரகு வேலையைத்தான் செய்து கொண்டிருக்கின்றன. எப்படி? எமது மண்ணில் உப தரகுத் தொழில்களை அரசாங்கமே வடிவமைத்துக் கொடுக்கிறது என்பதை நாம் தவறென்று சொல்ல முடியுமா? திறமை சிந்திக்கும் ஆற்றல் எந்த இடத்திலும் தொழிலை கண்டு பிடித்து விடுகிறது.

போர் நடந்த காலத்தில் வெள்ளப் பெருக்கு. வழிகளில் நீண்டகாலம் திருத்தப்படாத பாலங்கள் தெருக்களில் பெருமளவு வெள்ளம் ஊடறுத்துப் பாயும் அங்கே திடீரென சில இளைஞர்கள் கூடுவார்கள். பயணிகளின் உந்துருளிகளை நனையாமல் காவுதடி போட்டு நால்வராக சுமந்து மறுகரையில் கொடுப்பார்கள் பயணியும் அதை பிடித்தபடியே வெள்ளத்தை கடப்பார். ஐம்பது ரூபா கூலி. அந்த இளைஞர்களுக்கு வாழ்வாதாரம். பயணிகளுக்கு ஒரு சிறு வசதி. வன்னியின் அனைத்து வீதிகளிலும் இப்படி தொழிலாளர்கள் கூடித் வாகனங்களை தூக்கி கொடுப்பார்கள். பெரிய வாகனமாயின் இரணைமடு வான் பாயும் போதும் கூட அவற்றை தடம்மாறாமல் இருபுறமும் பிடித்து நடந்து கரையேற்றுவார்கள். இதுதான் வாய்ப்புகள். எந்த நிலையிலும் நாம் வாழ முடிந்த கதை இதுதான் தொழில்கள் எதுவும் தப்பில்லை அதில் நேர்மையும் திறமையும் இருந்தால் இது நம்ம எரிபொருள் வியாபாரிகளுக்கும் சேர்த்துத்தான்.













மயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய 35ஆவது ஆடிப்பூர மகோற்சவ பால்குட பவனியின்போது பிடிக்கப்பட்ட படங்கள்

# "உணர்வுகளின் சங்கமம்" கவிதை நூல் வெளியீட்டு விழா











மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீட்டில் இளையதம்பி அரியநாயகத்தின் "உணர்வுகளின் சங்கமம்" கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) மட்டக்களப்பு பிள்ளையாரடியில் அமைந்துள்ள மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க கட்டிடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளதுடன் நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி மு.முருகமூர்த்தியும் கௌரவ அதிதியாக கிழக்கு பல்கலைக் கழக மருத்துவபீட சிரேஷ்ட




விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க.அருளானந்தமும் கலந்துகொண்டனர்.

அதிதிகள் வரவேற்பினைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் மற்றும் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில் தமிழ்மொழி வாழ்த்து, வரவேற்புரை, வரவேற்பு நடனம் ஆகியவை இடம்பெற்றதைத் தொடர்ந்து தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தியின் தலைமையுரை இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டுரை யும் நூல் வெளியீடும் சிறப்பாக இடம்பெற்றன. தொடர்ந்து, நூல் நயவுரை, அதிதிகள் உரை, படைப்பாளி கௌரவிப்பு மற்றும் ஏற்புரை என்பன இடபெற்றன.

குறித்த நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன் பெற்றுக்கொண்டதுடன், ஏனைய அதிதிகளுக்கும் நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வ.சக்திவேல் ...

# CBSE உயர்தரம், CBSE சாதாரண தரம் பரீட்சைகளில் குவைத் வாழ் இலங்கை மாணவர்கள் சாதனைகள்

இந்திய அரசாங்கத்தின் Central Board of Secondary Education (CBSE) மூலம் 2022 ஆம் ஆண்டுக்கான பன்னிரெண்டாம் மற்றும் பத்தாம் வகுப்புக்களுக்கான பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன.



குவைத்தில் கல்வி பயின்ற மாணவி ஹாஜரா முஹம்மத் ஆஷிக் உயர்தரம் விஞ்ஞான பிரிவில் 95.6% புள்ளிகளைப் பெற்று மருத்துவக் கல்லூரிக்கு தகைமை பெறுகிறார். மாணவி தீபா அல் பழ்லி விஞ்ஞான பிரிவில் 68.2% புள்ளிகளும், மாணவி ஆயிஷா முஹம்மத் ஷீராஸ் உயர்தரம் மனிதநேயம் பிரிவில் 92.2% புள்ளிகளையும் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறுகிறார்கள்.

சாதாரண தரப் பரீட்சையில் மாணவன் உமர் ஷிராஸ் 85% புள்ளிகளையும், மாணவன் மனாஸ் வஜுஹுதீன் 84% புள்ளிகளையும் பெற்று உயர்தரம் விஞ்ஞான பிரிவுக்கு தகுதி பெறுகிறார்கள்.

இம்முறை மொத்தம் 14,44,341 மாணவர்கள் CBSE 12th( உயர்தரம்) பரீட்சைக்கு பதிவு செய்திருந்தனர். இதில் 14,35,366 மாணவர்கள் பரீட்சை எழுதி 13 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அதே போல் மொத்தம் 21,09,208 மாணவர்கள் CBSE 10th (சாதாரண தரம்) பதிவு செய்திருந்தனர். அவர்களில் 20,93,978 பேர் பரீட்சை எழுதி 19,76,668 மாணவர்கள் சித்தி எய்துள்ளனர்.

மொத்தம் 44,000 வெளிநாட்டு மாணவர்கள் இம்முறை CBSE பரீட்சைகளுக்கு பதிவாகியுள்ளனர். இதில் 12 ஆம் வகுப்புக்கு 18,834 மாணவர்களும், 10 ஆம் வகுப்பிற்கு 25,095 மாணவர்களும் அடங்குவர்.

இந்த மாணவச் செல்வங்கள் அனைவரையும் குவைத் வாழ் இலங்கை சமூகம் வாழ்த்தி மகிழ்வதுடன் அவர்களது கல்விப் பயணம் தொடரவும் வளமான எதிர்காலத்துக்காகவும் பிரார்த்திக்கிறது.

ஹரீஸ் ஸாலிஹ் ...







நுவரெலியா பரிசுத்த திரித்துவ தேவாலயத்தின் 170வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நன்றி தெரிவிக்கும் ஆராதனை கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரியின் தலைமை ஆசிரியர் கிறிஸ்தோபர் போல்ராஜ் மற்றும் அதிதிகளாக தெரிவு செய்யப்பட்ட பேராயர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இவ் வைபவத்தின் போது திருச்சபையின் இரு மூத்த உறுப்பினர்களால் ஆண்டுவிழா கேக் வெட்டப்பட்டதுடன், பழமரச் செடிகளை நடும் நிகழ்வுடன் அன்றைய நிகழ்வுகள் நிறைவுற்றன. தற்பொழுது அருட் தந்தையாக சாள்ஸ் டேவிட் சேவையாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




## தொலைந்து போன தோழன்...

நுஸ்ரத் மஹ்ரூப்ஃ
மாதம்பை

தொடுவான
தொலைதூரமாய்
தொலைந்துபோன
தோழனை தேடிடனும்...

தொலைந்து போன
தோழனோடு
தொலைதூரம்
சென்று வரணும்..

தொல்லை என நினைத்து
தொலைந்து போனானா...
தோள் கொடுக்க வேண்டிடுவேன்னு
தொலை தூரம் போனானா..

தொலைந்துவிட்ட
இளமைகளுக்குள்
தோழனின்
விம்பங்கள் தானே தெரிகின்றன..

தோணும் சில நேரம்
தோழனை கண்டு வர..
தோணவில்லையே
தோழனுக்கு என்னைக் கண்டு வர..

தோள் சுமக்க
தோழனே நானிருக்கேன் என்றாய்..
தொலைதூரம் சென்றிடுவேன் என
சொல்லிவிட ஏன் மறந்தாய்..

தொழுநோயே தொற்றிடினும்
தோழனாய் நானிருப்பேன்..
சொன்னது நீ தானே...
சொல்.. உன் சொல் எங்கே போனது....

தொண்டைக் குழி நீர் காயும்வரை
தொண தொண வென
தோள் மேல் கரம்போட்டு
தொய்வின்றி கதைத்தோமே..

தொய்வில்லா
தோழமையை நம்பி
தோல்வியுற்றுவிட்டேனா..

தொல்லைகள் தந்திடமாட்டேன்
தோழனே....
தொடர்பு கொள்ள
தோணினால்
தொலைபேசியல்
தொடர்புகொள்....

## அப்படியே உன் சாயல்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

கண் சிமிட்டும்
இரவின் விண்மீன்கள்
இரவின்
சிணுங்கல் சொட்டுக்களாய்...

முழு நிலவில்
படரும் மேகம்
முகத்தின் தாவணித்திரையாய்...

மேகத்துணுக்கெல்லாம்
ஒன்றாகிய மழை நாட்கள்
அழுகையின் ஆர்ப்பாட்டமாய்...

மொட்டொன்று வெடித்து
மணம் பரப்புகையில்
குளித்த உன் கூந்தல்
வாசனையாய்....

மெத்தென்று ஒரு பூ
தரை தொட
நிலத்தோடு நட்புக்கொண்ட
நின்பாதங்களாய்...

அசைகின்ற ரோஜாக்களில்
அமருகின்ற பட்டாம்பூச்சிகள்
இருவிழிச்சூரியன்களை
உலகுக்கு அறிமுகப்படுத்திய இமைகளாய்...

கொடி மின்னலும்
மின்மினி ஒளியும்
மிளிர்ந்திடும் புன்சிரிப்பாய்...


கன்னலும் தோற்கும்
திராட்சை இரசம்
இதழ்களில் ஒழுகும் சொற்களாய்...

அந்தி வானம்
சிவந்திடும் பொழுதுகள்
குழந்தை முத்தத்தில்
நாணும் கன்னங்களாய்...

இரவின் அமைதியில்
தூரத்தில் ஒலிக்கும்
இன்னிசை நாதமாய்
பாதக்கொலுசொலியும்...

அப்படியே உன் சாயல்....
இயற்கையில் வெளிப்படும்
அனைத்திலும்

## தேவதையின் கண்கள்



சோதிகா.ரெ (ஆகிஷா)
கொக்குவில்

அவள் பார்வையென்பது
உண்மையில் ஓர் பேரண்டத்தின் மையப்புள்ளி

ஓர் கண்களுக்குள் தொலைய முடியுமெனவும்
அதற்காக முழு வாழ்வையும் ஒப்புக் கொடுக்க இயலுமென்றும்
அவள் கண்களை இரண்டொரு நிமிடம் பார்த்த
மட்டில்தான் புரிந்து கொண்டேன்

அந்த ஆதாமின் முன் ஆப்பிளுக்கு பதிலாக
அவள் பார்வைகள் பட்டிருந்தால்
அவன் எப்போதோ பைத்தியமாகியிருப்பான்
எனைப்போல!!

என் பாரச்சுமைகளை தூக்கிப்போட்டு
அவள் விழிகளுக்குள் சரணடைந்து விடுகிறேன்

உயிரைக் குடிக்கும் இரட்டை கருவெளிச்சம்
எனை அழைக்கிறது எந்தத் தயக்கமுமின்றி
அதன் வழி பயணிக்கிறேன்
அதுவொரு பித்தேறிய நிலை
அதுவொரு அபூர்வம்

அதையுணர நீங்கள்
என் தேவதையை முதலில் காண வேண்டும்
அவளுக்குள் வாழ வேண்டும்...

## வீழ்ந்த மனசு

கலாபூஷணம்
அக்கரைப்பற்று நஜ்மு

அந்த,
ஒற்றையடிப்பாதையில்
நடந்து வந்தது ஒரு நிலா
அவள் இடுப்பிலிருந்து
மூன்றாவதாய் ஒரு குடம்!
நிமிர்ந்து சிரித்தது நிலா,
புன்னகையை பூக்களாக்கினேன்
அவள் நடந்தாள்
அப்பூக்கள் மீது!

மனசு தளம்பவில்லை
தடுமாறியதில் வீழ்ந்தது
அவளது காலடியில்!
ஒரு கணம் தாமதித்தாள்
பார்வைகள் படர்ந்தன!
விழுந்த என் மனசு,
விதையாக முளைக்குமா?
இல்லை–
விறகாகி எரியுமா?
அவள் இதயத்தில்!
அந்த ஒற்றையடிப்பாதையில்
பூக்கள் புன்னகைத்தன


## திருமணம்

பசறையூர்
மல்லிகா பத்மநாதன்



இருமனம் இரண்டறக் கலந்திடும் வேளை
திருமணம் என்றொரு நிகழ்வும் நடக்கும்
ஒருமனதாகியே இருவரும் வாழ
விருப்புடன் அனைவரின் வாழ்த்தும் ஒலிக்கும்
அருமை நிறைந்திடும் இல்லறம் தன்னில்
பெருமை செழித்திட பெண்ணவள் புரியும்
தருணம் இதுவே சகலதும் சிறக்கும்
திருமண பந்தத்தால் உறவுகள் களிக்கும்

## ஈசா



ரதிதேவி, மானிப்பாய்

ஈயில் கூட இறைவன் உள்ளான்
நோயில் நொடியில் கூட உள்ளான்
தேடித் திரிபவர் விழியில் உள்ளான்
தெய்வம் பலகோடி வடிவில் உள்ளான்

நினைந்துருகுவர் நினைவில் உள்ளான்
அணைந்துருகும் மெழுகின்
அருகில் உள்ளான்
படை திரண்டு வரும் பொழுதில்
பார்த்தனாய் உள்ளான்
விடை கிடைத்துவர விளக்கும்
குருதேவனாய் உள்ளான்

## இப்படியோர் இலங்கை வேண்டும்

நஸீரா எஸ் ஆப்தீன்
ஏறாவூர்

கொட்டிடுவோம் கை
கோர்த்திடுவோம் இங்கு
ஒற்றுமையே நிலைத்ததென்று
ஒன்றாகி நா மிணைவோம்
உலகினுக்கோர் வழி காட்டியென்று

பல இனமும் பல மதமும்
சேர்ந்து வாழும் இலங்கை நாடு
பாங்குடனே வாழும் வகை
பறை சாற்றி வழி சமைப்போம்

சாதி மத பேதமெலாம்
தகர்த் தெறிந்து வாழ்ந்திடுவோம்
நீதியுடை நாடெனவே
நம் நாட்டை நிலைக்கச் செய்வோம்

ஆயுதங்கள் களைந்திடுவோம்
அன்பாலே இணைந்திடுவோம்
ஏழை பணக்கார னெனும்
ஏற்றத் தாழ்வு நீக்கிடுவோம்

மக்கள் குறை தீர்க்கு மொரு
மக்களாட்சி நிலைக்க வேண்டும்
நாட்டு மக்கள் நலன் பெறவே
திட்டங்களை வகுக்க வேண்டும்

நீதி நிறை ஆட்சியொன்று
நிலை பேறாய் அமைய வேண்டும்
சாதி மத பேதமின்றி
சமவுரிமை கிடைக்க வேண்டும்
அப்படியோர் இலங்கை வேண்டும்

ஆட்சியாளர் மக்களுக்காய்
அரியபணி புரிய வேண்டும்
மாட்சிமை மிக்கதொரு
நாட்டினை அமைக்க வேண்டும்

சிறுபான்மை பெரும்பான்மை
பேதமெலாம் நீங்க வேண்டும்
சீர்திருத்த நாடொன்றாய்
நம்நாடு சிறக்க வேண்டும்

எல்லா மக்களுமே
இன்பமாய் இணைய வேண்டும்
அனைத்து மக்கள் தேவைகளும்
அரசு பொறுப் பேற்க வேண்டும்
பணம் சுருட்டும் மாந்தர் கூட்டம்
மனம் திருந்தி வாழ வேண்டும்

தேவைக்கு மேல் செல்வமெலாம்
அரசுடைமை ஆக வேண்டும்
ஏழைகளின் வாழ்வுயர
நேர்மையாய்ப் பகிர்ந்தளிக்க வேண்டும்

உழைப்பாளி வியர்வைக்கு
உரிய பலன் கிடைக்க வேண்டும்
முதியோரும் வளம் பெறவே
முன்வந்து உதவ வேண்டும்

மாடி மனை அமைப்பவரும்
கோடி செல்வம் குவிப்பவரும்
வாழ்ந்து மடிவதுமோ
மண்ணினிலே சில காலம்

தாம் வாழும் தேவைகளைத்
தன்னிறைவாய்ப் பெற்றதுமே
எஞ்சியுள்ள செல்வமெலாம்
ஏழைக்காய் வழங்க வேண்டும்
அப்படியோர் இலங்கை வேண்டும்

அனைவருமே ஒன்றாகி
இலங்கையராய் இணைய வேண்டும்
உலகினிற் கோர் முன்மாதிரியாய்
இலங்கைத் திருநாடு மிளிர வேண்டும்

## ஒரு தடவை பேசு



தரு. தங்கம்,
ரக்குவானை

ஊதி ஒதுக்கிவிட்டாய்
பாதியை பதுக்கி
வைத்திருக்கிறேன்
இதயத்தில்....
பசியோடு தொடர்ந்தால்
நீ பிசி என்கிறாய்...
உன் மௌனத்தால் நான்
ஊமையாகிவிட்டேன்...
ஒரு தடவை பேசு...
ஒதுக்கிவிடாதே என்
அன்பே...

## சாப சரித்திரங்கள்

லைலா அக்ஷியா

ஆம் அறிவேன்!
அந்த சாம்ராஜ்யத்தையே
நசுக்கிக் குடிக்கும்
அணங்கவள்;
யட்சிணி யாக்கை;
விசுவத்தை பாறையாக்கும்
விஷங்கொண்ட ஆலோகம்;
துருவமே பொசுங்கி விழும்
ஆக்ரோஷ அருவம்;
வெறியில்
வெருகொண்ட ஆணவம்;
யாருக்குமடங்கா
நர்த்தனத்திலாடும்
கருநாக உருமாற்றம்...

இத்தனை மூர்க்கத்திலும்
இடைவிடாது வாழ்ந்து
இன்று
பார்சியஸ் ஆவேசத்தால்
துண்டாடப்பட்ட
அவள் தலை...
வெண்படலம் மறைந்துபோன
அந்த மதாவேச
விழிப் படலத்தில்
வடிந்து கொண்டிருந்த
கருநீலக் குருதியில்
ஆயிரத்தில் ஒரு துளியை
கூர்ந்து நோக்குகிறேன்...

அவள்
ஒருபோது
அதீனாவின் அன்பில்
அழகாக்கப்பட்ட பேரழகி

ஒரு புனிதத்திற்காய்
தாட்சனியம் தேடிப் போராடிய
அவள் ஓலங்கள்
தோற்றுப்போன பின்,
அரவமின்றி அரவமாய்
அடங்கிப்போனதன்பின்
இதோ
அவளாலேயே
அழிக்கப்பட்டு விட்டாள்...

ஆம்
மெடூஸாக்களின் கதறல்கள்
அவர்களுக்கு
ஒருபோதும் கேட்டிருக்காது
ஏனெனில்
மூடியிருந்தது
கோட்டையின் கதவுகள் அல்ல
அவர்களின் காதுகள்

தேவையுள்ளவரை
நீயும் நானும்
தேவதைதான்...
தீர்ந்தபின்?
தீயசக்திகளின் கதைகளாய்
சாபம்
பெற்று விடுவோம்
அப்படித்தானே?

## பரிதியின் சோதிக்கு நன்றி

என். வேணி



விடியலில் கிழக்கு
வானில்
செக்கச் சிவந்த
செந்நிற வானில்
மூழ்கி மூழ்கி
குளித்தெழுந்து
கடமை தவறாது
பூவுலகிற்கு வந்து
ஒளி கொடுக்கிறாய்
உதய சூரியனே

பகலில் இயற்கை
தாவரங்களுக்கு ஒளி
கொடுத்து பசுமையாய்
வளரச் செய்கிறாய்
ஈரமான பொருட்களை
உலர்த்தி கிருமிகளை

அழித்து மனிதர்களை
ஆபத்திலிருந்து காக்கிறாய்

நீரை ஆவியாக்கி
வானுக்கு அனுப்பி
வையமெங்கும் மழை
பொழியச் செய்கிறாய்
குளிரை போக்கி

மனித உடலுக்கு
உஷ்ணம் தருகிறாய்

நம் முன்னோர்கள்
உன்னையே இயற்கை
தெய்வமாய் வழிபட்டனர்
பொங்கலன்று பொங்கல்
வைத்து உனக்கு நன்றி
செலுத்தினர்

பலனை எதிர்பாராமல்
மனிதன் உயிர் வாழ
பல நன்மைகள்
புரியும் காலைக் கதிரவனே
உன்னை என்
இருகரம் கூப்பி
நன்றி சொல்லி வணங்குகிறேன்

## மௌனம்

என். பாரத்,
மானிப்பாய்



உன்னோடு
பேசுகின்ற
ஒவ்வொரு நிமிஷமும்
என் தாய்மொழியை
நான் மறந்துவிட்டேன்
ஆனால்
உன் தாய்மொழியான
மௌனத்தை கற்றுக்கொண்டேன்
இதுதான் காதலா

## எனக்குள் நீ

மலையருவி பானு
( பாதிமா ஸகீனா )



தாண்டிப் போகையில்
கள்ளமாய்
என்னைக்
கடத்திப் போகிறாய்....

எழுதும் கவியில்
மொத்தமாய்
என்னில்
நிறைந்து போகிறாய்...

மேகக் கூட்ட
விம்பமாய்
எனக்குள்
நிறைந்து போகிறாய்...

மேட்டுத் தோட்ட
தென்றலாய்
என்னில்
உரசிப் போகிறாய்...

வான் நிலவைத் தொடரும்
விண்மீனாய்
என்னை நோக்கி
கண்சிமிட்டிப் போகிறாய்...

வானவில்லைக் கலந்த
வண்ணமாய்
என்னுள்
கலந்து போகிறாய்....

என் காவிய ஓவியங்களின்
கருவாகிய கண்மணியே
மொத்தத்தின் மொத்தமாய்
நிறைந்து
என்னில்
நித்தில வித்தையாய்
உறைந்து போகின்றாய்...

# அன்பென்றால் அப்பா தான் அழகான வார்த்தை "அப்பா"



நான் அதிகமதிகம் அழைக்க விரும்பிய வார்த்தையும் கூட,

அழகானவர், தோற்றத்தில் மட்டுமல்ல, அழகிய குணங்களாலும்

தனது உறவுகள் மட்டுமல்லாது முகமறியாத உறவுகளையும் தேடிப் போய்உதவுகின்றகருணை உள்ளம் கொண்டதொரு அற்புத மனிதர் அவர்,

"இப்படியும் ஒரு மனிதரா" என பலர் வியந்து பேசும் படி வாழ்ந்தவர்

அப்பா, உங்கள் பிரிவு எனும் துயர் நிறைந்த செய்தி என் செவியெட்டிய நிமிடம் முதல் இன்று வரை பெரியதொரு வெறுமையை உணர்கிறேன்,

உங்கள் பிரிவு நான் அதிகமாய் வெறுக்கும் சம்பவம் ஒரு கனவாய் இருந்துவிடக்கூடாதா

இறுதியாய் உங்களைச் சந்தித்த போது, என்னை அணைத்து முத்தமிட்டீர்களே, அப்போது உங்கள் கண்களில் தெரிந்த ஈரம் இன்னும் என்னுள் தெரிகின்றது அப்பா,

இதுதான் உங்கள் அருகிலே அமரும் இறுதித் தருணம் என கனவில் கூட நினைக்கவில்லை

இறுதியாய்ப் பேசிய தொலைபேசி அழைப்பில் கூட உங்களுக்கு இயலாத நிலையிலும்,

"குணமாகி வீடு திரும்பியதும் உங்களைப் பார்க்க வருவேன்" எனக் கூறிய அந்த அன்பிற்கு ஒன்றுமே ஈடில்லை அப்பா,

உங்கள் பிரிவை விட எதுவுமே துயரில்லை எனக்கு

அடிக்கடி மீண்டிடும் இந்த அழகிய நினைவுகளுக்கு எப்படி அப்பா எடுத்துச்சொல்வேன்,

நீங்கள் தான் என் அன்பு கிட்டாத இடத்தில் தங்கிவிட்டீர்கள் என்று

பெரும்பான்மை சமூகம் அன்போடு ஆதரித்த சிறுபான்மைத் தலைவர் என் அப்பா,

மக்களின் பிரச்சனைகளை தேசிய மட்டத்திற்கு கொண்டு சென்று தீர்வு காண்பதில் முனைப்புடன் செயற்பட்டவர்,

இன ஐக்கியத்தின் சின்னம் அவர், இன்றும் மக்கள் நன்றியோடு நினைவு கூறும் ஓர் அரசியல் தலைமை

என் அப்பா

புனித வெள்ளிக்கிழமை தினமொன்றில் பிறந்து துல்ஹஜ் மாத இறுதி வெள்ளிக்கிழமை தினத்தன்று இறை அழைப்பை ஏற்றீர்களே,

அழகிய முறையில் அல்லாஹ் உங்களை அவன் பக்கம் அழைத்துக் கொண்டான்,

அப்பா, விடைகொடுக்க மனமே இன்றி உங்களை வழியனுப்பி வைத்தேன்

அப்பா, உங்களைப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது,

நீங்கள் உலகை விட்டுச் சென்ற போதிலும் என் ஒவ்வொரு மூச்சிலும் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்,

என்னதான் இருந்தாலும் உங்களின் இடம் எனக்கு யாராலுமே நிரப்ப முடியாத வெற்றிடம்தான்

யா அல்லாஹ், நாளை மேலான ஜன்னதுல் பிர்தௌஸில் வலம் வரும் நல்லடியார் வரிசையில் என் அன்பு அப்பாவையும் சேர்த்து விடு.

எம்.ஆர்.எப் ரிப்தா
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# தொன்மை மிக்க கதிர்காம முருகன் ஆலயம்



ஈழத்தில் பண்டைய முருக வழிபாட்டில் முதன்மை பெற்ற இடங்களில் கதிர்காமமும் ஒன்றாகும். ஈழத்தின் தென்திசையில் மாணிக்க கங்கைக் கரையில் இது அமைந்துள்ளது.

கதிர்காமத்தின் தொடர்ச்சியான வரலாற்றினை ஈழத்தின் ஏனைய இந்து தலங்களைப்போல கட்டி எழுப்புவதற்கு போதிய தடயங்கள் காணக்கிடைக்காவிட்டாலும், காணக்கிடைக்கின்ற சான்றுகள் இதன் வரலாற்றுத் தொன்மையை உணர்த்துகின்றன.

கதிர்காமத் தலத்தின் மகிமைபற்றி பழந்தமிழ் இலக்கியங்களான கந்த புராணம், மகேந்திர யுத்தகாண்டம், தெட்சண கயிலாய புராணம், மச்சபுராணம், சுப்பிரமணிய பராக்கிரமம் ஆகியன குறிப்பிடுகின்றன. இத்திருத்தலம் பற்றி திரிகோணசலப் புராணம் பின்வருமாறுகுறிப்பிடும்

'கந்தவேள் குறக்கொடிதனைப் புனத்திற்
காண்டரு ஒட்டரும் கடிமணம் புணர்ந்து
வந்தவாறு மட்டாய் வரன்முறையே மகிழ்ந்து
போற்று முத்திலிங்க தேசிகர் தம்
சிந ;தை அன்புறத் தெரிசனை காட்டிச்
சிறந ;த நல்விளையாடல் செய்திருக்குஞ்
சுந்தரக் கதிர்காம நல் தலமும் சூழும் (பாடல் 36:வரி 17)

இவ்வாறு கதிர்காம முருகன் ஆலயத்தின் தொன்மைச் சிறப்புக்கள் பற்றி இப்பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, கதிர்காமத் தலத்தோற்றம் பற்றியும், இவ்வாலய வரலாறு பற்றியும் தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து ஈழத்தில் திராவிடருக்கேயுரித்தான பெருங்கற்பண்பாடு நிலவியிருந்த காலத்தில் (கிமு 1000 300) கதிர்காம தலம் தோன்றியதென அறியமுடிகின்றது. அக்காலகட்டத்தில் கதிர்காமப் பகுதியில் வாழ்ந்து வந்தவர்களும் ஈழத்தின் பூர்வீக குடியினருமான நாகர், இயக்கர், வேடர் என்ற திராவிடக் குலங்களிடையே நிலவி வந்த வேல் வழிபாட்டின் தொடர்ச்சியே பிற்காலத்தில் முருகவழிபாடாக மலர்ந்தது.

இதனை விளங்கக் கூறுமிடத்து இலங்கையில் பெருங்கற்பண்பாடு நிலவியிருந்த காலத்தில் கிமு ஏழாம், ஆறாம் நூற்றாண்டுகளில் கதிர்காமப்பகுதியில் (திசமாறகம உள்ளிட்ட) வாழ்ந்து வந்த திராவிடரிடையே நிலவி வந்த வேல் வணக்கம் என்ற உருவ வழிபடே பிற்காலத்தில் கதிர்காமத்தில் முருகவழிபாடாகவும் (முருகன் ஆலயம்) வேல் வழிபாடாவும் (கதிரமலை) விளங்கி வந்தன. பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். ஈழத்தில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்ட பிரதேசங்களில் கதிர்காமம் உள்ளிட்ட திசமாறக பிரதேசமும் அடங்கும் (ஈழத்து இந்து சமய வரலாறு, பக்,

கதிர்காமத்தில் பாண்டிய குலத்து அரசர்களது ஆட்சி கிமு 2ம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்தது. இவர்களது ஆட்சிக்காலத்தில் கதிர்காமத்தில் வாழ்ந்திருந்த பாண்டியர், நாகர், இயக்கர் என்ற திராவிட மக்களில் பெருமளவினர் பௌத்தத்தை தழுவியிருந்தனர். இதற்கு பாண்டிய குலத்து தமிழ் அரசர்களே உறுதுணையாகவிருந்தனர் உறுதுணையில் திராவிட நாகரீகம் பௌத்தத்தை தழுவியிருந்த போதும் கதிர்காம முருகனையும் பக்தியுடன் வழிபட்டுவந்தனர். இவர்களது சந்ததியினரே பிற்காலத்தில் பௌத்த சிங்களவராயினர். கிபி முதலாம் நூற்றாண்டில் உரோகணத்தில் சிற்றரசனாகவிருந்த கவந்தீசனின் மகனான துட்டகாமினி தமிழ் மன்னனான எல்லாளனைப் போரில் வெற்றி கொண்டால் கதிர்காம முருகன் ஆலயத்திருப்பணி செய்வதாக வேண்டுதல் செய்தான். எல்லாளனை (கிமு 145101) போரில் வெற்றிகண்ட பின்னர் இவ்வாலயத் திருப்பணியை துட்டகாமினி மேற்கொண்டான்.

பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான புகழேந்திப்புலவர் கதிர்காம முருகனைத் தரிசித்துள்ளார். நாவலர் சரிதையில் வரும் பாவொன்று இதனைக்குறிப்பிடுகின்றது.

தொடர் 18 ஆம் பக்கம்...

கலாபூஷணம்
நா. நவநாயகமூர்த்தி


## பாவனையாளரின் ஆலோசனை

வ/ப லங்கா மின்சார (தனியார்) கம்பனி (LECO)

### பெருநிறுவன திட்ட அபிவிருத்திக்கான பாவனையாளர் ஆலோசனை - 2023-2027

வ/ப இலங்கை மின்சார (தனியார்) கம்பனியானது கம்பனியின் சட்டத்தின் கீழ் 1983 ஆம் வருடம் மின்சார விநியோக கம்பனியாக தாபிக்கப்பட்டதுடன் இக்கம்பனியானது அரசாங்கத்தின் முழுமையான கம்பனியாகும். தற்போது நாம் ஏறத்தாழ ஆறு இலட்சம் பாவனையாளர்களுக்கு சேவையை வழங்குகின்றோம். கம்பனியானது வலு மற்றும் சக்தி ஆகியவற்றின் அமைச்சின் ஆதிக்க வரம்பின் கீழ் இயங்குவதுடன் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் உரிமத்தின் கீழ் விநியோகமானது மேற்கொள்ளப்படுகின்றது.

**கம்பனியின் நோக்கம்**

புத்தாக்கம், சூழலுக்கிசைவான வர்த்தகம் ஆகியவற்றினூடாக மக்களின் வாழ்விற்கு ஒளியாக விளங்குவதையிட்டு மகிழ்ச்சியை அனுபவித்தல்

**கம்பனியின் செயற்பணி**

தொடர்ச்சியான புத்தாக்கத்தின் மூலமாக சமூகத்திற்கு சிறந்த சக்தியை வழங்கல்

அரசிற்கு சொந்தமான கம்பனியொன்றாக இக்கம்பனியினால் நாம் வழங்கும் சேவைகளை அபிவிருத்தி மற்றும் மேம்படுத்துவதற்காக எமது பெருநிறுவனத்தில் பாவனையாளர்களின் ஆலோசனைகளை சேர்ப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். உங்களின் பெறுமதியான ஆலோசனையானது ஒரு நாள் LECO இற்கு சிறந்த சேவையொன்றை வழங்குவதற்கான உதவியை வழங்கும். உங்களின் எழுத்து மூலமான ஆலோசனையை 2022.08.25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மின்னஞ்சல், வட்ஸ்அப் அல்லது கடிதம் மூலமாக தயவுசெய்து அனுப்பவும்.

Address — முகவரி
**பொது முகாமையாளர்,
வ/ப லங்கா மின்சார (தனியார்) கம்பனி,
ஈ.எச். குரே கட்டிடம்,
இல.: 411, காலி வீதி,
கொழும்பு-03.**

E-mail — மின்னஞ்சல்
general@leco.lk

WhatsApp — வட்ஸ்அப்
+94719715690



# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### மோட்டார் வாகனங்கள்

**118 ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு**

டபிள் கெப் 2011 புத்தம் புதிய Hilux vigo champ australian lift steel buffer புத்தம் புதிய டயர் மற்றும் பற்றரி முதலாம் உரிமையாளர். 077 6047931/ 077 3242611. 045207

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

நிஷான் குரூ கெப் வண்டி 2006 LB4HFI என்ஜின் மூன்றாம் உரிமையாளர் ஒரிஜினல் 15424 முகத்துடன் விற்பனைக்கு. 33 லட்சம். 077 3242611. 045209

### வர்த்தகம்

**201 வியாபார வாய்ப்புகள்**

F.L.3 மதுவரி அனுமதிப்பத்திரம் விற்பனைக்கு. இலங்கையின் எந்தப் பிரதேசத்திற்கும் உங்கள் பெயருக்கான முகவரிக்கு வழங்கப்பட்டதன் பின்னா் பணத்தைச் செலுத்தலாம். 0777 130079. 045475

**207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு**

அத்துகிரிய பிரதான வீதிக்கு முகப்பாக இருமாடிக் கட்டிடம் விற்பனைக்கு. 9 பேர்ச் 077 3242611. 045210

**209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு**

இல. 48 மொறட்டுமுல்ல மொறட்டுவ கொத்து கடை சமையலறைக்கு ஒருவர் தேவை. உபகரணங்கள் அனைத்தும் உண்டு. சமையல்காரருக்கு ஒரு நாளைக்கு 800 ரூபா மட்டும். 3 மாத அட்வான்ஸ் படசாலை மெத்தோலிஸ் முன் பக்கம் உள்ளது. தொலைபேசி இலக்கம் 077 1407353, 071 2627754 தங்குவதற்கு அறை உள்ளது. 044436

### வேலைவாய்ப்பு

**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

கணக்காய்வு/ கணக்காளர் பயிலுநர்கள் விண்ணப்பிக்கவும். முகாமையாளர் 891/2, பேங்ஷால் வீ தி, கொழும்பு 11. தொலைபேசி / வட்ஸ்அப் 075 5030954. மின்னஞ்சல் :agapeacservices@gmail.com 038818

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

வீட்டுப் பணிப் பெண் தேவை. வீட்டு வேலைக்கு வயது 40 50க்கு இடைப்பட்ட பணிப் பெண் தேவை. வயதான பெண்மணியை பராமரித்தல் வீட்டு வேலைகளில் உதவுதல் வேண்டும். ரூபா 40, 000.00 சம்பளம் வழங்கப்படும். கலந்தாலோசித்துக் கொள்ளலாம். தொ.பே. 077 1927042. 045757

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

ஐந்து ஏக்கர் தென்னங்காணியில் தொழிலாளர் வேலை மற்றும் பசுக்களின் வேலைக்கு தொழிலாளர்கள் தேவை. கம்பஹா வெலிவேரிய. 0763279169, 033 2259143. 045706

தோட்ட வேலை பயிர்ச்செய்கை வேலைகளில் பரிச்சயமுள்ள வயது 4555 சிங்களத்தில் உரையாடக்கூடிய ஊழியரொருவர் தேவை. கிராம அலுவலா் பதிவுச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை அத்தியாவ சியம். 077 4125686. 045025

**325 தொழில்துறை பொது**

பாதுகாப்புச் சேவை வேலை வாய்ப்புக்கள் உண்டு. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆண்/ பெண் பாதுகாப்பு அலுவலர்களிற்கான வேலை வாய்ப்புக்கள் உண்டு. ஆகக் கூடிய சம்பளம் அழைக்கவும். 0771060667/ 077 1075755/077 1075762. 045431

யக்கல டயா் கடைக்கு பயிற்சிபெற்ற ஊழியர் உடனடியாக தேவை. தங்குமிட வசதிகள் உண்டு. 077 5470351. 045661

Sewing Machine Operators/ Trainees/ Helpers வத்தளையில் அமைந்திருக்கும் ஏற்றுமதி தரத்தில் துணி உற்பத்தி செய்யப்படும் கம்பனிக்கு துவாய் மற்றும் பெட்ஷீட் தைப்பதற்கு அனுபவமுள்ள தையல் இயந்திர இயக்குநா்கள் (Sewing Machine Operators), பயிற்சி பெறவிரும்பும் தையல் இயந்திர இயக்குநா்கள் (Sewing Machine Trainee Operators) மற்றும் ஆண், பெண் உதவியாளர்கள் (Helpers) தேவை (Sub Contract கொடுக்கப்படமாட்டாது) கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதி இலவசம். குறைந்த விலைக்கு மூன்று நேர ஆகாரம். வேளை நேரம் 08.30 முதல் 6.30 வரை. இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ. பே. இல. 076 6200300. 045115

### காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

உடஹமுல்ல ஜயபார 400 மீட்டர் தூரத்தில் ஜயபாதைக்கு முகப்பாக 33 பேர்ச் சுற்று மதில் கட்டப்பட்டுள்ளது. வல்வெளிக்கு முகப்பாக. 077 3242611. 045204

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

பேலியகொட மீன் சந்தைக்கு அருகில் 18 பேர்ச் காணி விற்பனைக்கு. காணியை துண்டு படுத்தலாம். 077 3242611. 045206

**634 வீடு சொத்து மட்டக்களப்பு மாவட்டம் விற்பனைக்கு**

மட்டக்களப்பு திருமலை பிரதான வீதியில் (பிள்ளையாரடி பாடசாலைக்கு முன்பாக) Road Reservation கழித்து 30 பேர்ச் வியாபார நோக்கத்திற்கான உறுதி காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு. 077 8852009, 076 2911105. 045732

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

149/6, தேவானம்பியதிஸ்ஸ மாவத்தையில் 2 அறைகளுடன் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. 072 8261822. 043392

### வாரமஞ்சரி திருமண சேவைகள்

**மணமகள்**

பேருவளை A/ L சித்தியடைந்த 21 வயது முஸ்லிம் உயரம் 5'4" குடும்பத்தில் ஒரே மகளுக்கு தகுதியான மணமகன் தேவை. தரகர்கள் தேவை. abdulsalam11006@gmail.com B184578

**மணமகன்**

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் முஸ்லிம் பெற்றோர் அவர்களின் தொழில் ரீதியாக தகைமையுள்ள, 29 வயதுள்ள, 6 அடி உயரமுள்ள, நல்ல நிறமுள்ள தற்போது வெளிநாட்டில் வேலை செய்யும் மகனுக்கு மனப் பெண்ணை தேடுகின்றனர். முன்னைய நிக்கா குறுகிய காலத்தில் இரத்துச் செய்யப்பட்டது. பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள நற்குணமுள்ள, கல்வி கற்ற, நிறமுள்ள, குடும்ப பாங்கான பெண் தேவை. உங்கள் மு முமையான விபரங்களை nikkah.674@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும். G184324

**தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்**

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

**தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65



## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

### களனி கிளை அலுவலகத்திற்காக கட்டிடமொன்று வாடகைக்கு/குத்தகைக்கு தேவை

**விலைக்கோரல் இல.: LECO/22/NCB/PR4/270**

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கிரிபத்கொட மற்றும் பேலியகொட நகரங்களுக்கிடையில் அமையப்பெற்ற 8,000-10,000 சதுர அடிகளுக்கிடையிலான தரைப்பரப்புடன் நீர், மின்சாரம், தொலைபேசி, வடிகாலமைப்பு வசதிகள், உயிரியல் கழிவு வசதிகள், கழிவு நீரை அகற்றும் வசதிகள் மற்றும் போதுமான வாகன நிறுத்துமிடம் 8-10 வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடன் கட்டிடமொன்று (மாடிக் கட்டிடமானால் மின்னுயர்த்தி வசதியுடன்) வாடகைக்கு / குத்தகைக்குத் தேவை.

உத்தேச வாடகை / குத்தகை ஒப்பந்தக் காலம் 02 வருடங்களாகும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022-08-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விலைமனுக்கள் திறக்கப்படுவதானது, விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து இடம்பெறும்.

சகல விலைமனுக்களுடனும் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- தொலைபேசி இலக்கம்
- காணி உறுதி மற்றும் வரைபடப் பிரதி
- உத்தேச மாதாந்த வாடகை / குத்தகைத் தொகை
- ஏனைய இயைபுடைய விபரங்கள்
- மின்னஞ்சல் முகவரி
- கட்டிட திட்ட வரைபடத்தின் பிரதி
- சகல நிபந்தனைகள்

நிலவும் கொவிட் 19 நிலைமையைக் கவனத்திற் கொண்டு, விலைமனுக்களைத் திறக்கும் செயற்பாடுகள் நிகழ்நிலை (online) முறையில் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

விலைமனுக்கள் திறக்கப்படும் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய இணைப்பை (Zoom meeting link) பெற்றுக்கொள்வதற்கு விலைமனுதாரரால் மேற்கொள்ளும் வேண்டுகோளை procurement@leco.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். குறித்த வேண்டுகோளில் கேள்வி இலக்கம் மற்றும் கேள்வியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு 011-2371679 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்)

விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தபாலில் அனுப்பும் விலைமனுக்களை, விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரத்திற்கு முன் இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்திற்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

இடப்பரப்பின் உரிமையாளர் மட்டும் தமது விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் விலைக்கோரல் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானால் தயவு செய்து 011-2371600 என்ற தொலைபேசி எண்ணினூடாக மனித வளங்கள் மற்றும் நிர்வாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

PROCUREMENT NOTICE
www.leco.lk

**பொது முகாமையாளர்
வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,
ஈ. எச். குரே கட்டிடம்
411, காலி வீதி, கொழும்பு-03**



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 17

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்


# ஈழ சிறுகதை வரலாற்றில் பெண்ணியல்வாதத்தை முதலில் முன்வைத்த பவானி ஆழ்வாப்பிள்ளை

'ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முதன் முதலில் பெண்ணியல்வாதத்தை முன்வைத்தவர் பவானி ஆழ்வாப்பிள்ளை ஆவார். 1960களில் மிகத் துணிச்சலான பெண் விடுதலை சார்ந்த கருத்துக்களை இவர் முன்வைத்தார். மன்னிப்பாரா? என்ற கலைச்செல்விச் சிறுகதை மூலம் எல்லோரது கவனத்தையும் ஈர்த்த கதாசிரியை பவானி. பவானியின் மன்னிப்பாரா பெண்ணிலைவாதம் பற்றிய பல கருத்துக்கள் பரவியுள்ள இருபதாம் நூற்றாண்டின் கடைக்கூற்றில் பலராலும் வரவேற்கப்படாவிட்டாலும், ஆக்ரோஷமான கண்டனத்துக்குள்ளாகி அக்காலத்திற் பெரும் புயலையே கிளப்பிவிட்டது' எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி செங்கை ஆழியான், தனது ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற நூலில்.


'மன்னிப்பாரா' என்ற சிறுகதை கலைச்செல்வி வைகாசி 1961 இதழில் வெளியாகியது. இச்சிறுகதையில் மூர்த்தி, சுசீலா ஆகியோருக்கிடையிலான காதல் சாதிய ஏற்றத்தாழ்வினால் நிறைவேறாமல் போய்விடுகிறது. பெற்றோரின் ஆதங்கத்தை மீற முடியாதவனாகின்றான் மூர்த்தி. இதற்கிடையில் சுசீலாவிற்கு வேறொரு இடத்தில் திருமணம் முற்றாகிவிடுகிறது. தனது திருமணத்திற்கு முதல்நாள் சுசீலா மூர்த்தியைத் தேடி அவனது வீட்டிற்குச் செல்கிறாள். 'காதலித்தவனையே கணவனாகக் கொள்வதுதான் கற்பெனில் இந்த என் முடிவு என் கற்பு நெறிக்குச் சிறிதும் புறம்பானது அல்ல. உங்கள் உரிமையை இப்பொழுதே எற்றுக் கொள்ளுங்கள். நமது வாழ்வை இக்கணமே வாழ்ந்து முடித்துவிடுவோம், மானசீகமாய் மட்டுமன்றி என்னால் என்றுமே உங்களோடு வாழமுடியாது. ஆனால் இந்தக்கணம் உங்களோடு வாழ்கிறேன். இதை அறிந்தால் உலகம் என்னைக் கேவலமாகக் கருதும், பகிஷ்கரித்துவிடும். ஆனால்.. ஆனால் கடவுள் என்னை மன்னிப்பார் இல்லையா' என்கிறாள் சுசீலா. மூர்த்தி அவளை இறுக அணைத்துக் கொண்டான். நிச்சயமாக நம்மை மன்னிப்பார்' என்கிறான்.

பழைமைவாதம் வேரூன்றிய அக்கால கட்டத்தில் சுசீலாவின் இந்த முடிவு ஈழத்து இலக்கிய உலகில் பெரும் கண்டனத்துக்கு இலக்காகியது. கதாநாயகியின் முடிவை எதிர்த்து கதையை வேறு விதமாக மாற்றி கவிஞர் எஸ்.எம். சவுந்தர நாயகம் எழுதிய கதையும், அவளுடைய முடிவை ஆதரித்து அவளைப் புரட்சிப் பெண்ணாகக் கொண்டு செந்தாரகை எழுதிய கதையும் 'மன்னிப்பாரா' என்ற அதே தலைப்பிலேயே கலைச்செல்வியின் அடுத்த இதழ்களில் வெளியாகின.











யாழ்ப்பாணத்தில், அளவெட்டிக் கிராமத்தில் பிறந்த பவானி கொழும்பு பெண்கள் கல்லூரியில் ஆரம்பக்கல்வி கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி. பிற்பட்ட காலத்தில் புலம்பெயர்ந்து பிரித்தானியாவை வாழ்விடமாகக்கொண்டவர். 1958/59ஆம் ஆண்டுக்குரிய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கத்தின் இதழான 'இளங்கதிரில்' இவரது அர்ப்பணம் என்கிற சிறுகதை 'மதிப்பிற்குரியது, நூற்பரிசு பெற்றது' என்கிற சிறுகுறிப்புடன் வெளியாகியிருக்கின்றது.

பவானியின் சிறுகதைத் தொகுப்பொன்று 1962இல் கடவுளரும் மனிதரும் என்ற தலைப்பில் வெளியாகியது. 1994இல் செல்வி திருச்சந்திரன், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் ஊடாக இச்சிறுகதைத் தொகுதியை மீள்பதிப்புச் செய்துள்ளார். முன்னைய தொகுப்பில் இடம்பெறாத சில கதைகளும் சேர்க்கப்பட்டு இத்தொகுப்பு இருபது கதைகளுடன் வெளியானது.

பவானியின் கதைகளது நோக்கினையும் போக்கினையும் விளக்கும் வகையில் அவற்றில் முக்கியமான சில கதைகள் பற்றி தாய்வீடு மார்ச் 2017 இதழில் அருண்மொழிவர்மன் எழுதிய மதிப்பீட்டின் சில பகுதிகள் கீழே தரப்படுகிறது:

'தொகுப்பில் இரண்டாவது கதையாக அமைகின்ற பொரிக்காத முட்டை என்கிற கதை பவானியின் கதைகளில் இருக்கின்ற கூர்மையான அவதானங்களுக்குச் சான்றாக அமைகின்றது.

முதல்முறையாகக் கருவுற்றிருக்கின்ற உஷாவும் அவள் கணவன் சந்திரனுமே இக்கதையில் வருகின்ற கதாபாத்திரங்கள். தனது சிறுவயதில் இருந்து உஷா சேகரித்து வைத்திருக்கின்ற சிறு சிறு பொருட்களை அவளும் சந்திரனும் பார்த்து அவளது சிறுபிராய நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளுகின்றார்கள். அப்போது அவள் சிறுவயதில் இருந்து பாதுகாப்பாக வைத்திருக்கின்ற கரிக்குருவியின் முட்டையொன்று விழுந்து உடைந்துவிடுகின்றது. சிறுவயதில் குருவிக்கூட்டில் இருந்து தான் எடுத்து ஒளித்து வைத்திருந்த அந்த முட்டை உடைந்தது அவள் மனதில் அவளது கரு பற்றிய சஞ்சலத்தினை உருவாக்கிவிடுகின்றது.

அந்த சஞ்சலத்தினால் அவள் தொடர்ந்து அலைக்கழிந்து, மனங்கலங்குகின்றாள். குழந்தை பிறக்கும்வரை இந்தப் பதற்றமும் சஞ்சலமும் அவளை ஆட்டுவிக்கின்றது.

கதை முழுவதும் உடைந்தபோன கரிக்குருவியின் முட்டை பற்றிய நினைவுகளே அவளது இந்த நிலைமைக்குக் காரணம் என்று சொல்லப்பட்டாலும், அண்மைய உளவியல் ஆய்வுகளின் அடிப்படையில் இது கருவுற்றிருக்கும் பெண்களுக்கு ஏற்படக்கூடிய மன அழுத்தத்துடன் தொடர்பான உளவியல் சிக்கல் என்றும் புரிந்துகொள்ளமுடிகின்றது. அந்த உளவியல் சிக்கல்பற்றிய பவானியின் அவதானம் கூர்மையானது.

கனவு என்கிற கதை உளவியல் பின்னணியுடன் அமைந்த இன்னொரு கதை. முத்தம்மா என்று கேலியாக அழைக்கப்படும் முத்து திருமண வயதடைந்து திருமணமாகாமல் இருப்பதற்காக ஊராரால் கேலி செய்யப்படுபவன்.

அவனிடம் பட்டம் கட்டக் கற்றுக்கொண்ட சிறுவர்கள்கூட வளர்ந்து திருமணமாகிக் குடும்பமான பின்னரும் முத்து தனியனாகவே இருக்கின்றான்.

'ஆண்மை' என்பது பற்றிய கற்பிதம் அவன் ஆண்மையில்லாதவன் என்று அவனைக் கேலி செய்கின்றது. அதே முத்து, மீனா என்கிற மாணவி அவளது காதலனுடன் ஊருக்கு மறைவாகப் பேசுவதைக் காணுகின்றான். பின் பொருநாள் அவள் தனது காதலனுக்காகக் காத்திருக்கின்றபோது பாலியல் தாக்குதல் செய்கின்றான். அவனைத் தேடி ஊரார் செல்கின்றபோது அவன் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொள்ளுகின்றான். இந்தக்கதை 'ஆண்மை' பற்றிய கற்பிதம், பாலுணர்வு, பெண்கள் பற்றிய பொதுப்புத்தி ஆகியவற்றை நுட்பமாகக் காட்சிப்படுத்துகின்றது. தவிர, சிறுவயதில் தந்தையால் தாயும், முத்துவும் தனித்துவிடப்படுகின்றமையும், இளவயதிலேயே தாயும் இறந்துவிட ஒரு விதத்தில் ஊராரை அண்டியே வாழவேண்டிய நிலை முத்துவுக்கு இருந்தமையும்கூட அவனை இவ்விதமாகக் கட்டமைக்கக் காரணிகளாக இருந்திருக்கக்கூடும்.

வறுமை காரணமாகவும் சீதனம் போன்ற சமூக வழக்கங்களின் தடைகளாலும் இளவயதுப் பெண்கள் இரண்டாம், மூன்றாம் தாரங்களாக வயதானவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகின்ற வழக்கம் முன்னாட்களில் அதிகம் இருந்ததை அறிந்திருக்கின்றோம்.

பிரார்த்தனை என்கிற கதையில் வறிய குடும்பமொன்றில் மூத்த பிள்ளையாகப் பிறந்த சுமதி தனது பதினெட்டாவது வயதில் ஐம்பதுவயது ஆன ஒருவருக்கு மூன்றாம் தாரமாகத் திருமணம் செய்து வைக்கப்படுகின்றாள். சுமதியின் உணர்வுகளையும் மனநிலையையும் இத்திருமணம் பற்றிய எதிர்ப்புகளையும் இந்தக் கதையில் மிகவும் நுட்பமாக பவானி வெளிப்படுத்துகின்றார்.

'எத்தனை கொடிய இரவுகள்! சபாபதி அவளைத் தீண்டிவிட்டால் சுமதியின் சதை கூசும்! முதலில் தன் விதியை ஏற்றுக்கொள்ள முயன்றாள்.

ஆனால் சபாபதி பசிப்பார்வையோடு அவளை அணுகும்போது கரங்களால் அவளை அணைக்கும்போது சுமதிக்குக் கூச்சலிடவேண்டும் போலிருக்கும்...

இதுதான் பத்து வருஷங்களாகச் சுமதி நடத்தி வரும் வாழ்க்கை. இன்று சபாபதி கண்ணை மூடிவிட்டால் சுமதிக்கு அது விமோசனமாகாதா? ஏன் எத்தனை நாள் ஆத்திரத்தில் வெறுப்பில் எண்ணியிருக்கிறாள் இந்தக் கிழம் செத்துத் தொலைக்காதா என்று! இன்று அப்படியே நடந்துவிடும் போல தோன்றுகையில் மட்டும் ஏன் வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டுகிறாள்?'

கட்டாயத் திருமணம் செய்துவைக்கப்பட்ட வயதில் முதிய, மனதுக்குப் பிடிக்காத கணவன் சாகக் கிடக்கின்றபோது ஏன் சுமதி திருமணமாகிப் பத்து வருடங்களாகக் கும்பிடாத கடவுள்களையெல்லாம் மீண்டும் கும்பிடுகின்றாள் என்பதைக் கதை முடிவில் சொல்கின்றார், 'உள்ளத்தில் அடியில் இருந்து உணர்ச்சி ஒன்றிய வேகத்தோடு புதிய நம்பிக்கையோடு வேண்டுகிறாள், கடவுளே அவர் சாகட்டும்... கடவுளே அவர் சாகட்டும்...'

அன்றைய காலப்பகுதியில் நிலவிய பெண்களுக்கெதிரான சமூக வழக்கங்களுக்கும் அடிமைத்தனத்திற்கும் எதிரான மிக வலுவான எதிர்க்குரல்களில் ஒன்றாக இதனைப்பார்க்க முடிகின்றது.

பவானியின் கதைகளை நோக்குகின்றபோது அவர், தான் அவதானித்தவற்றை, சமூக வழக்கங்கள் மனித நேயத்திற்கு நெருக்கடி ஏற்படுத்திய சூழல்கள் பற்றிய தனது எதிர்வினையை, தனது எழுதுக்களினூடாக வெளிப்படுத்தினார். மனிதத்துவம் மீதான அவரது காதலும் சமூகம் தனிமனிதருக்குத் தருகின்ற நெருக்கடி பற்றிய கோபமுமே அவரது எழுத்துகளின் சாரம். அந்தவகையில் இலக்கிய வரலாற்றின் அடிப்படையில் மாத்திரமல்லாது தனது எழுத்துகளூடாகவும் அவர் முக்கியத்துவம் வாய்ந்தவரே. இந்தத் தொகுதியில் இருக்கின்ற அதிர்ச்சி மதிப்பீட்டை ஏற்படுத்தக் கூடிய அன்பின் விலை என்கிற கதை, நிலவியல் அடிப்படையில் செயற்கைத்தனம் வாய்ந்த நிறைவு என்கிற கதை, உன்னை உணர என்கிற அதீத உணர்ச்சிவயமான கதை என்பன எனது வாசிப்பில் மிகச் சாதாரணமான கதைகளே.

ஆயினும் ஒரு தொகுதியாக வாசிக்கவும், ஈழத்து இலக்கிய வரலாறு பற்றிய ஆய்வுகளுக்கும் இந்தக் கதைகள் மாத்திரமல்ல தொகுக்கப்படாத பவானியின் ஏனைய கதைகள் தொகுக்கப்படுவதும் மிக முக்கியமானதே.

---



## இளமை ஊஞ்சலாடும் விறுவிறுப்பான தொடர்

# இனியவனே என்று பாடி வந்தேன்!

ஜனரஞ்சக எழுத்தாளர்
**மொழிவாணன்**





## 01 மீன் பிடிப்பவனை மீனவன் என்று சொல்லலாம் மான் பிடிப்பவனை மாணவன் என்று சொல்லலாமா?

ஆதவனை மறைத்துக் கொண்டிருந்த மேகக் கூட்டம்

நழுவிக் சென்றதும்,

சூரியனின் சூடு,

மீண்டும்,

பூமா தேவியை பதம் பார்க்க ஆரம்பித்தது.

அன்று அரைநாளுடன் கராஜைப் பூட்டி விட்டு,

தனது முதலாளி கார்மேகத்துடன்,

பாதையில் இறங்கி நடந்தான்,

ஜீவகன்,

ஆமாம்,

நமது நாயகன்,

கராஜில் இருந்து தான் வருகிறான்.

அப்படியானால்,

அவன் ஒரு ஏழை!

நாயகன் ஏழையாக இருந்தால்,

நாயகி,

பணக்காரியாகத்தானே இருக்க வேண்டும்.

அதுதானே சம்பிரதாயம்

இல்லையா...?

ஆமாம்,

உங்கள் தலையில் அடித்து சத்தியம் செய்கிறேன்,

அவள் செல்வந்தர் ஒருவரின்,

செல்லப் புதல்வியாகத்தான் இருப்பாள் போலிருக்கிறது.

பொறுத்திருந்து பார்ப்போமே...

மெதுவாக ஊர்ந்து வந்த,

மட்டக்குளிக்குச் செல்லும் பஸ்சில் ஏறிக் கொண்டார் ஜீவகனின் முதலாளி கார்மேகம்.

அவருக்கு கையைக் காட்டி விட்டு விரைந்து நடந்தான் ஜீவகன்.

"போகுத் தோட்டம் என்று சொன்னால் அந்தப் பகுதியிலேயே மிகவும் பிரபலமான தோட்டம் அதுதான்.

அந்த தோட்டத்தில்,

சுமார் ஐம்பது வீடுகள் இருக்கும்.

ஆனாலும்,

"பங்களாக்கள்' என்று சொல்லக் கூடிய அளவுக்கு பெரியதாக கட்டப்பட்ட வீடுகள் எதுவும் அந்த தோட்டத்தில் இல்லை,

எல்லாமே சிறு சிறு குடிசை வீடுகள் தான்.

அப்படி ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரிதான் பார்வதியும்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடியே,

எதிரில் இருந்த ஒரு கதிரையின் மீது காலை நீட்டிபடியே கால்களை ஆட்டிக் கொண்டு,

விழிகளை பாதி மூடியபடி சிந்தனையில் மூழ்கி இருந்தாள் பார்வதி.

அப்போது,

வீட்டுக்குள் யாரே நுழைந்த அரவம் கேட்டதும்,

கண் விழித்துப் பார்த்தாள் பார்வதி.

வழமையான புன்னகையுடன் அமைதியாக நடந்து வந்த ஜீவகன்,

முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை கைக் குட்டையால் துடைத்தபடியே,

பார்வதிக்கு எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டான்.

"எனைப்பா... ரொம்பவும் களைத்து போய் வந்த மாதிரி தெரியுது. கொஞ்சம் இரு நான் டீ போட்டுக் கொண்டு வாறேன்...!"

"இல்ல... வேணாம் மாமி"

"ஏன்டா வேணாங்குற வெயில்ல நடந்து வந்ததுனால நல்லா களைச்சி போட்ட...இப்ப ஒரு டீ குடிச்சா கொஞ்சம் தெம்பா இருக்கும்!"

"இல்ல மாமி நீங்க மட்டும் வீட்டுல சும்மாவா இருக்கு றீங்க... காலையிலேயே எழும்பி கடையப்பம் சுடுறீங்க அப்புறமா அதைக் கொண்டு போய் கடைகளுக்கு போடுறீங்க.... அப்பறமா பகலைக்கி சமைக்கிறீங்க... ராவைக்கி சமைக்கிறீங்க... இவ்வளவு கஸ்டப்படும் உங்களுக்கு யார் மாமி டீ ஊத்தித்தாராங்க...?"

ஜீவகன் இப்படிச் சொன்னதும்,

சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த பார்வதி,

படாரென்று நிமிர்ந்து அமர்ந்து கொண்டு,

ஜீவகனின் முகத்தை கருணையுடன் பார்த்தாள்.

இவன் என் மீது அவ்வளவு பாசம் வைத்திருக்கிறான் என்று எண்ணும் போது,

அவளுடைய கணவன் சிவாவின் ஞாபகம் தான் அவளுக்கு வந்தது.

தினமும் கடையப்பம் செய்வதற்காக தான் படும் கஸ்டத்தை உணர்ந்து, கொண்டு,

தன்னைப் பாதுகாத்து கொண்டு தனக்கு உதவியும் செய்த சிவாவை அவளால் மறக்கவே முடியாது.

சுவரில் மாட்டப்பட்டிருந்த சிவாவின் படத்தைப் பார்த்தாள்.

அவன் இறந்து இரண்டு வருடங்களாகின்றன.

திடீரென்று ஏற்பட்ட ஒரு வாகன விபத்தில் தான் அவன் இறந்து போனான்.

"அவர் இருக்கும் வரையில் எனக்கு எந்தக் குறையும் வைக்கவில்லை" பார்வதி இப்படி சொல்லும் போது,

அவள் முகம் சிவந்து விட்டது.

கண்களில் இருந்து வடிந்த கண்ணீர்துளிகளை மறைப்பதற்கு அவள் மிகவும் சிரமப்பட்டாள்.

"ஜீவா... உன் அப்பா அன்னக்கி மட்டும் இருக்கல்லனா என் புருஷனோட பொனத்தைக் கூட என்னால் பார்த்திருக்க முடியாது... லொறி கவிழ்ந்த போது அதில் சிக்கிக் கொண்ட என் புருஷன காப்பாத்துறதுக்கு உங்க அப்பா தான் ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கிறார்..." சொல்லி விட்டு,

விழிகளில் இருந்து வடிந்த கண்ணீர்த் துளிகளையும்,

மூக்கில் இருந்து வந்த சளியையும் அணிந்திருந்த கவுன் முனையில் துடைத்துக் கொண்டே இருப்பாள்.

"இந்தக் கதையை சொல்லும் போதெல்லாம் நீங்க அழுறீங்களே மாமி...!"

கரகரத்த குரலில் சொன்னான் ஜீவகன்.

"அவர நெனச்சி எந்த நாளும் நான் அழுது கொண்டுதான் இருக்கிறேன். ஜீவா, உன்னோட அப்ப செஞ்ச அந்த காரியத்துக்கு நன்றிக்கடன் செய்றதுக்காகத்தான் உன்னையை நான் கொழும்புக்கு கூட்டிக் கிட்டு வந்தேன்...!" என்று சொன்ன பார்வதி எழுந்து,

ஜீவகனின் அருகில் வந்தாள்.

"உன் வேலையெல்லாம் இப்ப எப்படி இருக்கு...!" ஜீவகனின் தலையைத்தடவிய படியே கேட்டாள் பார்வதி.

"நீ சீக்கிரமே என்னுடைய வேலைகளை எல்லாம் படித்துக் கொள்வாய் என்று... முதலாளி அடிக்கடி சொல்லுவார் மாமி!" ஒருவித பாவனையுடன் சொன்னான் ஜீவகன்.

"ஓ... அப்படியா...! நீ சீக்கிரமே வேலைகளைப் படித்துக் கொண்டால்... உனக்கு தனியாகவே கராஜ் ஒன்றை ஆரம்பிக்கலாமே... அதுக்கப்புறம் எஸ்டேட்டில் கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கும், அப்பா... அம்மா... தங்கச்சி எல்லாரையும் கொழும்புக்கு கூட்டிக் கிட்டு வந்துடலாமே...!" என்று சொல்லிவிட்டு, தேநீர் ஊற்றுவதற்காக உள்ளே சென்று விட்டாள் பார்வதி. பார்வதி இப்படி சொன்னாலும்,

பிரம்மன் ஜீவகனின் தலையில் எழுதிய விதி வேறு விதமாகவே இருந்தது.

தன் வாழ்க்கை இப்படி எல்லாம் சீரழியப் போகிறது என்று முன்பே தெரிந்திருந்தால்,

அவன் வெண்பாவை சந்தித்திருக்கவே மாட்டான்!

**(தொடரும்)**

சனாதிபதி செயலகம்

# பகுப்பாய்வாளர் பதவி

### இது நீங்களா?

நாட்டின் மிகப் பெரிய பிரச்சினைகளுள் சிலவற்றை கையாள்வதற்கான உங்களது திறன்களை பயன்படுத்த விரும்புகிறீர்களா? சான்றுகளின் அடிப்படையிலமைந்த கொள்கைகள்தாம் முன்னோக்கிச் செல்வதற்கான ஒரே வழி என்பதை நம்புகிறீர்களா? தரவுகளினால் தூண்டப்படும் தீர்வுகளையும் ஒரு துடிப்பான சனநாயகத்தில் உறுதியான கொள்கைகளையும் விருத்தி செய்யும் நடைமுறையில் ஈடுபட விரும்பகிறீர்களா?

### எங்களைப் பற்றி

சனாதிபதி செயலகத்தின் பகுப்பாய்வு அணியானது, நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஒரு நாளாந்த அடிப்படையில் பொதுமக்கள் நலம் ஆகியன தொடர்பான சவால்மிக்கதும் உண்மையானதுமான உலகப் பிரச்சினைகளோடு முட்டிமோதும் ஓர் இளைஞர் குழுவை உள்ளடக்கியுள்ளது.

### நாங்கள் தேடிநிற்பது

- தரவு விஞ்ஞானத்தில்/ புள்ளிவிபரவியலில்/ கணனி விஞ்ஞானத்தில்/ பொருளியலில்/ கொள்கை ஆய்வுகளில் அல்லது அதனுடன் தொடர்புபட்ட துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் பொருத்தமானதொரு துறையில் அதற்குச் சமமான கல்வித் தகைமை. தரவுகளுக்கான ஓர் உறுதியான உள்ளுணர்வுடன் கூடிய பலமான பகுப்பாய்வுத் திறன். தரவு சேகரித்தலில்/ அகழ்ந்தெடுத்தலில், பொருளியல் மெட்ரிக்ஸ், கணித மாதிரியிடல், தரவு களஞ்சியப்படுத்தல் மற்றும் தரவு காட்சிப்படுத்தல் ஆகியவற்றிலான அனுபவம் முக்கியமாகும்.
- மிகச் சிறந்த எழுத்துமூல மற்றும் வாய்மொழிமூல தொடர்பாடல் திறன்கள்
- ஆகியவை கொண்ட சுய ஊக்கமுள்ள ஒரு தனி மனிதரையாகும்.

### நீங்கள்

- பிரச்சினைகளை இனங்காண்பதிலும் தீர்வுகளைத் திட்டமிடுவதிலும் பலதரப்பட்ட அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றுவீர்கள்
- பலதரப்பட்ட மூலங்களிலிருந்து தரவுகளை இனங்கண்டு சேகரிப்பதோடு, உள்ளக தரவுத்தளங்களை விருத்திசெய்வீர்கள்
- சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பு நடைமுறையின் பகுப்பாய்வு மையமாக அமையும் தரவுகளை தர்க்கித்து, பகுப்பாய்வு செய்வீர்கள்
- உங்களுடைய கண்டறிதல்களையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிப்பீர்கள்

### பயன்கள்

நாங்கள் கவர்ச்சிகரமான வேதனப் பொதியொன்றை வழங்குகின்றோம். எனினும், வெறும் பண ரீதியான நன்மைகளைவிட, வெகுதூரம் விஞ்சிசெல்லும் ஆர்வம் மற்றும் நோக்கம் கொண்ட தனி மனிதர்களையே தேடுகின்றோம். ஆரம்பத்தில் இவ் ஒப்பந்தம் ஒரு வருட காலத்துக்கானதாக அமைந்திருக்கும்.

### ஆர்வமுடையோர்

இது உங்களுக்கு ஆர்வமூட்டுவதாகவிருந்து, நீங்கள் அதற்குத் தகைமையுடையவரென கருதுவீர்களாயின், உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ppd@presidentsoffice.lk**

**விண்ணப்பக்காலக்கெடு: விளம்பரத் திகதியிலிருந்து 7 நாட்கள்**

**Presidential Secretariat**
**Galle Face, Colombo 01**

கைத்தொழில் அமைச்சு

## கைத்தொழில் அமைச்சிற்கு நிகழ்நிலை (online) கைத்தொழில் பதிவு முறைமையை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துதல்

**ஒப்பந்த இல. MIC/FIN/34/30**

கைத்தொழில் அமைச்சிற்கு நிகழ்நிலை கைத்தொழில் பதிவு முறைமையை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கைத்தொழில் அமைச்சின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். இந்த சூழ்நிலையில் கைத்தொழில் அமைச்சு பொருத்தமான மென்பொருள் அபிவிருத்தியாளரை பெறவும், ஒப்புக்கொண்ட காலத்தில் பராமரிக்கவும் திட்டமிட்டுள்ளது. முறைமையின் அபிவிருத்திக்கான திட்ட கால அளவு நான்கு மாதங்களாகும். இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுக் கிரயம் 5 மில்லியன் ரூபாவாகும். (இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்படுகின்றது).

விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக இடம்பெறும். ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 0112327053/0112347392 எனும் தொலைபேசி இலக்கங்கள் அல்லது procurementmic@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக கைத்தொழில் அமைச்சின் தலைமை கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் கீழே தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-08-23ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மீளளிக்கப்படாத கட்டணமான 2000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில், கொழும்பு-03, இல. 73/1, காலி வீதி, கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பம்/கடிதமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் (வேலை நாட்களில்) கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2022-08-23ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை விலைமனு ஆவணத்தின் 1ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் அல்லது நிகழ் நிலையில் பின்வரும் முகவரியில் 2022-08-23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

சகல விலைமனுக்களும் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் மற்றும் விலைமனு ஆவணத்தின் VIIIஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 50,000.00 இல. ரூபாவுக்கான விலைமனுப் பிணை முறியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-08-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கைத்தொழில் அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**கைத்தொழில் அமைச்சு,**
**இல. 73/1, காலி வீதி,**
**கொழும்பு-03.**

2022-08-07.
**தொலைபேசி: 011-2327053**




## விலைமனுவிற்கான அழைப்பின் 1ஆம் பிற்சேர்க்கை

**செயற்றிட்டம்:** மருதானை, தொழில்நுட்ப கல்லூ ரியில் **KOICA** செயற்றிட்டத்தின் கீழ் **CAD** ஆய்வுகூட புனர்நிர்மாணம், கைமுறையாக வரைதல் ஆய்வுகூடம் மற்றும் குழாய் வேலைத்தளத்திற்காக மரத் தரையை வழங்கல் மற்றும் நிறுவுதல்.

**ஒப்பந்த இல.: DTET/09/01/38/R-15/2022/KOICA**

**2022** ஜூலை 24 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மருதானை தொழில்நுட்ப கல்லூரியில் **KOICA** செயற்றிட்டத்தின் கீழ் **CAD** ஆய்வுகூட புனர்நிர்மாணம், கைமுறையாக வரைதல் ஆய்வுகூடம் மற்றும் குழாய் வேலைத்தளம் ஆகியவற்றிற்காக மரத் தரையை வழங்கல் மற்றும் நிறுவுதல் பெறுகைக்காக விலைமனுக்களுக்கான அழைப்பின் மூலப்பிரதியை இந்த பிற்சேர்க்கை மாற்றியமைக்கின்றது. பிற்சேர்க்கை 1 இன் அனைத்து தேவைப்படுத்தல்களும் இத்தால் விலைமனுக்கோரல் ஆவணத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்படுகின்றது.

02. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதித்தன்மையான தேவைப்படுத்தப்படும் CIDA தரமானது சி-6 மற்றும் சி-5 மற்றும் எஸ்பி-3 மற்றும் மேற்பட்ட தரமாகும்.

03. விலைமனுக்கோரல் ஆவணத்தின் ஏனைய அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**எஸ்.சி. ஜகத்**
**பணிப்பாளர் நாயகம்**
**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்.**




# பெறுகை அறிவித்தல்

## களனிப் பல்கலைக்கழகம்

1. களனி பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்களக் கொள்வனவுக் குழு தலைவரால் கீழ்க் காணப்படும் வேலைகளுக்காக தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விடய இல. | ஒப்பந்த இல. | பெயர் | வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி | கேள்விப் பிணையின் பெறுமதித் தொகை | CIDA பதிவு | ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | UK/GA/GA3/2022/18 | Modifications and Renovations of the Staff Canteen | 23,000,000.00 | 230,000.00 இல. ரூபா | SP 3, C6 & C5 | 5,000.00 |

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் விதிமுறைகளுக்கு அமைய இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருத்தலாகாதது என்பதுடன் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் தகுதியை மேற்குறிப்பிடப்பட்ட விதத்தில் அவரால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
4. மேற்குறிப்பிடப்பட்ட விடயத்திற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை வேலை பொறியியலாளர், (0112910163) வேலை பகுதி, களனிப் பல்கலைக்கழகம், தலுகம, களனியில் பெற்றுக்கொள்ளலாம். 2022 ஆகஸ்ட் மாதம் 08ம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 11.30 மணி வரை மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை களனிப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் பொது நிர்வாகம் அவர்களிடம் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வகையில் கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை பல்கலைக்கழகத்துக்குச் செலுத்தி எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் மூலம் 2022 ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 11.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை களனி, தலுகம, களனிப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளர், பொது நிர்வாகம் அவர்களிடம் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணத் தொகுதியின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த கொடுப்பனவு ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரைக்குறி பொறிடப்பட்டு 2022 ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் களனி, தலுகம, களனிப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. 2022 ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
8. சகல கேள்விகளுடனும் தொழில் வழங்குநரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் (இதற்கு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (Institute for Construction, Training & Development - ICTAD) ஊடாக வெளியிடப்பட்டுள்ள கேள்வி கோரல் ஆவணத்தின் உள்ள 9ஆம் பிரிவில் (Standard Bidding Document - Section 09) உள்ளடக்கப்பட்டுள்ள கேள்விப் பிணை மாதிரியினைப் பயன்படுத்துதல் வேண்டும். இலங்கையில் செயற்படும் வங்கியொன்றில் (இலங்கை மத்திய வங்கியில் பதிவைப் பெற்றுள்ள) பெற்றுக்கொண்ட அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியத்தினால் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையை அல்லது குறித்த பிணைக்குரிய பணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**
2022-08-07.

மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகம் (PGIM)

## கொழும்பு பல்கலைக்கழகம்

## கொள்வனவு அறிவித்தல்

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகத்திற்கு வெளியகத்திலிருந்து சாரதிகளை பெறுவதற்கான ஏற்பாடு

**Bid No.: PGIM/GA/07/2021/Outsourced Drivers**

2022.08.23 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகத்திற்கு வெளியகத்திலிருந்து சாரதிகளை பெறுவதற்கான ஏற்பாட்டிற்காக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகத்தின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மபபநி இன் பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து 0704702867 என்ற தொலைபேசி (அலைபேசி) அல்லது **saradmin@pgim.cmb.ac.lk** என்ற மின்னஞ்சல் வழியாக 2022.08.07 ஆம் திகதி மு.ப. 9 மணியிலிருந்து 2022.08.22 ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

193413 என்ற இலக்கத்தைக் கொண்டுள்ள பொறளை இலங்கை வங்கியின் உயர் தர கிளையின் மபபநி இன் கணக்கிற்கு மீளளிக்கப்படாத கட்டணமான 1,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், **saradmin@pgim.cmb.ac.lk** என்ற மின்னஞ்சல் வழியாக மபபநி இன் பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

அனைத்து விலைமனுக்களும் 20,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது பொறளை உயர் தர இலங்கை வங்கியின் 193413 என்ற மபபநி இன் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டு பற்றுச்சீட்டானது விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தியாக்கப்பட்டு, முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Provision of outsourced Drivers Service for the Postgraduate Institute of Medicine, University of Colombo (PGIM/GA/07/2021)** என குறிப்பிடப்பட்டு 2022.08.23 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு கொழும்பு-07, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தையின் 160 ஆம் இலக்கத்திலுள்ள மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவகத்தின் பொது நிருவாக கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். (நாட்டில் நிலவும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதி திகதியில் ஏதாவது மாற்றம் ஏற்படின், அம்மாற்றமானது **https://pgim.cmb.ac.lk** என்ற மபபநி இன் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

விலைமனுக்கள் 2022.08.23 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மருத்துவ பட்டப்பின் பட்ட நிறுவக பொது நிருவாக கிளையில் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுக்களின் திறத்தலுக்கு சமுகமளிக்க விரும்பும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான மற்றும் பூர்த்தி செய்யப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**மருத்துவ பட்டப் பின் பட்ட நிறுவகம்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**இல.: 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு-07.**
06.08.2022

JOB OPPORTUNITY
Season media ceylon (PVT) LTD urgent required young, energetic and experienced candidates for
SALES & MARKETING
(Female)
Full time / Part time
VIDEO EDITOR & VIDEOGRAPHER
(Male)
Able to travel for overseas projects and salary can be negotiable with other benefits.
Send your updated CV to
smpceylon@gmail.com
Contact
+9476 628 1292 / +94 78 119 2524

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## எரிவாயு பற்றாக்குறை...

04ஆம் பக்க தொடர் ...

அதாவது லிற்றோ நிறுவனம் திறைச்சேரிக்கு உலக வங்கியின் கடனை 5 மாதங்களுக்குள் மாதந்தோறும் செலுத்தினாலும் திறைச்சேரி அதனை 15 வருடத்திலேயே உலக வங்கிக்கு செலுத்த வேண்டும். அதன்படி 22 மில்லியன் டொலர் மேலதிகமாக திறைச்சேரிக்கு சொந்தமாகும்.

லிற்றோ நிறுவனம் தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் விலைச் சூத்திரம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. அதன் முதல் நடவடிக்கையாக எரிவாயு விலை குறைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 22 நாட்கள் இவ்வாறு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலமே எரிவாயுவுக்கான வரிசை முடிவுக்கு வந்தது.

### ஜனாதிபதி செயலணி தலைவர் சாகல ரத்நாயக்க

துணிச்சலாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். எரிவாயு நிறுவனத்தின் தாய் நிறுவனத்துடனும் கலந்துரையாடினேன். அதிகாரிகளை அழைத்து என்ன தடைகள் காணப்படுகின்றன என அறிந்து அவற்றை நீக்கவே நான் முயற்சி செய்தேன். மத்திய வங்கி அதிகாரிகள்,லிற்றோ நிறுவன அதிகாரிகளுடன் இரவு பகல் பாராது கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இன்று வெற்றியடைந்துள்ளன. அதனால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

நாட்டில் எரிபொருளுக்கான கியூ வரிசை குறைய சில வாரங்கள் செல்லும். ஆனால் இன்று எரிவாயு போதுமான அளவு உள்ளது. உலகவங்கி அதிகாரிகள் எமக்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். எமக்கு இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்கள் பெரும் உதவியாக இருந்தார்கள். எவ்வளவு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டாலும் ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் எரிவாயு சிலிண்டரை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது. நான் அதிகாரிகளுடன் தேவையான ஆலோசனைகள் வழங்கி ஒருங்கிணைத்தேன். மேற்கொண்டேன். இன்று அது வெற்றி அடைந்துள்ளது.

## தொன்மை மிக்க கதிர்காம...

15 ஆம் பக்க தொடர்...

அக்காலத்திலேயே செல்வச் சந்நிதியிலிருந்து கதிர்காம யாத்திரிகர்கள் புறப்பட்டுக் கால்நடையாக கிழக்குக் கரையூடாக வெருகல், சித்தாண்டி, திருக்கோவில், உகந்தை ஆகிய முருகதலங்களைத் தரிசித்துக் கதிர்காமத்தைச் சென்றடையும் வழக்கம் நிலவிவந்துள்ளதாக அறியமுடிகின்றது.

கிபி 14ம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதர், கதிர்காம முருகனைத் தரிசித்து அவரது அருளினால் 25க்கும் மேற்பட்ட திருப்புகழ் மாலைகளையும் சாற்றியுள்ளார்.

அக்காலத்தில் கதிர்காமம் இந்துக்களின் புகழ்பூத்த தலமாக விளங்கியிருந்ததை அருணகிரிநாதர் இத்தலத்தின் மீது பாடிய இருபத்தைந்து பாடல்களும் எடுத்துக் காட்டுவதோடு முருகனது அறுபடை வீடுகளோடு இதுவும் அருணகிரி நாதரின் பாடல்களில் இடம் பெற்றிருப்பது நினைவு கூறற் பாலது. போர்த்துக்கேயர் காலத்தில் புகழ்பெற்ற ஆலயங்கள் பல இடித்துச்

சேதமாக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டன. முன்னீசுவரம் சிவாலயம். தெய்வேந்துறை விஷ்ணு ஆலயம், கோணேஸ்வரம், திருக்கோவில் ஆகியன இவற்றில் அடங்கும் ஆனால் கதிர்காமம் முருகன் ஆலயத்தில் மட்டும் போர்த்துக்கேயரது எண்ணம் ஈடேறவில்லை.

இதனை கிபி 1640ல் இலங்கையில் வாழ்ந்த போர்த்துக்கேயரான ரிபேயிரோ என்பவர் தனது இலங்கைச் சரித்திரம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். கண்டி மன்னர் காலத்தில் கதிர்காமம் கண்டி மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு வந்துள்ளது.

ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் கதிர்காம முருகன் ஆலயம் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதுடன் ஆலய உற்சவம், பூசை வழிபாடுகள் ஆகியன ஒழுங்காகவும் இடம் பெற்று வந்துள்ளன.

உற்சவ காலத்தில் (ஆடிவிழா) இலங்கையின் எல்லா இடங்களிலிருந்தும் வடஇந்தியாவிலிருந்தும் (காஸ்மீர்) யாத்திரிகர்கள் வந்து ஒன்று கூடுவர் இவர்களுக்கான தங்குமிடங்கள், பொலிஸ் பாதுகாப்பு, சுகாதார வசதி, முதலியவற்றை அரசு செய்து கொடுக்கும். வரலாற்றுக் குறிப்புக்கள் மூலமாக இவற்றை அறிய முடிகின்றது.


### வீட்டு பணிப்பெண் தேவை

கொழும்பிளுள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. உணவு,தங்குமிடம் உண்டு. சம்பளம் 35,000/=.

தொடர்புகளுக்கு : 0706987341

( மாலை 6:00 மணிக்கு பின் அழைக்கவும்)



## பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சி.

மற்றும்

## பீப்பள்ஸ் மைக்ரோ – கொமர்ஸ் லிமிடெட்

# தரமான வாகனங்களின் ஏல விற்பனை

டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் டிராக்டர்கள், இயந்திர உபகரணங்கள் உட்பட 88 வாகனங்கள்

2022 ஆகஸ்ட் 13 ஆம் திகதி சனிக்கிழமை அன்று BMICH இல்' "மிஹிலக்க மெதுர" வில் காலை 9.00 மணி முதல் நடைபெறும்.

முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 09 கிளைகளில் நேரடியாக ஏல விற்பனையுடன் தொடர்புகொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் கீழ் குறிப்பிடப்படும் கிளைகளுக்கு பிரவேசிப்பதன் மூலம் உங்களுக்கு இந்த ஏல விற்பனையில் விலை மனுக்களை முன்வைப்பதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

களனி/ கம்பஹா/ குருநாகல்/ தம்புள்ளை/ மொனராகலை/ மாத்தறை/ கண்டி/ யாழ்ப்பானம் /அநுராதபுரம்

பரீட்சித்தல் ஜுன் ஆகஸ்ட் 09 ஆம் திகதி ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரை

மாபிம : 0112 401031 / கலேவல: 0662 287355 / மாஎகாவ : 0112 964300
மாலபே : 0761 064773 / மாத்தறை: 0413 127271 / மொனராகலை : 0552 277461

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| களஎவல வாகனக் கூடம் | | | |
| CP-HR-1XXX | BUS | LEYLAND VIKING SEATS 42 | 2003 |
| UP-NA-6XXX | BUS | LEYLAND VIKING SEATS 54 | 2008 |
| NC-HW-9XXX | BUS | LEYLAND VIKING SEATS 59 | 2004 |
| CP-NB-4XXX | BUS | TATA LP1512TC SEATS 46 | 2012 |
| UP-DAB-3XXX | CAB | PIAGGIO APE TRUCK PLUS | 2012 |
| CP-JI-0XXX | CAR | TOYOTA VEROSSA TA-GX 110 | 2001 |
| COMBINE HAVESTER | COMBINE HARVESTER | AGROTECH ECO COMBINE HARVESTER | 2018 |
| CP-ZA-0XXX | JCB | JCB 4CN | 2000 |
| CP-ZA-6XXX | LOADER | KOMATSU WA200PT WHEEL LOADER | 2008 |
| 42-3XXX | LORRY | TATA 1210 | 1990 |
| 48-0XXX | LORRY | TATA 1612 | 1995 |
| SP LJ-5XXX | LORRY | TATA LPT 1615 | 2011 |
| NP-RG-0XXX | TRACTOR | FARMTRAC FT6050 | 2018 |
| NW-RF-9XXX | TRACTOR | NEW HOLLAND 4710 | 2018 |
| NW-RG-0XXX | TRACTOR | SONALIKA DI 50RX | 2018 |
| EP-RD-9XXX | TRACTOR | TAFE | 2014 |
| CP-RF-9XXX | TRACTOR | TAFE 45DI | 2018 |
| 60-4XXX | VAN | ISUZU WFR53 | 1986 |
| 56-0XXX | VAN | MAZDA BONGO | 1990 |
| மாபிம வாகனக் கூடம் | | | |
| WP NB-7XXX | BUS | FORCE TRAVELER MINI BUS SEATS 20 | 2012 |
| WP HY-2XXX | BUS | LEYLAND VIKING SEATS 54 | 2004 |
| WP-NC-8XXX | BUS | MITSUBISHI BE63EG SEATS 28 | 2012 |
| WP-ND-3XXX | BUS | MITSUBISHI PDG BE63DE ROSA SEATS 25 | 2007 |
| 60 SRI 1XXX | BUS | MITSUBISHI ROSA SEATS 24 | 1985 |
| WP ND-3XXX | BUS | MITSUBISHI ROSA SEATS 32 | 2008 |
| 29 SRI 5XXX | BUS | MITSUBISHI SEATS 25 | 1980 |
| WP-ND-8XXX | BUS | MITSUBISHI SKG-BE640J ROSA SEATS 32 | 2012 |
| WP-ND-3XXX | BUS | MITSUBISHI TPG-BE640J SEATS 32 | 2012 |
| WP-NE-0XXX | BUS | MITSUBISHI U-MS729SKAI SEATS 53 | 1992 |
| NW-ND-8XXX | BUS | NISSAN U-RA530RBN SEATS 56 | 1995 |
| WP-NA-2XXX | BUS | TEMPO CITYLINE BUS SEATS 16 | 2005 |
| WP-NB-0XXX | BUS | ZONDA YCK6849HP SEATS 33 | 2011 |
| SG-NC-4XXX | BUS | LEYLAND VIKING SEATS 42 | 2008 |
| WP-ND-6XXX | BUS | LEYLAND VIKING SEATS 54 | 2007 |
| WP-NA-9XXX | BUS | TATA LPO1512 STARBUS SEATS 57 | 2010 |
| WP-DAG-1XXX | CAB | LANKA ASHOK LEYLAND DOST LS | 2015 |
| WP-KO-5XXX | CAR | LEXUS DAA-ANF10 | 2009 |
| WP CAR-3XXX | CAR | TOYOTA DAA-NKE165 AXIO | 2016 |
| WP CAR-3XXX | CAR | TOYOTA DAA-NKE165 AXIO | 2016 |
| 17-9XXX | CAR | TOYOTA L-KA67V CARINA | 1987 |
| SP-LO-1XXX | FREEZER | ISUZU TQG NPR85AN ELF | 2014 |
| SP-LF-0XXX | FREEZER | JAC HFC1048K | 2008 |
| NW-PX-7XXX | LORRY | FOTON | 2014 |
| WP-LJ-7XXX | LORRY | JAC HFC 1048K | 2012 |
| 42-9XXX | LORRY | LEYLAND COMET SUPER | 1991 |
| WP-XY-6XXX | MOTOR BIKE | BAJAJ PULSAR-150CC | 2012 |
| SP BCK-8XXX | MOTOR BIKE | MAHINDRA GUSTO | 2015 |
| UP BGR-4XXX | MOTOR BIKE | YAMAHA RAY ZR | 2018 |
| 47-4XXX | PRIME MOVER | MERCEDES BENZ PRIME MOVER | 1994 |
| WP QS-9XXX | THREE WHEELER | BAJAJ 4S | 2009 |
| SP YC-8XXX | THREE WHEELER | BAJAJ AR 4S UG | 2010 |
| SP QW-6XXX | THREE WHEELER | BAJAJ AR4S-UG | 2009 |
| WP-QJ-3XXX | THREE WHEELER | BAJAJ AUTO AR4S | 2007 |
| WP-QE-5XXX | THREE WHEELER | BAJAJ AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QI-6XXX | THREE WHEELER | BAJAJ AUTO RE 2 STROKE | 2006 |
| SP QU-2XXX | THREE WHEELER | BAJAJ 4S | 2008 |
| WP YR-9XXX | THREE WHEELER | BAJAJ RE | 2011 |
| WP YT-6XXX | THREE WHEELER | BAJAJ RE205 | 2011 |
| WP AAI-8XXX | THREE WHEELER | BAJAJ RE205 | 2013 |
| SP ABK-9XXX | THREE WHEELER | BAJAJ RE-SB | 2016 |
| WP AAX-3XXX | THREE WHEELER | BAJAJ RE-SB | 2015 |
| SP-YD-0XXX | THREE WHEELER | HEROWHEELS HRW | 2010 |
| WP-YO-3XXX | THREE WHEELER | TVS KING | 2011 |
| WP-YR-5XXX | THREE WHEELER | TVS KING | 2011 |
| 53-9XXX | VAN | NISSAN CARAVAN | 1987 |
| WP ND-3XXX | VAN | TOYOTA HIACE | 2012 |
| WP-YG-4XXX | THREE WHEELER | TVS KING | 2010 |
| WP-JW-6XXX | LORRY | TATA LPT709 | 2005 |
| WP-AAZ-0XXX | THREE WHEELER | TVS TVS KING | 2015 |
| 64-4XXX | CAR | ISUZU GEMINI | 1990 |
| WP ND-6XXX | VAN | TOYOTA HIACE KDH223R-LEMDYT | 2018 |
| மாஎகாவ வாகனக் கூடம் | | | |
| 58-3XXX | CAB | MITSUBISHI SK34T | 1992 |
| PRINTING MACHINE | PRINTING MACHINE | SOLNA OFFSET | 1989 |
| மாலபே வாகனக் கூடம் | | | |
| WP-NB-6XXX | BUS | NISSAN DIESEL KC-RA531MBN SEATS 50 | 1996 |
| WP-KT-5XXX | CAR | FORD FOCUS | 2011 |
| மாத்தறை வாகனக் கூடம் | | | |
| 63-1XXX | BUS | HINO SEATS 27 | 1989 |
| 30-9XXX | BUS | ISUZU JOURNEY SEATS 25 | 1984 |
| SP-LG-7XXX | CAB | TATA 207DI | 2009 |
| SP-LO-0XXX | FREEZER | HINO BKG-GC7JKYG RANGER | 2009 |
| மொனராகலை வாகனக் கூடம் | | | |
| COMBINE HARVESTER | COMBINE HARVESTER | KIOTI DSF75GT | 2018 |
| COMBINE HAVESTER | COMBINE HARVESTER | YANMAR AW82GV | 2017 |
| UP BIQ-2XXX | MOTOR BIKE | YAMAHA YC 125-5 | 2019 |
| PAVER MACHINE | PAVER MACHINE | BARBER GREENE SA144A | 1993 |
| ROAD ROLLER | ROAD ROLLER | INGERSOLL RAND IR DD90 | 1993 |
| EP-RG-0XXX | TRACTOR | FARMTRAC FT_6050 | 2018 |
| EP-RF-9XXX | TRACTOR | FARMTRAC FT-6050 | 2018 |
| EP-RF-7XXX | TRACTOR | MAHINDRA YUVO 575 DISPS | 2018 |
| CP-ZA-6XXX | WHEEL LOADER | CASE 721 WHEEL LOADER | 2004 |

**விற்பனை தொடர்பான நிபந்தனை**

- உள்நுழைவு : கொழும்பின் பிரதான ஏல விற்பனைக்கான நுழைவுக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத ரூ.2000/- அனுமதிச் சீட்டு மற்றும் மீளச் செலுத்தப்படும் ரூ.10000/- அனுமதிச் சீட்டு மூலமாக அறவிடப்படும்.
  வலையமைப்பு அடிப்படையிலான ஏல விற்பனைக்கான பதிவுகள், குறித்த கிளைகளில் ஏல விற்பனை தினமன்று மேற்கொள்ளப்படும்.
  ஏல விற்பனை அரசாங்கத்தின் சுகாதார சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்கொள்ளப்படும்.
- கொடுப்பனவு :சுத்தியல் வைக்கப்பட்ட உடன் மீளளிக்கப்படாத 25% ஆரம்ப வைப்பு ஒன்றை பணமாக செலுத்த வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.00க்கு முன்னர். இல.: 1161, மருதானை வீதி, கொழும்பு 08 முகவரியில் அமைந்துள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் தலைமை அலுவலகத்தில் அல்லது எந்த ஒரு பீப்பள்ஸ் லீசிங் கிளைகளில்.
- எந்தவொரு வாகனத்தை / வாகனங்களை முன்னறிவித்தல் இன்றி ஏல விற்பனையிலிருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏல விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

DOadv

ඒ එන් අල්ගෙවත්ත ඔක්ෂනියර්
A N ALGEWATHTHA AUCTIONEER
AUCTIONEER Black Tie Service with True Aloha!
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.lankaauction.lk



# கைத்தொழில் அமைச்சு
# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

அரசுக்கு சொந்தமான முழுமையான கம்பனியான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் நிறுவனத்தில் பொது முகாமையாளர் பதவிக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பொது முகாமையாளர் - General Manager
### (சிரேஷ்ட முகாமையாளர் சேவை வகுதி HM-2-1)

**வெற்றிடம் காணப்படும் இடம் - புல்மோட்டை இயந்திர அரங்கம் வெற்றிடம் 01**
**(தேவைப்பாட்டின் பிரகாரம் தலைமையகம் மற்றும் புல்மோட்டை இயந்திர அரங்கத்தில் சேவையாற்றல் வேண்டும்)**

**வெளி விண்ணப்பதாரிகள்**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம்/ விஞ்ஞானம்/வர்த்தக நிர்வாகம்/முகாமைத்துவம்/கணக்கியல் பற்றிய முதலாம் பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

மனிதவள முகாமைத்துவம்/விஞ்ஞானம்/வர்த்தக நிர்வாகம்/முகாமைத்துவம்/கணக்கியல் துறையுடன் சம்பந்தப்பட்ட பாடத்துறையில் பட்டப் பின்படிப்பை பெற்றிருத்தல் அல்லது முகாமைத்துவம் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தில் கிட்டிய அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

பட்டத் தகைமைகளை பெற்றுக் கொண்ட பின்னர் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் நிறுவன முகாமைத்துவ மட்டத்தில் பதவிகளுக்கு குறைந்த பட்சம் 18 வருட அனுபவம் (குறைந்த பட்சம் இதில் 05 வருடமாவது சிரேஷ்ட முகாமைத்துவ பட்டமாக இருத்தல் வேண்டும்)

**அல்லது**

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவ/ விஞ்ஞானம்/வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம்/கணக்கியல் பற்றிய ஆரம்ப மட்டத்தை பெற்றிருத்தல்

**அத்துடன்**

மனிதவள முகாமைத்துவ/விஞ்ஞானம்/வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம்/கணக்கியல் பற்றிய பாடத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன் ஆரம்ப பட்டத்தை பெற்றுக் கொண்டதன் பின்பு அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் நிறுவன சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட சேவை அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்:**

நிறுனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் பதவியொன்றில் குறைந்த பட்சம் 05 வருடம் குறித்த பாடத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**அத்துடன்**

நானாவித செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கல் போலவே மனிதவள மற்றும் ஏனைய வளங்கல் செயற்பாடுகளில் முகாமைத்துவத்தில் நிலையான நிபுனத்துவம்.

HM-2-1 சேவை வகுதியுடன் சம்பந்தப்பட்ட சம்பள குறியீடு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு

முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016இன் பிரகாரம் சம்பள குறியீடு இல. HM-2-1, ரூ. 91,645/- = 2700x12 =124045/- நிறுத்தி சம்பளம் வழங்கப்படும்.

வயதெல்லை - 35 வயதிற்கு குறையாது இருப்பதுடன் 55 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

பொதுவாகச் செலுத்தப்படும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக HM 2-1 சம்பள வகுதிக்காக கீழ்க்கணும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

**கொடுப்பனவுகள்**

1. PED/1/2015,PED/1/2015(i) மற்றும் PED/1/2015(ii) என்ற சுற்றுநிருபத்தின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது அலுவலக விடயங்களுக்காக நிறுவனத்தின் வாகனம் ஆகிய இரண்டில் ஒன்று வழங்கப்படும்.
2. அரச வர்த்தக சுற்றுநிருப இல. 02/2022இன் பிரகாரம் தொலைத் தொடர்பு கட்டணங்கள் செலுத்தப்படும்.
3. முகாமைத்துவ சேவை சுற்று நிருப இல. 05/2017இன் பிரகாரம் பதவியுடன் சம்பந்தப்பட்ட செயற்பாட்டு சேவைக்காலத்தை அடிப்படையாக்க கொண்டு தொழில்சார் கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

   உள்ளக விண்ணப்பதாரிகளை சேர்த்துக் கொள்ளும் போது நிலை நிறுத்த வேண்டிய சம்பள கட்டம் நிறுவனத் கோவையின் VIIஆம் பந்தியின் விதிமுறைகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும். செலுத்தப்படும் சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் உரித்தாகும்.

**பொதுவான கொடுப்பனவுகள்**

01. திறைசேரி அனுமதித்த ரூ. 7800/- ஆகிய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள்
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த கொடுப்பனவின் அடிப்படையில் உரித்தாகும்.
03. மாதாந்த வருகை ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வருகையின் அடிப்படையிலாகும்.
04. மாதாந்தம் ரூ. 4,000/- ஆகிய இடர் கொடுப்பனவு (புல்மோட்டை இயந்திர அரங்கிள் ஊழியர்களுக்காக மட்டும்)

**சலுகைகள்:**

01. வருடாந்த உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு
02. வருடாந்த போனஸ் கொடுப்பனவு
03. சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலை அனுமதி மற்றும் வெளிச் சிகிச்சைக்கான காப்புறுதி காப்பீடு
    i. ஒரு வருடத்திற்காக ரூ. 200,000/- வைத்தியசாலை அனுமதி காப்புறுதி காப்பீடு (குடும்ப அங்கத்தவர்கள் உற்பட)
    ii. ஒரு வருடத்திற்காக ரூ. 20,000/- வெளி சிகிச்சை பற்றுச் சீட்டுகள் மீள் செலுத்துகை (குடும்ப அங்கத்தவர்கள் உற்பட)
    iii. ஒரு வருடத்திற்கு ரூ. 5,000/- பற்சிகிச்சை பற்றுச் சீட்டு மீள் செலுத்துகை (குடும்ப அங்கத்தவர்கள் உற்பட)
04. நிரந்தர (நிலையான) எல்லைக்காக மருத்துவ செலவுகளை வழங்குதல்
    i. ஒரு வருடத்திற்கு ஒரு முறை ரூ. 5,000/- கொடுப்பனவு (பொதுவான மருத்துவ கட்டணங்களுக்காக)
    ii. இரு வருடங்களுக்கு ஒரு முறை ரூ. 12,000/- கொடுப்பனவும் (மருத்துவ நிபுணர் கட்டணம், மருத்துவ பரிசீலனைக் கட்டணம், மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புலக் கருவி செலவுகள்)
    iii. பிரசவத்திற்காக 02 வருடத்திற்கு ஒரு முறை ரூ. 12,000/-
05. இதற்கு மேலதிக நிரந்தர ஊழியர்களுக்கு வேறு வேறாக சலுகைகள் பெறுவதற்கு உரித்துரிமையுடையது.
06. ஊழியரினால் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு 10% உம், நிறுவனத்தினால் 15% பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நிறுவனத்தின் பங்களிப்பு 3% ஆகும்.

**பொது நிபந்தனைகள்:**

1. சகல விண்ணப்பதாரிகளும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுவது போலவே நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு தேவையான உடல் உள தகைமைகள் கொண்டிருத்தல் வேண்டும்.
3. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரரின் முழு வருமானத்தில் வருமானம் ஈட்டும்போது செலுத்தப்படும் வரி (Pay as You Earn Paye Tex) அறவிடப்படும்.

அரச சேயையில்/கூட்டுத்தாபனங்களில்/நியதிகள் சபைகளில் மற்றும் அரச கம்பனிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை தமது குறித்த திணைக்களங்கள்/நிறுவனங்களின் தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்படும் பொது முகமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் (குறித்த சான்றிதழ் பத்திரங்களின் புகைப்படப் பிரதிகளுடன்) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/21இல் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட் இன் தலைவருக்கு 2022 ஓகஸ்ட் 22ம் திகதிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் துவேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்,**
**இல. 341/21, சரண மாவத்தை,**
**ராஜகிரிய.**


## கொழும்பு நகரசபையின்...

(10ஆம் பக்கத் தொடர்)

அதே ஆண்டில் பொது போக்குவரத்துக்காக மின்சார ட்ராம் ஆரம்பிக்கப்பட்டது.1920 இல் கொழும்பின் மக்கள் தொகை 300,000 ஆக இருந்தது. 1939 இல் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், கொழும்பின் சனத்தொகையில் 25% பேர் சேரிகளில் வசிப்பதாகவும், இதேபோன்ற மற்றொரு சதவீதத்தினர் இதேபோன்ற வீடுகளில் வாழ்ந்து வருவதாகவும் கணிக்கப்பட்டது. 1943 ஆம் ஆண்டில், Bousted நிறுவனத்திற்கு 3,663,443 ரூபாவை செலுத்திய பின்னர் , டிராம் வண்டிச் சேவை கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமானது. 1954 இல், கட்டணப் பேருந்து சேவை தொடங்கப்பட்டவுடன், அதுவரை இருந்த டிராம் ரயில்கள் அகற்றப்பட்டன. 1895 ஆம் ஆண்டில், Baustead நிறுவனம் வணிகரீதியாக மின்சாரம் தயாரித்து, கோட்டைப் பகுதி மற்றும் முக்கியமான அரசாங்க கட்டிடங்களை வெளிச்சமாக்குவதற்கு போதுமான மின்சாரத்தை வழங்கியது. 1927 இல், பவுஸ்டட் நிறுவனத்திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையத்தை அரசாங்கம் வாங்கியது. அதே நேரத்தில், அரசு மின்சாரத் துறையும் தொடங்கப்பட்டது. 1946 இல் அரசாங்க மின்சார திணைக்களம் 372,848 ரூபாயை இலாபம் ஈட்டியுள்ளது.

கொழும்பில் வாழும் நாய்களும் நகர சபையால் விதிக்கப்பட்ட வரிக்கு அடிபணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 1905ஆண்டளவில், நாய்களை வளர்க்கும் ஒவ்வொரு வீட்டுக்காரரும் ஒரு நாய்க்கு ஆண்டுக்கு ஒரு ரூபாய் வரி செலுத்த வேண்டும். இதன் மூலம் அந்த வருடத்தில் மாநகர சபையின் வருமானமாக ரூபா 5382/= கிடைத்தது. மேலும் அந்த ஆண்டில் 2072 தெருநாய்கள் மாநகர சபையின் பரிசோதகர்களால் பிடிக்கப்பட்டு அவற்றில் 1374 நாய்கள் அழிக்கப்பட்டன.

கொழும்பு மாநகர சபையால் தெமட்டகொட மற்றும் மாதம்பிட்டிய ஆகிய இடங்களில் இரண்டு இறைச்சிக் கடைகள் இயங்கி வந்தன. 1905 ஆம் ஆண்டு மனித நுகர்வுக்காக இந்தக் கடைகளால் கொல்லப்பட்ட செம்மறி ஆடுகள், பன்றிகள், ஆடுகள் மற்றும் கால்நடைகளின் எண்ணிக்கை 86,956 ஆகும் . அதிலிருந்து கிடைத்த மாநகர சபையின் வருமானம் 46,614 ரூபாவாகும். மேலும், அந்த ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட இறைச்சியின் அளவு 227,206இறாத்தல்களாகும்.

1905 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல், நகரசபை குப்பைகளை சுத்தப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்ததுடன், அந்த முதல் வருடத்திற்கான செலவு 33,000/= ரூபாவாகும்.

கொழும்பில் நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக, கோடை காலத்தில் நகர வீதிகளை தண்ணீரால் நனைப்பதான் மூலம், நகரின் தூசியை குறைக்கலாம் என அப்போது எதிர்பார்க்கப்பட்டது. இதற்காக 1905 இல்செலவிடப்பட்ட தொகை 10,799 ரூபாய்கள் ஆகும்.

1879 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபையினால் விலங்குகளை அறுப்பதற்காக அறவிடப்படும் வரிக் கட்டணத்தை அதிகரித்ததற்கு எதிராக கொழும்பு இறைச்சிக் கடைக்காரர்கள் மூன்று நாட்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அப்போதைய நாளிதழ்களில் இது பெரிதாக பேசப்பட்டன. அப்போதெல்லாம் வேலைநிறுத்தங்கள் இலங்கைக்கு அந்நியமானதாக இருந்தது. இலங்கை மக்களும், அரசாங்கமும் அதற்கு எதிர்கொண்டது கிடையாது. "கத்தலிக் மெசேஞ்சர்" நாளிதழ் "தொழில்முறை குழுவொன்றுதமது கோரிக்கைக்காக தமது வியாபார ஸ்தலத்தை மூடிய முதல் சந்தர்ப்பம் இது என்றது.

இலங்கையின் இறைச்சிக் கடைக்காரர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் இலங்கையின் வரலாற்றில் பெரிதாக ஆராயப்படாத ஒன்று. அச்சுத் தொழிலாளர் போராட்டம் கூட 1893 இல் தான் நிகழ்ந்தது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். "மகாராணியின் பிரஜைகளை மரக்கறி சொதியுடன் உணவு உண்ண வைத்துவிட்டார்கள்." என்று சிலோன் டைம்ஸ் பத்திரிகை நையாண்டியுடன் கட்டுரை தீட்டியது.

கொழும்பு மாநகர சபையின் உருவாக்கத்தைப் பற்றிப் பார்த்தோம். மாநகர சபைக் கட்டிடம் எங்கே இயங்கியது. எப்படி உருவானது. எப்படியெல்லாம வளர்ச்சி பெற்றது என்கிற சுவாரசியமான தகவல்களை அடுத்த வாரம் பார்ப்போம்.

## இந்திய எல்லைப் பிரதேசங்களை...

(06ஆம் பக்கத் தொடர்)

அருணாச்சலப் பிரதேசம் குறித்து சீனா முந்திய காலங்களில் தொடர்ச்சியாக உரிமை கோருவதும், ஒவ்வொரு முறையும் இந்தியா அதனை கடுமையாக மறுப்பதும் வழமையாகும். தனது நிலைப்பாட்டிற்கு வலு சேர்க்கும் வகையில், அருணாச்சலப் பிரதேசத்திற்கு இந்தியாவின் மூத்த தலைவர்களும் அதிகாரிகளும் வருகை தரும் போது, சீனா தனது எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறது.

2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடுவின் வருகைக்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்தது. மேலும், எல்லைப் பிரச்சினையை அதிகரிக்கும் எந்தவொரு செயலையும் இந்தியா மேற்கொள்ளக் கூடாது என்று சீனா தெரிவித்தது.

சீனாவின் இந்த எதிர்ப்புக்கு இந்தியா பலத்த கண்டனமும் தெரிவித்திருந்தது.இந்தியத் தலைவர்கள் அருணாச்சலப் பிரதேசத்துக்கு வருகை தந்ததற்கு ஆட்சேபனை தெரிவிக்க சீனாவுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்று இந்தியா பதிலடி வழங்கியிருந்தது.

இதற்கு முன்னதாக பிரதமர் நரேந்திர மோடியும், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் அருணாச்சலப் பிரதேசத்திற்கு 2019 ஆம் ஆண்டு வருகை தந்ததற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. 2020ஆம் ஆண்டு உள்துறை அமைச்சர் அமித் ஷா அருணாச்சலப் பிரதேசத்துக்குச் சென்ற போதும் சீனா எதிர்ப்பு தெரிவித்தமை நினைவுகூரத் தக்கது.

இந்தியாவின் வடகிழக்கே உள்ள கடைசி மாநிலம் அருணாசல பிரதேசம் ஆகும். அந்த மாநிலத்தின் சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் எல்லை சீனாவின் எல்லையையொட்டி இருக்கிறது. இதை தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் சீனா அருணாசல பிரதேசத்தின் பெரும்பாலான எல்லைப் பகுதிகளுக்கு உரிமை கொண்டாடி வருகின்றது. அதை 'தென் திபெத்' என்று சீனா அழைக்கிறது.

அருணாச்சலப் பிரதேச எல்லைத் தகராறு இருந்தாலும் அதன் அழகான மலைகள், ஆறுகள், காடுகள் என அமைதியான மாநிலமாக இருந்து வந்தாலும், சில காலமாக அங்கு நிலைமை மாறி, எல்லைப் பகுதிகளில் பதற்றம் நிலவுவது வழமையாகியுள்ளது.

லடாக்கில் முன்னர் இந்தியா_சீனா இடையே நடந்த மோதலின் தாக்கம், 17 இலட்சம் மக்கள் தொகை கொண்ட அருணாசல பிரதேசத்திலும் உணரப்பட்டது. ஆனால், அங்குள்ள நிலைமை தொடர்பான செய்திகள் மிகக் குறைவாகவே வெளிவருவதுண்டு. அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இருந்த போதிலும், மக்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று வருவது போல அங்கு நேரடியாக நுழைய முடியாது. சீனாவின் ஊடுருவல் காரணமாக அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகம்.

அங்குள்ள கிராமங்களும் சிறியவையாகும். அவற்றுக்கு இடையில் பல கி.மீ தூர இடைவெளி காணப்படும். லடாக்கில் இந்தியா மற்றும் சீன வீரர்களுக்கு இடையேயான மோதல் நடந்தது முதல் இராணுவத்தினரின் இருப்பு இங்கு அதிகமாகக் காணப்படுகிறது. சீன வீரர்கள் சில சமயங்களில் எல்லைக்கு அருகில் வருவார்கள் என்று அருணாச்சலப் பிரதேச கிராம மக்கள் கூறுகிறார்கள். சீன இராணுவ வீரர்கள் இந்திய எல்லைக்குள் எப்படி வருகிறார்கள் என்று கிராமத்தைச் சேர்ந்த சிலர் இவ்வாறு கூறுகின்றனர்.

"எல்லைக்கு அப்பால் இருந்து விவசாயிகளை வழிநடத்தியபடி சீன வீரர்கள் இந்தப் பகுதிக்கு வருகிறார்கள். அவர்கள் அந்த இடத்தைப் பின்தொடர்ந்து சுற்றி வளைக்கிறார்கள். அவர்கள் விலங்குகளை கொட்டகைகளில் விட்டுச் செல்வார்கள். பின்னர் அவர்கள் வந்து அவற்றை அழைத்துச் செல்வார்கள். வீட்டுக்கு முன்னால், வயல்வெளிக்கு முன்னால், சீன வீரர்கள் தங்கள் வாகனத்தை கொண்டு வந்து நிறுத்துவார்கள்".

அவ்வாறு மக்கள் கூறுகின்றனர். சீன வீரர்கள் வந்து நிற்கும் கிராமம் இந்தியாவைச் சேர்ந்தது. இந்திய எல்லைக்குள் சீனாவின் செயல்பாடுகள் வேகமாக அதிகரித்துள்ளன. சீன இராணுவம் இந்திய எல்லையில் அதன் கண்காணிப்பு கோபுரங்களையும் இராணுவ தளங்களையும் பெரிய அளவில் கட்டியிருப்பதாக தகவல் உள்ளது.

சீனாவின் ஊடுருவலை சமாளிக்கும் பலம் இந்தியாவிற்கு உள்ளது. ஆனால் சீனாவுடனான மோதல்களை இந்தியா பெருமளவு தவிர்த்தே வருகின்றது. ஆனாலும் சீனாவின் எத்தகைய அச்சுறுத்தலையும் முடியடிப்பதில் இந்தியப் படைகள் மிகுந்த பலத்துடன் எந்நேரமும் உஷார் நிலையிலேயே உள்ளன. சீனாவின் ஊடுருவலை முறியடிக்கும் வகையில் இந்தியாவும் தனது எல்லையில் படையினரைக் குவித்துள்ளதுடன், பலத்தையும் அதிகரித்துள்ளது.

## ஸ்திரத்தன்மையை நிலைநாட்டும்...

(06ஆம் பக்கத் தொடர்)

இருந்தபோதும் அரசாங்கத்தின் சர்வ கட்சி வேலைத்திட்டத்தில் தாம் இணைந்து கொள்ளப் போவதில்லையென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

அதேநேரம், அரசியல் ஸ்திரத்தன்மையை மேலும் பலப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் 22 ஆவது திருத்தச்சட்டமூலத்தை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. பாராளுமன்றத்துக்கும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் பலத்தை வழங்கும் நோக்கில் தயாரிக்கப்பட்ட 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் உள்ள பல அம்சங்கள் 22வது திருத்தச் சட்டமூலத்தில் இருப்பதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கூறியுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று எட்டப்படும் சந்தர்ப்பத்தில் 22வது திருத்தச் சட்டத்தையும் விரைவில் நிறைவேற்றி அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவில் ஏற்படுத்த முடியும். அரசியல் கட்சிகள் தமது சார்பில் எடுக்கும் முயற்சிகளைப் போராட்டக் காரர்கள் வீணாகக் குழப்பாதிருப்பதே காலத்தின் தேவையாகும்.

# மர்ஹூம் ரஷீத் எம். ஹபீல் நினைவுகளில் கரைய வைத்த "பாரம்பரியம்"

கடந்த 02 ஆம் திகதி (02.08.2022) செவ்வாய் இரவு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகிய பாரம்பரியம் நிகழ்ச்சி இன்னும் ஒரு மைல் கல்லை தொட்டது எனலாம்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் ஒரு கலைஞராக பயணித்து, 1971 ஆம் ஆண்டு இலங்கை வானொலி தேசிய தமிழ் சேவையில் பகுதி நேர அறிவிப்பாளராக இணைந்து, நிரந்தர அறிவிப்பாளராக, தேசிய சேவையின் முதலாம் தர அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக, முஸ்லிம் சேவையின் நிகழ்ச்சி தயாரிப்பாளராக, ஒலிபரப்புத் துறையின் அனைத்து படித்தளங்களிலும் கால்பதித்து ஒலிபரப்புத் துறையின் உச்சம் தொட்டு அந்நாட்களில், நட்சத்திர அந்தஸ்தைப் பெற்று, ஆயிரக்கணக்கான வானொலி நேயர்கள் மத்தியில் புகழ் பெற்ற பிரபலம் ரஷீத் எம். ஹபீல் நினைவு நிகழ்ச்சியாக ஒலிபரப்பாகியது.

இந்நிகழ்ச்சி அதிகளவிலான நேயர் நெஞ்சங்களை ஈரமாக்கிய ஒரு நிகழ்ச்சியாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது எனலாம். ஒருவரை பாராட்டுவது என்பது சாதாரண காரியமல்ல. அவர், பன்முக திறமைசாலி, சிறந்தவர், வல்லவர், நல்லவர் என வெறுமனே பாராட்டுவது ஒருவருக்குரிய பாராட்டாக பூரணத்துவம் பெற்று விடாது. இதற்கு மாற்றமாக அன்றைய பாரம்பரியம் நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது எனலாம்.

அன்றைய பாரம்பரியம் நிகழ்ச்சியில், எம்மைவிட்டும் பிரிந்த சிரேஷ்ட முதிர்ச்சி பெற்ற ஒலி, ஒளிபரப்பாளர், ரஷீத் எம். ஹபீல் நினைவுகளை பரிமாறிக்கொள்ள மிக பொருத்தமான, அவரது ஒலி, ஒளிபரப்புத் துறையின் அனைத்து பக்கங்களையுமே தெரிந்த, அதே துறையினை எட்டிய பிரபலங்களைத் தேடி, இணைத்துக்கொண்டமை, பெரும் சிறப்பே. இதற்காக நிகழ்ச்சி நடத்துனர் எம்.எஸ்.எம். ஜின்னாவுக்கு, விசேட பாராட்டுகள் தெரிவித்தேயாக வேண்டும். அவரது திறமை உணர்ந்து மிகச்சிறப்பாக நிகழ்ச்சியினை தயாரித்து வழங்கி வரும், நிகழ்ச்சித் தயாரிப்பாளர், முஸ்லிம் சேவையின் பணிப்பாளர், சகோதரி எம்.ஜே.பாத்திமா ரினோஷியாவின் பங்களிப்பும் அளப்பரியது.

மர்ஹூம் ரஷீத் எம்.ஹபீல் நினைவுகளை, மிகச்சிறப்பாக, முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர், அல் ஹாபிஸ் எஸ்.எம்.ஹனிபா, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிகள் முன்னாள் பணிப்பாளர், வாழ்நாள் சாதனையாளர் கலைமாமணி எஸ்.விஸ்வநாதன், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் மூன்று தசாப்தங்களாக சிறந்த தயாரிப்பாளராக கடமையாற்றி மூத்த, இளைய கலைஞர்களுக்கு போதிய களம் கொடுத்துவரும், சிரேஷ்ட ஒளிபரப்பாளர் மபாஹிர் மஃசூர் மௌலானா ஆகியோர் கலந்து மிகச்சிறப்பாக, ரஷீத் எம். ஹபீல் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

முஹம்மத் இக்ரம் ...


## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB-E38/R: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்திற்கான உயிரியல்-தொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்களுக்கான பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.09.01ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி, அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB-E38/R இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்திற்கான உயிரியல்-தொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்களுக்கான ("பண்டங்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு உயிரியில் தொழில்நுட்பவியல் பீடத்தின் உயிரியல் தொழில்நுட்பவியல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 8 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
    - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
    - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள் | ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா) மில்லியன் | வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா) மில்லியன் |
| **Lot1(2)-** Vertical and horizontal laminar flow cabinet | 2.2 | 5.4 |
| **Lot 2(5)-** Quantitative Real Time PCR machine | 4.2 | 10.5 |
| **Lot3(6)-** Bead tissue homogenizer machine | 1 | 2.4 |
| **Lot 4(7)-** Laboratory Deep Freezer | 1.5 | 3.6 |
| **Lot 5(9)-** CO2 Incubator | 1 | 2.4 |
| **Lot 6(10)-** Biotechnology Laboratory glassware and consumables- | 1 | 2.4 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

    **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
    **செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
    **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
    **தொழில்நுட்பவியல் பீடம்,**
    **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.**
    **ZIP code : 70140**
    **தொலைபேசி : 045-2280081**
    **மின்னஞ்சல் : sposb-sthrd@mohe.gov.lk**

    - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-08-18ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு சப்ரகமுவ மாகாணத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "STHRD/SB-E38/R இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், உயிரியல் தொழில்நுட்பவியல் பீடத்தின் மருந்தாக்கவியல் ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட தளபாடங்களுக்கான பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2022.08.08ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2022.09.01ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

    **பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
    **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
    **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
    **தொழில்நுட்பவியல் பீடம்,**
    **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
    **பெலிஹுல்ஓய, இலங்கை**

    - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**

**திகதி: 2022-08-07.**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB-F08: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்திற்கான மருந்தாக்கவியல் தொழில்நுட்பவியல் ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட தளபாடங்களுக்கான பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.08.31ஆம் திகதியன்று பி.ப. 12.30 மணிக்கு (உளளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனிதவள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல் நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்டப் பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB-F08 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்திற்கான மருந்தாக்கவியல் ஆய்வுகூட உபகரணங்களுக்கான ("பண்டங்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உயிரியல் தொழில்நுட்பவியல் பீடத்தின் மருந்தாக்கவியல் ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட தளபாடங்களுக்கான பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 8 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
    - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
    - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான முக்கிய தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள் | ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா) மில்லியன் | வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா) மில்லியன் |
| Lot 01 : Furniture for Pharmaceutical Lab 1 | 5.7 | 14.2 |
| Lot 02 : Furniture for Pharmaceutical Lab 2 | 2.4 | 6 |
| Lot 03 : Furniture for Pharmaceutical Lab 3 | 8 | 20 |
| Lot 04 : Furniture for Pharmaceutical Lab 4 | 8 | 20 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

    **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
    **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
    **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
    **தொழில்நுட்பவியல் பீடம்,**
    **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
    **பெலிஹுல்ஓய, இலங்கை.**
    **ZIP code : 70140**
    **தொலைபேசி : 045-2280081**
    **மின்னஞ்சல் : sposb-sthrd@mohe.gov.lk**

    - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-08-17ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு சப்ரகமுவ மாகாணத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "STHRD/SB-F08 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், உயிரியல் தொழில்நுட்பவியல் பீடத்தின் மருந்தாக்கவியல் ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட தளபாடங்களுக்கான பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2022.08.08ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2022.08.31ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

    **பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
    **செயற்றிட்ட அமுல் நடாத்தல் பணிமனை,**
    **STHRD செயற்றிட்டம்,**
    **தொழில்நுட்பவியல் பீடம்,**
    **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
    **பெலிஹுல்ஓய,**
    **இலங்கை.**

    - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**

**திகதி: 2022-08-07.**

# 'பாசப் பிரவாகம்'

## அமரர் நீர்வை பொன்னையனின் இறுதிச் சிறுகதை தொகுதி

தனது 90ஆவது வயதில் 26/03/2022ல் அமரர் ஆன நீர்வை பொன்னையன் தான் இறப்பதற்கு இருபதே நாட்களின் முன் வெளியிடுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த நூல் இது.




நீர்வையின் என்னுரையும் நீர்வைக்காக திருவன்னியகுலம் அளித்துள்ள இந்த நூலின் அணிந்துரையும் கூட 06.03.2020 என்றே திகதியிடப்பட்டுள்ளன. இறக்கும் தருவாயிலும் 90 வயதின் முதுமையிலும் அவருடைய உழைப்பும் சோர்வற்ற சுறுசுறுப்பும் வியப்புத் தருபவை.

அதைத்தான் டொக்டர் எம்.கே. முருகானந்தன் 'முதுவயதிலும் அவர் ஓயவில்லை. தொடர்ந்தும் தன் பணியை சிறப்புடன் செய்வதற்குத் தேவையான உடல், உள வல்லமையையும் ஆரோக்கியத்தையும் கொண்டிருந்தார்' என்று தனது முன்னுரையில் குறிக்கின்றார்.

'இத்தொகுதியில் உள்ள ஏழு கதைகளையும் நான் எனது 90 ஆவது வயதிலேயே எழுதினேன். இலக்கியப் படைப்பு என்பது பொழுது போக்கிற்காக என்ற நிலையில் இருந்து ஆக்க இலக்கியம் மக்களது விடிவுக்காகவே என்ற கருத்து நிலையிலிருந்தே எனது ஆக்கங்களைப் படைத்துள்ளேன்' என்று இந்த நூலுக்கான தனதுரையில் குறித்துள்ளார் நீர்வை.

நீர்வை மறைந்து இரண்டே ஆண்டுகளின் பின் அவரது நினைவுகளுக்கான அஞ்சலியாகவும் இன்னுமொரு சிறுகதை நூலாகவும் வெளியிட்டுள்ள நீர்வையின் குடும்பத்தினர் மற்றும்



நெருங்கிய நண்பர்களும் பாராட்டுதல்களுக்குரியவர்களே. குறிப்பாக மகள் அருணா, மருமகன் சுரேந்திரன் மற்றும் மொழிபெயர்ப்பாளர் சிவகுருநாதன் டொக்டர் முருகானந்தன் போன்றோர்.

இந்தப் பாசப் பிரவாதம் நீர்வையின் 13ஆவது சிறுகதைத் தொகுதி. 1961ல் வெளிவந்த முதல் தொகுதியான மேடும் பள்ளமும் தொகுதியைத் தொடர்ந்து 2019இல் வெளியிட்ட 'சாயல்' நீர்வையின் 12ஆவது தொகுதி. அவரது மரணத்துக்குப் பின் இந்த இறுதித் தொகுதி அவருடைய 13ஆவது தொகுதியாக வெளிவந்துள்ளது.

புனைவுசார் இலக்கிய வகைகளில், சிறுகதைகள் மாத்திரமே நீர்வையின் பிரதான தளம் என்றாலும் தனது 60 ஆண்டுகால எழுத்துலக காலத்தில் 130 சிறுகதைகளையே இவர் எழுதியுள்ளார். அந்த 130 கதைகளும் இந்த 13 தொகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். உழைக்கும் வர்க்கத்தினரை பிரதிநிதித்துவம் செய்பவர்களே நீர்வையின் சகல கதைகளினதும் பிரதான கதைமாந்தர்களாக இருந்துள்ளனர். ஒரு இலட்சிய வேட்கையுடன் எழுத்துலகில் தடம்பதித்து நின்றவர் நீர்வை பொன்னையன்.

புனைவுகளுக்கப்பாலான நூல்களாகவும் பத்துக்கும் மேற்பட்ட நூல்களை நீர்வை எழுதியும் வெளியிட்டுமிருக்கின்றார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அமைக்கப்பட்ட காலத்திலும் அது உச்சத்தில் நின்று தனிக்காட்டு ராஜாவாகக் கோலோச்சிய காலங்களிலும் கூட அதனுடன் இணைந்து நெருக்கமான உறவுகளைக் கொண்டவராக அவர் இருக்கவில்லை. ஆனாலும் சகல முற்போக்கு எழுத்தாளர்களுடனும் நீர்வை மிக நெருங்கிய உறவுகளையும் தொடர்புகளையும் கொண்டிருந்தவர். எண்பதுகளின் பின்பான காலங்களில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நலிவுற்று செயலிழந்ததைத் தொடர்ந்து 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்' என்னும் அமைப்பை உருவாக்கிப் பணியாற்றினார்.

தனது பட்டப் படிப்பிற்காக கல்கத்தாவுக்குச் சென்றிருந்த போது ஏற்பட்ட முற்போக்கு இலக்கிய உணர்வுகள் இவை.

இந்நூலின் அணிந்துரையில் இந்த உணர்வின் உருவாக்கம் குறித்து விரிவாகப் பதிவு செய்துள்ளார் சி.வன்னியகுலம். 'நீர்வையின் சிந்தனைக்களத்தில் ஒருபெரும் பாய்ச்சலை உருவாக்கியது அவரின் கல்விப் பின்னணியாகும். மேற்குவங்கத்தின் தலைசிறந்த கல்லூரியாகிய சரம்பூர் கல்லூரியில் கல்விகற்று பட்டம் பெற்றவர். மேற்குவங்க புரட்சியின் தொட்டில் மட்டுமல்ல. புரட்சிகர சிந்தனையும் எழுத்தாற்றலும் கொண்ட நீர்வையை வளர்த்தெடுத்த தொட்டிலுமாகும்.

அந்நிய ஏகாதிபத்தியத்துக்கெதிராக இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மேற்குவங்கம் புரட்சி கரமான பாதையைத் தேர்ந்தெடுத்தது. சுபாஷ் சந்திரபோஸ் தலைமையில் இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையே கதிகலங்கவைத்தது. சுதந்திர இந்தியாவில் முதன்முறையாக கம்யூனிச அரசொன்றை உருவாக்கி அதனை முப்பது வருடங்களாக கண்ணிமை போலக் காத்த பெருமையும் வங்கத்திற்கே உரியது! நீர்வையின் ஒட்டுமொத்த ஆளுமை உருவாக்கத்தில் வங்கம் ஓர் பலமான அத்திவாரமாக அமைந்தது...' என்று தொடர்கிறது அணிந்துரை.

பாசப்பிரவாகம் என்னும் இந்த நூலில் அடங்கிய கதைகள் சமூகத்திலேற்படும் மாற்றங்களையும் அம்மாற்றங்களின் பின் விளைவுகளையும் சிலாகித்து நிற்பவை. பெரும்பாலான கதைகள் முப்பதாண்டுகால யுத்தத்தின் போது மக்கள் எதிர்கொண்ட துன்பதுயரங்களையும் யுத்தத்தின் பின்விளைவுகளையும் பேசுகின்றன. நிலவுடைமை சமூகத்தின் சீரழிவுகளையும், தொழிலாள மக்களின் அவல வாழ்க்கையையும் இவைபடம் பிடித்துக்காட்டுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் இக்கதைகள் ஒவ்வொன்றுக்கும் பின்னால் நீர்வை என்ற இலட்சியவாதியின் வலுவான கருத்து நிலை தேடல்களும் சமூக அரசியல் கண்ணோட்டமும் வியாபித்து நிற்பதைக் காணலாம்.

இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்ற வெளியீடாக வந்திருக்கும் இந்த 'பாசப்பிரவாகம்' சிறுகதைத் தொகுதியின் விநியோக மற்றும் விற்பனை உரிமைகளை பூபாலசிங்கம் புத்தக சாலை ஏற்றிருக்கிறது. நூலின் விலை ரூபாய் 350/= தொடர்புகள் 'பூபாலசிங்கம் புத்தக சாலை. தொலைபேசி 0112422321.

தெளிவத்தை ஜோசப் ...

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB-E15/R: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் இரசாயனவியல் ஆய்வுகூடத்திற்கான - 2ஆம் வருடம் (இரசாயனவியல் II) ஆய்வுகூட உபகரணங்களுக்கான பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.09.01ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி, அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB-E15/R இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் இரசாயனவியல் ஆய்வுகூடத்திற்கான - 2ஆம் வருடம் (இரசாயனவியல் II) ஆய்வுகூட உபகரணங்களின் (''பண்டங்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு தொழில்நுட்பவியல் பீடத்தின் இரசாயனவியல் ஆய்வுகூடத்திற்கான - 2ஆம் வருடம் (இரசாயனவியல் II) ஆய்வுகூட உபகரணங்களுக்கான பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 84 நாட்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| **லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்** | **ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா) மில்லியன்** | **வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா) மில்லியன்** |
| Lot 2- UV-Visible Spectrophotometer System | 3.2 | 8 |
| Lot 3- FTIR Spectrometer | 4 | 10 |
| Lot 4- Rotary Evaporator | 1.8 | 4.5 |
| Lot 5-Laboratory Equipment | 6.6 | 16.6 |
| Lot 6- Chemicals | 2.72 | 6.8 |
| Lot 7- Glassware | 3.3 | 8.3 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
   **செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை.**
   **ZIP code : 70140**
   **தொலைபேசி : 045-2280081**
   **மின்னஞ்சல் : sposb-sthrd@mohe.gov.lk**

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-08-18ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு சப்ரகமுவ மாகாணத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் “STHRD/SB-E15/R இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், உயிரியல் தொழில்நுட்பவியல் பீடத்தின் இரசாயனவியல் ஆய்வுகூடத்திற்கான - 2ஆம் வருடம் (இரசாயனவியல் II) ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை” என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ. ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2022.08.08ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2022.09.01ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   **பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
   **செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை**

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2022-08-07.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
### கல்வி அமைச்சு

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB-F14: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் ஆய்வுகூட தளபாடங்களுக்கான பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.08.31ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி, அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB-F14 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் ஆய்வுகூட தளபாடங்களுக்கான (“பண்டங்கள்”) பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு தொழில்நுட்பவியல் பீடத்தின் ஆய்வுகூடத்திற்கான தளபாடகங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 8 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக் கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிபுரள்வு.

***விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்***

| நிரல் - 1 | நிரல் - 2 | நிரல் - 3 |
|---|---|---|
| **லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்** | **ஒவ்வொரு ஒப்பந்தத்தினதும் பெறுமதி (இல. ரூபா) மில்லியன்** | **வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா) மில்லியன்** |
| **Lot 1**(F9-3) - Safety and technical Furniture for Biotechnology Lab | 4.00 | 10.0 |
| **Lot 2** (F9- 5) - Chairs and cupboards for Bioenergy Lab | 2.40 | 6.0 |
| **Lot 3** (F9-6) - Safety and technical Furniture for Bioenergy Lab | 0.80 | 2.0 |
| **Lot 4**(F3-1) Furniture for Pharmacology Lab 02 | 1.44 | 18.0 |
| **Lot 5** (F 3-3) - Laboratory Furniture for Pharmacology Lab 3 | 0.80 | 10.0 |
| **Lot 6** (F3-6) - Safety, Disposal and Other Essentials for Microbiology Lab | 0.16 | 2.0 |

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   **சிரேஷ்ட பெறுகை அலுவலர்,**
   **செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய, இலங்கை.**
   **ZIP code : 70140**
   **தொலைபேசி : 045-2280081**
   **மின்னஞ்சல் : sposb-sthrd@mohe.gov.lk**

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022-08-17ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு சப்ரகமுவ மாகாணத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் “STHRD/SB-F14 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், உயிரியில் தொழில்நுட்பவியல் பீடத்தின் ஆய்வுகூட தளபாடங்களுக்கான பெறுகை” என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2022.08.08ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்படமாட்டாது.
7. 2022.08.31ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   **பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,**
   **செயற்திட்ட அமுலாக்கல் பணிமனை,**
   **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
   **தொழில்நுட்பவியல் பீடம்,**
   **இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
   **பெலிஹுல்ஓய, இலங்கை**

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுலஓய,**
**இலங்கை.**
**ZIP code: 70140**
**திகதி: 2022-08-07.**




# படித்ததும் பகர்வதும் 106



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சர்வதேச இளைஞர் தினம்

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 ஆம் திகதி ‘சர்வதேச இளைஞர் தினம்’ உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. 1998ம் ஆண்டு ஆகஸ்ட் 08ம் திகதி முதல் 12ம் திகதி வரை லிஸ்பன் நகரில் நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்குப் பொறுப்




பான அமைச்சர் குழு, சர்வதேச ரீதியில் இளைஞர்களின் பிரச்சினைகளையும், இளைஞர்களின் செயல்பாடுகளையும் கவனத்திற் கொள்ளும் வகையில் இளைஞர்களுக்கான சர்வதேச தினம் ஒன்றை பிரகடனப்படுத்த வேண்டும் முன்மொழிந்தது. இதன்படி 1999 டிசம்பர் 17ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ‘சர்வதேச இளைஞர் தினம்’ வருடத்தின் ஆகஸ்ட் 12ம் திகதி கொண்டாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ஐக்கிய நாடுகள் சபை 15 வயது முதல் 24 வயது வரையானவர்களை “இளைஞர்கள்” என வரையறுத்துள்ளது.

இளைஞர்களே குடும்பத்தினதும், சமூகத்தினதும், நாட்டினதும் ‘எதிர்காலம்‘ மற்றும் ‘முதுகெலும்பு’ என்று போற்றப்படுகின்றனர். இவர்களே நாளைய நமது தலைவர்கள்.

‘இளைஞர் தலைமைத்துவம்’ பற்றி முந்திய எமது பல பத்திகளில் தனித்தனியாக வலியுறுத்தியுள்ளோம். பாடசாலை தொடக்கம் பாராளுமன்றம் வரை அனைத்து அமைப்புகளிலும்இளைஞர்களுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும் என்பதை தெளிவாக எடுத்து விளக்கியுள்ளோம்.

‘இளைஞர் சக்தி இமாலய சக்தி’ என்பதை இலங்கையில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள அரசியல் போராட்டங்களின்போது மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள முடிந்தது.

இது மூத்தோருக்கு சிறந்த படிப்பினையாகவும் அமைந்திருக்கிறது எனலாம். இத்தகைய சக்திமிக்க இளைஞர்களை சரியாக, முறையாக வழிநடத்தி அவர்களது பலத்தை முழுமையாக நல்ல வழிகளில் பயன்படுத்தி வீட்டையும் நாட்டையும்முன்னேற்ற முயற்சிக்க வேண்டியது மூத்தவர்கள் மீதுள்ள பொறுப்பாகும்.

இளைஞர்கள் வீண் விளையாட்டுக்கள், களியாட்டங்கள், போதைப்பொருள் பாவனை, கூடாத நட்பு, தவறான தொடர்பு போன்றவற்றால் வழி தவறி விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும். நேரிய வழியில் நல்லொழுக்கம் மிக்கவர்களாக வாழ வழிவகைகள் செய்யப்பட வேண்டும். மாணவர் பருவத்திலிருந்தே அவர்களுக்கு ஆன்மீக பயிற்சியையும் நல்லுறவு, நற்செயல் பற்றிய விளக்கங்களையும், நல் வழியில் நடக்க வேண்டியதன்அவசியத்தையும் அவர்கள் புரிந்து ஏற்று நடக்கும் விதத்தில் புகட்டுதல் வேண்டும்.

இளைஞர்கள்தான் குடும்பத்தின், கிராமத்தின், நகரத்தின், நாட்டின் அடுத்த தலைமைத்துவத்தை ஏற்று வழி நடாத்த வேண்டியவர்கள் என்பதை எடுத்துரைக்க வேண்டும்.


இதன் மூலம் அவர்களை பண்பட்டவர்களாக, பக்குவமடைந்தவர்களாக, எதிர்காலத்தின் எத்தகைய சவால்களையும் சந்திக்க தயாரானவர்களாக உருவாக்க முடியும். இது பெற்றோர், உற்றார், ஆசிரியர், பெரியோர், சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நாட்டின் தலைவர்கள் என அனைவர் மீதுமுள்ள பாரிய பொறுப்பாகும்.

## நெஞ்சுக்கு நீதி

இளைஞர் பலம் என்றும் ஈடில்லாதது
இழந்தாலே மீண்டும் பெற முடியாதது
இணைந்து நன்றாய் உழைத்து நின்றால்
இகமேவெல்லும்தடுத்திட இயலாதது

## பிரிந்தார் பெருமை

### பேராசிரியர் அஸ்ஸெய்யித் ஹபீப் அபூபக்ர் அல்மஷ்ஹூர்!



கெச்சிமலை அலவியா தரீக்காவின் முன்னாள் தலைவராகத் திகழ்ந்த சிறந்த அறிஞர், பேராசிரியர் கலாநிதி அஸ்ஸெய்யித் ஹபீப் அபூபக்ர் அல்மஷ்ஹூர் அல்அத்னி அண்மையில் (28.07.2022) ஜோர்தானில் காலமானார். யெமன் நாட்டினை பூர்வீகமாகக் கொண்டிருந்த இவர், சவுதி அரேபியாவின் ஜித்தாவில் நீண்டகாலமாக வசித்தார்.

இவர் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றில்,"பிக்ஹ் அல்தஹாவுலாத்" எனும் இஸ்லாத்தின் ‘மறுமைநாள் பற்றிய சட்டங்கள்’ என்ற நூல் மிகப்பிரசித்தமானது.

இந்தோனேசியா, மலேசியா, யெமன், ஜோர்தான் உட்பட உலகின் பல நாடுகளில் இவர் இஸ்லாமிய உயர் கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளார். பல உயர்கல்வி நிறுவனங்களை இவரே நிர்வகித்தும் வந்துள்ளார். தனது சொந்த முயற்சியால் யெமனில் தனியான பல்கலைக்கழகம் ஒன்றையும் கூட அஸ்ஸெய்யித் ஹபீப் அபூபக்கர் அல்மஷ்ஹூர் நிறுவியுள்ளமை விசேடமாக குறிப்பிடத்தக்கது.

இலங்கையோடு நெருங்கிய உறவைப்பேணிய அன்னார், பேருவலை ஜாமிஆ நளீமியா, பேருவளை சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸியா கல்லூரி, காலி நபவிய்யா அரபுக் கல்லூரி, கெச்சிமலை அஷ்ரபிய்யா அரபுக் கல்லூரி உட்பட இலங்கையில் பல முக்கிய அரபுக் கல்லூரிகளிலும் விசேட விரிவுரைகளை நடாத்தியுள்ளார்.

‘ஷாதுலிய்யா தரீக்கா’ இஸ்லாமிய ஆன்மீக பிரிவினருடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணிய இவர், அவர்களது பல முக்கிய நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி சிறப்பித்துள்ளார்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான அபிமானிகளைப் பெற்றுள்ள பேரறிஞர் அல்ஹபீப் அபூபக்கர் அல்மஷ்ஹூரின் ஜனாஸா ஜோர்தானிலிருந்து யெமன் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு, தரீம் எனும் ஊரில் உள்ள அஹ்லுபைத்துக்கள் அடக்கப்படும் ஸம்பல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலும் அவருக்கான மறைவான ஜனாஸா தொழுகை சிறப்பாக நடாத்தப்பட்டது.

## அந்த நாள் ஞாபகம்!

### பூ கொடுத்ததில் பூகம்பம்!

பிரபல பாடகர் கலைக்கமல் வாழ்வில் நடந்த சுவையான சம்பவம் இது. 2011ம் ஆண்டு ஜூலை 24ம் திகதிய தினகரன் வாரமஞ்சரியில் இடம்பெற்ற அவரது பேட்டியிலிருந்து உங்களுக்காக...இதோ அவரே பேசுகிறார்:.



ஒருமுறை கலைஞர் விஜயராஜா தொலைக்காட்சிக்காக தயாரித்து வழங்கிய ‘வண்ணப் பூக்கள்’ நிகழ்ச்சியில் ஆரம்ப பாடலாக, “காதல் என்பது, என் நெஞ்சில் உள்ளது....” என்ற பாடலை தயார் செய்து வைத்திருந்தவர் என்னிடம், “கமல் மேடையில் சிலை மாதிரி பாடுவதைவிட நடிப்போடு இந்தப் படலை படமாக்கினால் நன்றாக இருக்குமே” என்றார். அவரின் கருத்துக்கு நான் ஒப்புதல் அளித்ததோடு நடிக்கவும் சம்மதித்தேன்.



கலைக்கமல், யெஸ்மினா
(திருமணத்தின் போது)

படப்பிடிப்பு கொழும்பு விக்டோரியா பார்க்கில் நடைபெற்றது. அந்தக் காட்சியில் என்னோடு மறைந்த பிரபல பாடகி ராணி ஜோசப் பாடி நடித்தார்.

நானும் ராணி ஜோசப்பும் பாடலுக்கு அபிநயங்கள் செய்தபடி நடித்தோம். ஒரு காட்சியில் அந்தப் பாடலில் வரும் வார்த்தைகளுக்கு அமைய ஒரு ரோஜாப்பூவை எடுத்து “பெண் பூவே...” என்று பாடியவாறு நான் ராணி ஜோசப்பிடம் கொடுத்தேன். படப்பிடிப்பு முடிந்து வீட்டிற்கு சென்றேன். என்னோடு எனது நண்பர் ‘இரும்புக் கடை இளையராஜா’வும் வந்தார்.

வீட்டிற்கு வந்த சில நிமிடங்களில் எனது மனைவி யெஸ்மினா, எங்களுக்கு பரிமாறுவதற்காக தேனீர் தட்டுடன் வந்தாள். அப்போது நண்பர் இளையராஜா அவளிடம் “கலைக் கமல் நன்றாக பாடுவார் என்பது தெரியும்.

ஆனால் அவர் நன்றாக நடிக்கவும் செய்வார் என்பதை இன்றுதான் புரிந்து கொண்டேன்” என்று சொன்னார்.

அவர் சொன்னதும் எனது மனைவியின் முகம் மாறியது. உடனே அவள் “அப்படி என்ன நடித்தார்” என்று வினவினாள்.

அதற்கு இளைராஜா, “ராணி ஜோசப்புக்கு ரோஜாப்பூ கொடுத்து நடித்தார்” என்றதும் எனது மனைவியின் கையிலிருந்து தேனீர் கோப்பைகள் நழுவி தரையில் விழுந்து சிதறின. என் மனைவியின் கோபம் எனக்கு அப்போதுதான் புரிந்தது.

பாடுவதற்கு ‘லைசன்ஸ்’ வழங்கிய என் மனைவிக்கு நான் நடிப்பதில் விருப்பமில்லை. ‘இனி நான் நடிக்க மாட்டேன்’ என்று அவளுக்கு நான் சத்தியமும் செய்து கொடுத்துவிட்டேன். அந்த சத்தியத்தை இன்று வரையும் காப்பாற்றி வருகிறேன்.

## கவிக் ‘கடி’கள்

இலங்கையின் இன்றைய கால நிலவரத்தில் ‘சேர்க்கப்பட்டுள்ள’நவீன ‘குறள்’ அதிகாரம் இது. சேர்த்தவர் யாரோ....?

அதிகாரம்: பெற்றோலுடைமை
குறள் :1331 _1340

- பெற்றோர் எல்லாம் பெற்றோர் அல்லர், தன் பிள்ளைக்கு பெற்றோல் கொடுப்பவரே பெற்றோராவார்.
- ஈடில்லார், இணையில்லார் யாரென்றால் பெற்றோல் ஷெட்டுக்கு பக்கத்தில் வீடுள்ளார்.
- கற்றாலும்பயனில்லை இவ்வையத்துள் உனக்கென சிறிது பெற்றோல் இல்லையெனின்.
- கற்றார்க்கு கற்ற இடத்திலே சிறப்பு பெற்றோல் பெற்றோர்க்கே செல்லும் இடமெல்லாம் சிறப்பு.
- ஷெட்ஓனர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் கிடைக்குமாம் பெற்றோல்.
- கற்றவர், உற்றவர் யாரெனினும் டோக்கன் பெற்ற பின் நிற்க அதற்குத் தக
- படியென்பார், படித்தவர் அரச உத்தியோகத்தர் என்றால் ஷெட்டில் வைத்து அடியென்பார்.
- கற்றதனால் ஆன பயனென்ன பெற்றோல் பெற்றதனால் பெற்ற பயன் முன்னே.
- டவுசரை தினமும் கழுவிடு, வீதியில் பெற்றோல் பவுசரை கண்டால் வழியவிடு.
- சைக்கிளோடு வாழ்வாரே வாழ்வர் அஃதிலார் பெற்றோல் ஷெட் வரிசையில் நின்று சாவார் ....

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# திருவள்ளுவத்தில் தலைமைத்துவம் ( Leadership)



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 18

கே. பத்மானந்தன்



சரியான தலைமைப் பண்புடைய முகாமையாளர் ஒருவர் நிறுவனங்களில் ஏற்படும் நெருக்கடியான நேரங்களில் அல்லது தோல்வியை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் தீர்மானம் எடுக்கக் கூடியவராகவும் அந் நெருக்கடிகளை துணிகரமாக கையாளுபவராகவும் அச்சந்தர்ப்பங்களில் ஏனையவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்கான அறிவினைக் கொண்டவராகவுமிருக்க வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். இக் கருத்துகளை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக வெளிப்படுத்துகின்றார்.

**“தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனாள் பவர்க்கு”.**
**( குறள் 383)**

செயல் ஆற்றுவதில் சோர்வு இல்லாமை அதாவது காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகள் , அனைத்தையும் அறியக்கூடிய கல்வி, தீயவை எதிர்த்தாலும் நல்லன செய்வதற்கு ஏற்ற துணிவு இம்மூன்றுமே நாட்டை ஆளுவோருக்கு நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும் என்கிறார் திருவள்ளுவர் . அதே போல் காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும் (Alertness) நிறுவனம் தொடர்பான பூரண அறிவுடைமையும் (Wisdom), கால தேச வர்த்தமானங்களை அனுசரித்து நிறுவனத்தை இயக்குகின்ற துணிவும் நிறுவனமொன்றின் முகாமையாளருக்கு தேவையான நீங்காமல் என்றும் நிலைத்திருக்க வேண்டிய தலைமைப் பண்புகளாகும் என்கிறார் திருவள்ளுவர் .

முகாமையாளரின் இன்னொரு முக்கியமான தலைமைப்பண்பு செயல்திறன் (Executive Skill) மிக்க ஒருவராக இருக்க வேண்டும். தான் செய்ய வேண்டிய பணியினையும் அதனைச் செய்யும் முறைகளையும் அதற்கான உரிய காலத்தையும் இடத்தையும் தேவையான கருவிகளையும்( மனித, தொழிநுட்ப மற்றும் பொருள் வளங்கள்) ஆய்ந்தறிந்து கொள்ளக்கூடிய ஒருவராகவும் இருக்க வேண்டும். இதனை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடிகளில் சிறப்பாகச் சொல்கிறார் .

**“கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்ட தமைச்சு”.**
**(குறள்631)**

அதாவது ஒரு செயலைச் செய்யத் தேவையான பொருள்கள், செய்வதற்கு ஏற்ற காலம், செய்யும் முறை, செய்யும் செயல் ஆகிய அனைத்திலும் நன்மை விளையும்படி எண்ணுபவரே நல்ல தலைமைப் பண்புள்ள முகாமையாளர் என்பது இவரின் கருத்தாகும்.

செய்யப்படும் செயல், அதற்கு வேண்டிய கருவி, அதற்கு ஏற்ற காலம், அதனைச் செய்யும் முறை, ஆகிய இவைகளை பொருத்தமாகத் திட்டமிட வல்லவராக முகாமையாளர் இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். அப்போதுதான் அவரினால் செயல்களை நன்கு திட்டமிட்டு அதற்கான கருவிகளை இனம்கண்டு சேகரித்து, நடைமுறைப்படுத்த தேவையான காலத்தினைக் கணித்து கருமம் ஆற்றமுடியும்.

முகாமையாளரிடம் இருக்க வேண்டிய இன்னுமொரு முக்கிய தலைமைப் பண்பு சமூக அக்கறையும் சிறந்த நூலறிவும் (Knowledge and Concern for the Society) கொண்டிருத்தலாகும்.



அதாவது ஒரு முகாமையாளர் ஒரு செயல்திட்டத்தினை நிறைவேற்றும் போது உறுதியான மனமும்,பொது நோக்கம் அல்லது சமூக நோக்கம் கொண்டவராகவும், செயல்களைச் செய்யும்போது தவிர்க்க வேண்டியவை பற்றிய தெளிவான சிந்தனை கொண்ட ஒருவராகவும் இருத்தலுடன் செயலாற்றத்தேவையான வளங்கள் அதாவது தேவையான பொருள் வளம், உரிய மனித வளம், சரியான காலம், செய்யும் முறை செய்ய வேண்டிய செயல் தொடர்பான அறிவு கொண்டவராகவும் இருக்க வேண்டும்.இதனை திருவள்ளுவர் கீழ் வருமாறு கூறுகின்றார்.

**“வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடைந்துடன் மாண்ட தமைச்சு”.**
**(குறள் 632)**

அதாவது முகாமையாளர் என்பவர் துணிவுடன் செயல்படுதல் அதாவது எண்ணத்திலும் செயலிலும் உறுதி, தனது நிறுவனத்தையும் ஊழியர்களையும் பாதுகாத்தல் நிறுவனத்தின் பெருமையைப் பாதுகாத்தல் அதற்கு இழுக்கு வராமல் நடத்தல் , தொழிலுக்கு வேண்டிய கற்றல் அத்தோடு செய்யத்தக்கன செய்யத்தகாதன பற்றிய அறிவு, தொழில் செய்யும் முறைகளை அறிதல், அயராத தொடர்ந்த முயற்சி ஆகிய ஐந்தும் கொண்டவராக விளங்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

மேலும் முகாமையாளர் கொண்டிருக்க வேண்டிய இன்னுமொரு தலைமைப்பண்பு செயலாக்கும் முறைகள் (Procedure or method of execution) தெரிந்த ஒருவராக இருக்க வேண்டும். செய்யப்பட வேண்டிய வேலையை பகுத்து ஆய்வு செய்தலும் (Job analysis), அவ்வாறு பிரித்து ஆய்வு செய்த செயல்களை அவற்றின் ஒத்ததன்மைகளைக் கருத்தில் கொண்டு திணைக்களங்களின் கீழ் கொண்டு வருதலும்(Departmentation) ,அவ்வாறான வெவ்வேறு திணைக்களங்களை எவ்வாறு ஒருங்கிணைத்து பணிகளை செவ்வனே செய்து முடிக்கலாம் என்றும் தெரிந்த ஒருவராக இருக்க வேண்டும்.

செய்வதற்குரிய செயலினை அவற்றின் தன்மை கருதிப் பல கூறுகளாகப் பிரித்தலும் (Job analysis), அவ்வாறு பிரிக்கப்பட்ட செயல்களை அவற்றின் ஒத்த தன்மை அடிப்படையில் ஒரு துறையின் கீழ்க் கொண்டு வந்து (Departmentation) வளப்படுத்துதலும் பின்னர் அப்பணியினைச் சிறப்பாய் முடித்தல் கருதி அத்துறைகள் நிறைவேற்றிய செயல்களை ஒருங்கிணைத்து (Coordination) முழுமையான பணியாகச் செய்து முடித்தலே திறமையான முகாமைத்துவமாகும் . இக்கருத்துக்களைக் கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் கூறுகின்றார்

**“பிரித்தலும் பேணிக்கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு”.**
**( குறள் 633)**

அதாவது செய்யக்கூடிய வகையில் வேலைகளைப் பிரித்தலும் அவ்வாறு பிரிக்கப்பட்டவற்றை துறை ரீதியாக அல்லது திணைக்கள ரீதியாக ஒதுக்குதலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட திணைக்களங்களை அல்லது துறைகளை ஒருங்கிணைத்தலும் முகாமையாளரின் பணியாகின்றது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

முகாமையாளரிடம் இருக்கவேண்டிய இன்னுமொரு தலைமைத்துவப் பண்பு முடிவெடுத்தலும் ஒத்த கருத்தினை உருவாக்குதலும் (Decision making and Group consensus) ஆகும். அதாவது ஒரு செயலினைச் செய்வதற்கு ஏற்றதாக இருக்கின்ற பல்வேறு முறைகளை அல்லது தந்திரோபாயங்களை ஆராய்ந்து அவற்றினுள் சிறந்த முறையை எடுத்து அதனைத் தனது சக ஊழியர்களுக்கு விளக்கி அவர்களிடம் ஒருமித்த கருத்தை ஏற்படுத்தி அச் செயலில் இறங்குவதென்பது முகாமையாளரின் சிறந்த பண்பாகும் .இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் கூறுகின்றார் .

**“தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்ல தமைச்சு”.**
**( குறள் 634)**

அதாவது ஒரு செயலினை மேற்கொள்ளுதற்கான பல்வேறு மாற்று வழிகளை ஆய்வு செய்தலும்அதாவது நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கான செயல்கள் வெற்றி பெறுவதற்கான வழிவகைகளை ஆராய்தலும் அவற்றுள் சிறந்த அல்லது உகந்த ஒன்றினை தேர்ந்தெடுத்து முடிவு செய்தலும் ஒத்த கருத்து ஏற்படுத்தும் வண்ணம் பணியாளருக்கு அவர்கள் ஐயுறாது ஒருவழிப்படவிளக்கிச் சொல்லி ஏற்கச் செய்தலும் ஒரு முகாமையாளரின் தலைமைத்துவப்பண்பு என்கிறார் திருவள்ளுவர் .

ஒரு முகாமையாளரிடம் இருக்க வேண்டிய இன்னுமொரு முக்கியமான தலைமைத்துவப் பண்பு தகுதியானவரைத் துணையாகக் கொள்ளல் (Selection of aides) ஆகும். ஒரு முகாமையாளர் ஒரு திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு அவருக்குத் துணையாக நிற்பவர் தொழில் நுணுக்கம் தெரிந்தவராகவும் அதற்குரிய விதிமுறைகளை அறிந்தவராகவும் அம்முறைகளையும் நுட்பங்க ளையும் தனது சக பணியாளருக்கு அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காகச் சொல்லத் தெரிந்தவராகவும் எத்தகைய சூழலையும் வரும் சவால்களையும் எதிர்ப்பு களையும் சமாளிக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

அத்தகைய ஒருவரையே முகாமையாளர் தெரிவு செய்ய வேண்டும். இக்கருத்துக்களை திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார் .

**“அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும் திறனறிந்தான் தேர்ச்சித் துணை”.**
**(குறள்.635)**

அதாவது செயலினை நிறைவேற்றுவதற்கான முறையான செயல் முறைகளை வழிமுறைகளை அறிந்தவனாயும் பணியாளர் ஏற்றுக் கொள்ளும் வகையில் தனது அனுபவ முதிர்ச்சியால்அறிவோடும், பதற்றமின்றியும் அவற்றை சொல்லக் கூடியவனாயும் எக்காலகட்டத்திலும் எச்சூழ்நிலையிலும் பணியாற்றக் கூடியவனாயும் அதற்கான திறன் உடையவனாயும் உள்ள ஒருவனையே முகாமையாளர் தனது துணையாகத் தெரிவு செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் .

# மங்கையர் முற்றம்

# பொடி லோஷன்



சிலருக்கு சாதாரணமாகவே எந்நேரமும் சருமம் வறட்சி இருக்கும். அதிலும் கோடை காலத்தில் உடலில் நீரின் அளவு குறைந்து உடல் முழுவதுமே பெரும்பாலானோருக்கு வறட்சியாகக் காணப்படும்.

இந்த சூழ்நிலையில் உடல் வறட்சியைத் தடுக்கவும் சருமப் பாதுகாப்புக்கும் பொடி லோஷன் பயன்படுத்துவது அவசியம். பெண்கள் அதிகமாக இதனை பயன்படுத்தினாலும் சிலர் சரியான முறையில் அதனை உபயோகிப்பதில்லை.

**பொடி லோஷன் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்:**

★அனைத்து விதமான சருமம் கொண்டவர்களும் பொடி லோஷன் பயன்படுத்தலாம்.

★ மிகவும் வறண்ட சருமம் கொண்டவர்கள் திரவமான பொடி லோஷன்களை பயன்படுத்த வேண்டும்.

★ எண்ணெய் சருமம் கொண்டவர்கள் க்ரீம் போன்ற பொடி லோஷன்களை பயன்படுத்தலாம்.

★ உங்கள் சருமத்திற்கு ஏற்றவாறு முடிந்தவரை இரசாயனம் கலக்காத தேங்காய் எண்ணெய், பாதாம் எண்ணெய் கொண்டு செய்யக்கூடிய பொடி லோஷன்களை பயன்படுத்துங்கள்.

★ குளித்தவுடனேயே உடல் முழுவதும் பொடி லோஷனை அப்ளை செய்ய வேண்டும். ஈரப்பதம் இருக்கும்போது போட்டால் நன்றாக உறிஞ்சி உடல் வறண்டு போகாமல் தடுக்கும்.

★ முதலில் கீழிருந்து அதாவது காலில் இருந்து தொடங்கி உடல் முழுவதும் அப்ளை செய்ய வேண்டும். முழங்கை, கால்களில் நன்றாக மசாஜ் செய்ய வேண்டும். வட்ட வடிவில் தேய்ப்பதே சரியான முறையாகும்.

★ கோடை காலத்தில் வெயிலின் தாக்கத்தை சரிசெய்ய பொடி லோஷன் மிகவும் அவசியமானது. முடிந்தவரை இயற்கை முறையில் இயற்கையான பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட லோஷன்களை பயன்படுத்தி சருமத்தை பராமரியுங்கள்.

# கருமுட்டை வெளிவரும் நாளை கணிப்பிடும் முறை



ஒவ்வொரு மாதமும் 28 நாட்களுக்கு ஒருமுறை மாதவிலக்கு வரும். சில பெண்களுக்கு 30 நாட்களுக்கு ஒருமுறை மாதவிலக்கு வரும்.

அப்படி வரும் பொழுது உங்களுக்கு எப்போது மாதவிலக்கு தொடங்குகிறது எனக் கலண்டரில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இது மிகவும் முக்கியம்.

எந்த நாளில் மாதவிலக்கு வருகிறது எனத் தெரிந்து, குறித்து வைத்தால்தான் உங்களால் கருமுட்டை வெளிவரும் நாளை சரியாக கணக்கிட முடியும். பல பெண்களுக்கு 28 நாட்களுக்கு ஒரு முறை மாதவிலக்கு வரும். சிலருக்கு 30 அல்லது 34 நாட்களுக்கு ஒருமுறை கூட வரலாம். பெண்களின் உடல்நிலை பொருத்து மாறுபடும்.

உதாரணமாக, உங்களுக்கு டிசம்பர் 1ம் திகதி மாதவிலக்கு முதல் நாளாகத் தொடங்கினால், அடுத்த மாதவிலக்கு உங்களுக்கு டிசம்பர் 29ம் திகதியில் வரும் என்றால் அந்த திகதியையும் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இதுதான் உங்கள் மாதவிலக்குக்கான காலகட்டம் (மென்சுரல் சைக்கிள்). உங்களுக்கான மாதவிலக்கு சுழற்சி, 28 நாட்களுக்கு ஒரு முறை.

கருமுட்டை எப்போது வெளிவரும் என்றால், அடுத்த மாதவிலக்கு தொடங்கும் முன்னராக 2 வாரத்துக்கு முன்பு கருமுட்டை வெளிவரும்.

உங்களது மாதவிலக்கு சுழற்சி 28 நாட்களுக்கு ஒருமுறை என்றால், கருமுட்டை வெளிவரும் நாள் 14வது நாள்.

28 நாட்கள் மாதவிலக்கு சுழற்சி இருப்பவருக்கு 14ம் நாள் கருமுட்டை வரும்.

30 நாட்கள் மாதவிலக்கு சுழற்சி - 16ம் நாள் கருமுட்டை வரும் .

34 நாட்கள் மாதவிலக்கு சுழற்சி - 20ம் நாள் கருமுட்டை வரும்.

இதெல்லாம் சீராக மாதவிலக்கு வருபவர்களுக்கு பொருந்தும். அவர்கள் எளிதாகக் கணக்கிட்டு கொள்ளலாம்.

இந்த கருமுட்டையானது மிகவும் அரிதானது. இதை 'பொக்கிஷம்' என்றும் சொல்லலாம்.



# டார்க் சொக்லேட்டும் நன்மைகளும்

சொக்லேட் சாப்பிடுவது உடலுக்கு நல்லது என்று பெரும்பாலான ஆய்வுகள் கூறுகின்றன. சொக்லேட் என்பது பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவருக்கும் பிடித்தமான ஒன்று. ஆனால், எல்லா வகையான சொக்லேட்டுகளும் நன்மையளிக்காது.

சொக்லேட்டுகளில் உள்ள கொகோ எனும் பொருள் தான் அதன் சுவைக்கும், நலத்துக்கும் காரணமான ஒன்று. பல சொக்லேட்டுகளில் இரசாயனம் கலக்கப்படுகிறது.

**இரசாயனம் க லக்காத கொகோ வேதிப் பொருள் அதிகமுள்ள டார்க் சொக்லேட்டுகள் உண்பதால் கிடைக்கும் நன்மைகள்:**

★ டார்க் சொக்லேட் சாப்பிடுவதால் சருமம் பளபளப்பாகிறது.

★ இதயக்கோளாறுகள் ஏற்படுவதைத் தடுக்கிறது. குறிப்பாக மாரடைப்பைத் தடுக்கிறது.

★ இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.

★ உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளைக் கரைக்கிறது.

★ சொக்லேட் சாப்பிடுவதால் கொழுப்புகள் கரைகின்றன. இதனால் மற்ற உணவுகளைக் குறைவாக எடுத்துக் கொள்வதால் உடல் எடை குறைகிறது.

★ உடல்நலத்தை மேம்படுத்துகிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

★ முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்து முகம் பிரகாசிக்க உதவுகிறது.

★ இளமைத் தன்மைக்கு சொக்லேட்டில் உள்ள கொகோ எனும் பொருள் காரணமாக உள்ளது.

★ மன அழுத்தத்தில் இருந்து விடுபட உதவுகிறது. மனச்சோர்வு, மன அழுத்தம் உள்ளவர்கள் சொக்லேட் சாப்பிடுவதால் மனநிலை சீராகும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.










# இறுக்கமான உள்ளாடைகள் வேண்டாம்!

பெண்களுக்கு ஆடை, அலங்காரம் என்றாலே பிரியம் தான். பெரும்பாலானோர் உடல் அமைப்பை அழகாக காட்டும் ஆடைகளையே விரும்புவார்கள். இதனால் உள்ளாடைகளையும் இறுக்கமாக அணிகிறார்கள். உள்ளாடைகளை இறுக்கமாக அணிவதால் பல இன்னல்களை சந்திக்க நேரிடும். இருப்பினும் அவர்கள் அதையே தொடர்ந்து செய்கிறார்கள். இப்படி இறுக்கமாக உள்ளாடை அணிவதால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

பெண்கள் கட்சிதமாக ஆடை அணிகிறோம் என்ற பெயரில் நிறைய பேர் இறுக்கமாக தான் உள்ளாடை அணிகிறார்கள். இதனால் நிறைய பேருக்கு அலர்ஜி ஏற்படுவதும் உண்டு. நாட் கணக்காக அரிப்பு ஏற்படும். எதனால் இப்படி ஏற்பட்டது என்று யாரும் கவனிப்பதும் இல்லை.

இறுக்கமாக உள்ளாடை அணிவதால் சீரான இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதனால் அவ்விடத்தில் இருக்கும் நரம்புகள் உணர்ச்சியற்று போக வாய்ப்புகள் இருக்கின்றன.

சீரான இரத்த ஓட்டம் தடைப்படும் போது அவ்விடத்தில் இருக்கும் திசுக்கள் இறந்து போக கூடும். எரிச்சல், அலர்ஜி போன்றவை ஏற்படவும் இறுக்கமான முறையில் உள்ளாடை அணிவது ஓர் காரணமாக அமைகிறது.

சிலர் உள்ளாடையை வயிறு வரை ஏற்றி இறுக்கமாக அணிவார்கள். இது வயிறு பகுதியை மிகவும் கடினமாக உணர செய்யும். இதனால் ஏற்படும் அமில எதிர்வினையின் காரணமாக நெஞ்செரிச்சல் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அவ்விடத்திற்கும் காற்றோட்டம் தேவை. இறுக்கமாக உள்ளாடை அணிவதால் காற்றோட்டம் தடைப்படுகிறது.

இதனால் வியர்வை அதிகம் வெளிப்பட்டு அவ்விடத்திலேயே தங்கி பக்டீரியா தொற்று ஏற்பட வாய்புகள் உண்டு. பெண்களுக்கு சிறுநீர் குழாய் தொற்று ஏற்படும் அபாயம் இருக்கிறதாம். இதற்கு காரணம் காற்று புகாத வண்ணம் உள்ளாடை அணிவதேயாகும்.

சில குறிப்பிட்ட துணிகளால் தயாரிக்கப்படும் உள்ளாடைகளை இறுக்கமாக அணிவதால் சரும நோய்கள் ஏற்படவும் வாய்ப்புகள் இருக்கின்றன. முக்கியமாக நைலோன் போன்றவை ஆகும். சிவந்த தடுப்புகள், சருமம் பழுத்து காணப்படுதல் போன்றவை ஏற்பட அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

தினமும் இவ்வாறு நீங்கள் அணிவதால் உடல் நல அபாயங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். எனவே, இறுக்கமான முறையில் உள்ளாடை அணிய வேண்டாம்.

# ரைஸ் போண்டா

**தேவையான பொருட்கள் :**



சாதம் - 2 கப்
கடலைமாவு - 1 கப்
வெங்காயம் - 1
இஞ்சி - 1 துண்டு
பச்சைமிளகாய் - 2
கொத்தமல்லித்தழை - சிறிதளவு
கறிவேப்பிலை - 1 கொத்து
உப்பு,
எண்ணெய் தேவையான அளவு

**செய்முறை:**

வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய், கொத்தமல்லியை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். ஒரு அகண்ட பாத்திரத்தில் சாதத்தை போட்டு நன்றாக குழைத்து கொள்ளவும். அதனுடன் கடலைமாவு, பொடியாக நறுக்கிய வெங்காயம், இஞ்சி, பச்சைமிளகாய், கொத்தமல்லித்தழை, கறிவேப்பிலை, தேவையான அளவு உப்பு, எண்ணெய் ஒரு மேசைக்கரண்டி சேர்த்து நன்கு பிசையவேண்டும். இதில் தண்ணீர் ஊற்றத்தேவையில்லை.

பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி சூடானதும் பிசைந்து வைத்துள்ள மாவை உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 23

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | |
| 05 | 06 | 07 | 08 | | 09 |
| | 10 | | 11 | 12 | 13 |
| 14 | 15 | | 16 | | |
| 17 | | 18 | 19 | | 20 |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
தொலைபேசி இல ........................................
பாடசாலை பெயர் ........................................
வதிவிட முகவரி ........................................
........................................
.............................. ........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர்/ பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) இலங்கையில் மிகக் கூடுதலாக விளைகின்ற பிரதான தானியம் இதுவாகும். எமது நாட்டு மக்களின் பிரதான உணவுக்கான தானியம்.
(03) எமது நாட்டின் காடுகளில் வாழ்கின்ற மிருகம். பார்த்து ரசிக்கத்தக்க, அழகிய மிருகம். உடலெங்கும் வெண்ணிறப் புள்ளிகள். மனிதனால் இறைச்சிக்காக வேட்டையாடப்படும் அப்பாவி மிருகம். (தலைகீழான சொல்)
(05) மாம்பழம் அல்ல, அதன் பிஞ்சுப் பருவமும் அல்ல இது. இரண்டுக்கும் இடைப்பட்டதை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(11) நன்னீர்நிலைகளிலும், தரையிலும் வாழக்கூடிய ஈரூடக வாழி.
(14) எலுமிச்சை, தோடை, கள்ளி, நெருஞ்சி போன்ற செடிகளில் இதனைக் காணலாம். தொட்டால் குத்திவிடும். மிகவும் கூரியது. (தலைகீழான சொல்)
(18) கடற்கரைக்குச் செல்வோமானால் இதனைக் காணலாம். ஓயாமல் அடித்துக் கொண்டேயிருக்கும். (தலைகீழான சொல்)
(21) பாக்குமரத்தை இவ்வாறு அழைப்பர். (தலைகீழான சொல்)
(24) ஆகாயத்தின் மறுபெயர்.

**மேலிருந்து கீழ்**

(01) தயிரில் இருந்து பெறப்படுகின்ற எண்ணெய்த் தன்மை கொண்ட திரவம். சமையலுக்கு சுவை சேர்க்கப் பயன்படுத்துவர்.
(02) கால் பங்குகள் மூன்று சேர்ந்தால், அந்த அளவு இவ்வாறுதான் குறிப்பிடப்படும். (தலைகீழான சொல்)
(03) இந்தியாவுக்குச் சொந்தமான தீவு இது. அழகிய சுற்றுலாத் தலமாக விளங்குகின்றது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இத்தீவில் சிறைக்கூடங்கள் இருந்தன. (தலைகீழான சொல்)
(09) மரத்தின் கொப்பு இது.
(14) திருவள்ளுவர் எழுதிய, இருவரி நன்னெறிக் கருத்து. (தலைகீழான சொல்)
(18) மான்களில் இது ஆண் இனம். (தலைகீழான சொல்)
(20) கோதுமைமாவில் இருந்து தயாரிக்கப்படுகின்ற உணவுப்பண்டம். எமது நாட்டு மக்களில் அநேகர் காலை அல்லது இரவு ஆகாரத்துக்காக இந்த உணவுப் பண்டத்தைப் பயன்படுத்துகின்றனர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 22

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) சனி (03) பனை (05) கல்லூரி (11)சுறா
(13) கப்பல் (19) பரி (21) நத்தை (24) பாலை

**மேலிருந்து கீழ்**

(02) கனி (03) பரிசு (06) பகல் (09) அகந்தை
(12) புறா (16) பல் (20) பாரி

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 21

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எம்.வை.எப். அம்ரா,**
தரம் 09, க/ விஹாரமகாதேவி மகளிர் கல்லூரி,
3 A, 'பர்வின் மன்ஸில்'
உடத்தலவின்ன மடிகே, கண்டி.

**இரண்டாம் பரிசு**
**ஏ.ஜே.ஏ. அஹமட்,**
தரம் 09, பாபுல்ஹஸன் தேசிய பாடசாலை,
44, மஸ்ஜித் மாவத்தை, வறக்காப்பொல.

**மூன்றாம் பரிசு**
**சஜிந்த பிரதீப்,**
தரம் 09, விபுலானந்த மகா வித்தியாலயம்,
புதுநகர், மல்வத்தை.

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எப்.எப். ஆதிகா,**
தரம் 09 D, அல்மனார் தேசிய பாடசாலை,
257/1/1 A, எலதத்த, வல்அறம்ப, ஹந்தெஸ்ஸ.
**2. சு. யகஸ்வினி,**
தரம் 08A, தி/கலைமகள் மகா வித்தியாலயம்,
அம்பாள் வீதி, அன்புவழிபுரம்,
திருகோணமலை.
**3, எம்.ஏ.எப். அஸ்மா,**
தரம் 08B, க/பதிஉத்தீன் பாலிகா வித்தியாலயம்,
98/A, சுஜாதா லேன், நம்புக்கன வீதி, மடிகே,
கலகெதர.
**4. உ. வய்ஸ்னவ்,**
தரம் 05, கமு/கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை,
127/C, புதிய சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு 01B, கல்முனை.
**5. எஸ். ருக்சிதா,**
தரம் 05, நு/தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம்,
இல. 01, குணானந்தபுர, தலவாக்கலை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 23
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
வேளாண்மை செய்தல் பொருட்டு.**

**தெளிவுரை :**
*பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப்போல நல்லனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் இயலாது.*

# வலிமையுள்ள சிலந்தி வலை

உழைப்பு என்று சொன்னால் எறும்பையும் முயற்சி என்று சொன்னால் சிலந்தியையும் தான் உதாரணமாக சொல்வார்கள். சிலந்தி என்றதும் நம் நினைவுக்கு வருவது அதன் வலைதான். இந்த வலைதான் சிலந்தி வாழ்வதற்கான இருப்பிடமாக உள்ளது. சிலந்தியின் வாயிலிருந்து வரும் எச்சிலைக் கொண்டு இந்த வலை பின்னப்படுகிறது. இந்த வலையில் வந்து விழும் பூச்சிகளை இரையாக்கிக்கொண்டே சிலந்தி வாழ்கிறது. வலையின் ஆயுட்காலம் முடிந்து அது பழையதாகும்போது அந்த வலையை விட்டு விட்டு வேறொரு வலையைப் பின்னத் தொடங்குகிறது. சிலந்தி.பூச்சி இனத்தைச் சேர்ந்த சிலந்தியில் கோடு போட்ட சிலந்தி என்றும், சிறிய சிலந்தி என்றும் பல வகைகள் உள்ளன.

ஆர்ப் வீவர் என்ற கோடு போட்ட ஒருவகை சிறிய சிலந்தி கூட்டமாக சேர்ந்து கூடு கட்டுகின்றன. இந்த வகை சிலந்திகள் ஆபிரிக்காவிலுள்ள மழைக்காடுகளில்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. அளவில் சிறியதாக இருந்தாலும் காடுகளில் இரண்டு மரங்களை இணைப்பது போன்றும், கிளைகளை இணைத்து பல மீட்டர் நீளம் கொண்ட வலையைப் பின்னும். இந்த சிலந்தியின் வலை எளிதில் அழிந்துபோகாது. மழை, காற்று மற்றும் விலங்குகளாலும் சேதம் ஏற்பட்டுவிட்டால், உடனடியாக பல சிலந்திகள் கூட்டாகச் சென்று வேலை செய்து வலையை சரிசெய்கின்றன. வலையில் வந்து விழும் உணவை எல்லா சிலந்திகளும் பகிர்ந்து உண்ணும். பெண் சிலந்திகள் வேட்டையாடுவது மற்றும் வலையில் உள்ள சிலந்திகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்திவரும்.

உலகிலேயே மிகப் பெரிய சிலந்தி வலையை விஞ்ஞானிகள் மடகாஸ்கர் தீவில் கண்டுபிடித்துள்ளனர். மடகாஸ்கரில் உள்ள ஒரு ஆற்றின் மேல் பரந்து விரிந்து காணப்படுகிறது இந்த சிலந்தி வலை.

இதுவரை அறியப்படாத ஒரு வகை பொருளால் இந்த வலை பின்னப்பட்டுள்ளது. மிகவும் வலுவாகவும், உறுதியாகவும் காணப்படுகிறது. டார்வினின் ஸ்பார்க் ஸ்பைடர் என்ற புதிய வகை சிலந்தி இந்த உயிரியல் பொருளை வெளிப்படுத்துவதாகவும் தெரிய வந்துள்ளது. ஒரே சிலந்தியால் பின்னப்பட்ட உலகின் மிகப்பெரிய வலை என்ற பெயரையும் இது பெற்றுள்ளது.

**என். வினோமதிவதனி,**
லுணுகலை.

## இவ்வார மழலை




தமிழ்ச்செல்வன் / அபிலாஷினி,
புசல்லாவ.

## தெரிந்துகொள்வோம்

★ ஆண் சிங்கம் சாப்பிட்ட பின்னரே பெண் சிங்கம் சாப்பிடும்.
★ உலகப் புகழ்பெற்ற 'மோனோலிசா' ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.
★ வாத்து அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.
★ எப்போதும் காற்று வீசும் திசையிலேயே தலை வைத்துப் படுக்கும் மிருகம் நாய்.
★ உலகில் கடற்கரை இல்லாத நாடுகள் 26 உள்ளன.
★ தேசியக் கொடியை முதன் முதலில் உருவாக்கிய நாடு டென்மார்க். 1291ல் உருவாக்கப்பட்டது.
★ அமெரிக்காவைவிட சகாரா பாலைவனம் பெரிது.
★ எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் உயிர் வாழும்.
★ ஒரு பென்சிலைக் கொண்டு, 58 கி.மீ. நீளமான கோடு போடலாம்.
★ பாம்புகளுக்கு கேட்கும் சக்தி இடையாது.
★ நண்டுக்கு தலை கிடையாது. அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்.
★ வெள்ளை என்பது ஒரு நிறம் கிடையாது. அது 7 வண்ணங்களின் கலவை ஆகும்.
★ முற்றிப் பழுத்துக் காய்ந்த தேங்காய், மரத்திலிருந்து பகலில் விழாது. இரவில் தான் விழும்.
★ நமக்கு உடல் முழுவதும் வியர்க்கும். நாய்க்கு நாக்கில் மட்டும்தான் வியர்க்கும்.
★ சிலந்திப் பூச்சிக்கு 8 கண்கள் உண்டு.
★ இறாலுக்கு இதயம் தலையில் இருக்கிறது.
★ஆஃப்கானிஸ்தானில் ரயில் கிடையாது.
★இந்தியாவில் தமிழில்தான் பைபிள் முதன் முதலில் மொழி பெயர்க்கப்பட்டது.

**சுஸ்மிதன் ஆனந்தன்,**
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம், நோர்வூட்.

## எதிர்ப்பாற் சொற்கள்

| | |
|---|---|
| அப்பா | - அம்மா |
| அப்பன் | - அம்மை |
| அவன் | - அவள் |
| அழகன் | - அழகி |
| அரசன் | - அரசி |
| அரக்கன் | - அரக்கி |
| ஆசிரியன் | - ஆசிரியை |
| ஆடவர் | - பெண்டிர் |
| தந்தை | - தாய் |
| தம்பி | - தங்கை |
| தமிழன் | - தமிழச்சி |
| பாட்டன் | - பாட்டி |
| தலைவன் | - தலைவி |
| தோழன் | - தோழி |
| பாட்டன் | - பாட்டி |
| திருடன் | - திருடி |

**எஸ். அனுஷிகா,**
தரம் 04,
கே/தெஹி/நூரி தமிழ் வித்தியாலயம்,
தெரணியகலை.

## மாம்பழம்!



*மாம்பழம் குண்டு மாம்பழம்
மகிழ்ந்து உண்ணும் மாம்பழம்
தித்திக்கச் சுவைக்கும் மாம்பழம்
தெவிட்டா இன்பம் மாம்பழம்!*

*மஞ்சள் வண்ண மாம்பழம்
பல்வகை வடிவம் மாம்பழம்
மக்கள் விரும்பும் மாம்பழம்
முக்கனி வடிவம் மாம்பழம்!*

**அனஸ் பாரிஸ்,**
மள்வானை.

## பொன்மொழிகள்

◆ நாளைக்கு மனம் வருந்தும்படி இன்றைக்கு எதையும் செய்து விடாதே.
◆ எதையும் எதிர்பார்க்காதவன் பாக்கியசாலி. ஏனெனில் அவனுக்கு ஏமாற்றமே கிடையாது.
◆ விதை விதைத்தால் பயிர் விளையும். அன்பை விதைத்தால் அன்பு வளரும்.
◆ பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம்; நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்.
◆ பிறர் செய்த சிறிய உதவிகளை மறக்காதே; ஆனால் அவர் செய்த சிறிய தவறுகளை மறந்துவிடு.
◆ நேரத்தை சரியாகப் பயன்படுத்தாதவன் தான் எண்ணியதை ஒரு நாளும் அடைய முடியாது.
◆ நம் வீட்டு வாசலை நாம் சுத்தம் செய்தால், நம் ஊரே சுத்தமாயிருக்கும்.
◆ பணத்தின் மேல் வைக்கும் பேராசை; தீமைகள் அனைத்திற்கும் ஆணி வேர்.
◆ சி றந்த வாழ்வின் தலையாய அணிகலன் அடக்கமும், பணிவும் மட்டுமே.
◆ கடமையை செய்ய முற்படு; அப்போதுதான் உன் தகுதியை அறிவாய்.

**உ. லிமானுசன்,**
தரம் 04, உடபாகை தமிழ் வித்தியாலயம்,
பொரலங்கட, தெஹியோவிற்ற.






**ஆர். தனுஷிகா,**
தரம 07, ப/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
இதல்கஸ்ஹின்ன, ஹப்புத்தளை.



**சி. சத்துரிகா,**
தரம் 07, ப/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
இதல்கஸ்ஹின்ன, ஹப்புத்தளை.



**இக்ராம்,**
தரம் 04, அல் மஹ்மூத் மகா வித்தியாலயம்,
மள்வானை



**பர்ஹா பைஸர் அல்பாளியத்துல் நஸ்ரியா,**
தரம் 08, முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம்,
மருதானை,
பேருவளை.

# உடைந்த கதிரை (சுயசரிதை)

ஒரு குப்பை மேட்டில் இருந்து நான் பேசுகின்றேன். எனது சோகக் கதையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோன். இலங்கையின் தென்மாகாணத்தின் சிங்கராஜா வனப்பகுதியில் சந்தோஷமாக உறவினர்களுடன் வசித்து வந்த என்னை ஒரு தச்சன் பார்த்துவிட்டு சென்றிருந்தான். இன்னொரு நாள் தனது உதவியாளர்களுடன் வந்த அவன் தனது கோடாரியால் என்னை வெட்டிப்பார்த்து இது நல்ல முதிரை மரம். விலை கூடிய மரம். நாங்கள் எல்லோருமாக இந்த மரத்தை வெட்டி எமது நகருக்குக் கொண்டு போகலாம் என்றான். உடனே எனக்கு கவலையாகவும் அழுகையாகவும் வந்தது. அப்போது எனக்கு உதவி செய்ய யாருமில்லை. இருப்பினும் அந்த தச்சன் தனது உதவியாளர்களுடன் என்னை வெட்டிச் சரித்தான். பின்பு என்னை ஒரு பெரிய வாகனம் ஒன்றில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

சில நாட்கள் என்னை அப்படியே விட்டார்கள். பின்பு ஒரு நாள் அரச உயரதிகாரி வந்து என்னைப் பார்த்துவிட்டு அந்த தச்சனையும் அரச அலுவலகம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றான். என்னை வெட்டியதற்கு தண்டனை பெறப்போகின்றான் என்று நான் நினைத்தேன். ஆனால் தச்சன் மிகுந்த சந்தோஷத்தோடு திரும்பி வந்தான்.

காரணம் அரசாங்க அதிகாரியின் இல்லத்தில் ஒரு பெரிய நாற்காலி வேண்டும் என்று கூறியிருந்தார். மறுநாள் தச்சன் மற்றும் உதவியாளர்கள் எல்லோரும் என்னை மிகவும் கஷ்டப்படுத்தி, வெட்டி, அடித்து எல்லாம் செய்தார்கள். நான் மிகவும் கஷ்டப்பட்டேன். ஒருவாறு இப்படி எல்லாம் நடந்தாலும் என்னை ஒரு மிகுந்த அழகான நாற்காலியாக உருவாக்கினர். வர்ணம் எல்லாம் பூசி, மிகவும் நன்றாக இருந்தேன்.

அப்போது தச்சன் உதவியாளர்களிடம் இந்த நாற்காலியை அரச அதிகாரியின் இல்லத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என கூறினார். எனக்கும் மிகுந்த சந்தோஷமாக இருந்தது. நாளை முதல் சொகுசு வாழ்க்கை. மறுநாள் அங்கு கொண்டு சென்றார்கள். அங்கே அரச சிம்மாசனமாக நான் இருந்தேன்.

சில வருடங்கள் கழிந்தன. அந்த அதிகாரி வேறு ஒரு இடத்திற்கு மாற்றலாகிச் சென்றுவிட்டார்.

அதன் பின்னர் புதிதாக வந்தவர் என்னை அந்த அலுவலகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டார். நான் அந்த அலுவலகத்திலேயே பல இடங்களுக்கு மாற்றப்பட்டேன். பின்னர் அந்த அலுவலகத்தில் இருந்த சிற்றூழியர் ஒருவரின் ஆசனமாக இருந்தேன். சிறிதுகாலம் என்னை நன்கு பயன்படுத்திக்கொண்டார்.

இவ்வாறே பல வருடங்கள் கடந்தன. அந்த சிற்றூழியரைக் காணவில்லை. உடல்நலக் குறைவினால் அவர் ஓய்வு பெற்று சென்றுவிட்டதாக பேசிக்கொண்டார்கள். வந்தவர்கள் எவரும் என்னை கண்டுகொள்ளவில்லை. எனது ஒரு கால் உடைந்த நிலையில் என்னை வெளியேற்றி குப்பை மேட்டில் போட்டார்கள். இதனால் இப்போது நான் யாருக்கும் உதவாத உடைந்த நாற்காலியாக காட்சியளிக்கின்றேன்.

**திஷாலினி மகேந்திரன்,**
புனித பத்திரிசியார் கல்லூரி,
தலவாக்கலை.




# விளையாட்டு

### 24 வருட வரலாற்றை புதுப்பித்து தடகள வீரர் சாதனை;

# 100 மீற்றரில் யுபுன் வெண்கலம் பாலித்தவுக்கு வெள்ளிப்பதக்கம்





| Rank | Lane | CGA | Name | B.T. | Time |
|---|---|---|---|---|---|
| 1 | 3 | KEN | Ferdinand OMANYALA | | 10.02 |
| 2 | 4 | RSA | Akani SIMBINE | | 10.13 |
| 3 | 7 | SRI | Yupun ABEYKOON | | 10.14 |
| 4 | 1 | GHA | Benjamin AZAMATI | | 10.18 |
| 5 | 7 | WAL | Jeremiah AZU | | 10.18 |
| 6 | 8 | AUS | Rohan BROWNING | | 10.20 |
| 7 | 5 | CMR | Emmanuel ESEME | | 10.24 |
| 8 | 6 | ENG | Nathaneel MITCHELL-BLAKE | | 11.10 |

Final - 21:32 - Official · Wind: -0.0

2022 பொது நலவாய விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் யுபுன் அபேகோன், இறுதிப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

04 ஆம் திகதி காலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட யுபுன் மூன்றாவது வீரராக 10.14 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்தார். இரண்டாம் இடம் பிடித்த தென்னாபிரிக்க வீரர் 10.13 செக்கன்களில் நிறை செய்கையில் யுபுன் 01 செக்கனில் வெள்ளிப் பதக்கத்தை தவறவிட்டார். இதன் மூலம் பொதுநலவாய விளையாட்டு போட்டியில் 100 மீட்டர் ஓட்டத்தில் பதக்கம் வென்ற முதல் ஆசிய வீரர் என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டுள்ளார்.

அத்துடன், பொதுநலவாய தடகள அரங்கில் இலங்கை வென்ற நான்காவது பதக்கம் இதுவாகும். 1998ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொதுநலவாய தடகளப் பதக்கத்தை வென்ற முதல் இலங்கை வீரராவார்.

இப்போட்டியின் அரையிறுதியில் யுபுன் 10.20 விநாடிகளை கடந்து நான்காவது இடத்தைப் பிடித்தார். ஆனால் அவர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற அந்த நேரம் போதுமானதாக இருந்தது. மேலும் அவர் பூர்வாங்க சுற்றில் 10.06 விநாடிகளில் சிறந்த நேரத்தைப் பதிவு செய்து முதலிடத்தைப் பெற முடிந்தது.

100 மீற்றர் போட்டியில் தெற்காசிய சாதனைக்கும் சொந்தக்காரரான யுபுன், 100 மீற்றர் போட்டியை 9.96 விநாடிகளில் நிறைவு செய்து 10 வினாடிகளுக்குள் போட்டியை நிறைவு செய்த முதலாவது தெற்காசிய வீரர் என்ற வரலாற்றைப் படைத்தார். அத்தோடு பாரா (விசேட தேவையுடையவர்களுக்கான) மெய்வல்லுனர் வீரர் பாலித பண்டார வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். பாரா மெய்வல்லுனர் எப்4244/6164 பிரிவில் வட்டு எறிதல் போட்டியில் 44.20 மீற்றர் தூரத்தை எறிந்து இரண்டாமிடத்தை பெற்றார்.

பொதுநலவாய பாரா பதக்கத்தை வென்ற முதலாவது இலங்கை வீரராவார்.

அத்தோடு இலங்கைக்கு முதல் பதக்கத்தை ஆடவருக்கான பளுதூக்கும் போட்டியில் 55 கிலோ எடைப்பிரிவில் திலங்க இசுரு குமார வெண்கல பதக்கத்தை பெற்றுக் கொடுத்தார்.

இதன் மூலம், தடகளப் போட்டிகளில் (பாரா மற்றும் பொது) இலங்கை வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

**இன்றும் நாளையும் நடைபெறும் மெய்வல்லுனர் போட்டிகள்:**

ஆண்கள் 400m F ஆகஸ்ட் 7 15:15 மணி.
பெண்களுக்கான நீளம் பாய்தல் F ஆகஸ்ட் 7 23:35.
பெண்கள் 1500m F ஆகஸ்ட் 7 23:50.
ஆண்களுக்கான ஈட்டி எறிதல் F ஆகஸ்ட் 8 00:10



### மகளிர் யூரோ கோப்பை

## ஒற்றைப்படம் பல தடைகளை உடைத்தெறிந்துள்ளது

விளையாட்டில் பெண்களுக்கு உள்ள ஆடை கட்டுப்பாடு, கால்பந்தில் மகளிருக்கான பிரதிநிதித்துவம், அவர்கள் உடல் மீதான அவர்களது உரிமைகள் போன்றவை ஒரு புகைப்படத்தின் ஊடாக உடைந்தெறிப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 31ம் தேதி இரவு நடைபெற்ற மகளிர் யூரோ கோப்பை தொடரில் சாம்பியன் பட்டத்தை இங்கிலாந்து அணி வென்றுள்ளது. இந்தப் போட்டியில் அணிக்காக இரண்டாவது கோலை தான் பதிவு செய்ததை கொண்டாடும் விதமாக தனது டிஷர்ட்டை கழற்றி சுழற்றியபடி மைதானம் முழுவதும் ஒரு ரவுண்டு வந்தார் இங்கிலாந்து வீராங்கனை க்ளுய் கெலி (Chloe Kelly). அவரது அந்த படம்தான் இப்போது மகளிருக்கான அதிகாரத்தின் அடையாளம் என கருதி உலக அளவில் பெண்கள் பலரும் போற்றி வருகின்றனர்.



அவர் ஸ்போர்ட்ஸ் பிரா (மேலங்கி) அணிந்தபடி மைதானத்தை வலம் வந்த காட்சிதான் இந்தத் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. 'தசாப்தத்தின் சிறந்த பெண்ணியப் பிம்பம்' என இந்தப் படம் போற்றப்படுகிறது. அதோடு, இந்த ஒற்றைப்படம் பல தடைகளை உடைத்தெறியும் வகையில் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

'ஒரு விளையாட்டு வீராங்கனையின் ஐகானிக் புகைப்படம் இது' என 'தி நியூயார்க் டைம்ஸ்' கெலியின் படத்தை போற்றியுள்ளது. கிட்டத்தட்ட 56 ஆண்டுகளுக்கு பிறகு சர்வதேச அரங்கில் இங்கிலாந்து மகளிர் கால்பந்து அணி வெல்லும் முதல் சாம்பியன் பட்டம் இது. அதனால்தான் இப்படி ஓர் ஆனந்த தாண்டவத்தை அரங்கேற்றியுள்ளார் கெலி.

கடந்த 1999 மகளிர் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் அமெரிக்க அணியின் முன்னாள் வீராங்கனை ப்ராண்டி செஸ்டைன் (Brandi Chastain) இதேபோன்ற கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இப்போது பலரும் அதனை கெலியின் படத்துடன் ஒப்பிட்டுப் பேசி வருகின்றனர்.

அதே நேரத்தில் கெலியின் படத்தை பலரும் டுவிட்டரில் பகிர்ந்து, அது குறித்து தங்கள் கருத்தை பகிர்ந்திருந்தனர். அந்த போட்டோ வளர்ந்து வரும் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களிடத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை குறித்த கருத்துகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.

### 2022 ஆசியக் கிண்ண T20 தொடர்;

## பாகிஸ்தான் அணி அறிவிப்பு



பாபர் அசாம் தலைமையில் 15 பேரை உள்ளடக்கிய பாகிஸ்தானின் ஆசியக் கிண்ணத்துக்கான அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளரான நஸீம் சாஹ் அறிமுக வீரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானுக்காக 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கும் 19 வயதான நஸீம் சாஹ் இதுவரை ஒருநாள் போட்டிகளிலோ அல்லது T20 போட்டிகளிலோ விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாகிஸ்தான் தமது நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் சஹீன் அப்ரிடியை, ஆசியக் கிண்ண குழாத்தில் இணைத்திருக்கின்ற போதும் அவரது உடற்தகுதி தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட பின்னரே அவர் சர்வதேச போட்டிகளில் விளையாடுவது தீர்மானிக்கப்படும்.

ஆசிப் அலி, ஹைதர் அலி, இப்திகார் அஹ்மட் மற்றும் உஸ்மான் காதிர் போன்ற வீரர்களுக்கும் ஆசியக் கிண்ணத்திற்கான பாகிஸ்தான் குழாத்தில் வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும் அனுபவ வேகப்பந்துவீச்சாளர் ஹஸன் அலி தெரிவு செய்யப்படவில்லை.

ஹஸன் அலி தவிர சகலதுறை வீரர்களான இமாத் வஸீம், சொஹைப் மலிக் போன்ற வீரர்களுக்கும் ஆசியக் கிண்ணத் தொடரில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதேவேளை ஆசியக் கிண்ணத் தொடருக்கு முன்னர் நெதர்லாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி அங்கே ஐ.சி.சி. இன் ஒருநாள் சுபர் லீக்கிற்காக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளதோடு, அதன் பின்னர் ஆசியக் கிண்ணத் தொடருக்காக இம்மாதம் 22ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் செல்லவிருக்கிறார்.

**பாகிஸ்தான் அணி: பாபர் அசாம் (தலைவர்), சதாப் கான் (பிரதி தலைவர்), பகார் சமான், ஹைதர் அலி, ஹரிஸ் ரவுப், இப்திகார் அஹ்மட், குஸ்தில் சாஹ், மொஹமட் நவாஸ், மொஹமட் ரிஸ்வான், மொஹமட் வஸீம் , நஸீம் சாஹ், சஹீன் அப்ரிடி, சாஹ் நவாஸ் தஹானி, உஸ்மான் காதிர்.**

## பெட்மிண்டன், கடற்கரை கரப்பந்தாட்ட போட்டிகளில் வெற்றிகளை பெற்ற இலங்கை வீரர்கள்


2022 பொதுநலவாய விளையாட்டு விழாவின் இலங்கை பதக்கங்களை வெல்லாத போதும், வெற்றிகள் பலவற்றை குவித்துள்ளது. இதில் பெட்மிண்டன் போட்டிகளில் தனிநபர், கலப்பு இரட்டையர் மற்றும் ஆண்களுக்கான இரட்டையர் பிரிவுகளில் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளதுடன், கடற்கரை கரப்பந்தாட்டத்தில் இலங்கை ஆண்கள் மற்றும் பெண்கள் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன. ஸ்குவாஷ் ஆண்கள் இரட்டையர் பிரிவிலும் இலங்கை வெற்றியை பதிவுசெய்துள்ளது.

**பெட்மிண்டன்**

ஆண்களுக்கான தனிநபர் பெட்மிண்டன் இரண்டாவது சுற்றில் பார்படோஸ் வீரர் ஷே மைக்கல் மார்டினை எதிர்கொண்ட இலங்கை வீரர் நிலூக கருணாரத்ன 2-0 என இலகுவான வெற்றியை பெற்று, மூன்றாவது சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளார்.

போட்டியின் இரண்டு செட்களிலும் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர் 21-6 மற்றும் 21-5 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றார்.

அதேநேரம் மற்றுமொரு வீரரான துமிந்து அபேவிக்ரம இரண்டாவது சுற்றில் மோல்டா வீரர் சாமுவெல் கேஸரை 2-0 என வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றார். இவர் 21-12 மற்றும் 22-20 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்றிருந்தார்.



இந்நிலையில் கலப்பு இரட்டையர் பிரிவுக்கான இரண்டாவது சுற்றில் பங்கேற்ற இலங்கையின் சச்சின் டயஸ் மற்றும் திலினி ஹெந்தேவா ஆகியோர், கனடா அணியை எதிர்த்து 2-0 என வெற்றிபெற்றுள்ளனர்.

இலங்கை அணியானது 21-11 மற்றும் 21-18 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றது.

அதேநேரம் பெட்மிண்டன் போட்டிகளில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் பார்படோஸை 2-0 என வீழ்த்திய இலங்கை ஆடவர் இரட்டையர் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. சச்சின் குணதிலக்க மற்றும் புவனேக குணதிலக்க ஆகியோர் பார்படோஸ் அணியை 21-12 மற்றும் 21-9 என வீழ்த்தினர். இதேவேளை பெண்களுக்கான தனிநபர் இரண்டாவது சுற்றில் பங்கேற்ற இலங்கை வீராங்கனை விதுரா சுஷானி, இங்கிலாந்து வீராங்கனை பிரேயா ரெட்பனிடம் 0-2 என தோல்வியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கடற்கரை கரப்பந்தாட்டம்**

செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்ட போட்டியில், இலங்கை அணி 20 என வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இலங்கையின் மலிந்த மற்றும் அஷேன் ஆகியோர் 21-11 மற்றும் 21-11 என்ற புள்ளிகள் கணக்கில் செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் அணியின் ஹொட்ஜ் மற்றும் சீபுரூக்ஸ் ஆகியோரை வீழ்த்தினர்.

இதேவேளை பெண்களுக்கான போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்று, காலிறுதிக்கு முன்னேறியது. குறிப்பாக இந்தப்போட்டியில் டிரினட் மற்றும் டொபெகோ அணியைச் சேர்ந்த வீராங்கனை உபாதைக்கு முகங்கொடுத்ததால், இலங்கை அணி அடுத்தச் சுற்றுக்கு முன்னேறியது.

### ஆசிய கிண்ணம்; போட்டி அட்டவணை

இலங்கை - ஆப்கானிஸ்தான் ஓகஸ்ட் 27 B டுபாய்
இந்தியா - பாகிஸ்தான் ஓகஸ்ட் 28 டுபாய்
பங்களாதேஷ் - ஆப்கானிஸ்தான் ஓகஸ்ட் 30 ஷார்ஜா
இந்தியா - தகுதிச் சுற்று ஓகஸ்ட் 31 டுபாய்
இலங்கை vs பங்களாதேஷ் செப்டெம்பர் 01 டுபாய்
பாகிஸ்தான் vs குவாலிஃபையர் 02 செப்டெம்பர் A ஷார்ஜா
B1 B2 03 செப்டெம்பர் சூப்பர் 4 ஷார்ஜா
A1 A2 04 செப்டெம்பர் சூப்பர் 4 டுபாய்
A1 B1 06 செப்டெம்பர் சூப்பர் 4 டுபாய்
A2 B2 07 செப்டெம்பர் சூப்பர் 4 டுபாய்
A1 B2 08 செப்டெம்பர் சூப்பர் 4 டுபாய்
B1 A2 09 செப்டெம்பர் சூப்பர் 4 டுபாய்
இறுதி (1வது சூப்பர் 4 - 2வது சூப்பர் 4) செப்டம்பர் 11 டுபாய்





கொழும்பு, இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த 01 ஆம் திகதி நடைபெற்ற மாகாண மட்ட உடற்பயிற்சி கண்காட்சி போட்டியில் கொழும்பு இந்து மகளிர் கல்லூரி அணியினர் மாகாண ரீதியில் முதலாவது இடத்தை பெற்றுக் கொண்டனர். நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவிகளுடன் கல்லூரி அதிபர் திருமதி ரவீந்திரராசாவுடன் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்களை காணலாம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஓகஸ்ட் 7 ஞாயிற்றுக்கிழமை
அவினியா - சாகித்தியா
பரத நாட்டிய அரங்கேற்றம்


## செந்தூர மழலைச் செல்வங்கள்


Shesha
illaiyarajah - Nirjah


Abisheka
illaiyarajah - Nirjah


Bawshini
Muruganandhan-Nalini


08.08.2014
எம்.எம்.காலிப்
மிசாத்மும்தாஜ் - கெலிஓயா


2017.8.15
SHABIR MUNSIF
ZAHIRA ROAD MAWANELA


2008.8.15
SHAHID MUNSIF
ZAHIRA ROAD MAWANELA

# கட்டிளம் காளையரை கவரும் மோகினி



உலகளாவிய ரீதியிலும் கூட கீழைத்தேய அல்லது மேலைத்தேய நாடுகள் என்ற பாகுபாடு இன்றி இத்தகைய பெண் "வெள்ளை உடை பிசாசுகள்" (White Dress Ghost) தொடர்பான பல்வேறு கதைகளும் நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றன. மோகினி என்பவள் தன் அழகிய தோற்றத்தின் மூலம் காண்போரை மோகத்தால் மயக்கும் வல்லமையுடையவள்.

இளைஞர்கள் அதிக காம ஆசைகளுடன் ஏங்கித் தவிக்கும் சந்தர்ப்பங்களில் அழகழகான பெண்கள் வடிவிலோ, காதலி வடிவிலோ அல்லது அவரவர் நாளாந்த வாழ்க்கையில் கண்டு பழகி வரும் யாரோ ஒரு பெண் வடிவில் மோகினி கனவில் தோன்றுவாள். சில சமயங்களில் அவர்களுக்கு மட்டும் கேட்கும் வகையில் ஆசை வார்த்தைகளால் உரையாடி காமத்தின் உச்ச நிலைக்கு கொண்டு சென்று கிளுகிளுப்பூட்டி தனது ஆசையை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் அந்த இளைஞனை படுக்கையில் இருந்து எழுப்பி கதவை திறந்து கொண்டு வெளியே அழைத்துச் சென்று இடை நடுவில் அகோரமான உருவெடுத்து பயமுறுத்தும் அல்லது முச்சந்தி, பாழடைந்த மலைப் பாங்கான பள்ளத்தாக்குகள், நீர் வீழ்ச்சிகள், குளங்கள், ஏரிக்கரை மற்றும் சுடுகாட்டுக்கு அழைத்துச் சென்று உயரமான இடத்தில் இருந்து கீழே தள்ளிவிட்டு விடும். சில சமயங்களில் கழுத்தையும் முறித்து கொன்று விடுவதாகவும் நம் முன்னோர்களின் மரபுக் கதைகளில் கூறுவதையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம்.

அதேபோல் இரவு நேரங்களில் முச்சந்தி அல்லது சுடுகாடுகளுக்கு மத்தியில் தனிமையில் வீதிகளில் பயணிக்கும் ஆண்களின் முன் சிறு கைக்குழந்தையுடன் தோன்றி தனது சேலையை சரி செய்துக் கொள்ளும் வரையில் குழந்தையை வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாகவும் அவ்வாறு குழந்தையை வாங்கிக் கொள்ளும் பட்சத்தில் அவர்களை வசியப்படுத்தி சுடுகாட்டுக்கு கூட்டிச் சென்று சுடுகாட்டு மத்தியில் விட்டுவிட்டு கண்ணில் இருந்து மறைந்து விடுமாம்.

வேறு சில சந்தர்ப்பங்களில் வாகனத்தில் தனியாக செல்பவர்களை வழிமறித்து ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வாகனத்தில் பயணிக்க உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்வதாகவும் மோகினியின் அழகிய தோற்றத்தில் மயங்கியோ அல்லது கருணையுடன் உதவி செய்யும் நோக்கில் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு செல்லும் வழியில் முச்சந்தி, அடர் வனம் அல்லது சுடுகாட்டு பகுதிகளில் பயணிக்கும் போது வாகனத்தில் இருந்து மர்மமான முறையில் மாயமாக மறைந்து விடுவதாகவும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சாதுர்யமாக கதைத்து பேசி மோகினியின் மாய வலைக்கு அகப்படாமல் தவிர்த்துக் கொள்வதே சிறந்த வழியாகும் இல்லையேல் பிரமைப் பிடித்தது போல் அதிகாலை சேவல் கூவும் வரையில் அங்கேயே சுற்றிச் சுற்றி திரிந்து விட்டு பொழுது புலர்ந்ததும் ஏற்பட்ட பயத்தின் காரணமாக மனக் கோளாறு, காய்ச்சல், தனிமை, தூக்கத்தில் எழுந்து வெளியே செல்வது போன்ற பலப் பல பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம்.

எனினும் மோகினி ஆண்களிடம் அதீத ஆசைக் கொண்டு காணப்படுவதால் அவ்வளவாக உயிராபத்து ஏற்படுத்துவது இல்லை எனவும் நம்பப்படுகிறது.

இரவு நேரங்களில் வீதிகளில் தென்படும் இத்தகைய பெண் உருவங்கள் வெள்ளை உடையணிந்த மணமகள் போன்ற தோற்றத்திலோ கைக் குழந்தையுடன் தனிமையில் இருக்கும் தாய் ஒருவரைப் போலவோ அல்லது அனாதரவாக கைவிடப்பட்ட அழகிய பெண் ஒருவரைப் போலவோ தென்படலாம். மேற்கூறிய அமானுஷ்ய பெண் உருவங்கள் ஆண்களால் காதலித்து ஏமாற்றப்பட்டு கைக் குழந்தையுடன் கொலைச் செய்யப்பட்ட அல்லது ஏமாற்றத்தால் ஏற்பட்ட மன விரக்தியின் காரணமாக தற்கொலை செய்துகொண்ட இளம் பெண்களின் ஆவிகளே அவதாரமாக தோன்றுவதாக கருதப்படுகின்றது. மேலும் அவ்வப்போது இவ்வாறு தென்படும் வெள்ளை உருவங்கள் இரவு நேரங்களில் உலகில் எங்கோ ஒரு மூலையில் யாரும் அறியாத நிலையில் நடைபெறவிருக்கும் கொடூரமான கோரச் சம்பவம் ஒன்றை உலகுக்கு வெளிப்படுத்தும் அறிகுறியாகவும் நம்பப்படுகின்றது.

இவ்வாறான தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குளிர்ந்த நீர் மிதிபட்டால் சுயநினைவு திரும்பும் என்பதால் மோகினி தோஷம் உள்ளவர்கள் அதேபோல் கனவில் நடக்கும் பழக்கம் உடையவர்கள் கோணிப்பை ஒன்றை குளிர்ந்த நீரில் நனைத்து கட்டில் அருகில் அல்லது கதவருகில் போட்டுக் கொள்ள வேண்டும். இதன் மூலம் மோகினியின் கட்டளைகளுக்கு இணங்கி வீட்டிலிருந்து வெளியேறிச் செல்ல முற்படும் போது குளிர்ந்த நீர் காலில் படுவதால் சுயநினைவு திரும்பி மோகினியின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து கொண்டு தப்பித்துக் கொள்ளலாம்.

மோகினி தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு இன்னல்களுக்கும் நோய்களுக்கும் உள்ளாகின்றனர். உதாரணமாக நாளுக்கு நாள் சரீரம் மெலிவடைந்துக் கொண்டே செல்வதைக் காணலாம். நடக்கும் போது மூட்டுவலியால் அவதிப்பட வேண்டிய நிலை ஏற்படும். சுறுசுறுப்பாக வேலைகளில் ஈடுபட முடியாது போகும். சில நேரங்களில் பித்து பிடிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு அதனால் இவ்வாறான நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் அதனை இரகசியமாக வைத்துக் கொண்டு வெட்கப்படாமல் உடனடியாக பெரியோர்களிடம் கூறி உரிய முறையில் அதற்கான யந்திர மந்திர சாந்திகர்மங்களை செய்வதன் மூலம் மரணத்தில் இருந்தும் கூட விடுபடலாம்.

மோகினி தோஷத்திற்கு உள்ளான இளைஞர்கள் மற்றும் தனிமையில் இருக்கும் போது பாட்டுப் பாடுதல், புல்லாங்குழல் வாசித்தல் மற்றும் இசைக் கருவிகளை இசைத்தல் கூடாது. மக்கள் நடமாட்டம் அற்ற விசாலமான மரங்கள் நிறைந்த இடங்களிலும் சுடுகாட்டுப் பகுதிகளில் நடமாடுவது அல்லது அருவிகள் மற்றும் ஆறுகளில் தனிமையில் நீராடுதல் உகந்தது அல்ல. அதேபோல் எந்நேரமும் குளித்து சுத்தமாக இருப்பதும், இளைஞர்கள் இரவில் படுக்கைக்கு செல்லும் முன்னரும் இவ்வாறு குளித்து சுத்தமான உடையணிந்து வாசனைத்திரவியங்களை பூசிக் கொண்டு தூங்கச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதும் மிகவும் நல்லது. ஏனெனில் அசுத்தமாக இருப்பவர்களிடம் மோகினி நெருங்க விரும்பாது எனவும் சுத்தமானவர்களிடமே அதிகமாக நெருங்கி தனது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள ஆர்வம் காட்டுவதாகவும் சொல்லப்படுகின்றது.

அதேவேளை மோகினி தோஷம் உள்ளவர்கள் மோகினியின் பார்வையில் இருந்து தவிர்த்துக் கொள்ள இரவில் தூங்கச் செல்லும் போது தலைக்கு மேல் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை மாட்டி வைத்தல் அல்லது வீட்டில் பெண்ணொருவர் உடுத்தியிருந்த சேலையை படுக்கை விரிப்பாகவோ அல்லது போர்வையாக பாவித்தல் அதேபோன்று காலடியில் விளக்குமாறு ஒன்றை வைத்துக்கொண்டு தூங்குவதால் மோகினி அருகில் வருவதை தடுத்துக் கொள்ளலாம் எனவும் மேலும் சொல்லப்படுகின்றது.

எது எவ்வாறாயினும் அமானுஷ்ய சக்திகள் தொடர்பில் அஞ்ஞான, மெய்ஞான, விஞ்ஞான ரீதியாக சித்தர்கள், அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. எனினும் அவ்வப்போது ஆங்காங்கே மனித அறிவுக்கு எட்டாத ஏதோ சில அமானுஷ்ய மர்மச் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

நாராயணசாமி ஜெயரட்னம் ...
களுத்துறை சுழற்சி நிருபர்



# விமானத்தை மோதச் சென்ற கார்

டெல்லியில் உள்ள இந்திரா காந்தி விமான நிலையத்தில், நின்று கொண்டிருந்த இண்டிகோ விமானத்தின் மீது கார் ஒன்று மிக நெருக்கமாக சென்று மோதுவது போல் நின்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சினிமா பாணியில் இந்த சம்பவம் நடந்தது விமான பயணிகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியது.

டெல்லி விமான நிலையத்தில் டி2 முனையத்தில் இருந்து இண்டிகோ விமானம் பாட்னாவிற்கு புறப்பட தயராக இருந்தது.

இந்த விமானம் புறப்பட சில நிமிடங்களே எஞ்சியிருந்ததாக சொல்லப்படுகிறது.

அப்போது விறுட்டென வேகமாக வந்த ஒரு மாருதி ஸ்விஃப்ட் டிசையர் கார், விமானத்தை நோக்கி வேகமாக சென்றது. விமானத்தின் மூக்கு பகுதி என்று சொல்லப்படும் முன்பகுதியை நோக்கி சென்ற அந்த கார், விமானத்தின் முன் சக்கரத்தை ஒட்டிச்சென்று நின்றது.

சினிமா காட்சிகள் போல நடந்த இந்த சம்பவம் அங்கு இருந்தவர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.



# ஏலத்திற்கு வரவுள்ள ஜேம்ஸ்பாண்ட் பயன்படுத்திய 60 கார்கள்

நடிகர் ஜேம்ஸ்பாண்ட் திரைப்படங்களில் பயன்படுத்திய 60 கார்கள் ஏலத்திற்கு வரவுள்ளன. கடைசியாக வந்த ஜேம்ஸ்பாண்ட் படமான NO Time To Die திரைப்படத்தில் அவர் பயன்படுத்திய கார்களை இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு ஏல நிறுவனம் ஏலத்திற்கு அறிவித்துள்ளது. இந்த கார்கள் எல்லாம் ஜேம்ஸ்பாண்ட் திரைப்படத்தில் ஸ்டண்ட் காட்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டது. இப்படியா ஏலம் விடப்படும் சில கார்கள் எவ்வளவு ஏலம் போகிறதோ அந்த தொகை நேரடியா செஞ்சிலுவை சங்கத்திற்கு நன்கொடையாக கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.



இந்த கார்களில் லேண்ட் ரோவர் டிஃபண்டர் கார்தான் மிகவும் பிரபலமான கார். இந்த கார்கள் இந்த திரைப்படத்திற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு நேரடியாக தயாரிப்பு ஆலையிலிருந்து திரைப்படத்திற்கு வந்தது. இந்த காரின் சேஸிஸ் நம்பர் கூட 007 என வழங்கப்பட்டுள்ளது. இந்த கார் இருப்பதிலேயே அதிகபட்சமாக 5 லட்சம் பவுண்ட்கள் அதாவது



இந்திய மதிப்பில் ரூ4.82 கோடிக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏலத்திற்கு வரவுள்ள கார்களின் பட்டியலை பொருத்தவரை ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட்ஸ் எஸ்விஆர்எஸ் எஸ்யூவி கார், ஜாக்குவார் எக்ஸ்எஃப் சலூன்ஸ் ஆகிய கார்களும் இடம் பெற்றுள்ளது. இது NO Time To Die திரைப்படத்தில் வில்லன்கள் பயன்படுத்தியது.

இதில் ரோவர் ஸ்போர்ட்ஸ் எஸ்விஆர் எஸ் எஸ்யூவி கார் 1.2 லட்சம் பவுண்ட்கள் அதாவது இந்திய மதிப்பில் ரூ1.15 கோடி, ஜாக்குவார் எக்ஸ்எஃப் சலூன்ஸ் கார் 70000 பவுண்ட்கள் அதாவது இந்திய மதிப்பில் ரூ67 லட்சம் என்ற விலையில் ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இந்த ஏலத்தில் மென்ஏஸிங் டிஃபென்டர் எஸ்யூவி கார் இடம் பெறவில்லை. இது இந்த NO Time To Die திரைப்படத்தில் முக்கிய இடம் பிடித்தது. ஆனால் இந்த ஏலத்தில் இடம் பெறவில்லை. ஆனால் லேண்ட் ரோவர் டிஃபென்டர் 110 வி8 பாண்ட் எடிசன் கார் இந்த ஏலத்தில் இடம் பெறவுள்ளது. இந்த காரும் NO Time To Die திரைப்படத்தில் இடம் பெற்றது.

இந்த கார் ஒரு ஸ்பெஷல் எடிசன் கார் தான். மொத்தமே 300 கார்கள் தான் தயாரிக்கப்பட்டன. இந்த கார் இந்த ஏலத்தில் 3 லட்சம் பவுண்ட்கள் அதாவது இந்திய மதிப்பில் ரூ2.88 கோடி வசூலிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இந்த ஏலம் வரும் செப்டம்பர் மாதம் 28ம் திகதி லண்டனில் உள்ள கிரிஸ்டீ என்ற இடத்தில் இடம் பெறவுள்ளது. இந்த ஏலத்தில் அழைப்பு உள்ளவர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும். இது குறித்து அந்த ஏல நிறுவனத்தின் செயல் இயக்குநர் நிக் கோலின்ஸ் என்பவர் கூறும் போது "டிஃபென்டர், ரேஞ்ச்ரோவர், ஜாக்குவார் கார்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். ஜேம்ஸ்பாண்ட் கார் கலெக்டர்களுக்கு இந்த ஏலம் மிகப்பெரிய வரப்பிரசாதாமாக இருக்கப்போகிறேது. மிக அதிகமான பணத்தை வசூல் செய்யவுள்ளது. இந்த பணத்தில் பெரும் பங்கு நன்கொடையாக வழங்கப்படும். " என கூறினார்.



# கடலில் உலாவும் உல்லாச கப்பல்கள் எவ்வாறு குடிநீரை பெறுகின்றன?

ஒவ்வொரு ஆண்டும் பல லட்சக்கணக்கான பயணிகள், உல்லாச கப்பல்கள் என்ற பொறியியல் அதிசயங்களில் பயணம் செய்து வருகின்றனர். பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்களும், வெவ்வேறு வயதினரும் உல்லாச கப்பல்களில் ஒன்றாக பயணிக்கின்றனர்.

ஒரு சராசரி அளவுடைய உல்லாச கப்பலே 2,0003,000 பயணிகளை சுமந்து செல்லும். மிகப்பெரிய உல்லாச கப்பல்களில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை இதை விட மிகவும் அதிகமாக இருக்கும். இத்தனை பயணிகளும் உல்லாச கப்பல்களில் பல நாட்கள் பயணம் மேற்கொள்கின்றனர். ஒரு சில சமயங்களில் உல்லாச கப்பல்கள் மாத கணக்கில் கூட கடலில் பயணிக்கும்.

அப்படி இருக்கும்போது, இத்தனை பயணிகளுக்கு, இத்தனை நாட்களுக்கு தேவையான சுத்தமான தண்ணீர் எங்கே இருந்து பெறப்படுகிறது?

குடிப்பதற்கு மட்டுமல்லாது இன்னும் பல்வேறு தேவைகளுக்கும், உல்லாச கப்பல்களில் சுத்தமான தண்ணீர் தேவைப்படுகிறது.

அதாவது துணி துவைப்பது, சுத்தம் செய்வது போன்ற தேவைகளுக்கும் சுத்தமான தண்ணீர் அவசியம். அது மட்டுமல்லாது, உல்லாச கப்பல்களில் இருக்கும் நீச்சல் குளங்கள் மற்றும் தண்ணீர் விளையாட்டுகளுக்கும் சுத்தமான தண்ணீர் அவசியம். எனவே சராசரியாக ஒரு உல்லாச கப்பலுக்கு, ஒரு நாளில் மட்டும் 5001,000 தொன்கள் சுத்தமான தண்ணீர் தேவைப்படும்.

பெரிய உல்லாச கப்பல்கள் ஒரு நாளைக்கு நுகரும் தண்ணீரின் அளவு, இதை விட மிகவும் அதிகமாக இருக்கும். உல்லாச கப்பல்களின் அளவு மற்றும் மொத்த பயணிகளின் எண்ணிக்கை உள்ளிட்ட அம்சங்களை பொறுத்து, தேவைப்படும் சுத்தமான தண்ணீரின் அளவு மாறுபடலாம். இவ்வளவு தண்ணீரையும் உல்லாச கப்பல்கள், கடலில் இருந்தே எடுத்து கொள்கின்றன.

கடல் நீரை பயணிகள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மாற்றிதான், அவர்களுக்கு வழங்க முடியும். எனவே உல்லாச கப்பல்களில் கடல் நீரில் இருந்து உப்பை நீக்கும் அமைப்புகள் (Desalination Systems) இருக்கும்.

இது கடல் நீரில் இருக்கும் உப்பு மற்றும் அசுத்தங்கள் ஆகியவற்றை அகற்றி விடும். இதன் மூலம் கடல் நீர், சுத்தமான ஃப்ரெஷ் வாட்டர்ஆக மாற்றப்படுகிறது. ஆனால் இந்த தண்ணீர் கழுவுவதற்கும், துணிகளை துவைப்பதற்கும் மட்டும் தான் ஏற்றது. இந்த தண்ணீரை பயணிகள் குடிப்பதற்கு ஏற்றதாக மாற்ற வேண்டுமானால், மற்றொரு செயல்முறையை செய்ய வேண்டும்.

அது 'மினலரைசேஷன்' (Mineralization) என அழைக்கப்படுகிறது. உப்பு நீக்க செயல்முறையின்போது, மினரல்களும் (Minerals) சேர்த்தே அகற்றப்பட்டிருக்கும். அப்போது அகற்றப்பட்ட மினரல்களை, இந்த 'மினலரைசேஷன்' செயல்முறை மீட்டெடுக்கிறது. இவ்வாறுதான் கடல் நீர், பயணிகள் குடிப்பதற்கு ஏற்ற வகையில் மாற்றம் செய்யப்படுகிறது.

# மருத்துவத்துறையில் சேவையாற்றியவர்களுக்கு விருது



மருத்துவத்துறையில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு ஆறாம் ஆண்டு மருத்துவ சிறப்பு விருது வழங்கும் விழா சென்னையில் நட்சத்திர விடுதியில் அண்மையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான் மருத்துவத்துறையில் சிறந்து விளங்கியவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் ராமச்சந்திர மருத்துவமனை மருத்துவர் ராமச்சந்திரன், மருத்துவர் உஷாராணி, சிம்ஸ் மருத்துவமனை மருத்துவர் ராம் பிரபாகர், மருத்துவர் சுந்தரராமன்,மீனாட்சி மருத்துவ ஆராய்ச்சி பல்கலைக்கழகம் திருமதி கிருத்திகா, கற்பக விநாயகா மருத்துவ கல்லூரி மருத்துவர் சென் பீட்டர்ஸ் மருத்துவ கல்லூரியின் நிர்வாகி மருத்துவர் லாசிய தம்பிதுரை, அப்போலோ மருத்துவர் கோசிகன், மருத்துவர் குணால் பட்டேல், மருத்துவர் ராகேஷ் கோபால், பிவேல் மருத்துவ மனை இயக்குனர் வெற்றி வேல், கண் மருத்துவர் காசிநாதன், மெரிடியன் மருத்துவமனை இயக்குனர் டாக்டர் டேனியல் மற்றும் ஐ சி எம் ஆர் துணை இயக்குனர் மருத்துவர் பானுரேகா, மலேசிய மருத்துவ கவுன்சில் செயலாளர் டாக்டர் திருநாவுக்கரசு, தொழிலதிபர் நண்பன் கோபாலகிருஷ்ணன், டாக்டர் சி எம் கே ரெட்டி, மருந்து கட்டுப்பாட்டு இயக்குனர் குமார்,நீரிழிவு நோய் நிபுணர் டாக்டர் சத்திய நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் உலகத் தமிழ் வர்த்தக சங்க தலைவர் செல்வகுமார் வரவேற்பு நிகழ்த்தி இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வை உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பை சேர்ந்த நெறியாளர் ஜான் தன்ராஜ் தொகுத்து வழங்கினார்.

## மனதால் வாழ்த்தி வாழ வைத்திடுவேன்

நாளை உன்
பிறந்த நாள்.
பிறந்த போது
நீ மகிழ்ந்தாயோ?

நான் அறிந்திட
உரைத்தது இல்லை.
இருந்தும் நான்
புரிந்து கொண்டு
தினம் நடந்தேன்.

வாழும் போது
மகிழ்ந்து இருந்திட
நினைத்து நின்றேன்.
விலத்தி போயிட
நினைத்து நின்று
வென்று போனாய்;
என்னை வருத்தி
தினம் வாட விட்டு.

இருந்தும் நான்
மகிழ்ந்து போக
நினைத்து நிற்கிறேன்.


மனதால் வாழ்த்தி
வாழ்ந்திட எண்ணி;
இறை தொழுது
தினம் வாழ்க என;
சொல்கிறேன் உனக்கு
வாழ்த்துக்கள்.

காரிருள் கடந்து
கானகம் பார்த்து
வெளி நின்று
தவித்து போன
காலம் கடந்து
மலர்ந்து வந்த
நேரம் உனக்கிது.

விழி துடைத்து
ஒளி வீசிட வந்து
மலராகி மலராயோ
உன் இதழ் மகிழ்ந்து.

நது நசி

## செந்துரம் பிறந்தநாள் வாழ்த்து



நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்துாரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீர்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



ஆசிரியர் : உண்மைக்கு எதிர்ப்பதம் என்னன்னு கேட்டா, பதில் சொல்லாம முழிக்கிறியே .. .. ஏண்டா ?
மாணவன் : நீங்கதானே சார் பொய் சொல்லக்கூடாதுன்னீங்க.



அப்பா: டேய்! எப்பவுமே நம்மளைவிட வயசுல பெரியவங்ககிட்ட மரியாதையா நடந்துக்கணும் புரியுதா?
மகன் : ஏம்ப்பா! அம்மா உங்களைவிட வயசுல பெரியவங்களா?
அப்பா :!!!



நண்பி 1: ஹோடேலில் சாப்பிட்டுவிட்டுப் பார்க்கிறேன், கையில் பணம் இல்லை..... ?
நண்பி 2: அய்யய்யோ... அப்புறம் என்ன பண்ணுனீங்க?
நண்பி 1: அப்புறம் பாக்கெட்'ல இருந்து எடுத்துக் கொடுத்துட்டேன்.



கணவன்: உங்க அப்பாகிட்ட 50000 ரூபாய் பணம் கேட்டு லெட்டர் போட்டியே, அனுப்பிட்டாரா?
மனைவி: பணம் வரலை!
கணவன்: ஏண்டி?
மனைவி: 50 ரூபாய்க்கு நான்கு சைபர் போடக்கூடாதுன்னு திட்டி லெட்டர் போட்டிருக்கிறாரு.



தம்பி : இந்தாங்கக்கா ரிப்போட் கார்ட்
அக்கா: அடப்பாவி, அஞ்சு சப்ஜெக்ட்லேயுமா ஃபெயில்?" இனிமே என்னை அக்கானு கூப்பிடாத"
தம்பி : சரி இனி ஆண்ட்டினு கூப்பிடுறேன், கையெழுத்து போடு



மனைவி: அதிக பணம் கொடுத்து இந்த கார வாங்கறாரு. ஆனா அவருக்கு ஒண்ணுமே தெரில போல.
கணவன்: எத வச்சு சொல்ற?
மனைவி : வண்டில ஸ்பீட் ப்ரேக் எங்கன்னு கேக்கறார்



ஆங்கில ஆசிரியர்: உங்க அப்பா பேரு என்ன?
மாணவர்: எங்க அப்பா பேரு “Black” ”God” சார்.
ஆங்கில ஆசிரியர்: ஏண்டா கொல்ற? தமிழ்ல சொல்லேண்டா.
மாணவர்: எங்க அப்பா பேரு ”கருப்பசாமி” சார்.



வாத்தியார்: A=B, B=C அப்படின்னா A=C. குமார் இதை விளக்கு?
மாணவன்: சார், ஐ லவ் யூ, யூ லவ் யுர் டாட்டர், சோ, ஐ லவ் யுர் டாட்டர். கரெக்ட்டா சார்?



நண்பர் 1: மச்சா எப்பட வருவ ...?
நண்பர் 2: மழை நின்னதும் வாறேன்டா
நண்பர் 1: அப்படினா நீ வரவே முடியாது டா
நண்பர் 2: ஏன்டா
நண்பர் 1: மழை எந்த ஊர்களையாவது நிக்குமா டா மழை விழ தான் செய்யும்



மகன்: அப்பா ஸ்கூலில் இன்னக்கி ஒரு நல்ல செய்தி, ஒரு கெட்ட செய்தி நடந்துச்சிப்பா.
அப்பா : நல்ல செய்திய மொதல்ல சொல்லு.
மகன் : ஸ்கூல் தீ பிடிச்சி எறிஞ்சி போச்சிப்பா
அப்பா : கெட்ட செய்தி
மகன் : வாத்தியார் எல்லாம் தப்பிச்சிட்டானுங்க
அப்பா : !!!



கண்டக்டர்: யோவ் டிரைவர், நான் மூணு முறை விசிலடிச்சும் வண்டி நிக்கலையே ஏன்?
டிரைவர்: அட போய்யா! நான் ஆறு முறை பிரேக் அடிச்சே வண்டி நிக்கலை. நீ வேற...

## அட்டைப்பட விளக்கம்



## அவினியா – சாகித்தியா பரத நாட்டிய அரங்கேற்றம்

கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் இயக்குனருர் நாட்டிய கலைமாமணி ஸ்ரீமதி பவானி குகப்ரியாவின் மாணவிகளும், திரு. திருமதி சசிகுமார் ஜெசிதா, தம்பதிகளின் புதல்வி அவினியா மற்றும் திரு,திருமதி உமா சங்கர் மதிவதணி தம்பதிகளின் புதல்வி சாகித்தியா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக முன்னாள் நடனத்துறை தலைவரும், யாழ்ப்பாணம் நாட்டியகலா கேந்திரா ஸ்தாபக இயக்குனருமான கலாநிதி ஸ்ரீமதி கிருஷாந்தி ரவீந்திரா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்து சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் விசேட அதிதியாவும், கொழும்பு மெதடிஸ் கல்லூரி அதிபர் திருமதி. கிரண்யா பெர்ணான்டோ, தெஹிவளை கேற்வே கல்லுரி பிரதி அதிபர் அன்டனி செல்லையா ஆகியோர் சிறப்பதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

# சிறந்த நடன விரிவுரையாளராக வர வேண்டும் என்பதே இலட்சியம்

## நடனத் தாரகை தக்சாளினி ஜெயகோபன்



**◆ உங்களைப் பற்றி கூறுங்களேன்?**

நான் தக்சாளினி ஜெயகோபன். எனது தந்தை வெற்றிவேல் ஜெயகோபன். எனது தாய் திருமதி நந்தினி ஜெயகோபன். எனக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். நான் கடைசிப் பிள்ளை!

**◆ நடனக்கலை மீதான ஆர்வம் குறித்து என்ன கூற விரும்புறீங்கள்?**

நான் தரம் 04 இல் இருந்தே நடனக்கலை மீது மிகுந்த ஆர்வத்துடன் பயணித்து வருகிறேன்.

சிறிய வயதில் இருந்தே (தரம் 04 ,05 இல்) பிரத்தியேகமாக நடன பாடத்தை கற்று வந்த நான், தரம் 06 இற்கு பின் பாடசாலையில் அதனை ஒரு பாடமாக கற்று வந்தேன். பாடசாலைக் காலங்களில் பல்வேறு நாட்டிய நிகழ்ச்சி, நடனப்போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றி என் திறமையினை வெளிப்படுத்தி இருக்கிறேன். கலைத்துறை, நடனத்துறை மட்டுமல்ல, விளையாட்டுப்போட்டி, இலக்கிய போட்டி, பேச்சுப் போட்டிகளிலும் அதிகமாக பங்கெடுத்துக் கொள்வேன்.

**◆ உங்களுக்கு நடனம் கற்பித்த நடன ஆசிரியர் பற்றி...?**

அக் காலத்தில் எங்கள் பிரதேசத்தில் நிலவிய நடன ஆசிரியர் தட்டுப்பாடு காரணமாக நான் பல ஆசிரியர்களினால் கற்பிக்கப் பட்டேன்!

அந்தவகையில் சிறு வயதுக் கல்வியை ப. பாக்கியலட்சுமி ஆசிரியையிடம் கற்று அவரது வழிகாட்டல் உதவியில் பல மேடை நிகழ்வுகளில் பங்குபற்றினேன். அதில் ஏற்பட்ட அன்பு காரணமாக தரம் 06 தொடக்கம் சாதாரண தரம் வரையில் திருமதி பு. வினோதினி ஆசிரியை, திருமதி த. நிரஞ்சனா ஆசிரியை, திருமதி வி.ரம்மியா ஆசிரியை, திருமதி ஜெ. ஜெயரஞ்சனி ஆசிரியை , திருமதி செ. வினோதினி ஆசிரியை ஆகியோரிடமும் உயர்தரக் கல்வியை திருமதி சர்மினி சுதாகரன் ஆசிரியையிடமும் கற்று அனைவரது ஆசிர்வாத்திலும் யாழ்ப்பாண இராமநாதன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானேன்! எனது ஆசிரியர்களின் நல் எண்ணமே என்னை இக் கலையில் மேலும் மிளிர வைத்தது.

இது பல கலைஞர்களை சந்திக்க அவர்களின் நுணுக்கங்களை அறிய வாய்ப்பாக அமைந்தது!

**◆ பாடசாலை கல்விப் பற்றி என்ன கூற விரும்புறீங்கள்?**

என்னுடைய ஆரம்பக் கல்வி, விபுலானந்தா பாலர் பாடசாலையில் ஆரம்பமானது. அங்கே எனது கலைத்திறமை என் ஆசிரியர்களால் மதிப்பிடப்பட்டது.

பின் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை காரைதீவு இராமகிருஸ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் கற்ற நான், நடன பாடம் தொடர்வதற்காக அருகில் உள்ள தேசிய பாடசாலையான கமு/விபுலானந்த மத்திய கல்லூரிக்குச் சென்று உயர்தரம் வரையில் கற்றேன். அப்பொழுது இருந்த அதிபர் வி.வித்தியராஜன் ஐயா நடனத் துறையை வளர்க்க எனக்கு பல சிரமங்களுக்கு மத்தியில் நடன ஆசிரியைகளை இடமாற்றம் செய்து பெற்றுக்கொடுத்து ஒழுங்குபடுத்தி உதவினார். போட்டி நிகழ்வுகளுக்கு கட்டாயம் அழைத்துச் செல்ல வேண்டும் என்று உறுதியாக கூறுவார். தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளார். அவரை என்றும் மறவேன்.

தற்பொழுது இராமநாதன் பல்கலைகழகத்தில் என் கல்வி நிலையை தொடருகிறேன்.

> **தெய்வீகத் தன்மை பொருந்திய இக் கலையில் பல ஆசிரியர்களிடம் இருந்து அவர்களின் நுணுக்கங்கள், ஆடல் முறை, பாவம் போன்றவற்றையும் இறைபக்தி, குருபக்தி, சகிப்பு, பொறுமை, நன்றி மறவாமை, பக்குவம் போன்றவற்றையும் கற்றுக் கொண்டேன்.**



**◆ பரதக்கலையில் இதுவரை கற்ற விடயங்கள்?**

தெய்வீகத் தன்மை பொருந்திய இக் கலையில் பல ஆசிரியர்களிடம் இருந்து அவர்களின் நுணுக்கங்கள், ஆடல் முறை, பாவம் போன்றவற்றையும் இறைபக்தி, குருபக்தி, சகிப்பு, பொறுமை, நன்றி மறவாமை, பக்குவம் போன்றவற்றையும் கற்றுக் கொண்டேன்.

**◆ எதிர்கால இலட்சியம் என்ன?**

கலைத்துறையில் பல்வேறு விடயங்களை கற்கவும் அறிந்த விடயங்களை வளர்ந்து வரும் என்னைப் போன்ற கலைஞர்களுக்கு வழங்கவும் காத்திருக்கின்றேன்! எனது இலட்சியம், எனது தாய், தந்தையின் கனவு சிறந்த நடன விரிவுரையாளராக வர வேண்டும் என்பதே.

குரு அருளும் இறை அருளும் இருக்க என் இலக்கு நோக்கி பயணிப்பேன்.

**◆ அரங்கேற்றம் எப்போது நடந்தது?**

இதுவரை பல்வேறு அரங்கில் என் நிகழ்ச்சிகள் அரங்கேறி இருக்கின்றன. இருந்த போதிலும் என் முழுமையான ஆற்றுகை நிகழ்வான அரங்கேற்றம் என் பல்கலைக்கழக கல்வி நிறைவில் என் மண்ணில் இடம் பெறும் என்ற கனவோடு காத்திருக்கிறேன்.



**◆ கொரோனா காலத்தில் உங்கள் தொழிற்பாடு முடங்கியதா?**

இல்லை! அந்த சந்தர்பத்தில் என்னுடைய கற்றல், கற்பித்தல் நடவடிக்கை Zoom தொழிநுட்பத்தின் ஊடாக இடம்பெற்றது.

எனக்கு கின்னஸ் சாதனை புரியவும், பாரதி நூற்றாண்டு விழா (பாட்டினில் அன்பு செய்) நிகழ்வுகளை Zoom தொழிநுட்பத்தில் நடத்தவும் சந்தர்ப்பங்கள் அமைந்தன.

என்னுடைய கலை ஈடுபாட்டை பார்வையிட்டு டென்மார்க் கணேச நாட்டிய சாஸ்திர உரிமையாளர் நடன ஆசிரியை மதிப்புக்குரிய திருமதி சசிதேவி ரைஸ் அம்மாவின் உதவியும் இக் காலத்திலே கிடைக்கப் பெற்றதோடு அவரின் மூலம் பல்வேறுபட்ட நிகழ்வுகளும் zoom செயலி மூலம் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

அதிலும் எங்கள் நடன நிகழ்வும் இடம்பெற்றதோடு பாராட்டும் வழங்கப்பட்டது.

அவரின் உதவியால் நட்டுவாங்க கற்கை நெறி வகுப்புக்கு புலமைப்பரிசு கிடைக்கப் பெறவும் மேலும் அவரின் உதவிகளால் பல்வேறு கலைஞர்களை பற்றி அறியும் வாய்ப்பும் கிட்டியது.

அவர் ஆடை ஆபரணம் போன்றவற்றை வழங்கி எங்கள் கலைக்கூட மாணவர்களையும் ஊக்கப்படுத்தினார். இக் கால கட்டம் எனக்கு இவ்வாறு உதவியது.

**◆ பரதநாட்டியம் மீது நாட்டம் வரக் காரணம் என்ன?**

சிறுவயதில் இருந்தே என்னை அலங்கரிப்பதிலும் கலாசார ஆடை ஆபரணங்கள் அணிவதிலும் உள்ள ஆசை, நடன ஆசிரியர்களின் அன்பின் ஈர்ப்பு, இறைபக்தி இத் துறையின் பால் என்னை ஈர்த்தது எனலாம்.

**◆ விபுலானந்த நாட்டிய நிருத்தியாலயம் பற்றி?**

என் வாழ்வில் பல சாதனைகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்திய கலைக்கூடம் அது.

2019ம் ஆண்டு உயர்தர பரீட்சை எழுதிய பின் என் ஆசிரியரின் வழிகாட்டலில் அவரின் மேற்பார்வையில் என் எண்ணத்தில் 15 மாணவர்களுடன் காரைதீவு ஆனந்தா பாலர் பாடசாலையில் சிறிய முயற்சியாக 2019 ஒக்டோபர் 19 ம் திகதி நடனப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு எம் காரைதீவு மண்ணின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நாமத்தை சூடினோம்.

இதன் மாணவர் தொகை அதிகரிப்பின் காரணமாக டிசம்பர் மாதம் விபுலானந்தர் இல்லக் கட்டிடத்திற்கு இடம்மாற்றப்பட்டு 65 மாணவர்களுடன் மின்னத் தொடங்கியது.

போட்டி நிகழ்வுகள், மேடை நிகழ்வுகள், விரிவுரையாளர்களின் கருத்தரங்குகள் என பல செயற்பாடுகள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அம்பாரை மாவட்ட செயலாளர் கு.ஜெயராஜ் அண்ணாவின் உதவியுடனும் நடன ஆசிரியை சர்மினி சுதாகரன் தலைமையிலும் சிறப்பாக இடம் பெற்றன.

எனது பல்கலைக்கழக நுழைவு காரணமாக 150 ற்கு மேற்பட்ட மாணவர்களுடன் ஆசிரியை தலைமையில் தற்போது இக் கலைக்கூடம் பளிச்சிடுகிறது.



◆ **இத் துறையில் இதுவரையிலான சாதனை?**

பல நடன நிகழ்வுகளிலும் மேடை நிகழ்வுகளிலும் பங்கேற்று உள்ளேன். பலவேறு போட்டி நிகழ்ச்சிகளில் பரதநாட்டிய துறையில் தேசிய ரீதியான சான்றிதழ்களை , கிண்ணங்களை என் வசப்படுத்திக் கொண்டு உள்ளேன்.

அண்மையில் 2021 ம் ஆண்டு கொரோனா நிதிப்பங்களிப்புக்காக மதுரையைச் சேர்ந்த கலைமாமணி மதுரை முரளிதரன் குருவின் ஏற்பாட்டில் உலகளாவிய ரீதியில் 850 கலைஞர்களைக் கொண்டு நடன நிகழவொன்று நடத்தப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கையில் இருந்து கலந்துகொண்ட 65 கலைஞர்களில் ஒருவராக நானும் கலந்துகொணடென்.

இதற்கான வாய்ப்பு டாக்டர் திருமதி தி. நிசாந்தறாகினி (தேசிய கல்வி நிறுவகம்) மூலம் கிடைத்தது. அதில் பங்கேற்று கின்னஸ் சான்றிதழ் பெற்றேன் .

மேலும் எனது பிரதேசத்தில் இருந்து சிறந்த ஆளுமை உள்ள வளர்ந்து வரும் நடன கலைஞராக தெரிவு செய்யப்பட்டு "கலைஞர் சுவதம்" எனும் விருதினைப் பெற்றுக் கொண்டேன்.

இவையே இதுவரையில் நான் நடனத் துறையில் பெற்ற சாதனைகளாகும்.

◆ **இதற்கு முன்னர் பத்திரிகையில் பேட்டிகள் ஏதும் வெளிவந்தனவா?**

ஆம், எனது கின்னஸ் சாதனையின் பின் என்னைப் பற்றி பத்திரிகை வாயிலாக பிரபல்யப்படுத்தினார். முதன் முதலில் என்னையும் என் கலைப்பயணத்தையும் 2021 ம் ஆண்டு 09 ம் மாதம் 25 ம் திகதி காரைதீவு நிருபர் வி.ரி. சகாதேவராஜா பிரபல்யப்படுத்தினார். வளர்ந்து வரும் கலைஞர் எனும் தலைப்பில் என் கட்டுரை மற்றும் சாதனை பற்றி தினகரன், தமிழ் மிரர், சுபீட்சம் போன்ற பத்திரிகைகளிலும் அதன் பின் கு.கிலசன் 2021 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ம் திகதி இளம் கலைஞர் அறிமுகம் என துணிந்தெழு பத்திரிகையிலும் வெளிவரச் செய்தனர்.

என் நடன துறைக்கு பல்வேறு பட்ட வழியில் அதிகமானோர் ஒத்துழைப்பு மற்றும் ஊக்கம் வழங்கி உள்ளனர். அந்த வகையில் ஆசிரியர்கள், தாய் ,தந்தை ,சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.



இப் பத்திரிகை , ஊடகத்துறை தற்கால கலைஞர்களை ஆதரிப்பதே மேலும் கலைத்துறையில் இலைமறை காயாக இருக்கும் பலர் மிளிர வாய்ப்பாக உள்ளது. இப் பத்திரிகையில் என்னையும் உலகறிய செய்ய இணைத்துக் கொண்ட சிரேஷ்ட பத்திரிகையாளர் ஈஸ்வரலிங்கத்துக்கும் மிக்க நன்றி.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# குறும்பா, ஹைக்கூ லிமரிக்கூ, தன்முனைக் கவிதைகள்:
## சில அறிமுகக் குறிப்பகள்

**(கடந்த வாரத் தொடர்)**

"சென்னிமலை கிளியோபாத்ராக்கள்"
என்பது அவரின் லிமரைக்கூ கவிதைகளின் தொகுப்பு.

லிமரைக்கூ சில எடுத்துக்காட்டுகள்

ஊது வத்திச் சின்னம்
கட்சி வென்று கோட்டை பிடித்தும்
நாற்றம் போகலை இன்னும்.

(ஈரோடு தமிழன்பன்)

தமிழில் பேசிடத் தயக்கம்
தரமிகு தமிழ்மொழி தவிக்கும்
சிலருக்கு ஆங்கிலம் மீது மயக்கம்
(மகிழ்நன், மறைக்காடு)

ஒன்லைனில் நடக்கிறதாம்
வகுப்பு
ஒழுங்கு செய்தார் அப்பா,மகன்
ஒன்லைனில் "லவ்வ"ரோடு களிப்பு

**தன்முனைக் கவிதைகள்**

ஆங்கிலக் கவிதை வடிவமான லிமரிக் ,குறும்பாவாகி தமிழில் நீட்சி பெற்றிருப்பது போல,யப்பானியக் கவிதை வடிவமான ஹைக்கூ, துளிப்பாவாகிப் பல பெயர்களில் விரிவு பெற்றுவருவது போல,தெலுங்குக் கவிதை வடிவமான நானிலு, தன்முனைக் கவிதைகளாகத் தமிழில் சுவை சேர்க்கின்றது.

2017ல் திரு கா.ந. கல்யாணசுந்தரம் அறிமுகப்படுத்தியுள்ள தன்முனைக் கவிதை வடிவம் சாரதா க.சந்தோஷ், அனுராஜ், இளவல் ஹரி ஹரன்,அன்புச் செல்வி சுப்புராஜு, கவிஞர் ஜென்ஸி செல்வராஜ் ஆகியோரின் உறுதுணையுடன் நானிலுவில் இருந்து நீட்சி பெற்று, தமிழுக் கேற்றாற் போல விதி அமைத்து வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது.

ஹைக்கூ 3வரிக்கவிதை, தன்முனைக் கவிதை 4 வரி. தன்முனைக் கவிதையில் ஒரு வரி அதிக பட்சம் 3 வார்த்தைகளையே கொண்டிருக்கும். மொத்தமாக கவிதை 12வார்த்தைகளுக்கு மேற்படக் கூடாது.

எளிய சொற்கள். பொருள் அடர்த்தி, முதலிரு வரிகளும் ஒருநிகழ்வை அல்லது காட்சியை தொடக்கிவைக்க, அதனோடு தொடர்புபட்ட சாதகமான,அல்லது முரண்பட்ட உணர்ச்சியை கருத்தை வெளிப்படுத்துவதாக அடுத்து வரும் இருவரிகளும் அமையும்.

**புத்தனுக்குப் பேராசை காட்டி**
**அழைத்த போதிமரம்**
இலையுதிர்த்து தனது துறவில்
ஞானம் பெற்றது
(கா.ந. கல்யாணசுந்தரம்)

வயலை உழுகின்ற உழவன்
அரை நிர்வாணமாய்
வரப்பில் நின்ற பொம்மை
அழகான ஆடையுடன்
(அனுராஜ்)

கருவைச் சுமந்த
கருப்பையின் வலி கண்டு
அழுதே பிறக்கின்றன
மழையும்,மழலையும்
(சாரதா க சந்தோஷ்)

என்னால் முடியும்
என நிமிர்ந்தேன்
தூரத்து மலையும்
சிறு புள்ளியாக!
(அன்புச் செல்வி சுப்பு ராஜு)

உறங்கிக் கொண்டிருந்தால்
கனவு வரும்
உழைத்தால் தான்
விடிவு வரும்
(கவிஞர் ஜென்ஸி)

பூந்தோட்டத்தில் புதர் மறைவில்
காதலர் சோடி
பின்னால் நின்று படமெடுக்கிறது
நாக பாம்பு!
(நஸீறா எஸ் ஆப்தீன், இலங்கை)

மேலும் அழகானது
எனது முற்றம்
நிலவும் நீயும்
ஒன்றாய் வந்தபோது!
(சுமதி சங்கர்)

கையேந்தும் உன்னைத்
தினம் கடந்து செல்கிறேன்
கல்நெஞ்சக் காரனில்லை
என்னிடத்தில் ஒன்றுமில்லை

(அய்சத் அப்சத்,இலங்கை)

இலங்கைக் கவிஞர் அய்சத் அப்சத் தன்முனைக் கவிதைகளை தன்முனைக் கவிதை மன்றத்தில் (இந்தியா)தொடர்ந்து எழுதி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

தன்முனைக் கவிதைகள் முனைவர் வே. புகழேந்தி அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு ஆங்கில, கன்னட மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்படுவதோடு அவை ஆய்வுக்காக பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் தகவல்களையும் முகநூல் மூலம் அறிய முடிகின்றது.

வரவுப் பா வடிவங்களில் தேடல் உள்ளவர்கள் ஒரு தொடக்கக் குறிப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கையில் இக்குறிப்புக்கள் இங்கு தரப்படுகின்றன.



பாலமுனை பாறூக்..

# சினி பஜார் கேள்வி பதில்





**மொழிவாணன்**

**எம் .எம்.முஸ்தபா**
**மன்னார்.**

**கேள்வி:**'கர்ணன்'படத்தில் நடிப்பதற்கு முதலில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.தானாமே ஒப்பந்தம் செய்யப்பட்டார்...பிறகு எப்படி நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்தார்?



**பதில்:**முதலில் எம்.ஜி.ஆரிடம்தான் 'கர்ணன்'படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்ய வந்தார்கள். ..அப்போதெல்லாம் எம்.ஜி.ஆரின் கால்சீட் களை எல்லாம் கவனித்துக் கொள்வது எம்.ஜி.ஆர் அவர்களின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணிதான்.இவரின் ஆலோசனைபடிதான் அப்போது எம்.ஜி.ஆரும் நடந்து கொள்வார். இதன் படி 'கர்ணன்' படத்தில் நடிப்பது சம்பந்தமாக அவரிடம் ஆலோசனை கேட்டார். புராணப் படங்களில் நடிக்க வேண்டாம் என்று அண்ணன் சக்கரபாணி கண்டிப்பாக சொல்லிவிட்டார். இதை ஏற்றுக் கொண்டுதான் 'கர்ணன்' படத்தில் எம்.ஜி.ஆர்.நடிக்கவில்லை. இதனால் அந்த வாய்ப்பு சிவாஜி கணேசனைத் தேடிப்போனது

**எம்.மாகிரட்**
**எலபடகம.**

**கேள்வி:**திருமணம் செய்து கொண்டபின் படங்களில் நடிப்பதில்லை என்று முடிவு செய்து விட்டாராமே நடிகை நயன் தாரா.உண்மையா சேர்?



**பதில்:**எந்த லூசு அப்படி சொன்னது...!புலிவாலைப் பிடித்தவனால் அதை விடுத்தான் முடியுமா..!

நடிகை நயன்தாரா தொடர்ந்து முன்னணி நட்சத்திரங்களின் படங்களில் கவர்ச்சியாகவும் நடித்து தன்னுடைய வணிக சந்தை மதிப்பை உயர்த்திக் கொண்டே சென்றார் .தமிழில் மட்டுமல்லாமல் மலையாளம்,தெலுங்கு ஆகிய மொழிகளிலும் நடித்து தன்னுடைய நட்சத்திர அந்தஸ்தை தென்னிந்திய அளவிற்கு விரிவாக்கிக் கொண்டார். தற்போது அவருடைய நண்பரும்,இயக்குநருமான அட்லீ இயக்கத்தில் தயாராகி வரும்'ஜவான்'எனும் இந்திப்படத்திலும் பொலிவூட் சுப்பர் ஸ்டார் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.திரை உலகில் இரண்டு சகாப்தங்களை நிறைவு செய்திருக்கும் இவர் தற்போது 75 ஆவது படத்தில் நடிக்கிறார்.

ஜீ ஸ்டுடியோ நிறுவனம் தயாரிக்கும் பெயரிடப்படாத படத்தில் லேடி சுப்பர் ஸ்டார் என்ற பட்டத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டிருக்கும் நடிகை நயன் தாரா கதையின் நாயகியாக நடிக்கிறார் .இந்த திரைப்படத்தை அறிமுக இயக்குநர் நிலேஷ் கிருஷ்ணா இயக்குகிறார். இந்தப்படத்தில் நடிகை திருமதி நயன்தாராவுடன் நடிகர் ஜெய் மற்றும் சத்யராஜ் நடிக்கிகிறார்கள். இவர்கள் இருவருடனும் இதற்கு முன்னர் நடிகை நயன்தாரா 'ராஜாராணி'எனும் படத்தில் இணைந்து நடித்திருக்கிறார்.அத்துடன் திருமணத்திற்குப் பிறகு தொடர்ந்து படப்பிடிப்பில் பங்கு பற்றி வருகிறார்.

**ஆர்.சுதாகர்.**
**வத்தளை.**

**கேள்வி:**சாய் பல்லவி நடித்திருக்கும் 'கார்கி' படத்தின் கதை வித்தியாசமானதாமே...அந்த கதையைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்?

**பதில்:**இதைப்பற்றி சாய் பல்லவியே சொல்லுகிறார் படித்துப் பாருங்களேன்...

"தொலைக்காட்சி செய்திகளிலும் ,தினசரி இதழ்களிலும் இடம் பெறும் இது போன்ற நிகழ்வுகளை மக்கள் எளிதாக கடந்து சென்று விடுகிறார்கள். திரைப்பட நட்சத்திரங்களின் வாழ்நாளில் ஏற்படும் இன்ப துன்பங்கள், பிரச்சினைகளை எவரும் கண்டு கொள்வதில்லை. ஆனால் அதன் பின்னால் உள்ள உண்மைகளையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நீதித்துறை அமைப்பின் மூலம் கிடைக்கும் நியாயமான உரிமைகள் குறித்தும் அறிமுக இயக்குநர் கௌதம் இராமச்சந்தின் அற்புதமான வினாவை எழுப்பி,திரைக்கதையை உருவாக்கி இருந்தார். நடிப்புக்கு சவாலாக இருந்ததால் இந்த கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்புக் கொண்டேன். படப்பிடிப்பு தளத்தில் நேரலையான ஒலிப்பதிவு என்பதால் ஏராளமான சுவாரஸ்யமான சம்பவங்கள் நடை பெற்றன. இருப்பினும் திறமையான தொழில் நுட்ப கலைஞர்களின் உதவியுடன் தயாராகி இருக்கும் இந்த 'கார்கி'அனைத்து தரப்பு ரசிகர்களுக்கும் பிடிக்கும் என நம்புகிறேன்"என்றார் சாய் பல்லவி. இவர் தற்போது ராஜ் குமார் பெரியசாமி இயக்கத்தில் உலக நாயகன் கமல்ஹாசனின் ராஜ்கமல் நிறுவனம் தயாரிக்கும் பெயரிடப்படாத படத்தில் சிவகார்த்திகேயனுடன் நடித்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**என்.ராஜா**
**கலஹா.**



**கேள்வி:** தனுஷ் நடித்து வெளிவந்திருக்கும் ஹொலிவுட் திரைப்படத்தின் பெயர் என்ன?அவர் நடித்து அடுத்து வெளிவரவிருக்கும் தமிழ்த் திரைப்படத்தின் பெயர் என்ன?

**பதில்** :அவர் முதன்மையான வேடத்தில் நடித்திருக்கும் அந்த ஹொலிவுட் திரைப்படத்தின் பெயர் 'தி எக்ஸ்ட்ரனரி ஜேர்மனி ஒப் தி பக்கீர்' அடுத்து தமிழ் மற்றும் தெலுங்கு மொழியில் அவர் நடித்து வரும் படம் 'வாத்தி'.இந்தப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மற்றும் டீசர் அடுத்தடுத்த திகதிகளில் வெளியாகின.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**



'பாஸ் என்ற பாஸ்கரன்' படத்தின் 2ம் பாகத்தை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது சந்தானத்தை எப்படியாவது நடிக்க வைத்துவிட வேண்டும் என்பதில் நடிகர் ஆர்யா உறுதியாக இருக்கிறார். நகைச்சுவை நடிகராக சினிமா வாழ்க்கையை தொடங்கிய சந்தானம், படிப்படியாக காமெடி நடிகராக படங்களில் நடிப்பதை குறைத்துக்கொண்டார். 2014ம் ஆண்டு 'வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்' படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். இதன் பிறகு 'இனிமேல் இப்படிதான்', 'டகால்டி', 'பிஸ்கோத்', 'பாரிஸ் ஜெயராஜ்', 'டிக்கிலோனா', 'சபாபதி', 'குலு குலு' போன்ற பல்வேறு படங்களில் கதாநாயகனாக நடித்திருந்தார்.

பெரிய கதாநாயகர்களுடன் நகைச்சுவை வேடங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்த போதும், 'ஹீரோவாகத்தான் நடிப்பேன்' என்ற கொள்கையில் சந்தானம் உறுதியாக இருக்கிறார். இந்த நிலையில் 'பாஸ் என்ற பாஸ்கரன்' படத்தின் 2ம் பாகத்தை எடுக்க திட்டமிட்டுள்ளனர்.

2010ம் ஆண்டில் ஆர்யா, நயன்தாரா, சந்தானம் ஆகியோர் நடிப்பில் வெளியான இந்த படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. குறிப்பாக ஆர்யா சந்தானம் இடையேயான நகைச்சுவை காட்சிகள் மிகவும் ரசிக்கும்படியாக அமைந்தது. எனவே தற்போது உருவாகும் இந்த புதிய படத்திலும் சந்தானம் நகைச்சுவையில் கலக்க வேண்டும் என பட குழுவினர் விரும்புகிறார்கள். ஆனால் கதாநாயகனாக நடித்து வரும் சந்தானம், தற்போதுள்ள சூழ்நிலையில் இதற்கு ஒப்புக்கொள்வாரா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. ஆனால் சந்தானத்தை எப்படியாவது நடிக்க வைத்துவிட வேண்டும் என்பதில் நடிகர் ஆர்யா உறுதியாக இருக்கிறார். இதனால் தூது புறாவாய் இருந்து சந்தானத்தை அவர் தாஜா செய்து வருகிறார்.

# 'கடாவர்'



மலையாள இயக்குனர் அனூப் எஸ். பணிக்கர் இயக்கத்தில் அமலாபால் கதாநாயகியாக நடித்துள்ள திரைப்படம் 'கடாவர்'. இந்த படத்தில் ஹரிஷ் உத்தமன், முனீஸ்காந்த், திரிகன் (ஆதித் அருண்), பசுபதி, நிழல்கள் ரவி, வினோத் சாகர், வேலு பிரபாகர், ஜெய ராவ், அதுல்யா ரவி, ரித்விகா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அபிலாஷ் பிள்ளை வசனம் எழுதியுள்ள இந்த படத்திற்கு அரவிந்த் சிங் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். இப்படத்திற்கு ரஞ்சின் ராஜ் இசையமைக்க ஷான் லோகேஷ் பட தொகுப்பு பணிகளை மேற்கொண்டுள்ளார். கிரைம் த்ரில்லர் ஜானரில் தயாராகி இருக்கும் இந்தப் படத்தில் தடயவியல் துறை நிபுணரான பத்ரா என்ற கதாபாத்திரத்தில் நடிகை அமலா பால் நடித்துள்ளார். அமலா பாலின் இந்த புதிய கதாபாத்திரம் படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது. 'கடாவர்' படத்தின் போஸ்ட் புரொடக்சன் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த திரைப்படம் எதிர்வரும் 12ஆம் திகதி டிஸ்னி பிளஸ் ஹாட் ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. பல மொழிகளில் தயாராகும் 'புராஜக்ட் கே' இந்த நிலையில் 'கடாவர்' திரைப்படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி உள்ளது. இந்த டிரைலை இசையமைப்பாளர் அனிருத் தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டார். இந்த டிரைலர் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# கலைகளில் கலந்தபடி பயணிக்கும் நடிகை ரேகா நாயர்



உண்மையை உரக்க பேசும் துணிச்சல், நினைத்ததை பளிச்சென எழுதும் எழுச்சி, பார்வையில் தெறிக்கும் நேர்மை தீ... என பல கலைகளில் கலந்தபடி பயணிக்கும் நடிகை ரேகா நாயர், பார்த்திபன் இயக்கிய 'இரவின் நிழல்' படத்தில் பிணமாக நடித்து பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளார். இது குறித்து மனம் திறக்கிறார்...

**எழுத்தில் துவங்கி நடிப்பு வரை உங்கள் பயணம்?**

பள்ளி காலங்களில் எழுத்து, பேச்சு என பயணித்தேன். அதற்கு கிடைத்த அங்கீகாரம் என்னை கவிதை எழுத தூண்டியது. 12ம் வகுப்பில் அகில இந்திய வானொலி 'சாதனை கவிஞர்' பட்டம் வழங்கியது. பின் பட்டிமன்ற பேச்சாளர், டிவி செய்தி வாசிப்பாளர், தொகுப்பாளர் என பல கட்டங்களை தாண்டி கேரளாவின் நடிப்பு பட்டறை அனுபவங்களை வைத்து டிவி, சினிமாவில் நடிக்க துவங்கினேன்.

**கேரளாவை சேர்ந்த ரேகாவுக்கு தமிழ் மொழி ஈர்ப்பு எப்படி?**

என் அப்பா சிவன் கேரளாவில் இருந்து வாழ வழி தேடி தான் தமிழகம் வந்தார். தமிழகத்தில் நான் வசித்த பகுதியில் இருந்த ஒரு மலையாள பள்ளியில் கட்டணம் அதிகமாக இருந்ததால் தமிழ் பள்ளியில் படிக்க வைத்தார். அதனால் தமிழ் மொழியால் ஈர்க்கப்பட்டேன். தமிழ் வழியில் பி.லிட்., எம்.ஏ., என 13 டிகிரி வரை படித்துள்ளேன்.

**சமூக சீர்கேடுகளை எதிர்த்து பேசும் துணிச்சல் எப்படி வந்தது?**

கேரளாவில் நாங்கள் வசித்த ஊருக்குள் எந்த பிரச்சினை நடந்தாலும் பகுதி மக்கள் அப்பாவிடம் முறையிடுவர். அவரும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். அதை பார்த்து வளர்ந்த எனக்கும் சமூகத்தின் மீது அக்கறை பிறந்தது. சிறு வயதிலேயே சமூக சீர்கேடுகளை எதிர்த்து சிறியளவில் போராடியுள்ளேன்.



நடிகர் நாக சைதன்யாவும் நடிகை சமந்தாவும் பிரிவதாக கடந்த அக்டோபர் மாதம் அறிவித்ததில் இருந்து இருவரது வாழ்க்கையிலும் ஏகப்பட்ட ட்ரோல்களையும் ஹேட்ரட்களையும் சந்தித்து வருகின்றனர்.

ஒரு பக்கம் சமந்தா என்ன சாதித்தாலும் நாக சைதன்யாவை பிரிந்ததில் இருந்து ஏகப்பட்ட நெகட்டிவ் கமெண்ட்டுகள் அவரை டார்ச்சர் செய்து வருகின்றன.

இந்நிலையில், நாக சைதன்யாவும் அதே போன்ற பிரச்சனையில் சிக்கி இருப்பதாக தெரிவித்துள்ளது ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

முதல் படத்தில் முளைத்த காதல் காரணமாக நடிகை சமந்தாவை நடிகர் நாக சைதன்யா திருமணம் செய்து கொண்டார். கிட்டத்தட்ட 4 ஆண்டுகள் ஆனந்தமாகவும் அன்பாகவும் சென்ற இருவரது வாழ்க்கையும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முடிவுக்கு வந்தது. இருவரும் பிரிவதாக அறிவித்த நிலையில், ஏகப்பட்ட ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அதன் பிறகு சமந்தா மீது தப்பா? நாக சைதன்யா இன்னொரு பெண்ணை காதலிக்கிறாரா? என ஏகப்பட்ட வதந்திகள் கிளம்பின.

ஆனால், கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆக உள்ள நிலையில், இருவருமே அடுத்ததாக யாருடனும் டேட்டிங் செல்வது போல எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை. இருவரும் தொடர்ந்து தனியாகவே தங்களது சினிமா பயணத்தை நோக்கி பயணித்து வருகின்றனர்.

மனைவி சமந்தா பாலிவுட்டில் சாதித்த நிலையில், தானும் பாலிவுட்டில் பெரிய சாதனை படைக்க வேண்டும் என அமீர் கான் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டார் நாக சைதன்யா.

இந்நிலையில், சமீபத்தில் நாக சைதன்யா அளித்த ஒரு பேட்டியில், என்னுடைய சினிமா மற்றும் என் உழைப்பை பற்றி யாரும் பெரிதாக பேசுவதாக தெரியவில்லை. இத்தனை மாதங்கள் ஆகியும் என்னுடைய சொந்த வாழ்க்கைப் பற்றிய கூச்சல்களே அதிகம் ஒலித்து வருகின்றன. ஆனால், அதைப் பற்றியெல்லாம் எனக்கு எந்த கவலையும் இல்லை, இதே வாய் நாளைக்கு என் படங்களையும் என் உழைப்பையும் பற்றி பெருமையாக பேசத் தான் போகின்றனர், அதற்காக எப்போதுமே கடுமையாக உழைப்பேன் என பேசி உள்ளார்.

# சாடிக்கு ஏற்ற மூடிபோல ஆடிக்கு ஏற்ற ஒப்பனை



கத்திரி வெயில் ஆரம்பிச்சாச்சு. சுட்டெரிக்கும் சூரியனை பார்க்கும் போதே கண்கள் எல்லாம் தெறிப்பது போன்ற உணர்வு ஏற்படும். இந்த வெயிலில் வெளியே அலுவலகம் செல்லும் பெண்கள் காலையில் எழுந்து மேக்கப் போட்டுக் கொண்டு கிளம்பி அலுவலகம் செல்வதற்குள் அவர்கள் போட்ட மேக்கப் எல்லாம் கலைந்து வாடிய ரோஜா மலர் போல் வதங்கிவிடுகிறார்கள். அலுவலகம் மட்டுமல்ல வெளியே எங்கு சென்றாலும் தான் ஃப்ரெஷ்ஷாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

வெயில் காலத்தில் ஏற்படும் வியர்வை ஒரு பக்கம்... மறுபக்கம் சுட்டெரிக்கும் சூரியனின் தாக்குதல் என இரண்டையும் சமாளிக்க வேண்டும். அதனை எவ்வாறு சமாளித்து எப்போதும் ஃப்ரிட்ஜில் வைத்திருக்கும் அப்பிள் போல் ஃப்ரெஷ்ஷாக இருக்கலாம்.

‘‘பொதுவாக பெண்கள் வெளியே எங்கு சென்றாலும், மேக்கப் அணியாமல் செல்வது வழக்கமில்லை. மேலும் இந்த வெயில் காலத்தில் மேக்கப் போட்டாலும் வியர்வை காரணமாக எல்லாம் கலைந்துவிடும். குறிப்பாக வாய் மற்றும் மூக்குப் பகுதியில். அதனால் அந்த இடம் மட்டும் கருப்பாக மாறி இருக்கும். காலையில் போட்ட மேக்கப் மாலை வரை அப்படியே இருக்கும்னு சொல்ல முடியாது. வியர்வை காரணமாக எல்லாமே வழிந்து பார்க்கும் போது வேற மாதிரி இருக்கும். ஆனால் அது கலைந்தாலும் பார்க்க விகாரமாக இல்லாமல் இருக்கணும். அதனால் வெயில் காலத்தில் எப்படி மேக்கப் போட்டுக் கொள்ளலாம்... அதை கலையாமல் பார்த்துக் கொள்வது பற்றி தெரிந்து கொள்ளலாம்.

மேக்கப் போடுவதற்கு முன் அதற்கு நம்மை தயார் செய்து கொள்ள வேண்டும். அந்த தயார் நிலையினை யாரும் கடைப்பிடிப்பதில்லை. இந்த நிலைக்கு பிறகு தான் மேக்கப்பே போட்டுக் கொள்ளணும் என்பதை எல்லாரும் கவனத்தில் கொள்வது அவசியம். இந்த முறையினை பின்பற்றினால் மேக்கப் கலையாமல் அப்படியே இருக்கும். மேக்கப் பொறுத்தவரை எல்லாரும் செய்யும் முதல் தப்பு, குளித்துவிட்டோ அல்லது முகத்தை கழுவிய பிறகோ, வியர்க்க வியர்க்க மேக்கப் போடுகிறார்கள்.

மேக்கப்பில் மிகவும் முக்கியமானது ஃபவுண்டேஷன். நாம் வியர்க்கும் போது மேக்கப் போடுவதால், சருமத்தில் உள்ள துவாரங்கள் வழியாக வெளியேறும் வியர்வை நாம் போட்டு இருக்கும் ஃபவுண்டேஷன் சருமத்தோடு சேராமல், கலைந்திடும். அதனால் மேக்கப் போடுவதற்கு பத்து நிமிடம் முன் ஐஸ்கட்டியால் முகம் மற்றும் கழுத்து பகுதியினை நன்கு தேய்க்க வேண்டும். ஐஸ்கட்டி இல்லை என்றால் ஐஸ் வோட்டரை முகத்தில் நன்கு தெளிக்கலாம்.

இதனால் சருமத்தில் உள்ள துவாரங்கள் எல்லாம் இறுக்கமாகி வியர்வை வழிவதை தடுக்கும். இவை இரண்டும் இல்லை என்றாலும் பன்னீரை ஒரு பாட்டிலில் ஊற்றி ஃபிரிட்ஜில் வைக்க வேண்டும். அதைக் கொண்டும் முகத்தினை நன்கு துடைக்கலாம்.

இதனால் சருமத்தில் உள்ள துவாரம் இறுக்கமாகும். மேலும் சருமம் வாசனையாகவும் இருக்கும். இவை எல்லாம் முகத்தை நன்கு கழுவிய பிறகும் மேக்கப் போடுவதற்கு முன்பும் செய்ய வேண்டும். குறிப்பாக எண்ணெய் சருமம் உள்ளவர்கள் இதனை கடைப்பிடிப்பது அவசியம். அவர்களுக்கு எப்போதும் சருமத்தில் எண்ணெய் வழிந்து கொண்டு இருக்கும். இதில் வியர்வை மறுபக்கம். இரண்டும் சேர்ந்து மேக்கப்பினை விகாரமாக மாற்றிவிடும்.

அவர்கள் ஒரு பாட்டிலில் தண்ணீர் ஊற்றி அதில் கிராம்பு, புதினா இலை சேர்த்து ஃபிரிட்ஜில் வைக்கவும். அவை தண்ணீரில் நன்கு ஊறிவிடும். எண்ணெய் சருமம் உள்ளவர்கள் மேக்கப் போடுவதற்கு முன் இந்த தண்ணீரைக் கொண்டு முகத்தை கழுவலாம். இதனால் எண்ணெய் பசை மற்றும் வியர்வை இரண்டும் கட்டுப்படும். அதன் பிறகு மேக்கப் போட்டால் எண்ணெய் பசை உள்ளவர்களுக்கும் அழகாக இருக்கும்.

மேக்கப்பின் முக்கிய பொருளே ஃபவுண்டேஷன்தான் என்பதால், வெயில் காலத்தில் லைட்வெயிட் ஃபவுண்டேஷனை தேர்வு செய்வது நல்லது. அதாவது சிம்பிள் மேக்கப் பிற்கு பயன்படுத்தப்படும் ஃபவுண்டேஷன். இந்த நேரத்தில் ஹை டெபினிஷன் ஃபவுண்டேஷன் கொண்டு மேக்கப் போடுவதை தவிர்க்க வேண்டும். ஏ.சி அறையிலேயே உட்கார்ந்து இருப்பவர்கள் என்றால் ஹை டெபினிஷன் மேக்கப் டிரை செய்யலாம்.

வெளியே செல்பவர்களாக இருந்தால், சருமத்தோடு ஒன்றாக இணையக்கூடிய ஃபவுண்டேஷனை பயன்படுத்தலாம். இதனால் வியர்வையால் மேக்கப் கலைந்தாலும், அந்த பகுதி திட்டுத் திட்டாக தெரியாது. ஃபவுண்டேஷன் இப்போது சன்ஸ்கிரீன் தன்மையோடும் கிடைக்கிறது. சன்ஸ்கிரீன் போடும் போது, அதிகமாக வியர்க்கும். அதை தவிர்க்க சன்ஸ்கிரீன் அமைப்பு கொண்ட ஃபவுண்டேஷனை பயன்படுத்தலாம். மேலும் சன்ஸ்கிரீன் ஒரு நாள் முழுக்க பலன் தராது. அது மூன்று மணி நேரம் வரை தான் வேலை செய்யும். அதனால் ஒரு முறை சன்ஸ்கிரீன்போட்டாலும், நான்கு மணி நேரத்திற்கு பிறகு மறுபடியும் முகத்தை கழுவி, பயன்படுத்த வேண்டும். அப்போது தான் பார்க்க ஃப்ரெஷ்ஷாக இருக்கும்.

ஃபவுண்டேஷன் அடுத்து கண்களுக்கான மேக்கப்பில் கவனம் செலுத்த வேண்டும். வெயில் காலத்தில் கண்களுக்கு அதிகப்படியான மேக்கப் அவசியமில்லை. கண்மை மட்டுமே போதுமானது. சிலர் ஐ ஷேடோ, ஐ லைனர், மஸ்காரா எல்லாம் போட்டுக் கொள்வார்கள். முடிந்தவரை அவற்றை தவிர்க்கலாம். மஸ்காரா அல்லது ஐலைனர் போட விரும்புபவர்கள் வாட்டர் ப்ரூப் பயன்படுத்தலாம். வியர்வை முகத்தில் வழிந்தாலும் இவை கரைந்து முகத்தை கருப்பாக மாற்றாமல் பாதுகாக்கும். கண்களை அடுத்து அழகாக எடுத்துக் காட்டுவது உதடு தான். உதட்டிற்கு மேட்பினிஷ் கொண்ட லிப்ஸ்டிக்கினை தேர்வு செய்யலாம். லிப்ஸ்டிக் லிக்விட் பேஸ் கொண்டும் வருகிறது. வெயில் காலத்தில் அதை தவிர்க்கலாம். காரணம் வெயிலில் அது உருகி உதடுகளையும் தாண்டி வெளியே வழியும்.

# கூந்தல் வளர்ச்சிக்கு சீயக்காய்...!



தலை முடியைப் பராமரிப்பதற்கு காலங்காலமாக பயன்படுத்தி வரும் பொருட்களில் ஒன்று சீயக்காய். இன்று நம்மைச் சுற்றி ஏற்பட்டிருக்கும் சுற்றுச் சூழல் மாசு, மன அழுத்தம் நிறைந்த வாழ்க்கை முறை போன்றவை முடி உதிர்தல் பிரச்சினையை அதிகரிக்கச் செய்கின்றன. இதைத் தடுப்பதற்கு பல்வேறு சிகிச்சை முறைகள் இருந்தாலும், இயற்கையான மற்றும் எளிமையான முறையே சீயக்காய்த்தூள் பயன்பாடு ஆகும்.

அசாசியா கோன்சின்னா மரத்தில் இருந்து பெறப்படும் சீயக்காய், வருடம் முழுவதும் எளிதில் கிடைக்கக் கூடியது. விலை மலிவானது. தீமை விளைவிக்கும் வேதிப்பொருட்கள் இல்லாதது. சீயக்காய் பயன்படுத்துவதால் தலைப்பகுதியில் உள்ள சருமம் வறண்டு போகாமல் ஈரப்பதத்துடன் இருக்கும். இன்றைய சூழல் சீர்கேடுகளால் முடியில் ஏற்படும் அமில, கார சமநிலை மாற்றம் சீராகும். பொடுகு நீங்கும். சொறி, சிரங்கு, படை, கொப்புளங்கள் போன்ற சரும பிரச்சினைகள் குணமாகும்.

முடி உதிர்தல் பிரச்சினை இருப்பவர்கள் வாரம் இரண்டு முறை சீயக்காய்த்தூள் பயன்படுத்தி, தலைக்குக் குளிக்கலாம். தலையில் தேங்காய் எண்ணெய் தடவி மசாஜ் செய்த பின்பு, சீயக்காயைப் பயன்படுத்தலாம். இதன் மூலம் கூந்தல் உதிர்வது, இளநரை, அரிப்பு போன்ற பிரச்சினைகள் தீரும்.

செம்பருத்தி, வெந்தயம், பூலாங்கிழங்கு, எலுமிச்சை பழத் தோல், பச்சை பயறு, காய்ந்த நெல்லி, ஆவாரம் பூ ஆகியவற்றை சீயக்காயுடன் கலந்து பொடியாக அரைத்துக்கொள்ள வேண்டும். தலையில் எண்ணெய் தடவி 10 நிமிடம் கழித்து, இந்தப் பொடியை உபயோகப் படுத்தி குளித்தால் கூந்தல் பொலிவுடன் இருக்கும்; வளர்ச்சி அதிகரிக்கும்.

சீயக்காய், எண்ணெய்ப் பசையை நீக்கி கூந்தலை மிருதுவாக்கும் தன்மை கொண்டது.

# உதடு வறட்சியடையாமல் தடுக்க...




தினமும் இரவில் படுக்கும் முன் உதடுகளில் வெண்ணெயை தடவி வந்தால் உதடுகள் தானாக வறண்டு போகாது, அல்லது காய்ந்து போகாது.

நமது உதடுகளில் வறட்சி ஏற்படுவதற்கு, அல்லது அடிக்கடி காய்ந்து போவதற்கு நமது உடலின் வெப்பநிலை உயர்ந்து விட்டதன் அறிகுறியே இது. ஆகவே உதட்டை நாவினால் வருடி ஈரமாக்குவதை விட உஷ்ணத்தைக் குறைக்கும் மோரை அடிக்கடி நாம் பருகி வர வேண்டும். வெண்ணெய் சிறிது எடுத்து அடிக்கடி சாப்பிட்டு வர வேண்டும்.



ஒவ்வொரு நாள் இரவில் வெண்ணெயைக் கொஞ்சம் உதட்டில் தடவிக்கொண்டு படுக்கைக்கு செல்ல வேண்டும். இவற்றின் காரணமாக நமது உடலில் ஏற்பட்டுள்ள உஷ்ணம் குறையும், உதடுகளும் தானாகவே வறண்டு போகாது, அல்லது காய்ந்து போகாது.

உதடு சொரசொரப்பாக வறட்சியாக இருந்தால், தேனுடன் சர்க்கரையை சேர்த்து லேசாக தேய்த்தால் உதடு மிருதுவாகி விடும்.




# செல்ஃபி உலா


Thanuja Singam


கலைஞர் லயன் பொன் பத்மநாதன்


சந்தியா அழகுராஜா, துஷான் பிரசாத்


அஸாம்,
250 C, அக்கரைப்பற்று


துரைராசா சுரேஷ்,
கொழும்பு


விஜய்,
கொழும்பு


Aakeef Ahammad

# அழகியல்கலை பயின்றோருக்கு விருதுகள்










மருதாணி இடுதல், தையல் பயிற்சி, அழகியல்கலை மற்றும் ஆயுள்வேதிக் அழகியல் கலை ஆகிய பயிற்சி நெறிகளைக் பூர்த்திசெய்த யுவதிகளுக்கு சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்ஜிஏ. நாஸர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி சாபிறா வசிம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

முன்னா பியூட்டி ஹோம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வமத ஆசியுடன் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை உறுப்பினர் என்.மோகன ராஜன், ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் எம்ஜ எம். தஸ்லிம், பொலிஸ் அதிகாரி அஸ்ரப் காரியப்பர் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலரும் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை, குருநாகல், கண்டி, கொழும்பு ,காலி மற்றும் அனுராதபுரம் போன்ற பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த யுவதிகள் இதன்போது சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். இரண்டு மற்றும் ஆறு மாதகால பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த 63 யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் இறுதியில் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சியில் வெற்றிபெற்ற 17 யுவதிகள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதாக நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் முனாபிறா றிஸ்வான் தெரிவித்தார். 2021 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட மருதாணி இடுதல் போட்டியின் சிறப்பு விருதினை கண்டி கெலிஓயா பிரதேசத்தைச்சேர்ந்த முபைலா முனாபர் பெற்றுக்கொண்டார். இவ்வருடத்திற்கான போட்டியின் சிறப்பு விருது பொலன்னறுவையைச் சேர்ந்த மசூபா மஸாஹிருக்கு வழங்கப்பட்டது.


(ஏறாவூர் நிருபர் நாஸர்) ...






## நிறம் தீட்டுங்கள்


## வழிகாட்டுங்கள்




## பொருத்தமான இடத்தில் வெட்டி ஒட்டுங்கள்



## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



## நான் ரொம்ப பிஸி...



# துவிச்சக்கர வண்டிகளின் பாவனை அதிகரிப்பால் வேலைப்பளு அதிகரித்துள்ளது; விலைகளும் உயர்வு



## நீர்கொழும்பு பகுதியில் துவிச்சக்கர வண்டி திருத்தும் ஆனந்த குமார்

எரிபொருள் நெருக்கடியுடன் துவிச்சக்கர வண்டிக்கு மவுசு அதிகரித்துள்ளது. சாதாரண பொதுமகன் முதல் அலுவலகங்களில் பணியாற்றும் அதிகாரிகள் வரை துவிச்சக்கர வண்டியை பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். சிறுவர் முதல் வளர்ந்தோர் வரையிலான அநேகமானோர் வயது வேறுபாடின்றி பொதுவாக தமது போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக துவிச்சக்கர வண்டிகளையும் பயன்படுத்தி வருகின்றனர்.

நீர்கொழும்பு பிரதேசத்திலும் துவிச்சக்கர வண்டிகளின் பாவனை அண்மைக் காலம் தொடக்கம் அதிகரித்தே காணப்படுகின்றது. புதிய துவிச்சக்கர வண்டிகளை மிகவும் நேர்த்தியான முறையில் பொருத்திக் கொடுத்தல் மற்றும் பழைய துவிச்சக்கர வண்டிகளை சரிசெய்து அதற்கான உரிய உதிரிப் பாகங்களை நேர்த்தியான முறையில் பொருத்திக் கொடுத்து வரும் வீ. ஆனந்த குமார் என்பவரை " நான் ரொம்ப பிஸி" பகுதிக்காக நீர்கொழும்பு கட்டுவ பிரதேசத்திலுள்ள சைக்கிள் கடையொன்றில் சந்தித்தேன்.

**கேள்வி: துவிச்சக்கர வண்டிகளையே நீங்கள் சரிசெய்து கொடுக்கின்றீர்கள். நீங்கள் இந்த தொழிலை எங்கே கற்றுக் கொண்டீர்கள் ?**

**பதில் :** நீர் கொழும்பு கட்டுவ, சிலாபம் வீதியில் அமைந்துள்ள இந்த சைக்கிள் விற்பனை கடையிலேயே இந்த தொழிலை நான் கற்றுக் கொண்டேன்.

**கேள்வி : உங்களுடைய பிறந்த ஊர் எது ?**

**பதில் :** நான் பதுளை " ஸ்பிரிங் வெளி " என்ற தோட்டப் பிரதேசத்திலேயே பிறந்தேன்.



**கேள்வி : உங்களுடைய கல்வி நடவடிக்கைகள் பற்றி கூறலாமா ?**

**பதில்:** நான் பிறந்த ஊர் பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலையொன்றிலேயே படித்தேன். வீட்டுப் பொருளாதாரத்துக்கு உதவியாக தொழில் தேடி நீர்கொழும்புக்கு வந்தேன். நீர்கொழும்புளேயே தொழில் செய்து வருகிறேன்.

**கேள்வி : அப்போது உங்களுடைய வயது எத்தனை ?**

**பதில் :** அப்போது எனக்கு சுமார் 15 அல்லது 16 வயது இருக்கும் என்று நினைக்கிறேன்.



**கேள்வி : நீங்கள் திருமணம் செய்துள்ளீர்களா ?**

**பதில் :** ஆம். இப்போது எனக்கு 31 வயதாகின்றது. எனக்கு பிள்ளை இருக்கின்றது. நாங்கள் மிகவும் சந்தோஷமாக வாழ்கின்றோம்.

**கேள்வி : நீங்கள் இந்த சைக்கிள் கடையில் மிகவும் நம்பிக்கையுடன் வேலை செய்கிறீர்கள் என்று கடையின் உரிமையாளர் சுனில் லால் பெர்னாண்டோ (65) கூறுகிறார். அது பற்றி கூற முடியுமா ?**

**பதில் :** ஆம். நான் இந்த சைக்கிள் கடையில் சேர்ந்து 15 வருட காலமாகின்றது. கடையின் உரிமையாளருடன் மிகவும் அன்பாகவும் மரியாதையாகவும் நான் நடந்து கொள்கின்றேன். மிகவும் பணிவான முறையில் எந்த தொழிலையும் கற்றுக் கொண்டேன். முதலாளி எனக்கு தொழில் சம்பந்தமான சகல விடயங்களையும் அழகான முறையில் கற்றுக் கொடுக்கின்றார்.

**கேள்வி: உங்களுடைய கடையில் எவ்வாறான துவிச்சக்கர வண்டிகள் வாடிக்கையாளர்களுக்கு பொருத்திக் கொடுக்கப்படுகின்றன ?**

**பதில் :** நீர்கொழும்பு நகரத்துக்கு அண்மையிலேயே எமது கடை அமைந்துள்ளது. அதனால் பல்வேறு வகையான சைக்கிள்கள் இங்கு வருகின்றன.

சந்தையில் தற்போது விற்பனை செய்யப்படுகின்ற அனைத்து துவிச்சக்கர வண்டிகளும் எமது கடையில் பொருத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**கேள்வி : நீங்கள் இந்த சைக்கிள் கடையில் தொழிலுக்கு சேர்ந்த ஆரம்பத்தில் எவ்வாறான வேலைகள் உங்களுக்கு கிடைத்தது ?**

**பதில் :** சைக்கிள் டியூப்களுக்கு காற்றடித்தல் மற்றும் பழுது அடைந்த டியூப்களை ஒட்டுதல் ஆகிய தொழில்களையே நானும் எனது முதலாளியும் இணைந்து சேர்ந்து செய்து வந்தோம்.

**கேள்வி : எவ்வாறான தேவைகளை நிறைவேற்ற வாடிக்கையாளர்கள் வருகின்றனர்?**

**பதில் :** சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றின் பழுதடைந்த டியூப்களை ஒட்டுவதையே நாங்கள் ஆரம்பத் தொழிலாகச் செய்தோம். அப்போது மிகவும் குறைவான சைக்கிள்களே பொருத்துவதற்காக வந்தன. எனினும் நாம் வழமையான முறையில் பழுதடைந்த டியூப்களை பழுது பார்த்து கொடுத்து வருகின்றோம். டீசல் மற்றும் பெற்றோல் தட்டுப்பாடுகள் ஆரம்பமான முதல் நீர்கொழும்பு பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டிகளின் பாவனைகள் அதிகரித்தன. அதனால் பிரதேசவாசிகள் தமது அன்றாட பாவனைக்கு துவிச்சக்கர வண்டிகளையே அதிகமாக பாவிப்பதற்கு ஆரம்பித்தனர். எனவே கடைக்கு வரும் சைக்கிள்களின் எண்ணிக்கைகளும் அதிகரித்தன. இருவரால் மாத்திரம் இவற்றை சமாளிக்க முடியவில்லை. அதனால் அண்மையில் ஒருவரை வேலைக்கு சேர்த்துக் கொண்டோம்.

**கேள்வி: நாட்டில் தற்போது துவிச்சக்கர வண்டிகளின் பாவனையும் அதிகரித்துள்ளது. துவிச்சக்கர வண்டிகளுக்கான உதிரிப் பாகங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இது பற்றி என்ன கூறுகிறீர்கள் ?**

**பதில் :** அண்மைக் காலமாக இவ்வாறான நிலைமையே காணப்படுகின்றது. குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மக்களே துவிச்சக்கர வண்டிகளை அதிகமாக பாவித்து வருகின்றனர். அரசாங்கம் துவிச்சக்கர வண்டிகளின் விலைகள் மற்றும் அதன் உதிரிப் பாகங்களின் விலைகளுக்கு கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயம் செய்தால் பொதுமக்களின் வாழ்வாதாரத்துக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

படங்களும் தகவல்களும் :
மொஹமட் ருஸ்மான்...
(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

# மறுபால்

முல்லை முஸ்ரிபா



## ஊமக்காச்சி 08

வாழ்வின் பயண வழிபாட்டில் ஆயிரமாயிரம் முகங்கள் வந்து சேருகின்றன. பின்பு பிரிந்து போகின்றன. பரிவும் பிரிவுமான பயண வழிபாட்டில் அழியாச் சுவடுகளையும், ஆறாவடுக்களையும் கொண்ட வெட்டுமுகம்தான் வாழ்தலெனும் புதிர்க்கோலம்.

இந்த புதிர்க்கோலத்தில் வந்துசேரும் முகங்களின் அக வரைபடம் அழகானது. அது வெறும் உரையாடல்களாலானது மட்டுமானதல்;ல. உணர்வுகளாலும் உயிர்ப்புகளினாலுமானது. இன்ப துன்பங்களினாலானது, ஏற்ற இறக்கங்களாலானது. வெற்றி, தோல்விகளாலானது. அன்பினாலானது. அக்கறையினாலானது..... இப்படித்தான் வாழ்வின் வயசோட்டங்களில் ஒவ்வொரு நகர்ச்சியிலும் நம்மில் வந்து சேருவோம் பலர். வந்த விதமும் பின் சென்ற விதமும் கூட சிந்தனையலையாகி மீள் மீள் அசையெழுப்பிக் கொண்டிருக்கும்.

எனது மூன்றாம் நான்காம் வயசில் நான் அரிவரியில் சேர்ந்தபோது என் சகபாடியாயிருந்தவர்களின் முகங்கள் மங்கலாகி சலனப்படமாகின. எனினும் அரிச்சுவடி சொல்லித்தந்த சிலேட்டும் சிலேட்டுப் பென்சிலுமான லீலா அக்காவும் பவானியக்காவும் ஞாபக அலையில் மிதக்கிறார்கள். அரை நூற்றாண்டின் ஞாபகம் தொடரறுந்த கதையாகியது.



வாழ்வின் பயணவோட்டத்தில் தொடரறுந்த முகங்கள் பலவும் நினைவலையெழுப்புகின்றன.

முதலாம் வகுப்பில் ஒன்றாகப் படித்த முகங்கள்... சினேகங்கள்.... நற்போதனை புரிந்த ஆசான்கள்... எனத் தொடரறுந்தவை அதிகமதிகம். இவற்றுள் சில முகங்கள் பின்னாளிலும் சினேகித்தவை ஆயினும் பலவும் தொடரறுந்தவை.

வீட்டிலே வேலைக்காரப் பையனாக வந்து சேர்ந்து உறவோடு கலந்த குழப்படி சின்னவன் சிவராசா, சின்னவயதுத் தோழன் சங்கர், எட்டாம் வகுப்பில் ஒன்றாய் படித்த எட்டுப்பேரில் சிலர் வித்தியானந்தாவில் ஒரே வகுப்பிலே படித்த நண்பர்கள் பலருமெனத் தொடரருந்த கதையின் தொடர்ச்சிதான். ஒரு காலத்தில் எங்கள் வீட்டில் வேலைக்காரப் பையன்கள் வந்து சேருவார்கள். வேலைக்காரர் என்ன வீட்டுக்காரராகவே மாறிவிடுவார்கள். உம்மா, வாப்பாவின் அன்பிலூறி எங்களோடாகி விடுவார்கள். அப்படி வந்து சேர்ந்த ஒருவர் பின்னர் மகா குழப்படி, ஊத்தை மூட்டை. நல்ல வேலைக்காரன், ஆனால் சோம்பேறி.

நண்பராகி விளையாட்டுப் பொழுதில் திளைப்போம். இரண்டு மூன்று வருட உறவு அவன். எல்லோரும் போல் தம்பியென்றே என்னை அழைப்பான். அவன் எங்கள் வீட்டை விட்டுப்போன பின் சந்தித்தேதில்லை. தொடர்பறுந்த கதையாகினான். 'எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்' என்ற பாரதி பாடலின் ஞாபகம் தான் இவன் பற்றி வருவதுண்டு.

**(தொடரும்)**

# ஔவன் கவிதை

## ஞாழல்



திசைகளிலிருந்து கருகிவழியுமொரு
சொல் கேட்டாயா காற்றே

திணைகளின் முதிர்வு
ஒன்றிலிருந்து மற்றொன்றில் மலரும்
மென் காலக் குளிர்த்தி

வசையோடெழுந்த கிழத்தியின்
நெஞ்சில் இன்னும் தான் துடிக்கிறது
உடன் போக்கின் பிரிவு

மஞ்சல் தெறித்த பின்பகலில்
நிழலாக நின்றதொரு வாகை

பாணனின் நரம்புகளில்
வெம்பிப்புடைத்த பாடலொன்றை
எடுத்துச் சென்றது
மருதத்தின் மூன்றாம் குளத்து மீனொன்று

பின்
மீன் கொத்த முனைந்திற்று
செந்நிற நீர் நாய்

பெருங்கடலின் பெருக்கை
தாழம்பூவில் எழுதிற்றொரு மென்னலை

அலையில்
இத்தனை துளி
இத்தனை துகள்
இத்தனை துயர்
இத்தனை குரல்

பாலைப்பண்ணென்று
கேட்டிருப்பாய் காற்றே

காற்றே
ஞாழல்
நான் என்பதறியாயா.


# இலக்கிய விளம்பரம்@இருளா ஒளியா

இலக்கியம், விளம்பரம் என்கிற இரண்டு சொற்களும் தனித்தனியே நோக்கப்படுவதற்கும், சேர்த்து நோக்கப்படுவதற்குமிடையிலும் பண்பு ரீதியிலும் பெரும் வேறுபாடுண்டு.

விளம்பர இலக்கியம் குறித்த புத்தாக்க வடிவமைப்பு தகவல் தொழில்நுட்ப சமகாலத்தில் மேலோங்கியிருக்கிறது. அச்சு முறைமையில் மட்டுமன்றி இலத்திரனியல் முறையிலும் இந்த மேலோங்கிய நிலையைக் காணலாம்.

இத்தகைய விளம்பரிப்பை இலக்கியத்தில் உள்ளீர்க்கும் போக்கு சமகாலத்தில் வலுவடைந்துள்ளது. இலக்கியம் என்பது இன்று விளம்பரங்களால் சுவையூட்டப்படுகிறது. அல்லது பாதுகாக்கப்படுகிறது. அல்லது நிலை நிறுத்தல் உபாயமாகக் கையாளப்படுகிறது.

இலக்கியத்தின் மீது அல்லது பனுவலின் மீது அதீத விளம்பரம் அல்லது பரப்பு முயல்வு கட்டமைக்கப்படுகிறது. அதனையும் தாண்டி படைப்பாளி மீது ஒளிவட்ட விளம்பரம் தோற்றுவிக்கப்படுகிறது. இத்தகைய போக்கு காத்திரமான திறனாய்வு அல்லது விமர்சனத்தை இருட்டடித்து விடுவதுதான் இன்றுள்ள இலக்கிய அபாயம். இதனால் கனதியான இலக்கியங்கள் பேசாப் பொருளாகிவிடும் விளம்பர சூன்யமும் தோன்றிவிடும். மற்றப்படி இலக்கியம், இலக்கிய நிகழ்வுகள், இலக்கிய வட்டங்கள் என்பவற்றின் மீது நிகழ்த்தப்படும் அதீத விளம்பரங்கள் ஒருவகை அதிகாரத்தின் பாற்பட்டதாக அமைந்துவிடுகிறது. படைப்பாளியைப் பெருந்திரள் மீது முன்னிறுத்துவதாக இத்தகைய விளம்பர நிலை முன்னெழுகிறது.



இந்நிலையில் குறித்த இலக்கியம் அல்லது படைப்பு காத்திரமற்றதாக அமையும்போது அது வாசகரை நேயரை ஏமாற்றி விடுவதாகவும் அமைந்துவிடுகிறது.உண்மையில் கனதியான படைப்புகளுக்கு விளம்பரம் தேவைப்படுவதில்லை. இலக்கியமே படைப்பே விளம்பரமாகிப் பெருந்திரளை அல்லது தனியான வாசகரை நேயரைச் சென்றடைந்துவிடும். ஆனால் கனதியற்ற படைப்பின் மீது சமூக வலைத்தளங்களில் ஒளிபாய்ச்சலும், பட்டம் சூட்டலும் படைப்பாளியை உச்சத்திற்கு கொண்டு செல்லுதலும் காத்திரத்தின் மீது கேள்வியெழுப்புவதாக அமைந்திவிடுகிறது. எனவே சமகால கலை இலக்கியப் புலத்தில் விளம்பர அதிகாரம் அல்லது போலியான செயற்பாடுகள் அதிகம் சமூக வலைத்தளங்களையும் பிற ஊடகங்களையுமம் சூழ்ந்து நிற்கின்றன. இலக்கியமொன்றின் அகப்பெறுமதி, புறப் பெறுமதிக்கப்பால் வேறொரு பெறுமதி நோக்கி இத்தகைய விளம்பரங்கள் கட்டமைந்துவிடுவது அவ்வளவு இலக்கிய எழுச்சிக்கு உசிதமானதல்ல.

# தீனுடையானின் அனுபவப் பகிர்வு

முல்லைத்தீவு முதல் புத்தளம் வரையான ஆன்மீகப் பயணத்தின் அனுபவப் பகிர்வாக வெளிவந்திருக்கிறது. முஸ்தபா மன்சூர் எழுதிய பனுவல். முல்லைத்தீவு தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகக்கொண்ட மன்சூர், புத்தளம் பெருக்குவற்றானை வசிப்பிடமாக் கொண்டவர். தொண்ணூறுகளில் வடக்கு முஸ்லிம்களில் ஒருவராய் வெளியேறியவர். அரச துறையில் தொழில் புரிந்து ஓய்வானவர். நோயிலிருக்கும் இவர் தனது அனுபவங்களின் திரட்சியை எழுத்துப் பனுவலாக்கித் தருகிறார்.

'தப்லீக்' எனும் ஆன்மீகப் பணி ஈர்ப்பின் சுய அனுபவத்தைப் பிறருடன் பகிர்கிற ஒரு எழுத்துப் பிரதியெனினும் அதனூடாக ஓர் உரையாடலை நிகழ்த்திச் செல்கிறார். தனது வாழ்வோட்டம், குடும்ப சமூகப் பின்புலம், துயர் மிகுந்த கணங்கள், போர்ச் சூழலமைவு ஏற்படுத்தும் இடர்களென இவரது எழுத்துக்குள் ஓர் உயிர்ப்பான கதையைத் தரிசிக்கலாம்.



இந்தக் கதை வடக்கு முஸ்லிம்களின் வாழ்வியல் வரலாற்றுத் தொடர்ச்சியின் ஒரு பகுதியாகவும் அமைந்துவிடுவதினால் வெறுமனே ஆன்மீகம் அல்லது சுயசரிதை அனுபவ பகிர்வு என்றில்லாமல் ஒரு வரலாற்று ஆவணமாகவும் இருக்கின்றது.

வன்னியில் நம் மூவர் என அடங்காப் பற்று பண்டார வன்னியன், வன்னி மைந்தன் சிவசிதம்பரம், சாகித்திய இரத்தின முல்லை மணி ஆகியோர் குறித்த தனது முதல் நூலைத் தந்தவர். இதனூடாகத் தமிழ், முஸ்லிம் உறவின் வலிமையை எழுதியவர் முஸ்தபா மன்சூர்.

இளைய முஸ்தபா எனத் தன்னை முன்னிலைப்படுத்தும் இவரது 'முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை@ தீனுடையானின் அனுபவப்பகிர்வு'' என்கிற இந்தப் பனுவலை வெள்ளாப்பு வெளி வெளியிட்டிருக்கிறது. இவர் நோயிலில் இருக்கும் இந்தக் காலத்தில் நூலினைப் பெற்று இவரை ஊக்குவிக்க வேண்டியது வாசகரின் கடமையுமாகும்.

இவருடனான தொடர்புகளுக்கு முஸ்தப்பா மன்சூர் பெருக்குவற்றான், முந்தல் என்ற முகவரியிலோ அல்லது 071-7191595 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.








"செ" பிக்சர்ஸ் செல்வகுமார் முத்துவின் தயாரிப்பில் அறிமுக இயக்குனர் தினேஸ் தீனதயாளனின் இயக்கத்தில் கவிஞர் அஸ்மின் பாடல் எழுதும் புதிய படத்தின் தொடக்க நிகழ்வு அண்மையில் சென்னை அண்ணா நகரில் அமைந்துள்ள Rose Water மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் திரை நட்சத்திரங்கள், இயக்குனர்கள்,தொழில் நுட்பக் கலைஞர்கள் பலர் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர். படத்தில் நடிகர் சதீஸ், நடிகர் சௌந்தராஜன், இயக்குனர் 'ராசய்யா" கண்ணன், இயக்குனர் வீரக்கு மார், இயக்குனர் அகிலன் ஒளிப்பதிவாளர் ராஜா, ஆகியோரைக் காணலாம்.

# நடிகர் ராஜன் பி. தேவ்

ராஜன் பி. தேவ் 20 மே 1954 இல் பிறந்தார். 29, ஜுலை, 2009இல் அமரரானார்.இவர் கேரள மாநிலத்தின் ஆலப்புழையில் பிறந்தார். கலைத்துறையில் ஈடுபாடு கொண்டு நாடக நடிகராக இருந்து 1980 திரையுலகில் நடிகராக அறிமுகமானார்.

மலையாள திரையுலகில் தனது நடிப்பாற்றலால் மிக முக்கிய வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கத் தொடங்கினார். பல ஆண்டுகாலமாக திரைப்பட உலகில் தனக்கென தனியிடத்தை தக்கவைத்து வந்த ராஜன் பி. தேவ், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என தென்னிந்திய மொழிகளில் 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இவர் சூரியன் திரைப்படம் மூலம் தமிழில் அறிமுகமானார்.




ஜென்டில்மேன், லவ் டுடே, பூமகள் ஊர்வலம், தாலி காத்த காளியம்மன், பெரிய இடத்து மாப்பிள்ளை உட்பட பல படங்களில் நடித்து, தமிழ் ரசிகர்களின் கவனத்தைப் பெற்றவர்.

சினிமாவில் பொதுவாக வில்லன்கள் முரட்டு ஆட்களாக இருப்பது வழக்கம். அந்த நிலையை மாற்றி, நகைச்சுவை மிகுந்த வில்லத்தனத்துடன் ரசிகர்களை வெகுவாக ஈர்த்தவர் ராஜன் பி. தேவ்.மலையாளத்தில் வெகு ஜனரஞ்சக நடிகராகத் திகழ்ந்தவர் ராஜன், மம்முட்டி, மோஹன் லால் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்களுடன் நடித்தவர் ராஜன். நாடகம் மற்றும் திரைப்பட நடிகர், திரைப்பட இயக்குனர் என பன்முகம் கொண்டவர் ராஜன்.

இவரின் வாழ்க்கைத்துணை:சாந்தா ஜூப்லி தியேட்டர் என்ற சொந்த நாடகக் குழுவையும் பல ஆண்டு காலமாக நடத்தி வந்தவர். 'காட்டுக்குதிரை' என்ற நாடகம் தான் இவரது கலையுலக வாழ்க்கையில் மிக முக்கியமாக கருதப்படுகிறது. இவர் கடைசியாக நடித்த படம் கேரளாவின் வெற்றி படமான 'என் பட்டணத்தில் பூதம்' என்ற படமாகும்.இவர் ஜூலை 29, 2009 அன்று காலை கொச்சியில் ஈரல் பாதிக்கப்பட்டு காலமானார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

# களுத்துறை கலைமகள் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்பு விழா








# மன்னார், பேசாலை
# சங்கவி திரையரங்கம்

மன்னார், பேசாலையில் அமைக்கப்பட்டுள்ள சங்கவி திரையரங்கத்தின் திறப்பு விழா எதிர் வரும் 2022.08.27ஆம் திகதி மாலை 3.05 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்ணாணடோவின் ஆசியுடன் நடைபெறவுள்ளது. தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரகைகளின் பிரதம ஆசிரியர் டீ. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸின் தாயார் திருமதி துரைராசா அதிசயராணி இதனை திறந்து வைக்கவுள்ளார். நாடெங்குமுள்ள கலைஞர்களை “கலாவிபூஷண” விருது வழங்கி பாராட்டி கௌரவித்து வந்த சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸின் கலைப்பயணத்தின் 570 நாள் விடாமுயற்சியில் விஸ்வரூப வெற்றியாக இத்திரையரங்கம் அமைக்கப் பட்டுள்ளது.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.